S. D. M Series 13.

THAYAPARA SUNDARI

AN INTERESTING DIFFUSIVE NOVEL

BY

T. RANGASAWMI NAIDU

THIRD EDITION

PUBLISHED BY

S. DURAISAWMI MUDALIAR

1923

 [PRICE As. 12.

நவீன கதா புத்தகங்கள்.

கமலவல்லி அல்லது
கன்னியின் சமர்த்து.

ஓர் சிறந்த நவீன துப்பறியும் நாவல். இதில அபாரத அற்புத விஷயங்களும், ஆச்சர் யத்தை யும்இன்பத்தையும் விளைவிக்கும் சந்தர்ப் பங்களும் ஏராளமா யிருப்பதால் இரண்டு பாகங்க ளாக அச்சிடப்பட்டிருக்கிறது.

பாகம் 1-க்கு 1 12 0

தலைவாங்கி
அபூர்வசிந்தாமணி.

இது ஓர் அற்புதமான செந் தமிழ் நாவல். இதில் ஸ்திரீ, புருஷ, பாலக, பாலகிகளுக்கு யுக்தமான அநேக அதியற்புத விஷயங்களும், பல நீதிகளும் ஒருங்கேயமையப்பெற்று, படிக் கப் படிக்கப் பரமானந்தத்தை யும் கேட்க கேட்க இன்பத்தை யும் தரும்படி மிகத் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இக்கதா நாயகியினால் கேட்கப் படும் மூன்று வினாக்களும், மெய்யழ கனென்னும் அரச குமாரனால் அளிக்கப்படும் சரியான விடை களும் மிகவும் ஆச்சரியமாயிருக் கும். விலை ரூபா 1 0 0

புவனராணி.

இது ஓர் மேன்மையான நா வல். இக்கதாநாயகி ஓர் ஆரண் யத்தில் நவரத்தின மிழைத்த மாளிகையிலிருக்கும்போது புவ னசக்ரேஸ்வரமன்னன் கண்டு திடீரென்று பிரிவது மிகவும் விந்தையானது. விலை அணா 8.

சௌந்தராபாய்
அல்லது சதிகோலை.

இது ஓர் நவீன துப்பறியும் நாவல். இதில் விவரித்திருக் கும் சதிகொலையும், கொலைக்குப் பிரயத்தினங் களும், கொலை யாளிகளின் கொடிய செய்கை களும் ஆச்சர்யமான திடன் இதில் அநேக அற்புத நிகழ்ச்சி களும் விவரித்திருக்கின்றது.

விலை ரூபா 1 0 0

சுகுணசுந்தரி.

இது ஓர் நவீன நாவல். தெள் ளிய செந்தமிழ் நடையில் விசே ஷ அலங்கார சொற்களால் புனைந்தெழுதப்பட்டிருக்கிறது. கதையோ மிகவும் அருமையா னது. படிப்போரின் மனதை எவ்வகையிலும் பரவசப் படுத் தக்கூடியது. விலை அணா 8,

சற்பகவல்லி.

இது ஓர் அற்புதக்கதை. இக் கதாநாயகி எமலோகத் திற்குச் சென்று இறந்துபோன தனது கணவனுடைய உயிரை மீட்டுக் கொண்டு வருவது மிகவும் ஆச் சரியமாக விருக்கும். அணா 8.

தங்கவேணி.

ஸ்திரீகளுக்கான முக்கிய நா வல்களி லிதுவொன்று. இக்க தையில் பாலகேது வென்னும் அரசகுமாரன் இக்கதா நாயகி யை மணம்புரிவது மகா வேடிக் கையானது. விலை அணா 4.

V. T. Palamalai chettiar

தயாபரசுந்தரி

(ஓர் அற்புத காதற்களஞ்சியம்.)

இஃது

ஸ்ரீராம பராக்கிரமம், ஸ்ரீ கேதாரீஸ்வர விரதமகிமை, தனபதி,
இல்லறமாலிகா, சௌந்தராபாய், சுந்தராம்பாள், ஆநந்தரங்கன்,
கமலவல்லி, பூபாலன் புவனசுந்தரி, வாயாடி வம்பன்
முதலிய புத்தகங்களை எழுதிய

காஞ்சீபுரம்-தி. அரங்கசாமி நாயுடு அவர்களால்
இயற்றப்பட்டு

மூன்றும் பதிப்பு

கீழ்கட்டளை
எஸ். துரைசாமி முதலியார் அவர்களால்
தமது
சென்னை சூளை, ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

1922

[இதன் விலை அணா 12.

முகவுரை

நாவல் என்பது இயற்கை வனப்புகளையும், மனிதர்தம் சுபாவங்களையும், பல நீதிகளையும் எடுத்துக்கூறி வாசிப்போர் மனதை யுற்சாகப்படுத்தும் நூலேயாகும். இவ்வித நூற்கள் இந்நீருலாவிய நம் பரதகண்டத்தின் தமிழ்நாட்டில் சிற்சிலவே வெளிவந்திருக்கின்றமையால், மிக்க கற்பனை யலங்காரங்களையும், பல நீதி யொழுக்கங்களையும் புகட்டக்கூடிய சில விநோதக் கதைகளை யாங்காங்கிணைத்துப் படிப்போர் மனதைப் பறிக்கத்தக்க விதமாய் சொற்சுவை பொருட்சுவைகளாலும், கற்பனை யலங்காரங்களினாலும் யாவருக்கும் நன்கு விளங்கத்தக்க தெள்ளிய தமிழ்நடையில் இந்நூலை எழுதி முடித்துள்ளேன்.

இந்நூலில் கல்வியினாலடையும் பலாபலன்களையும், பாமரத் தன்மையினாலடையும் மிடிகளையும், நயவஞ்சகத்தால் வரும் கேடுகளையும், கற்பினால்வரும் மேன்மைகளையும், சமயோசித சாதுர்யத்தினால் வரும் உதவிகளையும் விசிதமாய்த் தெரிவித்திருப்பதுடன், இக்கதாநாயகியின் பிடிவாதத்தையும், அவளது கல்வியின் தேர்ச்சியையும் மிகவும் விரிவாக எழுதியுள்ளேன்.

இந்நாவலை எழுதி முடிப்பதற்கு எனக்குப் பலவிதத்திலும் உதவிபுரிந்த **ஸ்ரீமான் S. துரைசாமி முதலியார்** அவர்களுக்கு என் மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

காஞ்சீபுரம்—தி. அரங்கசாமி நாயுடு.

இந்நூலாசிரியரால் எழுதப்பட்ட புத்தகங்களுக்காக காஞ்சீபுரம்-பச்சையப்ப முதலியார் கலாசாலைத் தலைமைத் தமிழ்பண்டிதர் ஸ்ரீமான் வெண்பாப்புலி தி. சு. வேலுசாமிப்பிள்ளை யவர்களியற்றிய சாத்துக்கவி.

நேரிசை யாசிரியப்பா.

பூதலத்தாரு மீதலத்தாரு ம்
பாதலத்தாரும் பரசுறுசீர்சா
ஞ்சில்சுலவுங் காஞ்சியம்பதிவா ழ்
பாகவதர்க்கன்பன் ராகவநாயு டு
செய்தவப்பேற்றி னுய்தரவுதித் து
தோமில்சீரரங்க சாமியிளவ
ஞவலன்றீவி ஞவலருவப் ப
நாவலனேக நவிற்றின னவற்று ள்
காமருமன் சீராமபராக்கிரம
மணநனிமகிழ்வுறு தனபதியோ டு
திவள் பூபாலன் புவனசுந்த ரி
மாற்றம்பலவுறு வாயாடி வம்ப ன்
சாற்று தலைவெட்டி தயாபரசுந்த ரி
மதிவலோர்புகழும் சதிகோலை யின்ன வை
துதிகுப்புசாமி முதலியார் வரைந் த
தலைவாங்கி யபூர்வசிந் தாமணியுட னே
தங்கவேணி யிங்கிவை விரித் துஞ்
சொன்னயமுதலிய பன்னயமும்பெ றப்
பல்லோர்மகிழ நல்லோர்மேற்கோ ள்
ஆங்காங்கெடுத்துப் பாங்குறவிளக் கி
வியப்புற்றுலகம் விழைத ர
நயப்புறமகிழ் வினல்கினனன் றே.

K. T. Palanimalai chettiar.
Puduvayal.

தயாபரசுந்தரி.

ஸர்வந்த வுந்தித்திசைமுகனல் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகுக்கோர் திலகம்போன்றதும்; மாதம் மும்மாரிப் பெய்வதால் நீர்வளம், நிலவளம் மிகுந்து குடிவளஞ் செழித்தோங்கியதும், அழகிய சோலைகளாலும் தடாகங்களாலும் சூழப்பெற்றதுமான சித்திரபுரி யென்ருேர் பட்டணமுண்டு. அப்பட்டணத்தில் சகலகலைகளிலும் ஆழ்ந்த ஞானத்தையடைந்து, மனுநீதி தவராமல் குடிகளிடம் ஆறிலொரு கடமை வாங்கித் தன்னுயிரைப்போல் மன்னுயிரைப் பாவித்து, தர்மந்தவருத தயாநிதியாக தராதிபனுய் பக்திசாகரன் என்பான் அரசுசெலுத்தி வந்தான். இவ்வரசனுக்கு வித்தையிலும் புத்தியிலும் கியாதிப்பெற்ற சித்திராங்கதன் என்ருேர் புத்திரனுண்டு. இவ்வாலிபன் தகுந்த வ்யதை யடைந்ததும், தேய வளப்பங்களைக் காண ஆவல்கொண்டவனுய்த் தன் தந்தையிடம் விடைபெற்றுத் தன் நாட்டைவிட்டுக் காடு, வனம், வனந்தரங்களைக் கடந்து நெடுநாள் பிரயாணஞ் செய்து, பற்பல தேசங்களைச் சுற்றிப் பார்த்துக் கடைசியில் உத்தமபுரி என்னும் நகரத்தை யடைந்து, தனக்குத் தென்பட்ட ஓர் மனைக்கெதிரில் தன் குதிரையை விட்டிறங்கி, அவ்வீட்டுக்குடையவர்களைச் சந்திக்கவெண்ணிக் கதவண்டை யணுகினன். அத்தருணத்தில் அவ்வீட்டுக் குடையவளான ஓர் கிழவி

கதவைத் திறந்தனள். சித்திராங்கதன் அக்கிழவியைப் பார்த்து "சரணமென் றடைந்தோரைத் தளராது பாது காக்குந் தாயே! அன்னிய தேசஸ்தனாகிய நான் உன்னி ரப்பினிழலில் தங்கி யிருந்துபோக உனக்கு மனப்பிரிய முண்டோ? நான் உன் வீட்டில் சிலநாள் வசிப்பதினால் உனக்கு எவ்விதபொல்லாப்பும், விபத்தும் உண்டாகமாட் டாது" என்று வற்புறுத்திக் கூறினன்,

கிழவி அவ்வன்னியனுடைய முகத்தை உற்றுநோக்கி, அவன் பேசிய வாக்கியங்களினாலும், உருவத்தினழகினா லும், உடுத்தியிருந்த உடையினாலும் இவன் ஓர் நல்ல குடும்பத்தில் சேர்ந்தவனென வெண்ணி, அவனுக்கு வந்தனஞ் செய்து "ஓ கண்ணியம் பொருந்திய புண்ணிய வானே!

"பேடையைப் பிடித்துத் தன்னைப்
பிடிக்கவந் தடைந்தபோது
வேடனுக் குதவி யாக
விறகினால் வெந்தீமூட்டிச்
சாடுறும் பசியை நீக்கித்
தன்னுயிர் கொடுத்தபைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை
வேதத்தில் விழுமிதன்றே."

என்றபடி, தன் மனைவியாகிய பெண்புறாவைப் பிடித்துக் கொண்ட வேடன் குளிரினால் வருந்துவதைக் கண்ட ஓர் ஆண்புறா, விறகினால் தீமூட்டி அவ்வேடனுடைய குளிரைப் போகச்செய்து அவன் பசிப்பிணியை யாற்றத் தானும் அத்தீயில் வீழ்ந்து அவனுக்கிரையாகி நற்பதவி யடைந்த தன்றோ? அங்ஙனமிருக்க மானிடராய்ப் பிறந்தும் தன்னா லான உபகாரத்தைப் பிறருக்குச் செய்யாவிடில் அப்பிறவி

யினல் வரும் பிரயோஜனம் யாது? ஆகையால் உமக்கு வேண்டிய உதவியை யான்செய்யச் சித்தமா யிருக்கின்றேன். இவ்வீட்டிலுள்ள எல்லாவிடங்களையும், இதிலிருக்கும் சாமான்களையும் நீர் இப்பட்டணத்தி லிருக்கும்வரையிலும் நீரே வைத்தாளலாம்" என்றாள். உடனே சித்திராங்கதன் அவ்வீட்டின் பின்பக்கத்திலிருந்த தாழ்வாரத்தில் தன் குதிரையைக் கட்டிவிட்டு, கிழவியால் அனுப்பப்பட்ட ஓர் சிறுவனிடம் கொஞ்சம் பணம் கொடுத்துத் தனக்கு வேண்டிய சாமான்களுக்காகக் கடைக்கனுப்பி, அக்கிழவியைப் பார்த்து, "அம்மா! இந்த உத்தமபுரியின் அரசன் நல்ல தர்மகுண முள்ளவன்தானா? அண்டினோரை ஆதரித்து சம்ரட்சணை செய்யும் பரோபகாரச் சிந்தையுள்ளவர்தானா? ஒருக்கால் நான்போய் அரசனையடுத்தால் என்னை யாதரிப்பாரா?" என வினவினன். கிழவி அவ்விராஜபுத்திரனைப் பார்த்து "ஐயா! நீர் எண்ணிப் பேசியதிற் கதிகமான கீர்த்திப் பிரதாபம் இவ்வரசனாகிய புத்திசேனனிடத்தில் விளங்குவதன்றி, குடிகளிடத்தில் மிகுந்த காருண்ய முடையவர். இவரைப்போல் சற்குண சாத்மீக உத்தமதத்துவம் பொருந்திய அரசன் இப்பிரபஞ்சத்தில் காண்பதரிது. சகலரும் இவரது பெருந் தன்மையைப் புகழ்ந்துக் கொண்டாடுகின்றார்கள். இவரது பெருங்கீர்த்தி யடிபடாத தேசமில்லை. உதாரப் புருஷனுக்குப் பொருளும், சுத்தவீரனுக்குப் பிராணனும் திரணமாத்திரந் தானே" என்றனள்.

சித்திராங்கதன் கிழவியைப் பார்த்து, "அம்மா! நீ தெரிவித்தபடி அரசராகிய புத்திசேனன் மிக்க கீர்த்தியும், தக்கசெல்வமும், ஜீவகாருண்யமும், அழகும், ஆண்மையும், நீதி கெடாமையும், பொறுமையும் உடையவரா யிருப்பா

ராலுல் இம்மண்ணுலகில் இவருக்குச் சமானமான மனத் திருப்தியுள்ள பாக்கியவந்தர்கள் ஒருவரும் இரார்களே" என்றதும் கிழவி, "ஐயா! அரசனை அவ்வளவாய் மனோ ரம்மியனென்றும், பாக்கியசாலி யென்றும் சொல்வதற் கில்லை. அவரைப்போல பாக்கியவீனர்களும், மனக்கலக் கங் கொண்டவர்களும் உலகத்திலிரார்கள். அவர் சகல சுகிர்தகுணங்களால் நிறைந்தலங்கரிக்கப் பட்டவரா யிருந் தும் தனக்குப் பின் அரசுசெலுத்த புத்திரனிராததால் மனச்சஞ்சலங்கொண்டு கடவுளுக் கனுதினம் வந்தனைவழி பாடுகள் புரிந்து, ஜெபதபங்கள் அனுஷ்டித்தும் பிராப்தி யில்லையென்று மனோதுயரம் பூண்டிருக்கின்றனர். பிள் ளைக் கலிகொண்ட துயரமே அவருக்கோர் பெரிதாயிரா மல் அவரது ஏகபுத்திரி அதிசுந்தர வடிவழகியாகிய **தயா பரசுந்தரி** என்பவளால் அநுபவிக்கும் துன்பமும் துயர முமே அவருக்குத் தீராதவேதனையும் பெருத்த வாதனை யுமாயிருந்து, துக்க சாகரத்தில் மூழ்கி யிருக்கிறார்" என் ருள். அதற்குச் சித்திராங்கதன் "தன் குமாரத்தியால் மனத்துயரங் கொள்ளும்படி அவள் வருத்துவிக்கின்ற பொல்லாங்கென்ன? அதை விவரமாய்த் தெரிவிக்கவேண் டும்" என்று கிழவியை வினவினன்.

கிழவி **சித்திராங்கதனைப்** பார்த்து, "ஐயா! அக் கன்னிகை யிருக்கும் அரண்மனையில் என் குமாரத்தியு மொரு பாங்கியா யிருப்பதினுல் ஆங்கு நடக்கும் சங்கதி களைப்பற்றி அடுத்தடுத்தெனக்குத் தெரிவிக்கும் வழக்க முண்டு. ஆதலால் அவளது சம்பிரதாயமேதென்றும் அர சன் அவளாலனுபவிக்கும் வேதனை யெப்படிப்பட்டதென் றும் உமக்கு விசிதமாய் எடுத்துரைக்க வல்லவளாயிருக் கின்றேன். சொல்லருங் கிளிமொழி வல்ல அம்மாது

சிரோமணியாகிய தயாபரசுந்தரி நல்ல பாலியதசையாகிய 16-வயதில் நவமணி மண்டபத்தில் பூரணசந்திரனுதித்தாற் போல அதிக சுந்தர மிலகிய தெய்வ கன்னிகைகளை யொத்த சித்திரப்பிரதமையைப்போலக் காணப்படுகிருள், அவள் மனிதருடைய உள்ளத்தைச் சிறைச்செய்யும் பேரழகும், மன்மதன் கணையால் நிறைந்த காந்தியுங் கொண்டிருக்கின்றமையால் சிற்பசாஸ்திரிகளும் அவளது ரூபத்தை எழுதத் தியங்குகின்றனர். அரசன் சித்திரத் தொழிலில் மிகவும் நிபுணரான ஒரு சிற்பசாஸ்திரியைக் கொண்டு அவளது பிரகாசத்தை யுள்ளபடி படத்தி லெழுதுவிக்க ஆக்யாபித்தும், அவளது உண்மை யழகின் பிரகாசத்தில் ஓர் பாகத்தை மாத்திரம் தீரக் கண்டுபிடித் தெழுதினவனேயல்ல. சில சிற்பிகள் தங்கள் வித்தையின் திறத்தைக்கொண்டு அவள் ரூபத்தின் ஓர் பகுதியை மாத் திரம் சித்திரித்தெழுதிய படங்களைக்கண்ட பல இராஜபுத்தி ரர்கள் உடனே காமாந்தகாரத்தில் மூழ்கி, அவளது கட் டழகால் மதிமருண்டு அவர்கள் நின்றநிலை தெரியாமல் சோர்ந்துவிழுந்து சட்டமாகிய அவளது புகழுறு மழகால் மானிட ஜென்மங்கள் மட்டற்ற வாசைகொள்ளக் கடவுள் வேண்டுமென்றே தன் பராக்கிரமச் செய்கை வெளிப்படப் படைத்தாரோ வென்று ஐம்புலன்களும் அனல்கொண் டெழும்ப அவளைப் பாராமல் உயிர்நிலை கொள்ளாதென்று ஓடிவருகிருர்கள். இவ்விதமாய் அழகில் அவள் காந்தர்வ ஸ்திரீக்கு மேற்பட்டு மனிதரை மயக்கும் வடிவழ கெவ் வளவோ அவ்வளவுக் கதிகமாக அவளது மனக்கண் பிர காசமும் அதிகரித்து வித்தையில் பூரண பாண்டித்தியத் தைப் பெற்று, ஆடவர் கல்விக் கதிகரித்த கல்விக்களஞ்சி யமா யிருக்கின்றனள். சகல சாஸ்திரங்களிலும் நிபுணி

யாய், சாஸ்திரிக ளறிவையெல்லாம் அழிக்குங் கிரண
மாய்த் தோன்றி, உள்ளும்புறம்புமொத்த சோதிமயமாகப்
பிரகாசங்கொண்டு வச்சிரப்பதுமைபோல் துலங்கும் கல்வி
கேள்விகளாற் சிறந்த சாரதாபீடமா யிருக்கின்றாள், இப்
படி அவள் மானிடர் மயங்கத்தக்க நல்லபேறு பெற்றிருந்
தும் அவளது பழிபாவங்களைத் தரும் கொடூர சிந்தை
யொன்றே அவளைக் கறைப்படுத்துகிறதா யிருக்கின்றது.
இன்றைக் கிரண்டு வருடங்களுக்கு முந்தி மச்சபுரியின்
அரசகுமாரன் தயாபரசுந்தரியின் சாயலைப்போலச் சித்
திரித்திருந்த படத்தைக் கண்டு மதிமயங்கி மோகாந்தகார
ஞானதால், மச்சபுரியின் அரசன் புத்திசேன ராஜனுடன்
சம்பந்தம் பண்ணுவது கிடைக்கத் தக்கதல்லவென்று
கருதி மணவோலை யெழுதி யனுப்பினன். புத்திசேன
னும் தன் குமாரத்தியை மச்சபுரியரச குமாரனுக்குக்
கொடுத்து விவாகஞ் செய்யச் சம்மதித்திருந்தும், மகா
கர்வியாகிய தயாபரசுந்தரி மற்ற அரச புத்திரர்களைத்
தூஷித்துப் பழிவாங்குவதுபோல இவ்வரச குமாரனையும்
சட்டைபண்ணாதது தந்தையாகிய அரசனுக்கு மனப்
வாடி, மகள்மீது கோபங்கொள்ளச் செய்தது. தயாபர
சுந்தரியோ தன் தந்தையின் கருத்திற்குச் சரியாய்
இணங்குவதற்குப் பதிலாய் தன் பிடிவாதத்திலேயே
நிலைத்து மட்டுக்கடங்காத விதமாய் தன்னையே பாநித்துக்
கொண்டதால், தீராவியாதி மேலிட்டு மிகவும் நலிவெய்தி
னள். வைத்தியர்கள் தங்களா லியன்றமட்டும் அவளைத்
தேற்றப் பிரயாசைப்பட்டுக் கடைசியில் உண்மை ஸ்தி
தியை யறிந்து அசனிடஞ் சென்று, "அரரசே ! ஔஷ
தப் பிரயோகத்தினல் தங்கள் குமாரத்திக்கு வியாதி
சொஸ்தமடையாது. மச்சபுரியின் அரச குமாரனுக்குத்

தாங்கள் அவளை விவாகஞ் செய்வதென்னும் வாக்குறுதியினால் அவ்வியாதி ஏற்பட்டது. அவ் வாக்குறுதியைத் தாங்கள் நிராகரித்தாலன்றித் தங்கள் குமாரத்தியை நீர் இனிக் காணப்போகிறதில்லை'' என்றனர்.

பண்டிதர்கள் மொழிந்ததைக் கேட்ட அரசன் தன் புத்திரியின் மனதுக்கு விரோதமாய் கட்டாயப்படுத்தின மணவேற்பாட்டை நிராகரித்து, வந்த தூதர்களைத் திருப்பியனுப்புவதே தகுதியென்று தீர்மானித்துக்கொண்டு, தன் குமாரத்தியிருக்கும் அறைக்கு அதிக துரிதமாகச் சென்றான். தயாபரசுந்தரி தன் தந்தையைக்கண்டதும் "ஆ என் தந்தையே! என்பழி ஏற்றுக்கொள்ளத் தாம் சித்தமாயிருக்கின்றீர்களோ? இதற்குத்தானோ என்னை இவ்வளவு காலம் அருமையாய் வளர்த்தீர். ஆனாலும் என்னை இழக்கக்கூடாதென்கின்ற எண்ணம் தங்களுக் குண்டாயிருந்தால் நானிப்போது தங்களைக் கேட்கும் உடன்பாட்டுக்கிணங்கி அதிக பலமான பிரமாணிக்கத்துடன் வாக்களிக்க மனமுண்டானால் என்னுயிர் எனக்கு நிலைக்குமல்லால் மற்றப் பிரயத்தினங்களினால் முடிப்பதசாத்தியமே. அவ் வுடன்பாடு யாதெனில், என்னை மணம்புரியவரும் அரசபுத்திரர்களில் எவ்வித அந்தஸ்துள்ளவனாயிருந்தாலும் என்னுடன் விவாக நிச்சயம் பெறுவதற்குமுந்தி வித்வான்கள் சங்கத்தின் முன்னிலையில் நான் போடும் சில கேள்விகளுக்குத் தக்க விடையளித்து அவ் வித்துவான்களும் அவைகளை யங்கீகரிப்பாராகில் அவனையே எனக் குரித்தான மணாளனாக நான் ஏற்றுக்கொண்டு மணஞ் செய்துக்கொள்ளுவேன். என் கேள்விகளுக்குத் தக்க விடைபகரப் புத்தியற்றவனைத் தத்தளிப்பானாகில் அந்தட்சணமே அவன் சிரசு கண்டிக்கப்படுமென்று சட்டமேற்படுத்தி, அதை

எல்லா தேசங்களுக்கும் விளம்பரப்படுத்தவேண்டும். இந்த உத்தமபுரிக்கு வரும் அன்னியராஜ புத்திரர்களெல்லாம் கலங்கிப் பயந்து நான் ஆடவர்மீதில் வெறுப்புற்று சற்றும் காதல் கொள்ளாதவளென்று தீர்மானித்துக்கொண்டு வந்தவழியே யோடிப்போவார்கள். ஒருக்கால் கலங்காத வீரனும், கல்வி கேள்விகளில் தேர்ச்சியடைந்த பண்டிதனுயிருந்து ஒருவன் துணிந்துவந்தபோதிலும் அவன் என் கேள்விகளுக்கு எதிர் நிற்கக்கூடாதவிதமாய் ஆழ்ந்தக் கருத்துக்களினுல் அவன் புத்தியைச் சிதறும்படிச் செய்து, சகல பண்டிதர்களையும் அவ்விதத் தடுமாற்றமடையும்படிச் செய்து ஏமாற்றும் வல்லமை என்னினுண்டா யிருப்பதால் இவ்வித துணிவோடு எடுத்துக் கூறினேன்" என்றனள்.

புத்திசேனன் இவ்வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியமடைந்து, என் குமாரத்தி விவாகஞ் செய்துக்கொள்வதில் வெறுப்புற்றவளல்லவே. இவ்வித வெறுப்பை யவளுக்குண்டுபண்ணினவர் யார்? அவள் விளம்பரப்படுத்தச் சொன்ன பிரமாணச்சட்ட வலுமையினுல் பெண்கேட்க வருபவர்கள் பிரமித்து மிரண்டோடியல்லவோ போவர்கள். ஆகிலுமென்மகள் விருப்பத்துக் கிடையூறு செய்யாமலும், அதினு லவளுக்கொரு கெடுதிவந் தணுகாமலும், இராஜபுத்திரர்கள் சிந்தனையற்றுத் தங்களுயிரை யிழக்காமலு மிருக்கும் பொருட்டு அப்பிராமணச் சட்டத்தை ஏற்படுத்தி மகள்படும் மனக்கஸ்தியான பிணிக்கோராற்றல் செய்யவேண்டுமென்று தனக்குள் எண்ணித் தன் குமாரத்தியைப் பார்த்து, "குழந்தாய்! உன் விருப்பத்தின்படியே விவாக விளம்பரச்சட்டம் ஏற்படுத்தச் சித்தமாயிருக்கின்றேன்" என்றனன்.

தயாபரசுந்தரி இனி தன்னனுமதியின்றி தன் கற்புக் குறிவுவரப் போகிறதே யில்லையென்று சந்தோஷித்து தன் தந்தையின் பிரமாணிக்க வார்த்தையில் பற்றுதல்வைத்து, தனது தீராத வியாதியினின்று முழுவதும் சவுக்கியமடைந் தனள்.

புத்திசேனனுடைய கட்டளைப்பிரகாரம் கலியாணச் சட்ட விளம்பரம் தேசமுழுதிலும் பறைசாற்றித் தெரி வித்திருந்தும், அநேக மனனர்கள் தயாபரசுந்தரியின் சவுந்தரிய ரூபத்தைப் பற்பல சிற்பசாஸ்திரிகள் தீட்டிய படங்களைக் கண்டு மதிமருண்டு மையல்கொண்டு.

“ஆசையாற் சந்திரனங்கந் தேய்ந்தனன்
ஆசையாற் சௌபரியறிவை நீங்கினுன்
ஆசையா னராசுரனுவி போக்கினுன்
ஆசையால் வாலியுமழிந்து போயினுன்.”

என்றதைச் சற்றும் கவனியாமல் ஆசைப்பெருக்கினுல் அவளது பாதத்தி லுயிரிழப்பதே தகுதியென வெண்ணி, அரசனது கொடியகட்டளையை யொருபொருட்டா யெண் ணுமல் உத்தமபுரிக்குவரத் தலைப்பட்டார்கள். அரிய நூல்களை யவதானம்பண்ணின பண்டிதை தயாபரசுந்தரி போடும் கேள்விகளைச் சுலபமாய் உரைசெய்யலாமென்று துணிந்து வந்தவர்களில் ஒருவராவது தப்பிப்பிழையாமல் ஒருவர்பின் ஞெருவராய் அவளுடைய விஞக்களுக்கு உரைபகர சக்தியற்றவர்களாய், பிரமாணச் சட்டப் பிரகாரம் கொலைசெய்யப்பட்டே வந்ததும் தவிர தலை வெட்டி தயாபரசுந்தரியெனத் தன்பெயரை அவள் விளம்ப ரப்படுத்திக்கொண்டாள். இவ்விதம் அரசபுத்திரர்களெல் லாம் கொலைக்காளாகும் கொடூரச்செய்கையின் மீது அரச னுக்கு வெறுப்பா யிருந்தும் தன் மகளின்மேலுண்டான

பட்சத்தினால் அவ ளுயிர்தப்பிப்பிழைப்ப தொன்றையே கருதி, பிரமாண சட்டத்தை ஏற்படுத்தி யழிப்பது ராஜ நீதிக்குப் பொருந்தாததாதலால் அதுவே யவருக்கு ஏக்கமா யிருந்து, தன்னால் கூடியமட்டும் தன் குமாரத்தியைமணம புரிய விரும்பிவரும் ராஜபுத்திரர்களின் கதி அதோகதி யாகுமென்று அவர்களுக்குத் தெரியக்காட்டி, அவர்களை மரணத்தினின்றும் விலக்க சர்வ முயற்சியை யெடுத்துக் கொண்டும் பிரயோசனப்படாமல் காமசன்னதங்கொண்டு வருபவர்கள் அரசனது நல்லுபதேசத்தை அலட்சியஞ் செய்து உனக்கெனக்கென்று மேல்விழுந்து, வித்தியா சாதுர்யக் குறைவினால் அவளுக்குத் தோற்று, அவளால் விதிக்கப்பட்ட தண்டனையாகிய கொலைக்குள்ளாகி வருகின் றார்கள்.

சாதாரண பெண்பிள்ளையின் வித்தை இவ்வளவு சிறப் பும் நல்ல பாண்டித்தியமு மடைந்து ராஜகுலங்களை யெல் லாம் கருவழித்து வருவதாலல்லவோ தேசம் எங்கும் விசன மேலிட்டு, அநேக ருயிரை யிழக்க ஏதுவா யிருக்கி றதே. இதைவிட என்மகள் இறந்துபோய் இராஜாக்க ளெல்லோரும் சுகித்து இராச்சியபரிபாலனம் செய்யார் களா? என்ற வெறுப்பு அரசனுக் கிப்பொழுதுதான் மேலிட்டு வருந்திக்கொண் டிருக்கின்றான். சற்றும் இரக்கமில்லாத தன் குமாரத்தியின் கொடூரச் செய்கை யால் தேசம் அமளிகுமளியா யிருப்பதைப்பற்றி அரசன் மனம் வருந்தி மணவறிக்கைச் செய்பவர்களை யெல்லாம் தயாபரசுந்தரியிடம் போகச் செலவுகொடாமல் வந்த வழியே அவர்களைப் போகும்படி புத்திசொல்லி யனுப்பு கின்றார். அவரை மீறிப் போகின்றவர்க ளெல்லாம் எம னுலகஞ் சேர்கின்றார்கள். சிலநாட்களுக்குமுன் வித்வ

யில் தனக்கிணை யொருவரு மில்லையென்று சொல்லத்தக்க பூரணபாண்டித்தியமுடைய கவிச்சக்ரவர்த்தியாகிய ஓர் அரசகுமாரன் இந்த தயாபரசுந்தரியால் தன் கல்விக்கு முன் அவள் கல்வி மீசுரமோ வென்று சாமர்த்தியம்பேசி, கைவழித்த மண்போலவளை எளிதாயெண்ணி அவளிடஞ் சென்று பார்த்ததில் அவள் சரஸ்வதியும் நாணத்தக்கக் கல்விக் களஞ்சியமென்றே அவளைப் புகழ்ந்து கடைசியில் அவளுடைய வினுக்களுக்கு விடைபகர முடியாமற்போன மையால் அவன் கொல்லப்பட்டனன். இன்றிரவிலும் ஒருவன் தயாபரசுந்தரியால் வினவப்பட்ட வினுக்களுக் குத் தக்க விடைபகர யேலாதவனுய் அபஜயப்பட்டமை யால் இராஜபுத்திரி அவனைத் தன் கத்திக் கிரையாக்கப் போகின்ருள்'' என்று கூறினள்.

சித்திராங்கதன் கிழவியைப் பார்த்து, "அம்மா நீ சொல்லிவந்ததின் வயணமின்னதென எனக்குத் தோன்ற வில்லை. இங்குவந்த அரசர் குமாரர்களிற் பெரும்பான்மை யோர் சொற்ப கல்வியுடையவர்களா யிருத்தல்வேண்டும். அவர்களில் ஒருவனுவது சந்தேக விபரீதமறக் கல்வி பயின்று, அக் கொடியவள் கேட்கும் கடினமான கேள்வி களுக்குத் தக்க விடை கூறமுடியாமற் போய்விட்டதா ? ஆனல் நீ தெரிவித்தபடி அம்மாது மிருந்த வடிவழகியா யிருப்பாளானல் எவன்தான் அவளழகில் சொக்கிப் போகாமலிருப்பான். மிக்கத் தேர்ச்சியடைந்த சிற்ப சாஸ்திரிகள் தங்கள் சாமர்த்தியத்தினுல் எழுதிய படத் தின் சிறப்பைப்பார்த்தோ அல்லது அவள் உள்ளபடியே மறுவில்லா வடிவழகிதானே ? என்று வினவினன். அதற் கந்தக் கிழவி, 'ஐயா ! நீர் இப்படியெல்லாம் நினைப்பது பிசகு. அந்த இராஜபுத்திரியினழகை நான் பாராமலே

யிருந்தால் நீர் சொல்வதோர் தோராயமென்றேயொப்புக் கொள்ளுவேன். கண்கண்ட பொருளுக்கு வேறு சாட்சியும் வேண்டுமோ ? அம்மாதுசிரோமணியின் சவுந்தரியம் இன்னபடியென்று உண்மையாய் எவரும் சித்திரித்தவர்களல்ல. அந்தப்புரத்தில் அம்மாதுடன் வசிக்கும் அவள் தாதிகளிலொருத்தியாகிய என் மகளைப் பார்க்கப்போகுந் தருணங்களிலெல்லாம் அவளழகை நான் கண்டு மருண்டு திகைத்து வந்திருக்கின்றேன். அக் கன்னிகையைப்போல எழுதப்பட்டிருக்கும் படத்தை நீர் உய்த்துப் பார்க்கும் போது அம் மங்கை நிஜரூபமாய் நின்றாற்போலிருந்து அவள் மன்மதனுடைய நாட்டமோ பூந்தோட்டமோவென நைந்துருகிப்போவீர்" என்று சொன்னவுடனே சித்திராங்கதன் அவளழகு கோடிசூரியப்பிரகாசம்போ லிருக்குமென்பதற்கோ ரையமில்லையென்று நிதானித்து, அக்கிழவியைப் பார்த்து, "அம்மா! புலவர் சிரோமணிகளும்,வித்வசிரேஷ்டர்களும் தெரிந்துகொள்ளக் கூடாத அவ்வளவு ஆழ்ந்த கருத்துக்களடங்கிய கேள்விகளையே அம்மாது சிரோமணி வினவுவாளென்றே நினைக்கின்றேன்" என்றான்.

இவ்விதம் இவர்கள் வார்த்தையாடிக்கொண் டிருக்கையில் கடைக்குச் சென்றிருந்த சிறுவன் தின்பண்டங்களை வாங்கிக்கொண்டு வீடுசேர்ந்தனன். சித்திராங்கதனும் கடும்பசியா யிருந்தமையால், அத் தின்பண்டங்களைப் புசித்துக்கொண் டிருந்தான். இதற்குள் பொழுதும் சாய்ந்து இருட்டிப்போனது. அப்போது வீதியில் தண்டோரா போட்டுக்கொண்டு போகும் பெருங் கோஷ்ட இரைச்சலைக்கேட்டு, சித்திராங்கதன் கிழவியைப்பார்த்து, "அம்மா! இதோ பறை சாற்றிக்கொண்டு போகிறார்

களே அது எதற்காக?'' என்று வினவினுன். அதற்குக் கிழவி, நான் உனக்கு தயாபரசுந்தரியின் வரலாற்றையெடுத்துச் சொன்னபடி அவள் தன் கேள்விக் குரைபகராத ஒரு இராஜபுத்திரனுடைய தலையைப் பரிசாய் வாங்கப் போகின்ருள். நான் சற்றுமுன் இன்றிரவி லொருவன் சிரசு சேதிக்கப்படப் போகிறதென்று உம்முடன் பேசியிருந்தேனல்லவா? அதைப்பற்றி பட்டணத்திலுள்ளார் யாவருமறிய தெரிவிக்கும் வழக்கப்படி இப்போது பறை சாற்றுகிருர்கள். அவன் கொலைசெய்யப் படுவதற்காக குற்றப்பத்திரிகை நியாயாதிபதிகளால் முடிவானபிறகு சிரச்சேதம் மாத்திரம் இராக்காலத்தில் நடக்கிறதுண்டு, தன்மகள் இவ்விதம் அரசகுமாரர்களை வதைசெய்வது அரசனுக்கு வெறுப்பாகி பகற்காலத்தில் இக் கொடூரச் செய்கையைச் செய்யவொட்டாமல் இரவில் நடத்தப்பட வேண்டுமென்று தீர்மானித்திருக்கிருர்'' என்று கூறினள்.

கொலைக் காளாகப்போகும் அன்னிய ராஜபுத்திரனுடைய பரிதாபத்தைக் கண்ணுரப் பார்க்கவேண்டுமென்று யோசித்த சித்திராங்கதன், உடனே வெளியில் புறப்பட்டு உத்தமபுரியின் குடிகள் பெருங் கூட்டமாய்த் திரண்டு சாய்வதைக்கண்டு, தானும் அவர்களைத் தொடர்ந்து அரசனுடைய அரண்மனையைப் போய்ச் சேர்ந்தான். அரண்மனைக் கெதிரில் ஓர் உன்னத கோபுரம் மிகவும் அலங்காரமாய் அமைக்கப்பட்டு, கமுகு, வாழை முதலிய மரங்கள் கட்டப்பட்டு, அக்கோபுரத்தி னடிமுதல் உச்சிபரியந்தம் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு மிருந்ததையும், கோபுரத்தினடியில் ஓர் கட்டில் யானைத்தந்தத்தால் செய்து பொன் தகட்டினுல் சித்திரித்திருக்கவும், அங்கே யனேக கூடாரங்கள் அடிக்கப்பட்டு அவைகளில்

இரண்டாயிரம் யுத்தவீரர்கள் உருவிய கத்தியைக் கையி லேந்தி உயிரை நொடியில் வாங்கும் எமதூதர்களைப்போல் நின்றுகொண் டிருக்கவும் சித்திராங்கதன் கண்ணுற்று, இக் காட்சியின் காரணந்தா னென்னவென்று பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது கோபுரத்தினுச்சியில் சாவு மணி யடிபடவும் சாவுக்கடுத்த சின்னங்களாகிய தம்புரு, மத்தளம் முதலியவை அண்டஞ் செவிடுபட அதிரவும், சாவுசடங்குகளெல்லாங் குறைவற நிறைவேறினபின்னர், நியாயவாதிகள் இருபதுபேரும் மற்றும் சில சட்ட நிரூ பணக் கர்த்தர்களும் அக் கோபுரத்தைச்சுற்றி உட்கார்ந் திருக்கவும், பிறகு கொலைக்கு நியமிக்கப்பட்ட இராஜ குமாரன் புஷ்பங்களால் சரீரமுழுதும் அலங்கரிக்கப்பட்டு அங்கு கொண்டுவரவும், அவனோர் பதினெட்டு பிராய முள்ள யௌவன புருஷனா யிருந்தும் கொலைக்காரருக்கு ஒப்பிக்கப்பட்டு, வயதுசென்ற நியாயவாதி யொருவர் அவன் கையைப்பிடித்து நடத்திவர கொலைக்காரனவன் பின்செல்ல மூவருமாக அக் கட்டிலின்மேலேறி உட் கார்ந்ததட்சணம் சாவுசின்னங்க ளடிபடவும் கண்டனன். அப்போது பெருங்கூச்சலடங்கி அமைதலுண்டானதால் கட்டிலின்மேலிருந்த நியாயவாதி யெழுந்து ராஜகுமார னைப்பார்த்து, "இராஜபுத்திரா! தயாபரசுந்தரியை மணம் புரிய இச்சித்துவந்த காலத்தில் அரசனால் ஏற்படுத்தப் பட்ட பிரமாணச்சட்ட மின்னதென்று உனக்கு விசித மாய்ச் சொல்லப்பட்டதுண்டோ? அப்படி யுனக்குத் தெரிவித்தபிறகு இவ்வாபத்தினின்று உயிர்தப்பிப் பிழைக் கும் ஏதுவைத் தேடிக்கொள்ள அரசன் எச்சரித்தாரோ? இல்லையோ?" என்று கேட்கவும், இராஜபுத்திரன் ஆமென் றுரைபகரவும் அப்போது நியாயவாதி, நீ உன் பிராண

னுக்குத் தீங்கு வைத்துக்கொண்டதால் இப்போது உன் பிராணன் தப்பிப்பிழைக்கும்படிச் செய்வது அரசனாலும் எங்களாலும் முடியாத காரியமேயென்று கூற இராஜ புத்திரன், "இல்லை, இல்லை; குற்றம் என்மீதி லிருக் கிறது" என்று சொன்ன தட்சணம் பக்கத்திலிருந்த கொலையாளி தன் கத்தியால் அவன் சிரசை ஒரே வீச்சாக வீச, துண்டமொரு பக்கமும் முண்டமொரு பக்கமும் விழுந்து துடித்துக்கொண் டிருப்பதை சித்திராங்கதன் கண்டு பிரமித்து நின்றான். அதற்கென அவ்விடம் வந்தி ருந்த சிலர் அச்சவத்தை படக்கஞ்செய்வதற்காக அதை அப்புறம் எடுத்தேகினர்.

பிறகு நியாயவாதிகளும், மற்றப் பிரஜைகளும் தத் தம் பதிக்கேகினார்கள். பிரஜைகள் போய்க்கொண்டிருக் கையில், அரசன் இவ்வளவு மதியின்மையாய் தன் மகளின் கொடூர விருப்பத்துக் கிணங்கி அவர் செய்த பிரமாணிக் கத்தை மாற்றிக் காருண்யத்தைக் கடைப்பிடித்திருக்கக் கூடாதாவென்று அரசனைப் பழித்துக்கொண்டே சென்ற னர். சித்திராங்கதன் மாத்திரம் கலங்கின மனத்துடன் அவ்வரண்மனை முகப்பிலேதானே நின்றுக்கொண்டிருந்து தனக்குச் சற்றுதூரத்தி லோர் மனிதன் தன்னைவிட கலக்கமடைந்தவனாய் கண்களில் ஜலத்தைத் தாரைதாரை யாய் வடியவிட்டுக்கொண்டு அழுவதைக்கண்டு, இவன் இறந்துபோனவனுக்குப் பந்துவா யிருக்கவேண்டுமென் றெண்ணி அவன் சமீபத்திற்குப்போய், "ஐயா! நீர் என் இவ்விதம் கலங்கி யழுகின்றீர். இறந்துபோனவன் உமக்குப் பந்துவோ?" என்றுசாவினன். அதற்கம் மனி தன் புலம்பிக்கொண்டு மாறுத்தரமாக, "ஐயா! அவன் எனக்கும் பந்துவாய்மாத்திரமிராமல், நானவனை வளர்த்த

யைத்தாதையாகவு மிருக்கின்றேன்'' என்று சொல்லி, "ஓ பதுமபுரியின் அரசனே ! உமது குமாரனுக்கு சம்பவித்த அகாலமரணவார்த்தையைக் கேட்க உமக்கெவ்வித துக்கத்தை யுண்டுபண்ணும். இத்துக்கச் செய்தியை உமக்குத் துணிந்தறிவிப்பவன் எவன் ? இச்செய்தியானது உமது காதுகளில் நாராசம்விட்டதுபோலிராதா?'' என்று தனக்குத்தானே பிரலாபித்துக்கொண்டிருந்தனன். சித்திராங்கதன் இதைக்கேட்டு, பதுமபுரியின் அரசகுமாரன் உத்தமபுரியின் இராஜபுத்திரியின்மீது மோகித்த தெவ்விதமென்று வினவினன். அதற்கம்மவிதன், ஐயா ! நான் அவரது விருத்தாந்தங்களையெல்லாம் முதலிலிருந்து விவரித்துச் சொல்வேனுனல் நீர் ஆச்சரியப்படுவீ ரென்பதற்கோ ரையமில்லை. ஆகிலும் நீரறிய விளம்புகின்றேன் கேளும்'' என்று சொல்லத் தொடங்கினன்.

ஐயா ! இப்போது கொல்லப்பட்ட இராஜகுமாரன் தன் தந்தையுடன் சகலசம்பத்துடன் சுகித்திருந்து, அரண்மனைப் பிரபுக்களெல்லாம் இவன் சிம்மாசனமேறி ராஜமுடிதரித்து மன்னவனுவானென்னும் பெரு நம்பிக்கைக் கொண்டிருந்தனர். இவன் பகற்காலத்தி லெல்லாம் வேட்டையாடுவதும், இராக்காலத்தில் உல்லாசமாக தன் னிஷ்டம்போல வாலிபர் கூட்டங்கள், தாசி வேசிகள் அனைவரையும் தன் சபாமண்டபத்திற் கழைப்பித்து, அவர்களுடன் உண்டு களித்து, லாகிரி வஸ்துக்களைக் கொண்டமட்டும் குடித்து ஆடிப்பாடிக் காலத்தைக்கழிப்பான். அவனுடன்கூட அவனுக்குத் துணையாக அவன் கைத்தாதையைப்போல் இருக்கும்படி அவனுடைய தந்தையால் நான் நியமிக்கப்பட்டிருந்தேன். என்னுடைய புத்திமதிகள் ஒன்றும் அவனுக்கு உபயோகப்படாமல்

அவனுடைய உல்லாசப்பெருக்கம் நாளுக்குநாள் அதி கரித்தேவந்தது. ஓர்நாள் பிரபல சிற்பசாஸ்திரி யொரு வன் அநேக இராஜ குமாரத்திகளின் உருவப்படங்களைச் சேகரித்துக்கொண்டு, இறந்துபோன இராஜபுத்திரனுக்கு அவைகளைக்காட்டி மையல் மூட்டிக்கொண்டே வந்தனன். அந்த சிற்பி காட்டிய படங்களைப் பார்த்தபோது அரச குமாரனுக்குக் காமப்பித்தூறி, அவைகளை மிக்க அழ குள்ள படங்களென்று புகழ்ந்து கூறினன். அதற்கந்த சிற்பி அப்படங்களெல்லாம் சாதாரண அழகுள்ள மாதர்க ளுடையதே. மிகவும் சவுந்திரவதியாய் சிற்பசாஸ்திரிக ளால் ஆயிரத்திலொருபாகமேனும் கண்டெழுதக்கூடாத கந்தர்வமாதையொத்த ரூபலாவண்ய ஸ்திரீயின் படமொன் றிருக்கின்றது. அரனழகைப் பாருமென்று சொல்லிக் கொண்டே தன்கையில் வைத்திருந்த பெட்டிக்கு அடியில் இருந்ததோர் படத்தையெடுத்து, பதுமபுரியின் இராஜ புத்திரன் கையில் கொடுத்தான். அரசகுமாரன் அப் படத்தைக் கையில் வாங்கினவுடனே சோபமுற்று, மானிட சிருஷ்டியில் இவ்வித அழகியை எக்காலத்திலுங் கண்ட தில்லையென்று பிரமித்து, காமாக்கினியிலாழ்ந்து அறிவழிந் திருந்தனன். அந்தச் சிற்பி அவன் படும் வாதனையைப் பார்த்து, ஐயா! இப்படம் உத்தமபுரியின் அரசனாகிய புத்திசேனனுடைய குமாரத்தியின் படம். அவள் பெயரோ தயாபரசுந்தரி, ஆனால் இது அவளது தத்ரூபம் போன்ற படமேயல்ல. சிற்பசாஸ்திரிகளின் சாமர்த்தி யத்தை முழுதும் உபயோகப்படுத்தியும் உள்ளபடி யவளழ கைக் குறைத்துக்காட்டும்படமாகவே யிருக்கின்றதென்ற னன். இதைக்கேட்ட என் எஜமானன் அப்படத்துக் குள்ள விலையைக் கொடுத்து வாங்கி,

> "போற்று குருகிளைகள் பொன்னுசை யோர்க்கில்லை
> தோற்று பசிக்கில்லை சுவைபாகம்—தேற்றுகவி
> சேர்க்கிலை சுகமு நித்திரையுங் காமுகர்தம்
> ஆசைக்கிலை பயமானம்."

என்றபடி என்னை நோக்கி, "நண்பா! இப்படத்தைப் பார்த்தனையா? இப்படத்தி லெழுதப்பட்டிருக்கிற முகச் சாயல்கள் முற்றும் சௌந்தரியவதியைப்போல சற்றும்பழு தரத் தீட்டிய கண்களும், மானிடரை மயக்கும் சேலையும் வேலையொத்தாப்போல மருட்டி மிரட்டி மதனலீலைக்குள் ளாகச் செய்வதாகவு மிருக்கின்றது. இப்படம் சாதாரண மாய் வேடிக்கைக்கென்றே வர்ணித்துச் சித்தரித்த படமே யொழிய மற்றப்படி உயிருடனிருக்கும் ஸ்திரீகளுக்கொத்த சாயலுடையபடமென்று நம்புவதற்கெவ்வளவு மிடமில்லை ஸ்திரீகளுக்கு இந்தப் பேரழ கெங்கேயிருந் துண்டாகும்? இது அச்சிலே வார்த்த வச்சிரப்பதுமைப் போலல்லோ விருக்கின்றது. சிற்பன் தன் கைதேர்ச்சியினால் இப்போர்க் கொத்த படங்களை வீணாய் எழுதுகிறதில் அவனுக்கென்ன பலன்? ஆனால் அவன் இதைச் சிறந்த யோசனைக்கொண் டெழுதிய புத்தியின் திட்பநுட்பத்திற்காகவும், இவ்வளவு உன்னத வர்ணிப்புகளை நன்னயமாய் நிதானித் தெழுதிய அவனது புத்தி கோசரத்துக்காகவும், மெத்தப் புகழ்ந் துப் போற்றுகின்றேன். நண்பா! இப்படத்தைப்பார்க்க மையல்கொண்டு நான் எனது கண்களையதினின்று அப்பா லெடுத்துவிட முற்றும் சக்தியற்றவனா யிருக்கின்றேன்" என்று சொல்லி, அவன் கொண்டமையல் மண்டைக்கேறி காமப்பித்து மீறினதால் சோபமுற்று பூமியில் பொத் தென்று விழுந்தான். கொஞ்சநேரத்திற்குப் பின்பு இராஜ புத்திரன் ஸ்மரணைதெளிந்து எழுந்து மறுபடியும் அப்ப டத்தையே உய்த்துக் கவனித்துக் கூர்ந்த பார்வையாய்ப்

பார்த்துக்கொண்டிருந்து மறுபடியும் என்னை நோக்கி நண்பா! இப்படமோர் வேடிக்கைக்காக உயிர் நிலை கொண்டு உருக்கிவார்த்த வச்சிரப் பிரதமைபோ லெழுதப் பட்டதா யிராமல், இது வாஸ்தவமாகவே பூரணச்சந் திரனைப் பழிக்கின்ற ஓர் இராஜபுத்திரியின் சௌந்தரி யத்தைக் கண்டே தீட்டிய படமென்று இப்படத்தை யெனக்களித்த சிற்பசாஸ்திரி தெரிவித்தமையால், இது யதார்த்தமாய் உயிரோடிருக்கும் ராஜபுத்திரியின் சாயல் தான் என்று நான் தீர்மானித்துக்கொண்டேன். ஆகை யால் அந்த இராஜபுத்திரியாகிய தயாபரசுந்தரியைக் காணு மல் என்னுயிர் நிலைகொள்ளாது. நான் உடனே உத்தம புரிக்குச் செல்லவேண்டு மாகையால் என் தந்தையிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு வருகின்றேன், நீயும் என்னு டன்வர சித்தப்படவேண்டும்" என்று சொல்லித் தன் தந்தையிடம் தான் தேசசஞ்சாரம் செய்து வரப்போவ தாய் விடைபெற்றுக்கொண்டு என்னையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

நாங்கள் இருவரும் பதுமபுரியைக்கடந்து சமுத்திர தீரத்தையடைந்து, உத்தமபுரிக்குச் செல்லும் ஓர் கப்ப லில் ஏறிக்கொண்டோம். காற்று எங்களுக் கனுகூலமாக யிருந்தபடியால், முதல்நாளில் கப்பல் வெகுதூரம் ஓடி விட்டது. இரண்டாம்நாள் கடுங்காற்றடித்துப் புசலும் கொந்தளிப்பு மெழும்பினதால் கப்பலிலுள்ள மாலுமிகள் பயந்து நடுநடுங்கி பெருங்கூச்சலிட்டு, இனி கப்பல் சேதாரத்துக்கிடமே யென்று தங்களுக்குள் நிர்ணயித்துக் கொண்டு, சமுத்திரத்தின் கொந்தளிப்புக்கும், காற்று வீசும் போக்குக்கும் கப்பலை மிதக்கவிட்டு பாயை யிறக்கி விட்டார்கள். பிறகு சிலசமயங்களில் சமுத்திரத்தின் அலை

கள் தங்கள் வாயை விரிவாய்த்திறந்து எங்களை விழுங்கவருவதைப்போ லிருந்தன. சில தருணங்களில் சமுத்திரத்தின் அலைகள் இரண்டாய்க் கிழிவதை நாங்கள் பார்க்கும்போது மகா பயங்கரமான பாதாளங்க ளெல்லாம் எங்கள் கண்களுக்கு விசிதமாய்த் தெரிந்தன. சில வேளைகளில் கடலில் கொந்தளிப்பான அலைகள் எங்களை ஆகாயமண்டலபரியந்தம் உயரக் கிளம்பச்செய்தன. அவ்விதம் நாங்கள் அநேகநாட்கள் அவஸ்தைப்பட்டுக்கொண் டிருக்கையில் கப்பலிலிருந்த எங்களெல்லோரையும் பிரமிக்கச்செய்து, எங்களுக்கு மிகுந்த அற்புதம்போல நடந்த அதிசய மென்னவென்றால், இத்தனை பெரிய காற்றுக்கும் பயங்கரபுசல் கொந்தளிப்புக்கும் நாங்களிருந்த கப்பலுடைந்து சேதார மடையாதிருந்ததொன்றே பெருத்த வாச்சரியம். கடைசியாக நாங்கள் உயிர்பிழைத்து அங்கு சமீபத்தில் தென்பட்ட ஓர் தீவுக்கு நேராய் கப்பல் நங்கூரம்போட்டு நிறுத்தப்பட்டது. அத்தீவு மிகுந்த விஸ்தாரமுள்ளதா யிருந்தபோதிலும் அது முழுதும் பயங்கரமான காடு அடர்ந்த பூமியாகவே யிருந்தும் நாங்கள் அத்தீவுக்குள் பிரவேசிக்கக் கப்பலை விட்டிறங்கினோம். அப்பொழுது மாலுமியொருவன் எங்களிடம்வந்து, அத்தீவு கள்ளர்களால் குடியேற்றப்பட் டிருக்கிறதென்றும், அவர்கள் தங்கள் கையிலகப்பட்ட அந்நிய மனிதர்களை யெல்லாம் காளிக்குப் பலிகொடுக்கும் வழக்கமுண்டென்றும் அறிவித்து, கூடியசிக்கிரத்தில் அத்தீவைவிட்டுப் புறப்பட்டுச் செல்வதே தகுதியென ஆலோசனை கொடுத்தான். கொடுத்த ஆலோசனையைக் கப்பலின் எஜமானன் கேட்டு அந்தக் கள்ளர் வசிக்கும் தீவைவிட்டு, கப்பல் பாய்விரித்துக்கொண்டு ஓடிப்போவதே யுக்தமென்று சொல்லி மறு

நாள் உதயத்தில் கப்பலை மூஸ்திப்புப்படுத்த எத்தனித்துக் கொண்டிருக்கையில், அன்றிரவு நிசிவேளையில் திரண்ட கும்புகளான கள்ளர்கள் ஓடிவந்து எங்கள் கப்பலைப் பிடித்து அதிலிருந்த சாமான்களையெல்லாம் கொள்ளையடித்தது மல்லாமல் எங்களில் ஒருத்தனையாவது மீதியாய் விடாமல் எல்லாரையும் பிடித்துச் சேர்த்துக் கைகளுக்குங் கால்களுக்கும் பாரமான விலங்குகளை வீரமாய்ப்பூட்டி எங்களைத் தங்களிருப்பிடத்திற்குக் கொண்டுபோய் விட்டார்கள்.

பொழுது விடியும் வரையிலும் நாங்கள் அவர்கள் பின்னோடே காடுகளைக்கடந்து நடந்து கடைசியாய் அவர்கள் வாசஞ் செய்யுமிடத்திற்கு வந்தோம். அவர்கள் வசிக்கும் வீடுகள் எப்படியிருந்த தென்றால் எல்லாம் மரங்களினாலும் களிமண்ணினாலும் செய்யப்பட்ட சிறிய அறைவீடுகளொப்பந்தம் அநேகமிருந்ததுமன்றி அவைகளுக்கு மத்தியில் சற்றுப் பெரிதாகிய ஓர் வீடுமிருந்தது. அவ்வீட்டின் சாளரத்தில் ஓர் உன்னத ஆசனத்தில் அக்கள்வர்களுக்குத் தலைவன் உட்கார்ந்திருக்கக் கண்டோம். அவனோ மிகவும் பயங்கரப்படத்தக்க அவலட்சண ரூபமாய் காத்திரமான ராட்சதனைப்போலவே யிருந்தான். அவனுடைய முகத்தின் அவலட்சணத்தையும் அகோர பயங்கர ரூபத்தையும் பார்த்தால் அவனை நம்மைப்போலொத்த ஓர் மனிதத்தன்மையுள்ளவனா யெண்ணாமல் பூதகணமென்றே சொல்லவேண்டும். அங்கு அவனுடைய குமாரத்தியும் அவனோடுகூடவே யிருக்க நாங்கள் கண்டு பிரமித்து, அவள் சுமார் முப்பது பிராய முள்ளவளாகவும் அவனுடைய உயரமும் காத்திரமும், முகச்சாயலும் அச்சிலே வார்த்ததைப்போல் தன் தகப்பனைப்போன்ற சாயலா

கவே இருக்கிறாளென்று நாங்கள் அறிந்துகொண்டோம்.
எங்களைச் சிறைப்பிடித்துக்கொண்டு போன கள்ளர்கள்,
அத்தலைவனுக்கும், அவனுடைய குமாரத்திக்கு முன்பாக
எங்களைக் கொண்டுபோய்விட்டு, எங்களை மிகுந்த வணக்க
மாய் அவர்களுக்குத் தண்டஞ் சமர்ப்பித்துக்கொள்ளும்
படி எங்களுக்குத் திட்டஞ்செய்து, பின்பு எங்களைச் சிறை
பிடித்துக்கொண்டு வந்த சமாசாரங்களை அத் தலைவ
னுக்குத் தெரியப்படுத்தினார்கள். அப்போது கள்வர் தலை
வனும், அவனுடன் கூடயிருந்த பிரதானியும் மிக்கச் சந்
தோஷமடைந்து, பிறகு தலைவன் தன் பிரதானியுடன்
இவர்களைக் கூட்டிக்கொண்டுபோய் காவலறையிலடைத்து
வைத்து பிரதிதினமும் இவர்களில் ஒவ்வொருவனை நம்
முடைய குலதெய்வமாகிய காளிதேவிக்குப் பலிகொடுத்து
விடுவென்று உத்தரவு செய்தார். பிரதானியும் அவ்
வாறே எங்களைக் கூட்டிக்கொண்டுபோய் காவலறையி
லடைத்துவைத்து, மறுநாள் இரண்டு கள்ளர்கள் வந்து
எங்கள் கூட்டாளிகளில் ஒருவனைப் பிடித்துக்கொண்டு
போய் காளிக்குப் பலிகொடுத்தார்கள். அப்படியே
அதற்கடுத்த நாட்களிலும் மாமூலாய் ஒவ்வொருவனைப்
பிடித்து இரைகொடுத்து வந்ததால், நானு மென் தோழ
னாகிய இராஜபுத்திரனுந் தவிர மற்றவர்களெல்லாம் காளிக்
குப் பலியாக உயிரிழந்தார்கள்.

ஐயா! பேய் பிடித்தாலும் பிடிக்கலாம் பெண்கள்
பிடித்துக் கொள்ளக்கூடா தென்றபடி தயாபரசுந்தரியின்
உருவப்படத்தைப் பார்த்துப் பித்தேறி நாட்டைவிட்டு
வந்த எனது நண்பனாகிய இராஜகுமாரனுடைய ஸ்திதியும்
அவனுடன் வந்த என்னுடைய ஸ்திதியும் எவ்வாறிருக்கு
மென்று நீரே யோசித்துப்பாரும். நாங்களிருவரும் ஒரு

நாளில் அக்காளிக்குப் பலியாவதே தவிற வேறுகதியில்லை யென்று தீர்மானித்துக்கொண்டு, எப்போதும் எங்கள் சாவுக்கே எத்தனப்பாடுள்ளவர்களாய் காத்துக்கொண்டிருந்தோம். நான் என் தோழனைப்பார்த்து இராஜகுமாரா! நாமிருவரும் ஒருநாளைக்கு காளிக்குப் பலியாய் மடிந்து போக வேண்டியிருப்பதால் நான் உனக்கு முந்தி இறந்து போகும்படிக் கெனக்குச் செலவுதரவேண்டும். நாளைய தினம் கள்ளர்கள் உன்னைக் கொலைக்காளாக நடத்திக் கொண்டுபோவதை என் கண்கள் காணும்படியாயிருந்தால் எனக்கது சகிக்கக்கூடாத மனவேதனையாகவே யிருக்குமென்றேன். இதைக்கேட்ட அரசகுமாரன் "நண்பா! நீ என்னுடன் இவ் வாபத்துக்குள்ளாக எனக்குத் தோழனாய். தயாபரசுந்தரியின் உருவப்படத்தின்மேல் நான் கொண்ட காதலால் என் புத்தி சித்தம் யாவும் சிதறிப் பிரமைகொண்டு பதுமபுரியை விட்டுப் புறப்பட்டு வரும் போது நான் தன்னந்தனியே போய் சின்னபின்னங்களாகிய துன்பங்களை யனுபவிக்க என்னை ஒண்டி ஒருவனாய் விடாமல் நீயும் என்னைப் பின்தொடர்ந்து வந்தாயே" என்று சொல்லி வருத்தப்பட்டான். இவ்விதமாய் நாங்கள் ஒருவரை யொருவர் பார்த்து கண்ணீர்விட்டுப் பிரலாபித்தழுது புலம்பிக்கொண்டிருக்கையில், இரண்டு கள்ளர்கள் எங்கள் அறைக்குள் வந்து, இராஜகுமாரனை மாத்திரம் தங்கள் பின்னோடே வரும்படிச் சொல்லியழைத்துக் கொண்டு போனார்கள். அப்போது அரசகுமாரன் திடுக்கிட்டலறி என்னைப் பார்த்துக் கண்ணுங் கண்ணீருமாய் "தோழா! இதுதான் நான் உன்னைக் கடைசிவிசையாய்ப் பார்க்கும் பார்வை. இனி உன்முகத்தைப் பார்க்கப்போவதில்லை" என்று சொல்லி எனக்கு வந்தனஞ் செய்தனன்.

அரசகுமாரன் என்னை விட்டுப் பிரிந்தவுடன் நான் மிகவும் கலக்கங்கொண்டு அவனுயிர் காளிக்கு இன்று பலியாகப் போகின்றதேயென்று ஏக்கங்கொண்டு, நானே என்னுயிர்க்கு வரும் தீங்கையும் யோசியாமலிருந்தேன். ஆனல் அன்று மாலை நான் மிகவும் ஆச்சரியப்படும் விதமாய் அரசகுமாரன் காளிக்குப் பலியிடப்படாமல் நான் இருக்கும் அறைக்கே கள்ளர்களால் கொண்டு வந்து விடப்பட்டான். அரசகுமாரனை நான் கண்டவுடனே எனக்குண்டான மனமகிழ்ச்சியும், சந்தோஷமும் இவ்வளவவ்வள வென்று நான் வாய்விட்டு உரைக்கக்கூடியதேயல்ல. நான் அவனைக் கண்டமாத்திரத்தில் எனது சப்தத்தை உயர்த்தி, இப்பொழுது இவ்விடம் வந்தவர் எத்திசை புகழ்பதி புத்திரன்றனே? நான் என் யஜமானனைத் திரும்பவும் காணுவேனென்னும் நம்பிக்கை கிஞ்சித்தும் இருந்ததில்லையே. அந்த துஷ்டாத்மாக்களாகிய கள்ளர்கள், தாங்கள் மதிகுலைந்து கும்பிட்டுவரும் காளிக்கு பலியிட்டு இன்னேரம் உமது உயிர் நீங்கியிருக்குமென்று நான் நினைத்திருந்தேன். நீர் திரும்பவும் என்னிடத்திற்கு வந்து உமக்காக உதிர்க்கும் கண்ணீர் வெந்நீராயோடுவதைத் துடைத்தெனக் காற்றல் செய்ய வருவீரென்றும் நான்நினைக்கவேயில்லை என்றேன். அவ்வரசகுமாரன் பிரதியுத்தரமாக, "நண்பா! நமது கூட்டாளிகளடைந்த கொடிய மரணம் நமக்கு லபிக்காமலிருக்குமென்பதற் கோரையமில்லை. நான் உயிர் தப்பிப்பிழைத்த தெய்விகமென்று நீயறியாய். நீ அப்படி யறியுங்காலையில் நீ அதற்காகச் சந்தோஷப்படாமல் நான் உயிர் வைத்திருப்பதை விட உயிர்விட்டு ஒரு நொடியில் காளிக்கு இரையாய்ப் போயிருப்பேனாகில் அதிக உத்தமமென்று நீ நினைப்பாய். அது எவ்விதமெனில்:—

காலையில் இங்குவந்த இரண்டு கள்ளர்கள் என்னை அழைத்துக்கொண்டுபோய் மகா பெரிய கூடாரத்திற்குக் கொண்டுபோய் விட்டார்கள். அவ்விடந்தான் நான் கொலைக்குள்ளாகி, காளிக்குப் பலியாகப் போகுமிடமென்று விலவிலத்துப் பதை பதைத்துத் துடிதுடித்து நின்றேன். ஆனால் நானந்த கூடாரத்துக்குள் போனவுடனே கன்னங்கருத்த குழலும், சின்னஞ்சிறுத்த யிடையும் உடைய பெண்ணொருத்தி யென்னிடத்திற்கு வந்து, 'வாலிபனே! நீ பயப்படாதே. உன் கூட்டாளிகளுக்கு நேர்ந்த அழிவைப்போல உனக்கு வராது: ஏனெனில் என் எஜமானியாகிய எங்கள் தலைவனுடைய புத்திரி கோலமதி உன்னை மணம்புரிந்துக்கொள்ள மையல்கொண்டிருப்பதை அவளே உனக்கு நேரில் தெரிவிக்கச் சித்தமாயிருக்கின்றாள். அதைப்பற்றி விவரமாய் உனக்கு நான் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. நான் அவளுக்கு அந்தரங்கமான தோழி. இந்தக் கூடாரத்தின் மறைவிடமான இடத்தில் உன்னைக் காணவேண்டி என்னை உன்னிடம் தூதாக அனுப்பினள்' என்று சொன்னவுடன் என்னைக் கொலை செய்வதற்காக அழைத்துவந்த அவ்விரண்டு கள்ளர்களும் தோழியின் வாக்கியங்களைக் கேட்டவுடன் என்னை அவ்விடத்திலேயே விட்டுச் சென்றனர். அப்போது கோலமதியின் தோழியானவள், என் கையைப்பற்றி அழைத்துக் கொண்டுபோய் கோலமதி வீற்றிருக்கும் ஆசனத்தினெதிரில் நிறுத்தினள். நண்பா! அந்தக் கோலமதியின் ரூபமெப்படி யிருந்ததென்றால் நான் என்ன சொல்வது. 'பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் முடிந்த தென்பதைப்போல்' தயாபரசுந்தரியின் உருவப் படத்தைப் பார்த்து, சொக்கியிருக்கும் எனக்கு, அவள் ஓர் பிடாரி

யைப்போல் தோன்றினாள். நாவற்பழத்தை யொத்த நிறமும், சிறுத்த கண்களும், சப்பைமூக்கும், தடித்த உதடும், அகன்ற வாயும், நீண்டபற்களும், கறுத்துக் கட்டையான சுருண்டமயிரும் உடையவளா யிருந்தாள். கழுத்தில் நீலமும் மஞ்சள் வர்ணமுமான உருத்திராட்சக் கோர்வையொன் றணிந்து, தோள் துவக்கி பாதம் வரையிலும் ஓர் அங்கியைத் தரித்துக்கொண்டிருந்தாள்.

அவள் என்னைப்பார்த்தவுடன், "ஐயா! என்னருகில் நீர் உட்கார என்னதடை? கள்ளர் தலைவனாகிய என் தந்தையின் கைகளில் நீர் அகப்பட்டுக்கொண்டதினால் உமக்கு நேர்ந்திருக்கும் மனோசஞ்சலமாகிய மரணவாதனையினின்று உம்மை விடுவித்து, உமக்காறுதல் சொல்லத்தக்கதாய் நான் உமக்குச் சொல்லப்போகும் சங்கதிகள் சிலதுண்டு. அவை யாதெனில், நானும்மை அன்று கண்டதுமுதல் இன்றுவரையிலும் உமது சௌந்தரியத்தில் சொக்கி, காமப்பித்துகொண்டு, கனத்த மோகமாகி நான் உமது உயிரைத் தப்பித்து விடுவதுடன், உம்மையே எனக்குக் கணவனாகவும் தெரிந்துகொள்ளுவேன். எனது சுந்தரத்தைப் பார்த்துப் பிரமைகொண்டிருக்கும் இத் தீவிலுள்ள சகல ஜனங்களுக்கும் மேலாகவே நான் உம்மை மேன்மைப்படுத்துவேனென்றாள். இச்சொல்லைக் கேட்டமாத்திரத்தில் எனக்கொன்றுந் தோன்றாமல் வாதனையாகவே யிருந்தது. ஏனெனில், அவளுடைய அபிப்பிராயத்திற்கு நான் மறுத்துச் சொல்வேனாகில் ஒருக்கால் அவளுடைய கடுங்கோபத்தினால் எனக்கென்ன கெடுதி வருமோவென்று பயந்து, யாதொரு பதிலும் தெரிவிக்காமல் மௌனமாக விருந்தேன். அப்போது அப்பெண் என்னை நோக்கி "ஐயா! யௌவனமும், சௌந்தரியமும்

உள்ள ஓர் பெண், உமக்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுக்கும்படி இவ்வித ஏற்பாடு செய்வாளோவென்று நீர் கனவிலும் கருதியிருக்கமாட்டீர். என்னல் நீர் அடையப் போகும் செல்வசம்பத்தினுல் உமக்குண்டாகும் ஆச்சரியம் இப்போது உம்மைப்பேசவொட்டாமலும், உமதுவாயைத் திறக்கவொட்டாமலும் கட்டுப்படுத்தி யிருக்கின்றது. உம்மால் நான் அதிக காதல்மீறி என் மனதைத் தகிக்குங் காமத்தீயால் கண்களும் சிவக்க, கலேயும் நெகிழ, குழலுமவிழ நான் நிலேகுலேந்து நிற்பது உமக்கழகல்ல'' என்று சொல்லித் தன்னே அங்கீகரித்துக்கொண்டதற்கு அறிகுறியாகத் தனக்கோர் முத்தந்தரும்படி என் சமீபத்தில் வந்தனள். தான் அழகிலே பிறந்த பவளக்கொடியென்றும், தன்னேக்கண்ட யாவரும் தன்மீதில் காதல் கொள்ளாமலிருக்கமாட்டார்களென்றும் அவள் தனக்குள்ளே நினைத்துக்கொண்டிருந்தாள். தயாபரசுந்தரியின் உருவப்படத்தைப் பார்த்த என் கண்களால் அவளேப் பார்க்க ஒக்காளமும் அருவருப்புமாயிருந்தபடியால் நான் அவளேச்சட்டைபண்ணுமலிருப்பதைச் சாடையாக அவளுக்குக் காண்பித்தும் அவளே நான் அதிகமாக விசுவாசித்திருப்பதாகவே அவள் நினைத்துக்கொண்டிருந்தனள். பிறகு அறுசுவையோடுங் கூடிய உணவைக் கொண்டுவரச்செய்து, என்னேச் சாப்பிடும்படி வேண்டினள். நான் தற்கால மிருக்கும் ஆபத்தின் மனவருத்தத்தால் அவ்வுணவை ஏற்றுக் கொள்ளவில்லே. அப்போது அந்த கோலமதி என்னேப் பார்த்து, "ஐயா! உனக்கு என்மீதில் கொண்ட மிதமிஞ்சின காதலால் உனக்குப் பசியும் இல்லேபோல் காண்கின்றது. உன்னுடைய காமாக்கினியை தணிப்பதற்கு இரவு வருந்தனிலும் நான் உனக்கோராற்றல் செய்யக்

கூடாதாகையால் அதுவரையிலும் நீ காத்திருக்கவேண்டும். உனது தோழனையும் எனது தோழியாகிய பத்மா என்பவள் மணஞ்செய்துக்கொள்ள மிகவும் இச்சைகொண்டிருக்கின்றாள். நான் என் பிதாவிடஞ்சென்று உன்னையும் உன் தோழனையும் உயிர்வதை செய்யவொட்டாமல் அவரை வேண்டிக்கொள்ளுகின்றேன். இஷ்டானுகூலவதியான பத்மா உன் தோழனுக்கு மனைவியாகப் போகின்றாளென்கிற சந்தோஷ சமாசாரத்தை அவனுக்கு நீ தெரிவிக்கவேண்டியது. அகால மரணத்தினின்றும் உங்களைக் காப்பாற்றினதுமன்றி உங்களுக்கு மகிமையும், மனமகிழ்ச்சியும் உண்டாகும்படிச் செய்கின்றேன். இதோ நான் போய் வருகின்றேன், இரவு வந்தவுடன் உங்களை என்னிடம் அழைப்பிக்கின்றேன்" என்று எழுந்து சென்றனள் என்று இப்போது உயிர்விட்ட இராஜகுமாரன் சொல்லி முடித்தான்.

ஐயா! பிறகு நடந்த சங்கதிகளையும் தாங்கள் பொறுமையுடன் கேட்கவேண்டும். நானும் எனது நண்பனை பதுமபுரியின் அரசகுமாரனும், சுத்த அருவருப்பும் அவலட்சணமும் பொருந்திய இழிகுலமங்கையான கோலமதியும் அவளது தோழியான பத்மாவும் நினைத்திருக்கும் கூடாதகாரியத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்து, அவர்களைக் கூடி யணைந்து குலாவியிருப்பதைப் பார்க்கிலும் இறந்து போவதே நன்மையெனத் துணிந்து, இரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். சூரியன் அஸ்தமித்தவுடனே கணவனைப் பிரிந்த வனிதையர் வருந்த அவர்கள் மேல் மன்மதனெறிந்த மல்லிகைச் செண்டுபோல நிலவு புறப்பட்டது. அப்போது கோலமதியின் ஆட்களில் இருவர் எங்களிடம் வந்து, "பாக்கியவந்தர்களே! உங்க

ளுடைய நற்காலமே காற்றும் கடலும் உங்களைக் கொண்டு வந்து இத்தீவில் சேர்த்தது. எங்களுடைய எஜமானி கோலமதியும், அவளது தோழி பத்மாவும் உங்களுக்காகக் காத்துக்கொண் டிருக்கின்றனர்'' என்று அழைத்தார்கள். நாங்கள் அவர்களுக்கோர் உத்தரவும் பகராமல் அவர்கள் பின் சென்றோம். அவர்கள் எங்களை யழைத்துக்கொண்டுபோய் கோலமதியின் கூடாரத்தில் விட்டனர். கோலமதியும், அவளுடைய தாதியும் எங்களைக் கண்டவுடன் எங்களருகில் வந்து தங்களுடைய மோகவலையில் நாங்கள் சிக்கிக்கொள்ளக்கூடிய தந்திரோபாயங்களெல்லாம் செய்தார்கள். அவர்கள் எங்கள் விஷயத்தில் எடுத்துக்கொண்ட முயற்சிகளையெல்லாம் வியர்த்தமாக்கி லட்சியம்பண்ணுமலும்,அவர்களை எவ்வளவும் மதியாமலும் அவர்களுக்கு எங்கள் மீதில் வெறுப்புண்டாக்கத்தக்க அநேக இடக்கான காரியங்களைத் துடுக்காகவே பேசிக்கொண்டு வந்தோம். அப்பொழுது, கோலமதி மூர்க்க வெறிகொண்டு, மிகக் கடூரப்பார்வையாய் எங்களைப் பார்த்து, "துரோகிகளே! நீங்கள் நன்றியைச் சிறிதும் நினைக்கவில்லை. உங்களுக்கு நான் செய்த நன்மைக்கு நீங்கள் காட்டும் பிரதிபலன் இதுதானே? சற்றுநேரத்திற்கு முன் நீங்கள் எவ்வித ஆபத்திலிருந்தீர்களென்பதைச் சற்றும் கவனிக்கவில்லைபோலும். கொடிய சண்டாளர்களே! எங்களுடன் வித்தியாசமின்றி உண்டுகளித்து உல்லாசங் கொள்ளாமல் இருக்குங் காரணம்யாது?'' என்று கடுகடுத்துப் பேசினர்கள். பிறகு கோலமதி தன் தோழியைப் பார்த்து, "சகி! என்மீதில் இந்தவாலிபன் ஆசைப்படாத காரணந்தானென்ன? உண்மையில் நான் அழகியல்லவோ? நீ எனக்கென்று பேசாமல் உண்மையைச்

சொல்லவேண்டும்" என்றனள். அதற்கவள், "அம்மா! உன்னைப் பழுது சொல்லத்தக்கவர்களும் இப்பூலோகத்திலுண்டோ? உன் சௌந்தரியத்திற்கு இணையுள்ள பேரழகியை இவ்வையகத்தில் காண்பதரிது. உன்னைக் கண்டவுடன் எப்படிப்பட்ட தீரனாயிருப்பினும் சொக்கி உன் மையலில்சிக்கிக் கிடப்பானன்றோ. இவ்வாலிபன் உன் மறுவில்லா வடிவழகில் என்ன குற்றத்தைக் கண்டானோ? யானறியேன். உனக்கானதே யெனக்கு மாதலால், உன் சௌந்தரியத்திற்கும் அந்தஸ்திற்கும், தக்கமரியாதையைக் காண்பிக்கவில்லையே. இவனைப்போலவே இவனுடைய நண்பனும் என்னை இழிவாகப்பேசி, என்னழகையும் பழித்தான். ஆனபடியால் இவ்விருவருக்கும் தகுந்த தண்டனையை விதிக்கவேண்டு மென்றாள்.

கோலமதி, தன் தோழியைப்பார்த்து, "ஆம். நீ சொல்வதுண்மையே. நீயும் என்னைப்போல நல்ல வடிவழகிதான். அதற்கு யாதும் தடையில்லை. வட்டமிட்ட பிறைபோலொத்த சட்டமாகிய உன்னழகைக்கண்ட அப்பாதகன் மோகியாமல்போனது அதிக ஆச்சரியம். ஆகையால் நாம் நேசிக்கவிரும்பிய இவ்விருவரும் நமது இஷ்டத்திற்கு மாறுபட்டிருக்கிறார்களாகையால், தட்சணம் இவர்களை உயிர் பழிவாங்குவதே தகுந்த தண்டனை யென்று சொல்லி, அங்கு காத்திருக்கும் இரண்டு ஆட்களை வரவழைத்து எங்களிருவரையும் கொண்டுபோய் காளிக்குப் பலியிட உத்தரவளித்துப் பின்னும் அவர்களை நோக்கி, இவ்வளவு சீக்கிரத்தில் எங்களைக் கொலைசெய்ய தனக்கு மனமில்லையென்றும், ஆனால் மறு உத்திரவுவரையில் எங்களைப் பந்தோபஸ்தில் வைத்துக் காவல் செய்யும்படிக்கும் திட்டஞ்செய்தாள்.

அவ்விருவரும், எங்களை அவர்கள்வசிக்குமிடத்திற்குக் கொண்டுபோய் அவர்களுடைய வீட்டுவேலைகளைச் செய்யவும், காட்டுக்குப்போய் விறகுவெட்டிச் சுமந்துவரவும் வைத்துக்கொண்டார்கள். பிரதிதினமும் இவ்வேலைகளைச் செய்வதினால் நாங்களிருவரும் அதிகமாய் மெலிந்து மரணத்தைக் கூடியசீக்கிரத்தில் எதிர்பார்க்க வேண்டியிருந்தது. ஒருநாள் அக்காவலாளிகள் இருவரும் எங்களை விறகுக்காகக்காட்டிற்கனுப்பித் தாங்கள் பட்டணம்போய் சுற்றிப்பார்க்கச் சென்றார்கள். அப்போது அரசகுமாரன் என்னை நோக்கி, "தோழா! இப்போது காவலாளிகள் நம்மைவிட்டுப் போய்விட்டபடியால், நாம் தப்பித்துக் கொண் டோடிப்போவதற்கு இதுவே தருணம். நாம் இந்தத் தீவைக்கடந்து கடலோரஞ்சென்றால் ஏதாகிலும் கப்பல் புலப்படும். அதன்மூலமாக நாம் இக்கொடிய பாதகக் கள்ளர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ளலாம்" என்று சொன்னதும், நானும் அதற்குடன்பட்டு உடனே நாங்களிருவரும் அத்தீவைவிட்டுக்கடந்து சமுத்திரக்கரை சேர்ந்து பார்க்கும்போது, அங்கு மீன்பிடிக்கும் படகொன்று கட்டியிருக்கக் கண்டு, மிகுந்த சந்தோஷத்துடன் அப்படகைச் சமுத்திரத்திற்றள்ளி, நாங்களதிலேறிக் கொண்டு அதிக துரிதமாக அப்படகைச் செலுத்தினோம். நாங்கள் படகு தள்ளும் தண்டுகளைக் கையிலெடுத்துக் கொண்டு அதிக துரிதமாய்த் தள்ளிக்கொண்டிருக்கையில் அப்படகுக்குச் சொந்தக்காரனாகிய கள்வன் எங்களைக் கூவி, மெத்தவும் பயமுறுத்தினான். நாங்கள் மிகுந்த தைரியத்துடன் படகைத் தள்ளிக்கொண்டே அத்தீவைக் கடந்து வெகுதூரம் போய்விட்டோம். கள்ளர்களுடைய மரணபயங்கரத்தினின்றும் நாங்கள் தப்பிவந்ததற்காகக்

கடவுளுக்கு ஸ்தோத்திரஞ்செய்து, கரையைக்காண ஆசை கொண்டிருந்தோம். ஆனால் அப்படகோ அதிக கிலமா யிருந்தபடியால் நிமிஷத்திற்கு நிமிஷம் அது சமுத்திரத்தில் அமிழ்ந்துபோகிறதைப்போல் எங்களுக்குக் காணப்பட்டது. புசிப்பதற்கும் எங்களுக்கு யாதொன்றும் இல்லாமையால் நாங்கள் படகிலேயே மடிந்துபோவோமென்றிருந்தோம். அன்றிரவெல்லாம் நாங்கள் படகைத் தள்ளிக்கொண்டேபோய் மறுநாள் காலையில் எங்களுக்கு முன்னே ஓர் சிறிய தீவிருக்கக்கண்டு, அதைச் சமீபித்துப் பார்த்தபோது, அதில் அநேகமரங்கள் கனிகளால் நிறைந்து அதன் கிளைகள் தாங்கக்கூடாத பளுவால் தலையோடு தரையாய்ச் சாய்ந்திருந்தன. நாங்கள் அதிக சந்தோஷத்துடன் படகைவிட்டுத் தரையிலிறங்கி படகையோரிடத்திற் கட்டிவைத்து, அத்தீவுக்குட்பிரவேசித்து நாங்கள்பார்த்த கனிகளில் தேவையானமட்டும் பறித்துத் தின்று, எங்கள் பசியை யாற்றிக்கொண்டோம். அக்கனிகளோ மகாநேர்த்தியாயும், அதி இனிப்பாகவும் இருந்தன. சற்றுநேரம் இளப்பாறின பிறகு, அத்தீவை முழுதும் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டோம். நாங்களிதுவரையில் பார்த்திராத ஓர் அழகியதீவாய் முழுதும் வாசனையுள்ள அநேகமரங்களாலும், நல்ல கனிவர்க்கங்களாலும், நீரூற்றுகளாலும், அழகான புட்ப விருக்ஷங்களாலும் நிறைந்ததாயிருந்தது. அவ்வளவு அழகான செழிப்புள்ள தீவாயிருந்தும் அதில் மனிதசஞ்சார மில்லாதிருப்பதை நாங்கள் கண்டு, ஆச்சரியப்பட்டு ஒன்றுந்தோன்றாமல் சஞ்சலப்பட்டு, சித்திரபுரிக்குப் போகவாவது அல்லது எங்கள் சொந்தப்பட்டணமாகிய பதுமபுரிக்குத் திரும்பவாவது வழி எத்திக்கிலுள்ள தென்றும் ஏற்படாமையால் மெத்த

அடைக்கலக்கமடைந்தோம். நாங்களிருவரும் அத்தீவில் அங்கு மிங்குமாய்ச் சுற்றிப்பார்த்துக்கொண்டிருக்கையில், ஓரிடத்தில் மகாநேர்த்தியாய்க் கட்டப்பட்ட ஒரு கோட்டையையும், அதைச் சுற்றிலும் ஆழ்ந்த அகழி ஒன்றையுங் கண்டு ஆச்சரியப்பட்டு, நாங்களிருவரும் அவ்வகழியை நீந்திக் கொண்டு அக்கோட்டையின் உள்ளே பிரவேசித்தோம். அங்கிருந்த கூடங்களிலும், அறைகளிலும், மற்றுமுள்ள இடங்களிலும் போடப்பட்டிருந்த சாமான்களெல்லாம் பொன்னும், வெள்ளியும், பட்டுமேநிறைந் தலங்கரிக்கப் பட்டிருந்தன. நாங்களதைவிட்டு மற்றோரறைக்குட்போன போது, அங்கு கோடிசூரியப்பிரகாசமான மகாசௌந்தராவதியாகிய ஓர்மாது விலையுயர்ந்த உடைகளைத்தரித்து ஓர் கட்டிலின்மேல் தனியாய்படுத்து நித்திரை செய்து கொண்டிருக்கிறதையும், அவளுக்கெதிரில் கறுப்புக்கல்லால் செய்யப்பட்ட மேசையொன்று போடப்பட்டிருப்பதையும் நாங்கள் கண்டு ஆச்சரியப்பட்டு, அவளருகிற் சென்று, அவளை உற்றுநோக்கினோம். அவள் கண்கள் மூடப்பட்டு அசைவின்றி அயர்ந்து நித்திரைபோனதால் அவள் இறந்துபோனளோ? அல்லது உயிருடனிருக்கின்றளோ? வென்ற சந்தேகம் எங்களுக்குண்டாகி, அவள் நாசித்துவாரத்தில் கையைவைத்துப் பார்த்தோம். அவள் சரீரம் அசைவின்றியிருந்தும் சுவாசமோடி வருவதைக் கண்டு அவள் சாகவில்லையென்று திடச்சித்தங்கொண்டோம்.

அவள் பேரழகைக்கண்டு ஆச்சரியப்பட்ட எனது எஜமானாகிய அரசகுமாரன் தனது கண்களை அவளைவிட்டெடுக்காமல், அவள் சௌந்தரியத்தையும், முகக்களையையும்பார்த்து என்னை நோக்கி, நண்பா! தயாபரசுந்தரியின்

ரூபலாவண்யம் என் சிந்தையைக் கலக்கி விந்தையாய் விதனங்கொள்ளச் செய்யாதிருந்தால் தப்பாமல் இம் மாதையே என்குலக்கொழுந்தாகிய தேவியாய்ப் பாவித்து அவளே தஞ்சமென நாடியிருப்பேன். பயங்கரப்படத் தக்க இந்த நிர்மானுஷ்யமான காட்டில் கோட்டையும் கொத்தளமும் எப்படி யுண்டாயிற்றென்றும், பார்த்த வுடன் இச்சிக்கத்தக்க காந்தியும் அதற்கேற்ற ஆடை யாபரணங்களணிந்த சௌந்தர்யவதி இக்கோட்டையில் எப்படிவந்தகப்பட்டுக் கொண்டாளென்றும் என் சிந்தை கலங்கி அதன் வயணத்தையறிய ஆவல்கொண்டிருக்கிறே னென்றனன். அவளைத் தட்டியெழுப்பியாவது அவள் வாய்பிறப்பைக் கேட்டறியவேண்டு மென்று நாங்கள் ஆலோசித்தோம். ஆனால் அவள் அதிக நித்திரையி லிருந்தபடியால் அவளைத்தட்டி யெழுப்புவதினால் அவ ளுக்கு நித்திரைப்பங்கம் வரப்போகிறதென்றஞ்சி, அவள் தானாய் விழித்தெழுந்தபின்பு சங்கதியைத் தெளிவா யறியலாமென்று யோசித்து, சற்றுநேரம் அக்கோட்டை யின் மற்றப்பாகங்களைச் சுற்றிப்பார்த்துக் கொண்டிருந் தோம். மறுபடியும் அக்கட்டழகியிருக்கும் அறைக்கு வந்து பார்க்க அவள் துயில் நீங்காமல் முன்போலவே தூங் கிக்கொண்டிருப்பதைக்கண்டு நாங்கள் அடிக்கடிகனைத்தும் உரத்துப்பேசியும் சந்தடி பண்ணிக்கொண் டிருந்தோம். அப்படியும் அவள் விழித்துக்கொள்ளாமல் கும்பகர்ணன் போல குரட்டைவிட்டுத தூங்கிக்கொண்டிருந்தாள். அவள் கையைப்பிடித்து வெகுநேரம் வரையிலும் குலுங்கக் குலுங்க அசைத்தும் அவள் விழித்துக்கொள்ளாமையால் இவள் ஏதோ மந்திரத்தால் கட்டுப்பட்டிருக்க வேண்டு மென்று நாங்கள் தீர்மானித்துக்கொண்டு, அவ்வறைகளைச்

சுற்றி கிதானித்துப் பார்த்தோம். அந்த சௌந்தரவதி தூங்கிக்கொண்டிருக்கும் அறையில், வாசற்படிக்கு மேல் சில மாந்திரீக எழுத்துகளால் வெட்டப்பட்ட ஓர் செப் புத்தகடு அடித்திருப்பதைக்கண்ட அரசகுமாரன் அந்த செப்புத்தகட்டைக் கழற்றி அகழியில் எறிந்தான். அப் போது அந்தச் சுந்தராங்கி, நித்திரையினின்றும் விழித் தெழுந்து அரசகுமாரனைப்பார்த்து, "ஐயா! நீர் யார்? இப்பயங்கரமான தீவுக்கு நீர் எப்படிவந்தீர்? ஒருவராலும் எழுப்பமுடியாத என் தூக்கத்தை நீர் எப்படி விலக்கினீர்?" என்றாள்.

"அரசகுமாரன் அம்மாதைநோக்கி," நான் பதுமபுரி யின் அரசகுமாரன். நான் சித்திரபுரியின் அரசகுமாரத்தி யாகிய தயாபரசுந்தரியின் படத்தைக்கண்டு மோகித்து அவள்மேல் மையலாகி, அவள்மயக்கம் தலைமண்டைக் கேறி அவளைக் காணாது உயிர்பிழையாதென்று தீர்மா னித்து இதோ இருக்கும் என் தோழனுடன் காடு, மலை வனம் வனாந்திரங்களெல்லாம் சுற்றிக்கொண்டு. கள்ளர் கையி லகப்பட்டு அவர்கள் கைக்குத் தப்பிப்பிழைத்து இத்தீவைச் சேர்ந்தோம்" என்றான். அப்போதவள் அரசகுமாரனிட மிருந்த படத்தை வாங்கிப் பார்த்து "ஐயா! நான் தயாபரசுந்தரியை நேரில் பார்த்திருக் கின்றேன். அவளழகில் ஆயிரத்தி லோர்பாகங்கூட இப் படத்தில் சரியாய் எழுதப்பட் டிருக்கவில்லை" என்றதும் அரசகுமாரன் தயாபரசுந்தரியை அப்போதே நேரில் கண்டமாதிரியாய்ப் பெருமூச்செறிந்து, சந்தோஷ சாகரத் தில் மூழ்கினவனாய் அம்மங்கையைப்பார்த்து, "மாதே! இக்காட்டடர்ந்தகோட்டையில் அடைப்பட்டிருக்கும் நீ அத்

தயாபரசுந்தரியை யெப்படி யறிவாய்? உன்தேயம் எது? இங்கு நீ தனித்திருக்கும் காரணம் யாது ?" என்றனன்.

அச்சௌந்தரவதி இராஜகுமாரனைப்பார்த்து, "ஐயா! நீ போக விரும்பிய அந்த உத்தமபுரியின் பிரதானமந்திரிக்கு நான் ஏகபுத்திரி. உத்தமபுரியையடுத்த வேறோர் கிராமத்தில் என் தந்தைக்கோர் கோட்டையும் அதற்குள் ஓர் திருக்குளமுமுண்டு. ஓர்நாள் நான் அந்தத் திருக்குளத்திற்குப் போய் ஸ்நானஞ்செய்ய எனது தோழியுடன்சென்று எங்கள் வஸ்திரங்களைக் களைந்து கரையில் வைத்துவிட்டு இருவரும் நிர்வாணிகளாய் குளத்திலிறங்கி ஸ்நானஞ் செய்துக் கரையேறி எங்கள் வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு வீட்டிற்குப் பிரயாணப்படுகையில், ஓர் பெரிய காற்று புசலடித்து மண்புழுதிகளை எழும்பப்பண்ணி, கார்மேகம் கப்பினதுபோல எங்களை மூடிக்கொண்டது. அடித்தெழும்பின புசலின் புழுதியினால் நாங்கள் திக்குமுக்காடிக்கொண்டிருக்கும்போது சடுதியில் அம்மேகத்துள்ளிருந்து பிர்மாண்டமான ஒரு பட்சிதோன்றி அதன் கால்களால் என்னை ஆகாயமார்க்கமாய்த் தூக்கிக்கொண்டுவந்து இக் கோட்டைக்குள் வைத்து, உடனே அப்பட்சியானது ஓர் பாலியனாக மாறி, என் முன்னின்று, என்னைப்பார்த்து "மாதே! உலகத்தில் என்னைப்போன்ற மந்திரவாதி எவரும் கிடையாது. நான் பல ரூபங்களெடுத்து அதிக சமர்த்தான வேலைகளைச் செய்வேன். நான் இன்றையதினம் நீ நிர்வாணியாக குளத்தில் ஸ்நானஞ் செய்வதைக்கண்டு உன் மீதில் மையல்கொண்டு காமாந்தகாரனாகி உன்னை எனக்கு மனைவியாக்கிக் கொள்ளும்படிக்கு இங்கு கொண்டுவந்தேன். ஆ! எனதன்பிற்குகந்த ஆயிழையே! நீ இப்போது என்மீதில் கிருபைவைத்து என்னைக் கட்டியணைத்து காமத்

த்தைத் தணிக்க உன்னை வேண்டிக்கொள்ளுகின்றேன். நீ உன் தந்தை முதலானவர்களை இன்றுடன் சுத்தமாய் மறந்துவிட்டு என்னைக் கூடிக்குலாவிப் பாடியாடி சந்துஷ்டி யாயிரு. நீ ஆசைப்படும் அரும்பதார்த்த மெதுவோ அதையுடனே உனக்குத் தருவித்துக் கொடுப்பது மல்லா மல் இந்தக் கோட்டையில் சகல சம்பத்துடனும் உன்னை வைத்திருப்பேன்" என்றான். எனக்குச் சடுதியாய் ஏற் பட்ட ஆபத்தினால் துக்கம் அதிகரித்து 'கோட்டையில் பெண்பிறந்தாலும் போட்டபுள்ளி போகுமா?' என்பதைப் போல இந்த யௌவனகாலத்தில் ஓர் இராஜபுத்திரனைக் கூடிக் குலாவிச் சுகமனுபவியாமல், துஷ்டாத்துமாவாகிய இந்த மந்திரவாதியின் கையிலகப்பட்டு கற்பழியக் காலம் நேரிட்டதே, என்னைக் காணாத துயரத்தால் என் தந்தை உயிர்மாய்த்துக் கொள்வாரே என்று ஏங்கி அழ ஆரம் பித்தேன்.

அப்போது அந்த மந்திரவாதி என்னைப் பார்த்து, "பாயொளிவீசிய வேலினுங்கூரிய விழியாளே! நீ படுகிற துயரத்தைப் பார்க்கப் பார்க்க என் மனது அனலிலிட்ட வெண்ணெய்போல் உருகுகின்றது. நீ எதற்கும் சஞ்சலப்பட வேண்டாம். உன்னைக் காணாத்துயரத்தால் உனது தந்தை தன்னுயிரை மாய்த்துக்கொள்ள மாட்டார். ஆகையால் நீ விசனத்தைவிட்டு என்னைக் கூடிக்குலாவி மகிழ்விக்கும் படி உன்னை வேண்டிக்கொள்ளுகின்றேன்" என்றான். அதற்கு நான் அவனை நோக்கி, "ஏ! துஷ்டா! எனது கற் பைக் கலைக்கும்படி என்னைக் கபடமாய் நீ கொண்டுவந்தா யாகையால் நான் உயிரோடிருக்கும் வரையில் உனது துஷ்டசெய்கைக்கு ஒருக்காலும் இணங்கேன்" என்றேன். அப்போதந்த மந்திரவாதி சற்றுநேரம் கடுங்கோபத்துட

னிருந்து பிறகு என்னிடம்வந்து, பட்சமாகிய சில வசனங்களை மொழிந்து, என்னை இணங்கும்படி வேண்டினன். நான் அவனெண்ணத்திற்குச் சற்றும் இடங்கொடாமையால் என்மீதில் கடுங்கோபங்கொண்டு என்னை இந்தக் கட்டிலின்மேல் படுக்கச்செய்து எனது மரணகாலம்வரையிலும் நான் தூங்கிக் கொண்டிருக்கும்படி ஏதோ சில மந்திரங்களை யுச்சரித்து, அம்மந்திரங்களை ஓர் செப்புத்தகட்டிலெழுதி அந்தத் தகட்டை இவ்வறையின் வாசற்படிக்கு மேல் அடித்து வைத்தான். அவன் அடிக்கடி இங்கு வந்து என்னை நித்திரையினின் றெழுப்பி, தன்னைத் தழுவியணையும்படி எனக் கனேகம் பிரிய வசனங்கள் சொல்லுகிறதுண்டு. நான் இணங்காதது கண்டு மறுபடியும் எனக்கு அதிக நித்திரையை வருவித்துப் போவதுண்டு. அந்த மந்திரவாதி தவிர மற்றயாராலும் என்னை நித்திரையினின்றும் எழுப்ப முடியாதே. அப்படி யிருக்க நீர் என்னை எவ்வித மெழுப்பினீர்? என்றவுடன் அரசகுமாரன் அம்மாதை நோக்கி, “மங்கையே! அந்த மந்திரவாதியின் மந்திரங்களடங்கிய இந்த அறையின் வாசற் படிக்குமேல் அடிக்கப்பட்டிருந்த செப்புத்தகட்டைக் கழற்றி அகழியில் எறிந்து விட்டேன். பிறகு தான் நீ விழித்துக் கொண்டாய்” என்றான்.

பிறகு, அந்தப்பெண், அரசகுமாரனைப் பார்த்து, ஐயா! நீர் கள்ளர்களுடைய கையிற் சிக்கித் தப்பித்துக் கொண்டது ஓர் பெரிதல்ல. இந்த மந்திரவாதியின் கைக்குத் தப்பிப்போவது மிகவும் பிரயாசை. அவன் நினைத்த ரூபம் எடுப்பானகையால் அவனை நீர் எதிர்ப்ப தசாத்யம். உம்மை அவன் இங்குக் கண்டவுடன் தப்பாமல் கொல்வான்.

"மன்னவன் கணக்கன் பார்ப்பான்
வலியுள்ளோன் மந்த்ரவாதி
பொன்னுளவன் குருக்கள் புலவர்
பண்டித னமைச்சன்
அன்னஞ் செய்திடுவோ னென்று
மடங்காத துட்டாரிப்
பன்னிரு பேரோ டென்றும்
பகை கனவிலுங் கூடாதே"

என்றபடி, அந்த மந்திரவாதியுடன் எதிரிட்டுப் பகைத்தல் கூடாத காரியமாதலால் அவன் வருவதற்குள் நாம் உத்தமபுரியை நோக்கிச் செல்லவேண்டும் என்றாள்.

உடனே நானும், பதுமபுரியின் அரசகுமாரனும், உத்தமபுரியின் மந்திரி குமாரத்தியும் அந்தக்கோட்டையைக் கடந்து அதி தீவிரமாக சமுத்திரக் கரையையணுகி நாங்கள் முன் விட்டிருந்த படகிலேறிக்கொண்டு, மந்திரி குமாரத்தி வழிகாட்ட அத்திசையாகவே படகைத் தள்ளிக்கொண்டு இரண்டு தினங்களில் உத்தமபுரியை யடைந்தோம். நாங்கள் மூவரும் படகைவிட்டிறங்கி மந்திரியின் அரண்மனைக்குச் சென்றவுடன், நெடுநாளாகத் தன் குமாரத்தியைக் காணாது துயரப்பட்டுக்கொண்டிருந்த மந்திரி தன் குமாரத்தியை வாரியெடுத்து மடிமீதுட்கார வைத்துக்கொண்டு எங்களிருவரையும் ஆசனங்களி லமரச்செய்து தன் குமாரத்தியை நோக்கி "அம்மா! குழந்தாய்! நீ இத்தனை நாளாக எங்கு சென்றிருந்தனை? உனக்கு சம்பவித்த ஆபத்து எவ்விதமானது? இவ்விரு வாலிபர்கள் யார்?" என்றான். அம்மாது தன் தந்தையை நோக்கித் தான் நீராடக் குளத்திற்குச் சென்றதும், மந்திரவாதி தன்னை ஆசாயமார்க்கமாய்த் தூக்கிக்கொண்டுபோய் ஓர்

நிர்மானுஷியமான தீவில் வைத்திருந்ததும், அவனுடைய துஷ்டச் செய்கைகளுக்குத் தான் இணங்காமையினால் சதாகாலமும் தூக்கத்தி லிருக்கும்படி மந்திரோச்சாடனம் செய்து வைத்ததும், பிறகு இவ்விருவரில் ஒருவராகிய பதுமபுரியின் அரசகுமாரன் அம்மந்திரத் தகட்டைக் கழற்றி எறிந்துத் தன்னை இங்குக் கொண்டுவந்து சேர்த்ததையும் தெரிவித்தாள்.

மந்திரி இதைக் கேட்டவுடன் மிகவும் சந்தோஷமடைந்து, தன் குமாரத்தியை அப்பெரிய ஆபத்தினின்றும் காப்பாற்றிய பதுமபுரியின் அரசகுமாரனை மிகவும் கொண்டாடி அவன் பதுமபுரியைவிட்டுவந்த காரணத்தை வினவ, அவன் தாயாபரசுந்தரியின் உருவப்படத்தைப் பார்த்து அவளது மையலில் சொக்கி அவளைக்காண தன் தோழனுடன் பிரயாணப்பட்டு வந்ததாகத் தெரிவித்தான். மந்திரி அரசகுமாரனைப் பார்த்து, “இராஜபுத்திரா! நீ கொண்ட எண்ணம் மிகவும் கொடுமையானது. தயாபரசுந்தரியை மணக்கவேண்டுமாயின் அவளது கடினமான கேள்விகளுக்குச் சரியான விடை யளித்தல் வேண்டும். விடை யளிக்காவிடிலோ, நீ உடனே கொல்லப்படுவாய். அவ்விதம் அரசனுடைய பிரமாணர்சட்ட மேற்பட்டிருக்கிறது. உன்னைப்போன்ற அநேக கல்வித்தேர்ச்சியுள்ள அரசகுமாரர்கள், அவளது ஆழ்ந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கச் சக்தியின்றி கொல்லப்பட்டார்கள். ஆகையால் அவ்வித ஆபத்தில் நீ சிக்காமல், எனது குமாரத்தியை நீ விவாகம் செய்துக்கொள்ளலாம். அல்லது வேறே அரசகுமாரத்திகளில் எவரையாகிலும் நான் மணஞ்செய்து வைக்கின்றேன்” என்றான். இராஜகுமாரன் மந்திரியைப் பார்த்து, “உத்தமபுரியின் அரசன் தன்புத்திரியை எனக்

குக் கொடுக்க சம்மதித்து அவள் கேட்கும் கேள்வி களுக்கு மாத்திரம் உத்திரம் பகரச் செலவு கொடுப்பா ராஞல் நான் கற்ற கல்வியின் வல்லமையால் அவ்விராஜ புத்திரியை வென்று, அவளை மணம்புரிவேன்" என்று சொல்லி அரசசபைக்குச் சென்ருன். நான் அவனுடைய கதி என்னவாகுமோவென்று அரண்மனையின் வெளியில் காத்துக் கொண்டிருந்தேன். ஐயா! அப்பால் நடந்த சங்கதிகளை நீரே கண்கண்ட காட்சியாய்ப் பார்த்ததால் அதை நான் மறுபடியும் கூறுவது அனுவசியம், என்று துக்கம் அதிகரிக்கத் தேம்பித் தேம்பி யழுது, ஐயா! இராஜபுத்திரர்கள் தலைகளைப் பரிசாய்வாங்கும் அந்தப் பாதகி தயாபரசுந்தரிக்கு இதோர் திரணம்போ லிருந்த தால் அவ்விராஜகுமாரன் மடிந்தான். அவன் சாகச் சற்று முன் அவளது உருவப்படத்தை என்னிடத்திற்கொடுத்து நான் பதுமபுரிக்குப் போனவுடன் இப்படத்தினுல் அவ னுக்கு நேர்ந்த மரணத்தைத் தன் தகப்பனுக்கு விவரமா யுரைத்து, இப்படத்தைக் காட்டினுல் அவன் விஷயத்தில் அவர் அநுக்கிரகம் பாராட்டி அவன் குற்றத்தை மன்னித் துப் பொருத்தருளுவார் எனத் தெரிவித்தனன். என்னை நேசித்து ஆதரித்துவந்த இராஜகுமாரனை இழந்த துக் கமே எனக்கதிகரித்திருக்க, இப்படத்தை யெடுத்துக் கொண்டு நான் பதுமபுரிக்குப் போக மனந்துணியுமோ? அல்லது அவனை மண்ணுக்கிறையாய்க் கொடுத்த இவ் வூரில்தான் வசிப்பேனே? ஆ! என்னை யாதரித்துவந்த சீமானே! உனது பிராணனை வாங்கத் தீட்டிய படத்தை நான் என்ன செய்வேன்? ஓ கொடுங்கொலைபுரியும் சார்க் கோடக ஸ்திரீயே! உன்னன்பர்களுக்கு மூட்டும் காம விகாரத்திற்குப் பதிலாய்க் கடுங்கொலைபுரியும் பழிகாரி

யென்ற பயங்கரத்தைத்தானு அவர்கள் மனதில் பதியச் செய்தாய்? என்று இவ்வார்த்தைகளால் சற்றுநேரம் பிரலாபித்திருந்து பின்பு மூர்க்க கோபாவேச முள்ளவனுய்க் கொலைத்தொழில் புரிந்தவிடத்தை வெறிகொண்டு பார்த்துக்கொண்டிருந்தான். சிலநேரம் மௌனமாக விருந்து அவன் தன் கையில் பத்திரமாய் வைத்திருந்த படத்தை விசிறி யெறிந்துவிட்டுப் போயினன்.

உடனே சித்தராங்கதன் அப்படத்தைத் தன் கையி லெடுத்துக்கொண்டு இருளானதால் கிழவியின் வீட்டுக்குப் போவது கஷ்டமென்றெண்ணி பொழுதுவிடியுந்தனிலும் அரண்மனை முகப்பில்தானே படுத்துக்கொண்டிருந்தனன். பொழுது புலர்ந்த வுடனே அவ்வழகியின் ஜோதிமய மெவ்விதமோ அதைப் பார்க்கவேண்டுமென்று ஆவல் மேலிட்டு அப்படமிருந்த சிமிழைத்திறந் தந்தப்படத்தை யெடுக்கு முன்னே சொல்லுகின்றான்: “நான் இனி யென்ன வேலை செய்யப்போகின்றேன்? நானும் இவளழகைக் கண்டு சொக்கிப்போகக் காலம் நேரிட்டதே. நான் என்னையுமறியாமல் பதுமபுரியின் அரசகுமாரனை வளர்த்த கைத்தாதை சொன்னதையும் கவனியாமலு மல்லவோ பதறின சிந்தைகொண் டிப்படத்தைப்பார்க்கத் துணிந்ததென்ன என் பைத்தியம். ஆ! என் மனமே! நீ அவளைப் பார்ப்பதினால் எப்படிப்பட்ட துன்பத்திற்கு ஆளாகவேண்டு மென்பதை உணரவில்லையா? இவ்வாபத்தி னின்றும் நான் எவ்வாறு நீங்கக்கூடும். அவளுடைய தப்பான நியாயம் தெளிவில்லா விவேகமாகவல்லோ விருக்கிறது. நானவளது சாயலைப் படத்திற்கண்டு மதிமருளுவே னுகில் என்கதி எப்படி முடியுமோ தெரியாது. ஆகிலும் மனமே! நீ அவளழகைக் கண்டு மையல்கொண்டு நின்று

தவித்து அவள் கேட்கும் கேள்விக்கு உத்தரம் பகரச் சக்தியற்று கொலைபுரியப்படுவா யென்று அவதைரியப் பட்டுப்போகாதே” யென்று தன்னைத் தேற்றிக்கொண்டே யிருந்தான்.

சித்திராங்கதன் சிமிளியிலிருக்கும் படத்தைப்பார்க்கு முன்னமேயே தன்மனதைத்திடஞ்செய்துக்கொண்டு, பின்பந்த சிமிளைத்திறந்து படத்தைப்பார்த்தான். அவளுடைய சுந்தரவடிவு அச்சிலேலவார்த்த வச்சிரப்பதுமைபோல கோடிசூரியப் பிரகாசங்கொண்டு ஜொலிப்பதைப் பார்த்து காமாக்கினியால் கனத்த சூடுகொண்டு, அக் காமவலையி னின்றும் தன்னை விடுத்துக்கொள்ள முயற்சித்தும் முடியாமல் “ஆ கடவுளே! உமது மகிமை விளங்கவெண்ணியே இவளை இவ்வளவு அழகாய்ப் படைத்தீரோ? என்ன வாச்சரியம்! எனக்கு இப்போது உண்டான மாறுத லென்ன? இந்த இராஜபுத்திரியின் ஒப்பற்ற வடிவழகினுல் இனி என்னுயிரை இழப்பதோர் அருமையா? என்று கருத்துங்கண்ணுமாய் அப்படத்தைப்பார்த்துக்கொண்டே கிழவியின் வீட்டையடைந்தான். கிழவி சித்திராங்கத னைப் பார்த்து மிகவும் சந்தோஷமடைந்து, ஆ! என் மகனே! நீ இதுவரையிலும் எங்குச் சென்றிருந்தாய்? நீ இவ்வளவு தாமதமாய் வந்த காரணமென்ன? உன்னைக் காணுமையால் உனக்கென்ன அபாயம் நேரிட்டதோ என்று ஏங்கிக்கொண்டிருந்தேன்” என்றனள். சித்திராங்கதன் கிழவியை நோக்கி, “அம்மா! நீ என்விஷயத்தில் கலங்கவேண்டியதேன்? நான் இவ்வீட்டிற்கு வர முடியாமல் இரவெல்லாம் அலைந்து திரிந்து கொலையுண்ட இராஜபுத்திரனுடைய கைத்தாதை மொழிந்த சங்கதிகள் யாவையுங் கேட்டு இராஜபுத்திரியின் உருவப்படத்தை

அவன் எறிந்துவிட நானதை எடுத்துக்கொண்டு வந்தேன்" என்று அப்படத்தைக் கிழவிக்குக் காண்பித்து, "அம்மா! இப்படம் தயாபரசுந்தரியின் பூரண அழகை பூர்த்தியாய்க் காட்டுகிறதோ? அவள் சாயலைப்போல் சரிவர யெழுதிய படமே யல்லவென்று நினைக்கிறேன்" என்றனன்.

உடனே கிழவி அப்படத்தை உற்றுப்பார்த்து, ஆ! குமாரா! இப்படம் அவளழகில் ஆயிரத்திலோர்பாகமாவதில்லை. நீ அவளை நேரில் பார்த்தால் நான் சொல்வதின் உண்மைவிளங்கும். இப்பிரபஞ்சத்தில் வசிக்கிற சிற்பசாஸ்திரிகளில் ஒருவனேனும் அவளது பேரழகை எழுதக் கைதேர்ச்சியுள்ளவனே யல்ல என்று கூறினள். சித்திராங்கதன் கிழவியை நோக்கி, "அம்மா! இனி நான் அவளைப்பாராமல் உயிர் நிலைத்திருப்பேனே? அவளை நான் பாராம லிருப்பதிலும் அவள் நிமித்தமாக நான் உயிரை யிழப்பது தகுதியல்லவோ? இப்பேர்க்கொத்த அழகி யென்று ஏற்கெனவே யெனக்குத் தெரிந்திருந்தால் அவள் பாதங்களில் சரணமென்றல்லவோ விழுந்துகிடப்பேன். உயிர்துறந்த பதுமபுரியின் அரசகுமாரனைப்போல் என்கதி யிருந்தாலும் அதற்கஞ்சாமல் அவ் வடிவழகியை இப்போதே என் கண்ணாரக்கண்டு உயிரிழக்கச் சித்தமாயிருக்கின்றேன்" என்று கூறினன். அதற்கந்த கிழவி, ஆ என்மகனே! நீ சொல்வது என்ன வார்த்தை. இவ்வித எண்ணமும் யாராகிலும் கொள்ளுவாரோ? உன்னை நீயே கொலைக்குள்ளாக்கத் துணிந்தாயல்லவோ? இது யென்ன பகுத்தறிவில்லாத துணிச்சல் என்றதும் சித்திராங்கதன், ஆம் தாயே! நான் இன்றையதினமே அம்மாதினிடஞ் சென்று அவளுடைய கேள்விக்குத்தகுந்த பிரதியுத்தர

மளித்து வருவேன். நான் இப்பட்டணத்திற்கு வரும் முன்னரே அரசனாகிய புத்திசேனனிடத்தில் உத்தியோ கத்தி லமரவே எண்ணங்கொண்டு வந்தேன். நான் அவ ரிடத்தில் உத்தியோகத்தி லிருப்பதைப் பார்க்கிலும் அவ ருக்கு மருமகனவது மிகவும் சிலாக்கியமல்லவா? என்று சொன்னதைக் கேட்ட கிழவி, திகைத்துப் பெருமூச் செறிந்து கண்களில் நீர்த்ததும்ப அழுதுக்கொண்டு,"ஐயா! மறுபடியும் நீர் இப்படிப்பட்ட எண்ணங் கொள்ளாதிருக்க வேண்டுகின்றேன். மேலும்,

"என்னே கிரேதத்தி ரேணுகையே கூற்றுவனும்
தன்னேர் திரேகத்திற் சானகியே—பின்யுகத்தில்
கூடும் துரௌபதையே கூற்றுங் கலியுகத்தில்
வீடுதொறுங் கூற்றுவ னுமே"

என்றபடி, அவள் உமக்கு யமனென்று நீர் சற்றும் எண்ண வில்லை. நீ அவளழகில் சொக்கியிருப்பாயானல் இது வரையிலும் உயிரிழந்த அரசகுமாரர்களைப்போல உண்மை யாய் நீயும் மடிந்தே போவாய். ஆகையால் அவ ளாசையை ஒழித்துவிடு. உனது அகால மரணத்தைப் பற்றி உன்னைப் பெற்றோர்கள் கேள்விப்படுவார்களானல் மனோ வேதனையினல் அவர்கள் தங்கள் உயிரை மாய்த் துக் கொள்ளுவார்களே. ஆகையால் உனது பெற்றோர்க ளுடைய வயிற்றெறிச்சலுக்கு இடம் வையாதே'! என்ற னள்.

கிழவி சொன்னதைக் கேட்ட சித்திராங்கதன், தாயே! இனி நீ இவ்விஷயத்தைப் பற்றி அதிகமாக எனக்குத் தூண்டிக் காட்டவேண்டிய அவசியமில்லை. என் பெற்றோர்கள் என்மீதில் வைத்திருக்கும் அன்பை விட நான் பதின்மடங் கதிகமாகவே அவர்கள் மீதில்

அன்புகொண் டிருக்கின்றேன். நான் இன்றையதினம் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் கருத்தினால் என் உயிருக்கு உலை வைத்துக்கொள்ளுவேனென் றெண்ணாதே. என் பெற்றோர்கள் இவ்விட மிருப்பார்களானால் நான் கொண்ட கருத்தை முன்னுக்குக் கொண்டுவர முக்கிய பிரயத்தினஞ் செய்வார்கள் என்பதற்கோ ரையமில்லை. என்னுடைய எண்ணம் அவர்களுக்கு மிகுந்த அகமகிழ்ச்சியை விளைவிக்குமே யல்லாமல் வேறல்ல. ஆகையால் அப்பிரயோசனமாகக் காலத்தைக் கழிப்பதில் பயனில்லை. என்னை இது விஷயத்தில் தடைப்படுத்துவது ஒருவராலும் முடியாத காரியம்" என்று சொல்லி இராஜபுத்திரியாகிய தயாபரசுந்தரியைக் காணத் தீரங்கொண்டிருந்தனன்.

கிழவி வார்த்தை கிண்ணாரக்காரனுக் கோததுபோல சித்திராங்கதன் அவளுடைய வார்த்தைகளை லட்சியம் செய்யாதது கிழவிக்குக் கோபமேயாயினும், அவளது அடக்கக்கூடாத விசனத்தினால் வருத்தப்பட்டு மறுபடியும் சித்திராங்கதனை நோக்கி, மைந்தா! நீ கொண்ட எண்ணத்தால் வெற்றி யடைவாயோ? அல்லது கத்திக் கிரையாவாயோ? அறியேன். சண்டாளியாகிய நான் அவளுடைய பேரழகைச் சிறப்பித்து வசனித்திராவிட்டால் நீ இவ்விததுணிவுகொண்டிருக்கமாட்டாய். உனது உயிரை இழக்கத் துணையாயிருந்தவள் நானே என்று அழ ஆரம்பித்ததும், சித்திராங்கதன் தாயே! நீ யொன்றும் சிந்திக்கவேண்டாம். என் கர்மானுசாரத்தால் நானவள் மீது மையல் கொண்டதற்கு உன்னைக் குற்றவாளியாக்க நியாயமில்லை; தவிர அவளுடைய கேள்விகளுக்கு நான் விடை பகரமாட்டேன் என்று உனக்கெப்படித் தெரியும். நான் கல்வி கேள்விகளில் சொற்ப அறி

வுடையவனு ? அல்லவே, கொடூரமாகிய ஆக்ஞைபுரியும் உத்தமபுரியின் அரசனைக் கொண்டே என் மீதில் கருணை கூர்ந்திருக்கச் சிந்தை பாராட்ட கடவுள் கடாட்சம் செய்தாலும் செய்வார். அவர் வல்லமையை யாரறியக்கூடும்" என்று சொல்லக் கிழவி யவனைப்பார்த்து, உன்னைப்போல் கல்வியில் தனக்கு நிகரில்லையென்று கியாதிபெற்ற விஜய பூபதி யென்பவன் பேய்பிடித்தாலும் பிடிக்கலாம் பெண் பித்தம் கூடாதென்னும் பழமொழியின்படி அநேக துன்பங்களுக்குள்ளாகி மாண்டதை நீ யறியாய் போலும், என்றாலும் அதை யறிவிக்கின்றேன் கேட்பாயாக.

ஜெயபுரி என்னும் பட்டணத்தில் விக்கிரமகேது என்னும் ஓர் விருத்தாப்பியனிருந்தான். அவன் தன்னைப்போன்ற மற்ற வர்த்தகர்களைப்போல் செல்வ சம்பத்தில் குறைவில்லாமல் குபேரனைப்போல் சகல வைபவத்துடன் ஜீவித்து வந்தான். அவன் பலவிடங்களிலும் யாத்திரை செய்து அநேக இடையூறுகளைக் களைந்து அளவற்ற பொருளை மலைபோலக் குவித்துவைத்திருந்தும் தனக்குப் புத்திரசந்தான மில்லாததால் மிகவும் விசனப்பட்டு அதிகக் கவலையுட னிருந்தபடியால்,

" திரவியம் வந்தபோது சேர்ந்தபல் லோர்க்கு மீந்தால்
வரவர வளமாமந்த வகைசெயா விடிற்கெட் டேகும்
ஒருகலிங் கிணைவிட்டக்கா லோதநீர் போக்குப் போகும்
பெருகுரு மேரியில்லா விடனடு வணையைப் போக்கும். "

என்றபடி. பிரதிதினமும் ஏழைகளுக்கு ஏராளமாய்ப் பொருளை வாரியிறைத்து அன்னசத்திரம் போலத் தனது வீட்டை ஆதுலர்க்கடைக்கலமாக்கித் தன் கொடையினால் சகலரும் புகழும்படியான பேர் வகித்துத் தனக்குப் பின்னைக்கலி நீங்குமென்று அப்பட்டணத்தில் ஆஸ்பத்திரி

களையும், சத்திரம் சாவடிகளையும், மடங்களையும் தருமமாகக் கரியமாய்க் கட்டுவித்து பொருளை யொரு பொருட்டா யெண்ணாமல் செலவு செய்து வந்தான்.

அவன் செய்த தானதருமங்கள் கடைசியில் உபயோகப்படாமல் இனி தனக்குப் புத்திரசந்தானமேயில்லையென்று நினைத்து ஆழ்ந்த விசனத்திலிருந்தான். ஒருநாள் அப்பட்டினத்தில் மிகவும் கியாதிபெற்று கைபாகஞ் செய்பாகத்தில் பிரபலனான ஓர் வைத்தியனைத் தன் வீட்டிற்கு வரவழைத்து அவனுக்கு அதிக மரியாதையுடன் உபசரித்து உட்காரச்செய்துப் பின்பவனை நோக்கி, “ஐயா வைத்தியோத்தமரே! எனக்கு புத்திரசந்தானமில்லாத குறையால் அநேக வருடங்களாக ஆதுலர்க்கும் ஏழை எளியோர்க்கும் மிதமிஞ்சின தர்மத்தைச் செய்தும் விழலுக்கிறைத்த நீர்போல விணாகி எனக்குப் பிள்ளைக் கலி நீங்கவில்லை. இதுவே யெனக்கு அல்லும் பகலும் ஆராத்துயரத்தை யுண்டுபண்ணிக்கொண் டிருக்கின்றது. ஆதலால், இவ்விசனம் நீங்க நீர் ஓர் மார்க்கத்தை எனக்குச் சொல்லவேண்டு மென்றனன். இதைக்கேட்ட வைத்தியன் அவரைப்பார்த்து, ஐயா! நீர் தெரிவித்த துண்மைதான். ஆனாலும் உமது எண்ணம் ஔஷதப் பிரயோகங்களினாலும் மனிதருடைய சகாயத்தினாலும் நிறைவேறக்கூடியதன்று. புத்திரசந்தான முண்டாவது தெய்வசங்கற்பத்தால் உண்டாகவேண்டிய கருமமேயன்றி வேறல்லவென்றுக் கூறினர். விக்கிரமகேது அவ்வயித்தியரை நோக்கி “ஐயா! பண்டிதரே! நீர் தெரிவித்ததைப் போல் சந்தான வுற்பத்தி தெய்வானுகூல பிரயத்தினத்தால் ஆகவேண்டிய தென்றுக் கருதியே அந்தணர்களைக் கொண்டு தெய்வத்தைப் பிரார்த்திக்கச்செய்து எனக்

கிருக்கும் அபவாதமான பிள்ளைக்கலியை நீக்கப்பார்த்தும் கடவுளருள் சித்திக்கவில்லை. கடவுளருள் என்மேலுதிக்க அவருக்குச் செய்யும் வழிபாடு எப்படிப்பட்டதென்பதை எனக்குத் தெரிவித்தால் உமது கட்டளைப் பிரகாரம் நடந்துகொள்ளச் சித்தமாயிருக்கின்றேன் என்று கூறினன். அதற்கந்த பண்டிதன் விக்கிரமகேதுவை நோக்கி "நீர் செய்யவேண்டிய கருமமென்னவெனில்,

"வேயிருதோ ளாலுதர மிக்க வுந்தி நீர்ச்சுழியாஞ்
சேயமணி யாலவட்டந் தேரரவு—ஆயவல்குன்
மென்கதலி யூருவிளங்கு முழந்தா ளலவ
னன்கருணைக் காறுவுவார் ஞடு."

என்றபடி, வேயைப்போன்ற தோளும், நீர்ச்சுழியை யொத்த நாபியும், வாழைத்தண்டைப்போன்ற தொடையும், அலவனையொத்த முழங்காலும், பருத்த தனமும், வல்லி சாதக் கொடியைப்போன்ற சிறுத்த விடையும், புஷ்டியான சதையிற் பொதிந்த கன்னப் பரிசையும், மான் போன்ற விழிகளும், மாந்தளிர் போன்ற காந்தியுள்ள சரீரமும், மெதுவான தொனியும், இனிமையான பேச்சுகளை இதமாய்ப் பேசுகின்ற வாக்கலங்காரமுமாகிய பேரழகுடைய ஓர் பெண்ணை விவாகம் செய்துகொண்டு அவளுடன் கூடி யனுபவிக்குமுன் நாற்பதுநாள் பரியந்தம் உமது மனதை உலக விவகாரங்களில் செலுத்தாமல் கடவுளின்மேல் கியாபகமாய் விரத மனுட்டிப்பீராகில் பகவான் உமது விரதத்திற்கிரங்கி ஓர் புத்திரனை உமக்கருள் செய்வார்" என்று தெரிவித்தனன்.

விக்கிரமகேது, வைத்தியன் தனக்குத் தெரிவித்தப் பிரகாரம் அதிரூபசௌந்தரவதியாகிய ஓர் ஏழைப்பெண்ணிடத்தில், மேலே விவரித்த குறிகள்யாவும் பழுதறவிளங்

கக்கண்டு அவளே தனக்குகந்த மனைவியெனத் தெரிந் தெடுத்து அவளுடைய பெற்றோர்களுக்கு ஏராளமானப் பொருளை யீந்து அம்மங்கையை விவாகஞ்செய்துகொண்டு நாற்பதுநாள் வரையிலும் விரதமனுஷ்டித்த பின்னர் அவ ளைக் கூடிக்கலந்து சரசசல்லாப வுல்லாசலீலைகளில் களித் திருந்தான். சிலநாள் சென்றதன் பின்னர் தெய்வசங்கல் பத்தால் அம்மாது கர்ப்பவதியாகி பத்துமாதங்களுஞ் சென்று நல்ல சுபமுகூர்த்தத்தில் ஓர் ஆண்பிள்ளையைப் பிரசவித்தாள். அப்போது விக்கிரமகேது தனக்குக் குமாரன் பிறந்ததைக்கேட்டு மிகவும் சந்தோஷமடைந்து, பிராமணர்களை வரவழைத்து செய்யவேண்டிய சடங்கு களை யாவும் நிறைவேற்றி, ஜாதகத்தில் தேர்ந்த வல்லவர் களைக்கொண்டு ஜாதகத்தை எழுதி, அப்பட்டணத்திலுள்ள பிரஜைகள் யாவரும் சந்தோஷப்படும்படி பூதானம் கோதானம், கன்னிகாதானம், வஸ்திரதானம், சொர்ன தானம், கெஜதானம், அஸ்வதானம், சிவிகைதானம் முத லான தானங்களைச் செய்து, அப்பிள்ளைக்கு விஜயபூபதி என நாமகரணமிட்டு, தனது பந்துக்களுக்கும், சினேகிதர் களுக்கும் விருப்புடன் பெரியதோர் விருந்தளித்து, யாவ ரையும் களிக்கச்செய்தான். விஜயபூபதி நாளுக்குநாள் வித் தையிலும் புத்தியிலும் தேர்ச்சியடையும் பொருட்டு சகல கலைகளிலும் வல்லவர்களான பண்டிதர்களைக்கொண்டு பதி னெட்டு பாஷைகளையும் ஐயந்திரிபறக் கற்றுக்கொள்ளச் செய்தான். இதுதவிர, விஜயபூபதி சகல சாஸ்திரங்களில் வல்ல பண்டிதனுய்த் தேர்ந்து யானையேற்றம் குதிரை யேற்றம் முதலியவைகளிலும், ஆயுதப் பரிட்சைகளிலும் தனக்கு நிகர் ஒருவரு மில்லையென்று சொல்லும்படி சகல

வித்தையிலும் புத்தியிலும் நிபுணனாய்த் தேர்ந்த கலைபண்டிதனென்று சகலராலும் கொண்டாடப்பட்டு வந்தான்.

"பொற்பறி வில்லாதபல புத்திரரைப் பெற்றவினோர்
நற்புதல்வ னைப்பெறுத னன்றாமே—பொற்கொடியே
பன்றி பலகுட்டி பயந்ததினா லேதுபயன்
ஒன்றமையாதோ கரிக்கென் றோது."

என்றபடி, இவ்வளவு கலைக்கியானங்களையுடைய புத்திரன் தனக்குப் பிறந்ததைப்பற்றி விக்கிரமகேது எல்லையில்லா மனமகிழ்ச்சியை யடைந்து,

"உகந்துநீர்க் கடலுடுத்த பார்முழு வதுமொருங்கே
வந்துதா டொழுமரசியல் வளமெலாம் பெறினும்
இந்திராதிபர் பெரும்பதத் திருக்கையெய்திடினும்
மைந்தரின்றியே வாழ்வது வாழ்வுமற்றன்றே."

என்றபடி, இந்திராதி போகங்களைக் காட்டிலும் தனது குமாரனுடன் வாழ்வதே வாழ்வு, எனப் பூரித்துத் தன் புதல்வனைக் கண்மணியைப்போல் காத்துத் தன் பிராணனைப் பார்க்கிலும் பதின்மடங்கதிகமாய் அவனை நேசித்து வந்தான். அவன் சற்றுத் தன்னைவிட்டுப் பிரிந்திருக்கச் சகியாமனத்தனாய் சகல விஷயங்களிலும் தேர்ந்த தன் புதல்வனால் வார்த்திகனாகிய விக்கிரமகேது சந்தோஷசித்தனா யிருந்தான்.

நாளேறவேற விக்கிரமகேதுவின் சரீர பலமொடுங்கி, அந்தியமாகிய மரணம் தனக்குச் சமீபித்ததென்றறிந்துத் தன்னுடைய அருமைக்குமாரனை யருகிலழைத்து, தனக்குப்பின் இவ்வுலகில் அவன் ஜீவிக்கவேண்டிய முறைமைகளை யுணர்த்திப் பொருளைக் குன்றாது செலவு செய்து வரும் தனது அனுபோகத்தையும் அவனுக் குபதேசித்தான். சில தினங்களில் விக்கிரமகேது இறந்துபோய்

விட்டான். விஜயபூபதி தன் தந்தைக்குச் செய்யவேண்டிய
கருமாதி சடங்குகளைக் குறைவற நடத்தி, தந்தையினால்
சேகரித்து வைக்கப்பட்ட ஆஸ்திகள் யாவையும் கைப்
பற்றி, தனபாலபூபதி என்று சகலரும் தன்னைப் புகழும்
கௌரவத்தைப் பெற்றிருந்தான். தன் தந்தை நெடுநாள்
கஷ்டப்பட்டுச் சம்பாதித்த சொத்துக்களை இவன் ஒரு
பொருட்டா யெண்ணாமல் செல்வச் செருக்கினால் கர்வித்
துத் தன்னிஷ்டம்போல நடக்க வெண்ணி, தந்தை
சொன்ன புத்திமதிகளை விடுத்து வீண் செலவு செய்துக்
கொண்டு வந்தான்.

"நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம் வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காக் கோவுக்காம் சாவுக்காம்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண்."

என்றபடி, விஜயபூபதி தன்னாஸ்தியிலிருந்து விநோதமான
மாளிகைகளைக் கட்டி, அதில் தனக்கிஷ்டமான தாசி வேசி
களை யிருக்கச்செய்து, தனக்கிஷ்டமான துஷ்ட இஷ்டர்
களை தனக்கு சிநேகிதர்க ளாக்கிக்கொண்டு, நானாவித
சாராய தினுசுகளையும், இறைச்சிகளையும் மிதமிஞ்சி யருந்
திப் பணத்தைத் தாராளமாய்ச் செலவுசெய்ய வாரம்பித்
தான். இவன் எப்போதும் ஸ்திரீகளின் சரச லீலாவிநோ
தங்களில் மிக்க சந்துஷ்டி யடைந்து காலங்கழித்தது
மன்றி பற்பல ஆடல் பாடல்களிலும், கூத்து கேளிக்கை
களிலும் பொருளை மிதமிஞ்சி சொரிந்துக்கொண்டே
வந்தனன். மயக்கும் விழிகளையுடைய மாதராசையில்
இவன் சிக்கினமையால், மாதரின்பசுகத்துக்கு மேற்பட்ட
சுகம் வேறில்லையென்று மதித்து எப்போதும் ஸ்திரீகளி
னிஷ்டம்போல நடந்து, அவர்கள் விரும்பியயாவற்றையும்

அளித்து, அவர்களைச் சந்தோஷப்படுத்துவதே அவனது முக்கிய வேலையாயிருந்து பொருளின் அருமையை யறியாமல், "அடுத்துக் கெடுப்பான் கபடன் தொடுத்துக் கெடுப்பாள் மடந்தை" என்பதை யுணராமல் கொண்ட மட்டும் பொருளை வாரி இறைத்துவந்தான். அநேக வருஷங்களாக இவன் இவ்வித கோலங்களி லிருந்தமையால் எக்காலத்திலும் வற்றுச்சுறப்பாயிருந்த அவனது அளவற்ற திரவியம், யானையுண்ட விளாங்கனியைப்போல் வரண்டு, இவன் சொப்பனத்திலும் எதிர்பாராத தரித்திரத்திற் குள்ளானான். விஜயபூபதியை விட்டு இணைபிரியாதிருந்த அவனுடைய துஷ்ட சிநேகிதர்கள் கண்ணுக்கெட்டாத தூரத்தில் ஒளித்துக்கொண்டனர். இவனுடைய இன்ப ரஞ்சித உல்லாச மாதர்களும் இவனைப்பிரிந்தனர். தரித்திரனைய் முற்றக் கைவிடப்பட்ட பணதியும் ஏழையுமான விஜயபூபதி, கடைசியாய் சுட்டத்துணிக்கும், தின்னச் சோற்றுக்கும் மிகவும் அவஸ்தைப்பட்டு மனம்வருந்தினான். இவனுடைய தற்கால ஸ்திதியைக் கண்ணுற்ற இவனுடைய சிநேகிதர்கள் ஒருவரும் இவன் விஷயத்தில் பச்சாதாபப் பட்டவர்களில்லை. விஜயபூபதி, தான் கைகொண்டமட்டும் வாரிச் செலவிட்டதற்குத், தன் சிநேகிதர்கள் காட்டிய கடின சித்தத்தையும் நன்றியின்மையையும் நினைத்து நினைத்து ஏங்கி, வேசியுறவும் வியாபாரித்தஞ்சமும் காசு பணத்திற் கலந்ததென்ற வாசகத்தின்படி மாதர்களுடைய இன்பவுல்லாசமும் வஞ்சக சிநேகிதர்களுடைய ஆட்டப் பாட்டமும் கைப்பொருளின் காட்சியால் நடந்ததென்று உணர்ந்தான். அவன் தன் கஷ்டத்தைத் தான் பொறுக்கக் கூடாமல் தான் சௌக்கியமா யிருந்தகாலத்தில் தன்னோடு இன்பத்துடன் விருந்தருந்தின நேயர்களைக் கண்டு, தன்

சிறுமையை நிவர்த்தித்துக் கொள்ளலாமென்று துணிந்து. அந்தச் சிநேகிதர்களை அவர்களிருக்குமிடந் தேடிப்போய் தான் முன்னிருந்த ஸ்திதியையும், தற்கால வறுமையின் கூற்றையும் அவர்களுக்குச் சொல்லி, "நண்பர்களே! நான் சகல சம்பத்துடன் சௌக்கியமா யிருந்த காலத்தில் என்னிலைமை எப்படியிருந்ததென்று நீங்கள் நேரில் பார்த்திருப்பீர்கள். இப்பொழுது நான் பட்டினிகிடந்து பரதவிப்பதை நீங்கள் காண்கின்றீர்களே. இச்சமயத்தில் நீங்கள் என் விஷயத்தில் பரிதாபப்பட்டு எனக்கு ஏதாகிலும் உதவி செய்யலாகாதா? நான் நன்றாய் வாழ்ந்த காலத்தில் அடிக்கடி என்னுடன் புசித்து அதற்குப் பிரதியுபகாரமாக என்னிடத்தில் காண்பித்த பட்சமான நேசவுருக்கத்தை நினைத்தாவது நான் ஜீவிக்கும்படியான ஓர் மார்க்கத்தைக் காண்பியுங்கள். நாம் முன்பின்னிருந்த நேச விசுவாசத்தால் என்மேல் தயவுவைத்து, பசியின் கொடுமையினால் நான் படுசூரணமா யழிந்துபோகாமல் கருணை செய்யவேண்டும்" என்றான். சில நண்பர்கள் இவன் சொல்வதைக் கவனியாமலும் அவனை ஏறெடுத்துப் பாராமலும் மௌனமாயிருந்தார்கள். சிலர் சற்று இளகின மனத்தராய் அவனிடத்தில் அன்பைக்காட்டி, "நண்பா! உனது அளவற்ற செல்வம் உனது தயாள குணத்தினாலல்லவோ சீக்கிரத்தி லழிந்துபோயிற்று. நீ இவ்வளவு சீக்கிரத்தில் ஓட்டாண்டியாய்ப் போவாயென்று நாங்கள் நினைத்தவர்களேயல்ல. உனது தற்கால நிலைமையைக்காண எங்களுக்கு மிக்க வருத்தத்தை யுண்டுபண்ணுகின்றது.

"வாழ்வது வந்தபோது மனந்தனில் மகிழவேண்டாம்
தாழ்வது வந்தாலுற் றளர்வரோ தக்கோர்மிக்க
ஊழ்வினை வந்ததானா லொருவரால் விலக்கப்போமோ
ஏழையா யிருந்தோர்பல்லக் கேறுதல் கண்டிலீரோ."

என்றபடி வாழ்வுஞ் சிலகாலம், தாழ்வும் சிலகாலம். கடவுள் அதிசீக்கிரத்தில் உமது சிறுமையை நிவர்த்திப்பார், நீரொன்றுக்கும் சஞ்சலப்படவேண்டாமென்று உபசாரமாய்ப்பேசி கைவிட்டொரு காசுங் கொடாமல், 'தம்பி கால்நடை, பேச்சு பல்லக்கில்' என்னும் உலக வாசகத்தின்படி போக்குக்காட்டி யனுப்பினர்.

விஜயபூபதி தன் கண்களில் நீர் சொரியக் கலங்கி, ஆ! ஆ!! இவ்வளவு நெஞ்சழுத்தமும் நன்றியுங்கெட்ட மனிதர்களும் உலகத்திலிருக்கின்றார்களே. இவர்கள் நான் முன்னிருந்த பெருமையையும், இப்போதனுபவிக்கும் சிறுமையையும் சற்றாகிலும் பார்த்திரங்கினார்களா? இவர்கள் என்னுடைய ஆபத்துக்காலத்தில் துணைசெய்வார்களென்றல்லோ மதிமோசம்போய் என்னளவற்ற பொருளையெல்லாம் வாரி யிறைத்தேன். கடைசியில் என் கைவரண்டபோது சற்றாகிலும் என்னைச் சட்டைபண்ணினாரில்லை என்று புலம்பினான். விஜயபூபதி முன் கௌரவஸ்திதியிலிருந்து பலவித உல்லாசங்களிலும், கேளிக்கைகளிலும், நண்பர்களுடன் நல்ல விருந்துண்பதிலும் காலங்கழித்து செல்வவந்தனாய் பேர்பெற்று தனக்கு நிகரில்லையென்று வாழ்ந்துவந்து, இப்போது குண்டாகரணம் போட்டும் பிண்டார்சோற்றுக்கு வழியில்லை'யாதலால் இந்த ஜனனபூமியிலிருந்து அவமானப்படுவதைவிட இந்தச் சிநேகிதர்களாகிய துரோகிகள் முகத்தில் விழியாமல் தூரதேசம் போவதே வாசியென தீர்மானித்துக்கொண்டு, உடனே தன் நாட்டைவிட்டு **சண்பகபுரி** என்னும் பட்டணத்தைச் சேர்ந்து, அங்கோர் சத்திரத்தில் தங்கி, தன்னிடம் வைத்திருந்த கொஞ்சம் பணத்திற்கு ஒரு சொக்காயும், தலைப்பாகையும் கிரயத்திற்கு வாங்கி அவைகளை

யுடுத்திக்கொண்டு நாள் முழுமையும் பட்டணத்தைச் சுற்றிக்கொண்டு அங்கிருக்கும் தோட்டம் துரவுகளையும், கடைவீதிகளையும், மாடமேடைகளின் விசித்திரங்களையும் பார்த்துக்கொண்டிருந்து இரவு வருமுன்னே தன்னிருப்பிடமாகிய சத்திரம் வந்து சேரும் சாதாரணவழக்கத்தைக் கொண்டிருந்தனன்.

இப்படியிருக்க சண்பகபுரியின் அரசனுக்கு வழக்கமாய்ப் பகுதிசெலுத்திவரும் இரண்டு சிற்றரசர்கள், தங்களுக்குள் கட்டுப்பாடு செய்துக்கொண்டு பணம் கட்டுவதை நிறுத்திவிட்டனர். அவர்களுடைய துணிகரத்திற்காக அவர்களோடெதிர்த்துச் சண்டை செய்வதற்காக அரசன் சேனைகளைச் சேர்த்துக்கொண்டிருக்கிறதை விஜயபூபதி கேள்வியுற்று, தானுமொரு படைவீரனாய் அச்சேனையில்சேர விருப்பங்கொண்டு அரசனிடஞ் சென்றுத் தன் விருப்பத்தை யறிக்கையிட்டான். அரசன் விஜயபூபதியின் முகத்தைப்பார்த்து, இவன் ஓர் சுத்தவீரனாயிருக்கவேண்டுமென்று நினைத்து இவனை யோர் படைவீரனாகத் தன் சேனையில் சேர்த்துக்கொண்டார். சிலநாள் சென்றபிறகு, அரசன் தனக்குப் பகுதி செலுத்தத்தவறின சிற்றரசர்களின்மேல் படையெடுத்துச் சென்று யுத்தஞ் செய்ய அவ்விரண்டு சிற்றரசர்களும் அபஜெயப்பட்டுப் பின்முதுகு காட்டிப் படைமுறிந்தோடத் தலைப்பட்டு, இனி கிரமமாகப் பகுதிப்பணம் செலுத்திக்கொண்டு வருவதாக அரசனிடத்தில் மன்னிப்புபெற்று சமாதான வுடன்படிக்கை யெழுதிக் கொடுத்துத் தத்தம் நகரத்தைச் சேர்ந்தனர்கள். விஜயபூபதி யுத்தகளத்தில் அதிக வீரசூரத்துவமுள்ளவனாய் முன்வைத்தகாலைப் பின் வைக்காமல் சிற்றரசர்களுடைய படையாவும் சிதறியோடும்படி

னின்னபின்ன மாக்கின தந்திரோபாயங்களைச் செய்தா னுகையால் அரசன் அவனை அபிமானித்து நடத்தி வந்ததுமல்லாமல் அரச குமாரனை ஜேயபாலன் என்பான் விஜயபூபதியின்மேல் அதிக பிரீதிவைத்து அவனையே தன் னந்தரீகச் சிநேகனும் உயிர்த்தோழனுமாயிருக்க ஏற்படுத்திக்கொண்டான். விஜயபூபதி அரசகுமாரனுடைய தயவை யதிகமாய்ப் பெற்று அவனுக்கு நண்பனானவுடன் இராஜகாரியங்களில் அதிக சிரத்தையுடன் உண்மையாக உழைத்து வந்தான்.

இப்படியிருக்க சில தினங்களில் சண்டகபுரியின் அரசன் விருத்தாப்பியனாகி இறந்துபோய்விட்டான் அரசகுமாரனாகிய ஜெயபாலன், தன் தந்தைக்குப் பதிலாய் சிம்மாசனமேறி செங்கோல் செலுத்து மரசனானன். ஜெயபாலன் அரசனானவுடன் விஜயபூபதியைச் சதாகாலமும் தனதருகி லிருக்கச்செய்து, இராஜ காரியங்களைக் குறித்த ஆலோசனைகளுக்கு அவனையே பிரதானியாக்கிக் கொண்டான். 'அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை குடியானவன்வீட் டம்மியை யுடைக்கும்' என்ற பழமொழிப்படி, விஜயபூபதியின் வாக்கோ எங்கும் செல்வாக்காயிருந்தது. இவனுடைய வார்த்தைக்கு எதிர்த்துரைப்பவர்கள் ஒருவரும் இராதிருந்தனர்கள். தான் எதிர்பாராத இவ்வித பெரிய அந்தஸ்து தனக்கு வந்ததைப்பற்றி அவன் தனக்குள் சொல்லிக்கொண்டதாவது, மனிதர்களுக்கு கடவுளருளாலேயே வாழ்வும், தாழ்வும் லபிக்கின்றது. நான் ஜெயபுரத்தில் வசிக்கும்போது எனக்கிருந்த அளவற்ற செல்வத்தையும் என் அறிவீனத்தினுல் தோற்றுப் படாத கஷ்டத்தையும் பட்டேனல்லவா ? இதனாலன்றோ ?

"இன்னறரும் பொருளை யீட்டுதலுந் துன்பம்
பின்னதனைப் பேணுதலும் துன்பமே—அன்ன
தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பால்
இழித்தலுந் துன்பமே யாம்."

என ஆன்றோர் அருளிச் செய்திருக்கின்றனர். எக்காலத்திலும் வற்றாத என்னுடைய திரவியத்தினாற்று, என் னழிகால புத்தியினு லழிந்து வற்றி யரண்டுபோய் மறுபடியும் இப்போது அரசனு லடைந்திருக்கும் அதிகார செல்வம் என்னைச் சந்தோஷிக்கச் செய்ததல்லவா? நமதுவாழ்நாட்களில் நமக்கெய்தும் இம்சையும், அஹிம்சையும் மாறிமாறி வருவதால், வருவதைவிலக்கவும் வாராததைத்தருவிக்கவும் கூடாது. எல்லாம் கடவுளின் திருவுளச் செயலின்படி நடக்கின்றது என்று நினைத்துக்கொண்டிருந்தான்.

இவ்விதமாக விஜயபூபதியின் வித்தியா பலமும், விவேக பலமும், மனோ பலமும், ராஜவிசுவாச பலமும் வாக்கு பலமும் ஜெயபாலனுல் அடையப்பெற்று பிரபல தசையை யடைந்திருந்தமையால், தான் நினைத்தபடி யெல்லா முடிப்பதற்கு ஒருவிதத்திலும் தடையில்லா திருந்தது. அதனுலவன் அதிகமாய்க் கர்வித்துத் தனக்கெதிரொருவரு மில்லையென அடித்ததாட்டம் பிடித்தது பெண்டென்று ஓர் நாள் உல்லாசமாய் வெளியே உலாவச் சென்றுன்.

அப்பா கண்ணியவானே! விஜயபூபதி பலவீதிகளையும் கடந்து உலாவிவரும்போது விலையுயர்ந்த சேலையையும் நல்ல ஆபரணங்களையும் தரித்துக்கொண்டு, என்னைப் போன்ற வயதுசென்ற ஓர் கிழவியும், அவளுடன் மிகவும் சௌந்தரவதிகளாகிய சில கன்னிகைகள் தொடர்ந்துசெல்வதையுங்கண்டு ஆ! ஆ!! உலகசிருட்டியில் இப்போழகு

வாய்ந்த மங்கையரும் உளரோ? இல்லை, இல்லை, இவர்கள் தேவலோகத்துக் கன்னிகைகளா யிருத்தல் வேண்டும் என்று விஜயபூபதி தனக்குள் சிந்தித்து, அக்கிழவியை பணிகி அம்மா! உன்னுடன் தொடர்ந்துவரும் இவ்வழகிய மங்கைகள் யார்? இவர்களுடைய சௌந்தரியத்தைக் கண்ட என் கண்கள் இப்பிரபஞ்ச தோற்றங்களில் வேறொன்றிலும் செல்லவில்லை. காமப்பித்துக் கண்களைக் கப்பிக்கொண்டது. மேலும்,

ஒருகோட்டுக் கலைமுனியு மொளிதிகழும் புலியாடை
யுடுத்த கோவும்
மருமலர்வாழ் திசைமுகனும் வனவர்களுயகனு
மகிடன்றானும்
கருநிறத் திருமாலும் வாலியும் பராசரனுங்
காமனம் பால்
பெருமையிழந் தனரென்றால் சிறுமனிதர்க் கெப்படியோ
பேசுங் காலே.

என்றபடி, ஒற்றைகொம்பையுடைய கலைக்கோட்டு முனிவரும், பிரகாசம்பொருந்திய புலித்தோலை யாடையாகவுடைய சிவபெருமானும், வாசனைபொருந்திய தாமரை மலரில் வாழ்கின்ற பிரமனும், தேவராஜனாகிய இந்திரனும், மகிடாசுரனும், கருநிறத்தையுடைய திருமாலும், வாலியும் பராசரனும், காமன்பாணத்தால் தங்களது பெருமையை யிழந்தார்களென்றால் அற்பமனிதனாகிய நான் நிர்வகிக்க சாத்தியப்படுமோ? ஆதலால் அம்மா! சௌந்தரவதிகளாகிய இக்கன்னிகைகளில் ஒருத்தியை நான் அடையும்படி கிருபைசெய்யவேண்டும். அதற்காக எவ்வளவுபொருள் வேண்டியிருந்தாலும் நான் தர சித்தமாயிருக்கின்றேன்" என்றான். இதைக்கேட்ட கிழவி ஐயா! உமதிஷ்டப்படியே நீர் மோகங்கொண்ட இக்கன்னிகைகளி லொருத்

தியை உமக்குக்கொடுக்க நான் பிரியப்பட் டிருக்கின்றேன். ஆனால் இவர்களி லொருத்தியாவது உமதந்தஸ்திற்கும் கண்ணியத்திற்கும் ஏற்றவளல்ல. உமது முகவஜ்கரத்தால் நீர் ஓர் பெரியமனிதனு யிருக்கவேண்டுமென்று காணப்படுகிறபடியால் அதற்குத் தகுந்தபடி யல்லவோ கன்னிகையைத் தெரிந்தெடுக்க வேண்டும். குங்குமக் கோதைக்கு மஞ்சபணம் குருட்டுக் கன்னிகைக்கு மஞ்சபணமா? வென்ற வாக்கியத்தின்படி, உமது தாரதம்மிய மறியாமற் செய்வேனுகில் நானல்லவோ நிந்தனைக்குள்ளாவேன். ஆதலால் உமது கௌரவத்திற்கும் அந்தஸ்திற்கும் ஏற்ற சிறந்த அழகையுடைய அதி ரூபசவுந்தரிகளாகிய பாலியக்குமரிகள் கந்தர்வஸ்திரீகளுக் கொப்பாய் வச்சிரச் சித்திரப் பிரதிமையைப்போ லொருவரை யொருவர் மேற்கொண்ட பேரழகும், தேககாந்தியையுமுடைய பெண்கள் பலர் என்வீட்டி லிருக்கின்றனர். அவர்களை நீர் கண்டவுடன் மெய்மறந்து சொக்கி ஊசியுங் காந்தமும்போல் அவர்களாசையா லிழுக்கப்பட்டு உள்ளுடைந்து தயங்குவீர். நீர் இப்போது என்னுடன் வருவீராகில் அவர்களைக்கண்டு சந்தித்து உமதிஷ்டம்போல் ஓர் பூவையை மதித்தெடுத்துக் கொள்ளலாம்" என்றனள். விஜயபூபதியும் அதற்குச் சம்மதித்து அக்கிழவியைப் பின்பற்றிச் சென்றான்.

இப்படி இவர்கள் சில வீதிகளைக் கடந்து ஓர் அழகிய மாளிகையின் சமீபத்தில் வந்தவுடனே. கிழவி விஜயபூபதியைப் பார்த்து, "ஐயா! நீர் இங்கு சற்றுநேரம் தாமதிப்பீராகில் நான் மாளிகையினுட் சென்று சில நிமிஷங்களில் திரும்பிவந்து உம்மை யழைத்துக்கொண்டு போகின்றேன்" என்று சொல்லிப்போயினள். நெடுநேரம் காத்

திருந்தும் கிழவிவராமையால் விஜயபூபதி கலக்கங்கொண்டு தன் னிருப்பிடமே போய்ச் சேர வெண்ணங்கொண்டிருந்தான். ஆனல் அத்தருணத்தில் கிழவியும், தன் கையிலொரு மூட்டையைத் தாங்கிய ஓர் கன்னிகையும் விஜயபூபதியினிடம் வந்து அவனைப் பார்த்து "ஐயா! நாங்கள் மிக்க கவுரவத்துடனும் உயர்ந்த அந்தஸ்துடனும் இருப்பவர்களாதலால் எங்கள் மாளிகையில் அன்னிய ஆடவர்கள் வரலாகாது. ஆனதால் எங்களைப்போல உமக்கும் ஸ்திரீவேஷந்தரித்து எங்கள் அந்தபுரத்திற்குக் கூட்டிப்போக வெண்ணி, ஸ்திரீக ளுடுத்திக்கொள்ளும் ஆடைகளை இதோ மூட்டையாகக் கட்டிக்கொண்டு வந்தோம். அவைகளை நீர் உடுத்திக்கொண்டு ஸ்திரீகோலமாகவே என் பின்னேடேவாரும். நான் உம்மை இவ்விதம் செய்யச்சொன்னதற்காக நீர் ஆயாசப்படாமல் வேஷமாறி வரவேண்டியதே எங்களுடைய சம்மதமென்று தன்னபிப்பிராயத்தை வெளியிட்டனள்.

"பைந்தொடியா ராசைநோய் காம்பீர மனிதரையும்
 பதுமக் தன்னை
முந்நிரவி கதிர்போல மிளிர்விக்குங் கனவிடியு
 முனைக்கூர் வாளும்
வெந்தவிருப்புப் பொறியுமெனக் கொடியமன வேட்கை
 மேரு வொத்த
சுந்தரஞானியர் தீரர் சூரரையெல் லாமிமைப்பிற்
 றரும்பு செய்யம்."

என்றபடி, காமத்தினல் கலக்கமடைந்த விஜயபூபதி, அக்கிழவியின் கட்டளைக் கமைந்துக் கிழவியைப் பார்த்து, "அம்மா! நீ என்மேல் கிருபைவைத்துக் கட்டளையிடுவதெதுவோ அவைகளனைத்தையும் தகுதியென்றே நான் எண்ணிக்கொண்டிருப்பதால் உன்னுடைய இஷ்டத்தின்

படியே இச்சேலையை யுடுத்திக்கொள்ளுகிறே னென்று ஸ்திரீயைப்போல் அந்த சேலையை யுடுத்திக்கொண்டு முகத்தை மறைத்தவண்ணம் கிழவியைப் பின்பற்றிச் சென்று தான் எப்போதும் பார்த்திராத அவ்வளவு அலங் காரமுடைய மாளிகையின் கூடத்தில் வந்து சேர்ந்தான். அக்கூடத்தின் கட்டட விநோதமும், அங்கு அநேக சூரியர்கள் உதயமானாற்போல சுடர்விட்டெரிகிற தீபங் களின் வரிசைகளையும், சுவர்முழுதும் நிறைந்திருக்கின்ற நிலைக்கண்ணாடிகளையும், விதம்விதமான சித்திரப்படங்களை யும், வீணை, தம்புரு, மிருதங்கம் முதலிய பற்பல வாத்தி யக்கருவிகளையும், இந்திரவிமானம்போல் நவரத்னமய மாய்ப் பிரகாசிக்கின்ற உன்னதமாகிய சப்ரகோள மஞ் சத்தையும், அதைச்சுற்றிலும் கட்டியிருக்கும் பல வர்ண ஜாலர்களையும், அதன் சமீபத்தில் வைக்கப்பட்டிருக்கும் விதம்விதமான பலகாரங்களையும், மிகவும் அழகிய கிண் ணங்களில் அத்தர் புனுகு ஜவ்வாது கலந்து குழைத்து வார்த்துவைத் திருப்பதையும், இன்னும் மற்றுமுள்ள விசேஷ விசித்திரங்களையும் பார்த்து ஆ! ஆ!! இதென்ன வதிசயம், இஃதோர் விருந்து மண்டபமாகத்தானிருக்க வேண்டுமென்று தனக்குள் நினைத்துக்கொண்டு, சித்திரப் பிரதமைபோல் நிலைபெயராமல் இருந்தவிடத்திலேயே நின்றுகொண் டிருக்கையில், ஓர் பாலியப்பெண் மலர் முகத்துடன் குறுநகைகொண்டு விஜயபூபதியைக் கிட்டிச் சேர்ந்து, அவனுக்கு வந்தனஞ்செய்து நின்றாள். விஜய பூபதியும் அவளுக்குப் பிரதி வந்தனம்செய்து அவளைப் பார்த்தக்கண் வாங்காமலிருக்க அம்மாதுசிரோமணி அவ னது கையைப்பிடித் தழைத்துக் கொண்டுபோய் பொற் சரிகை வேலையினால் சித்திரித்திராநின்ற சோபாவின்மீது அமரும்படிச் செய்தனள்.

அவன் சோபாவின் மீது உட்கார்ந்தவுடன், அக்கன்னிகை தன் கையிலிருந்த கைக்குட்டையினால் அவனது முகத்தைத்துடைத்து அவளது சரசசல்லாப செயல்களினால் அவனை பிரமிக்கச்செய்தனள். இவளது சரசசல்லாப விளையாட்டினால் விஜயபூபதி மயங்கித் தயங்கி மதியழிந்து மட்டில்லா விரகங்கொண்டவனாய், அவள்மீதுவைத்த மையல் மண்டைக்கேறி அவளது மோகப்பார்வையால் மோகசன்னதங்கொண்டு விரகதாபப்பட்டு அவளையே தனக்குப் பாரியாளாக கருத்துக்கொண் டிருக்கையில். இவளைப்பார்க்கிலும் மதிரூபவதியாகிய வேறொரு பாலிய ஸ்திரீ விலையுயர்ந்த பட்டாடைகளையும் ஆபரணங்களையும் அணிந்துக்கொண்டு, விஜயபூபதிக்குமுன் மிகுந்த ஒய்யாரமாய்வந்து அவனுடைய கைகளைத் தனது கரத்தால்பிடித்தெடுத்து முத்தமிட்டனள். அவளது பேரழகின் சௌந்தரியத்தினால் விஜயபூபதியின் புத்தி சிதறி, நின்றநிலை தடுமாறி, விரகதாபத்தால் வெந்து வலியவந் திவ்வித சரசஞ்செய்வதும் என்னதிர்ஷ்டவசமே யென்று அவள் மீது வைத்தகண் வாங்காமல் மன்மதபாணத்தால் நொந்து தத்தளித்துத் தடுமாறி அவளது வச்சிரபிரதமைக்கொத்த ஜோதிப்பிரகாசத்தால் சொக்கி தானே வலிய அவள் காலில்விழுந்து சாஷ்டாங்க தண்டம்சமர்ப்பித்து அவள் தன்னை கடைக்கண்கொண்டு பார்க்கும்படி விவேகம் முழுதிலுமற்ற பயித்தியக்காரனைப்போல் எழுந்து அவள் சமீபம்போக எத்தனித்தான்.

அப்போது, சில பாலியக்கன்னிகைகள் ஒன்றாக சேர்ந்துவரும் கூட்டத்தில் ஒருத்தியைவிட மற்றொருத்தியின்சௌந்தரியம்அதிகமாயிருப்பதால்அவர்களைப்பார்க்க விஜயபூபதியின் கண்கள் மருண்டு காமாந்தகாரனாய் ஒன்

றும் தோன்றாமல் இவ்வித அழகிகளும் உலகசிருஷ்டியி லுண்டோவென்று பிரமித்து நின்றான். தேவேந்திரனுடைய மனைவியாகிய இந்திராணியைப்போல் சௌந்தரமுடைய ஒருபெண் திவ்யமான வஸ்திராபரணங்களால் தன்னை யலங்கரித்துக்கொண்டு சுகந்த சந்தனாதி பரிமள திரவியங்களைத்தரித்து வெகுதூரம் குமுகுமென்று மணக்கின்ற மலர்மாலைசூடிய கரியநிறத்தையுடைய கூந்தலுடன் ஒயிலாக நடந்துவரும் மற்றோர் கன்னியினழகு விஜய பூபதியின் கண்கள்ஜொலித்துக் கோடிசூரியப் பிரகாசத்தையும், நட்சத்திரங்கள்சூழ்ந்த சந்திரனையும் பழிக்கும் அவளுடைய முகவஜீகரத்தையும், தேககாந்தியையும், தன திருக்கண்ணினாலும் பார்க்கக்கூடாமல் கண்ணொளி மழுங்கிப்போனதால், தன்னைச் சற்று சுதாரித்துக்கொண்டு இவளுடைய பேரழகு என்னைக் கொள்ளைகொண்டு இவளுக்கு நான் அடிமையாகவல்லோ செய்கின்றது, இவள் தேவகன்னிகையோ அப்சரஸ்திரீயோவென்று ஐயுற்று அவளைப் பார்த்தவண்ணம் கண்ணிமைக் கொட்டாமல் நின்றுகொண்டிருந்து பிறகு அவளுடைய இணையற்ற வடிவழகின் காந்தியினால்,

" நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த பெரியோர்க
ணிமலன் றாளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும் பெரியசுகம்
கிடைக்குங் காம
வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு மணம்பேசி
விரும்பித் தாலிக்
கட்டையிலே தொடுத்தூடுக் கட்டையிலே கடத்துமட்டுங்
கவலை தானே."

என்றபடி, அதிக கவலைக்குள்ளாகி ஸ்மரணையற்று மூர்ச்சித்துக் கீழேவிழுந்து புரண்டான். உடனே சமீபத்தி

யிருந்த வச்சிரப்பிரதமைபோன்ற சிற்றிடைப்பெண்கள் துடித்துப் பதைத்துத் தத்தளித்தவர்களாயோடி விஜய பூபதியைத் தூக்கியெடுத்து மார்போடணைத்து அவனு டைய மூர்ச்சையைத்தேற்றி வந்தார்கள். அங்கிருந்த சௌந்தரவதி விஜயபூபதியைப்பார்த்து,புன்னகைகொண்டு "பெண்கள்வலையிற் சிக்கிக்கொண்டு பரிதவிக்கும் பேதாய்! நீ சோகப்படுவதைவிட்டு திடசித்தத்துடனிரு; காமபா ணத்தினால் கலங்காதே" என்று வைக்கற்கட்டுக்காரனை ஒக்கக்கட்டி யழுவதைப்போல் தேறுதல் செய்தனள்.

பிறகு அம்மாதுசிரோமணி தன் பரிவாரத்துடன் விஜயபூபதியை அழைத்துக்கொண்டுபோய் மகா நேர்த்தி யாய் ஜோடித்திராநின்ற விருந்துமண்டபத்தில் உட்கார வைத்துப் பலவித தின்பண்டங்களை யவனுக்குப் பரிமாரித் தானும் தன்னுடனிருக்கும் பாலியப்பெண்களும், அவனைச் சுற்றிலும் உட்கார்ந்து உணவருந்த வாரம்பித்தனர். விஜய பூபதி தன்னைச்சுற்றிலும் அவ்வழகிய மாதர்கள் புடை சூழ உட்கார்ந்திருப்பதையும் ஒய்யாரமாய் அவர்கள் குளிர்ந்தபார்வையுடன் உணவருந்துவதையுங்கண்டு, அவர் களின்மேல்கொண்ட காதல்மிகுதியும் அதிகரித்து மன்மத பாதையால் மனங்குழைந்து எட்டாப் பழத்திற்குக் கொட் டாவி விட்டவனைப்போல், காமக்குரோதாதி புலன்கள் ஒன்றாய்ச்சேர்ந்து விரகதாபத்தை விருத்தியாக்குவதால் பதட்டமாய் ஏதாவது செய்யத்துணிந்தால் என்னகெடுதி சம்பவிக்குமோ வென்று அஞ்சி, தனக்குப் பரிமாரப் பட்ட பதார்த்தங்களை புசிப்பவனைப்போல் பாவனைசெய்து அவர்களுடன் தானும் போஜனமுடித்துக் கைகளை அலம் பிக்கொண்டவுடன், அம்மாதர்கள் ஒன்றுசேரப் புடை சூழ்ந்து விஜயபூபதிக்குக் காமப்பித்தையே அதிகமாய்

விளைத்து, அவனது கையைப்பிடித் தழைத்துக்கொண்டு போய் ஓர் அலங்காரமண்டபத்தில் அமரச்செய்தனர் பிறகு அம்மாதர்களனைவரும் ஒன்றுசேர்ந்து நாட்டிய மாடி வீணைகள்மீட்டி மிருதங்கம் சுதிகூட்டி பற்பல இராகங்களில் விஜயபூபதியின் காதல் அதிகரித்துப் பித்தேறும் வண்ணம் பாடிக்கொண்டிருந்தனர். அச்சமயத்தில் அக்கூட்டத்திலிருந்த சௌந்தரவதி பொட்டென்றெழுந்து விஜயபூபதி களித்துப் பூரித்துக் காமாதுரனுய் சன்னதங் கொண்டாடநினைத்து வீணை, தம்புரு, மிருதங்கம் முதலாகிய பற்பல வாத்தியங்களைக்கொண்டு ஒவ்வொரு வாத்தியங்களாய்ச் சுதிகூட்டி வினோதார்த்தமாகிய இராகங்களிலாலாபித்துப் பாடி விஜயபூபதியை உல்லாசப்படுத்திக் கொண்டே வந்தனள்.

இவ்வித ஆடல்பாடல்களில் களித்திருந்த விஜயபூபதி மட்டடங்காத காமாந்தகாரனுக மருண்டு மதிமயங்கி "ஆ! ஆ!! இவ்வித சௌந்தரிகளின் ஆடல்பாடல்களையும் அவர்களுடைய இணையற்ற அழகையும்கண்ட எவர்தான் மையல்கொள்ளாம லிருக்கமாட்டார்கள். இதனாலன்றோ,

"வாசவனும் பிறர்நகைக்க வுடலெடுத்தா னொருவனரா
வடிவமானுன்
தேயுபுகழ்க் கலைமதியும் உடலிழந்தான் மலர்வேதன்
சிரமொன் றற்றான்
ஈசனுதல் விழிதிறந்தா னிராவண சுந்தோபசுந்த
ரிறந்தார் மண்மேல்
காசினிப்புன் மானிடரோ மோகசா கரமதனைக்
கடக்க வல்லார்."

அதாவது, தேவேந்திரனும் பிறர்நகைக்க உடல்முழுதும் யோனிக்கண்க ளமையப்பெற்றான், ஒருவன் பாம்புருவ

மானுன், பிரகாசமும் கீர்த்தியும் உள்ள கலைகளையுடைய சந்திரனும் உடல்தேய்ந்தான், பிரமன் ஒரு தலையை இழந்தான், சிவன் நெற்றிக்கண்ணைத் திறந்தான், இராவண சுந்தோப சுந்தரர்கள் இறந்தார்கள். இவ்விதமிருக்க மண்ணுலகமாகிய இந்த உலகத்தில் வாழும் அற்ப மானிடரோ மோகமாகிய சமுத்திரத்தை நீந்தவல்லார். தபோமகிமை, சாபானுக்கிரக சாமர்த்தியம், அஷ்டாங்கயோகம், அஷ்டமாசித்தி முதலாகச் சொல்லிமுடியாத வல்லமைகளையெல்லாம் நீறுபூத்த நெருப்புப்போலவும், கரித்துணியில் முடிந்த மாணிக்கம்போலவும் புறத்தில் தோன்றுமலடக்கி, கோபமாகிய நெருப்பை மூண்டெழவொட்டாமல் கிருபையாகிய நீரினல் அவித்து, சாந்தத்தையே மேற்கொண்ட பரம சாதுக்களாயிருப்பவர்கள் முதலாய் இம்மாதர்களைக் கண்டவுனே இச்சைகொள்ளா திருப்பார்களா? கட்டுப்பட்டாலும் கவரிமான் மயிரால் கட்டுப்படவேண்டும், குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும் யென்னும் முதுமொழி யிருக்கிறதல்லவா? மடிந்தாலும் இந்த சௌந்தரவதியால் மடியவேண்டும் என்று நிச்சயித்துக்கொண்டு, அக்கன்னிகா ரத்தினத்தை நோக்கி, "ஆ! என் அன்புக்கிசைந்த நேசியே! என் மனதைமுற்றிலும் கவர்ந்து என் கண்களை மருட்டின கண்ணாட்டி! இப்போது உன் மையலில் சொக்கி மதியிழந்தவனு யிருக்கின்றேன். என் புத்தியில் உன்னைவிட வேறு நினைப்பொன்றையும் சுவாதினப்படுத்த ஏதுவில்லாமல் விடாய்த்திருக்கின்றேன். என்னுடைய களையும், சோபமும், உன்னின்ப சுகானுபவங்களாகிய உனது அமிர்த விதழ்ப்பானம் பண்ணினலல்லாமல் நீங்காது. உன்னை மருவாவிடில் நான் உயிரிழப்பது உண்மையென்று சுத்த பித்தன்போலப் பிதற்றி, அவளது கையைப் பிடித்திழுத்தான்.

விஜயபூபதிசெய்த இத்துணிகரமான செய்கையானது அவ்வடிவழகியின் மனதில் ஓர் அம்புதைத்து ஊடுருவினதுபோ லிருந்தமையால் அவளது அனுமதியின்றி அவன்செய்த கொடூர சேஷ்டைக்காகக் கடிந்துக்கொண்டு அவனைநோக்கி, "நீ எவ்வித அந்தஸ்துள்ளவனா யிருந்த போதிலும் இப்படி நீ செய்யத்துணிந்த தடுக்குமா? நான் கற்பழியா கன்னியாயிருக்க, என் கற்பைக் கலைக்கும் வண்ணம் என் கையைப்பற்றி யிழுக்கலாமா? என்னோடிஷ்டம் பெற நீ கனவிலும் நினைக்கலாமா?

"அத்தி மலரும் அருங்காக்கை வெண்ணிறமும்
கத்துபுன மீன்பதமுங் கண்டாலும்—பித்தரே
காணார்தெரியற் கடவுளரும் காண்பரோ
மாணார் விழியார் மனம்."

என்று நூற்கள் முறையிடுவதை நீ யுணராமல் பெண்களின் மர்மத்தைப் பேதையாகிய நீ இவ்வளவு சீக்கிரத்தில் அறிந்துக்கொண்டாயா? நீராழங் கண்டாலும் பெண்களின் நெஞ்சாழங் காண்பதரிது என்னும் சாதாரண வழக்கச்சொல்லையும் மறந்து, உன்னுடைய அவிவேகத்தால் உன் மரியாதையைக் கடந்து நடக்கலாமா? அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமல்லவா? நீ உனது மரியாதையைக் காப்பாற்றாமல் துஷ்டகாரியத்திற் குடன்பட்டமையால் இனி நீ என் முகத்தை ஒருபோதும் காணமாட்டாயென்று சொல்லி, அதிக கோபத்துடன் அவ்விடத்தை விட்டு நீங்கினாள். அவ்வழகியுடனிருந்த மற்றக் கன்னியர்களும் விஜயபூபதியைத் தனித்தவனாய் அங்குவிட்டுச் சென்றனர்.

அப்பா! தயாபரசுந்தரியின்மேல் காதலாகி அவளைக் கைப்பற்ற விரும்பிய கண்ணியவானே! விஜயபூபதியின் நிலைமை இப்போது எப்படியிருக்குமென்பதை நான் தெரி

சிக்கவேண்டியதில்லை. தையலின் மையலில் சிக்கிய அவன் கதி என்னமாயிற்றென்பதை உமக்கு விசிதமாகச் சொல்லுகின்றேன், அதைக் கவனமாய்க் கேட்ட பின்பாகிலும் நீர் தயாபரசுந்தரியின்மேல் வைத்த நினைவை யொழித்துச் சுகப்பட வேண்டுகின்றேன்.

மதன காமாதுர வின்பத்திற் சிக்குண்ட விஜயபூபதியை, அந்த மனோரம்மிய மாதர்கள் விட்டுப் பிரிந்தவுடன் அவன் தனியாக அவ்விடத்தில் அதிக மனோ துக்கங்கொண்டு, தான் துணிந்துசெய்த காரியத்திற்காகமனம் வருந்தி, தான் மோகித்துப் போகிக்க விரும்பின மாதின் மனம் புண்ணாகச் செய்த தன் கொடூர செய்கைக்காக அவள் என்னசெய்வாளோவென்று ஏக்கமுற்று, பெண்கள் மர்மம் தெரியாமல் எக்காரியமும் துணிந்து செய்யலாகாதென்பதை யுணராமல் கைபதட்டமாக அவ்வழகியின் மனம் நோகும்படி செய்ததற்காக அம்மாது தன்மேல்சீற்றங்கொண்டு என்ன தண்டனைகள் செய்வாளோவென்று பலவாறாய்ப் பிரலாபித்துப் புலம்பி மனோவிசாரம் பிடித்துக்கொண்டு, இருந்தவிடத்தைவிட் டகலாமலிருந்தான். அச்சமயத்தில் முன் விஜயபூபதியை இங்கழைத்து வந்துவிட்ட கிழவி அவ்விடம்வந்து அவனைப்பார்த்து, "அப்பா! தயாளகுண சீலனே! நீ என்னகாரியம் செய்தாய்?

"பெண்ணொருத்திப் பேசிற் பெரும்பூமி தானதிரு
பெண்ணிருவர் பேசில் விழும்வான்மீன்கள்—பெண்மூவர்
பேசில் அலைசுவறும் பேதையே பெண்பலர்தாம்
பேசிலுல கென்னுமோ பின்."

என்றதை யுணராமல், மாதர்கூட்டத்தில் மதியிழந்து உன்னைக்கோர் எல்லையில்லை யென்னும்படியாய் அத்துமீறின துஷ்டச்செய்கைக்கு உட்படலாமா? நீராழங்கண்டல்லோ

நீந்தவேண்டும். இங்கிருக்கும் மாதர் கூட்டத்திலோர் மங்கையைத் தெரிந்தெடுத்து, எஜமானியாகிய அவ்வழகியின் அநுமதியின் பேரில் நீ விவாகஞ் செய்துக் கொள்ளுவாயென்றல்லவோ நான் உன்னை யிங்கழைத்து வந்தேன். அரசர்கள் மெச்சத்தக்க பிரபு ஸ்தானத்தைச் சேர்ந்த யௌவனக் கன்னிகையைக் கண்டு மையல் கொண்டு போகிக்க விரும்பும் துஷ்டகாரியத்திற்காக நான் உன்னை இங்கழைத்து வந்தவளேயல்ல. இதனால் என்னையும் குற்றவாளியாக்கி, உன்னைப்புகழ்ந்து பேசியதற்காக அவமானப் படச் செய்துவைத்தாய். நீ இவ்வலங்கார மாளிகையைப் பார்த்தவுடன் எவ்வித அந்தஸ்துள்ளவர்கள் இதில் வசிப்பார்களென்பதை யுணரவில்லையா? இதில் வசிக்கும் பாலியக் கன்னியாகிய **மனோகரி** என்பவள் இந்நகர சமஸ்தானத்துப் பிரபுவின் புத்திரியாயும், மனிதரைச் சிறைப்படுத்தும் கண்களால் மருட்டி மதியாசைக் கொள்ளச் செய்பவளுமா யிருக்கின்றாள். நீயோ அவளது குணத்தை யறியாமல் அவளுடைய பேரழகினால் மதிமயங்கி பதட்டமாக அவளது கையைப்பிடித்தமையால் நீமரியாதையற்ற சாதாரண மனிதனென்று நினைத்து, வெறுப்புற்று இவ்விடத்தை விட் டகன்றனள். பதருதகாரியம் சிதருதென்றபடி. நீ அவளுடன் மரியாதையாய் நடந்து, அவளுடைய அழகினால் மதியழிந்துபோகாமலிருந்து, காரியத்தின் முடிவு எப்படியாகுமென்று சற்றுப் பொறுத்திராமல் உன்னுடைய பேதமையால் அவளது மையலில்சொக்கிப்போனமையால் நீ யோக்கியனல்லவென்று உன்னைவிட்டுப் பிரிந்தனள்; இனி என்னசெய்வது என்றனள். இவ் வசனங்களைச்செவியுற்ற விஜயபூபதி, திடுக்கிட்ட மனத்தனாய் அதிக விசனத்துடன் கிழவியை நோக்கி, "அம்மா! நான் என்னறியாமை

யால் செய்த பிழையைப் பொறுத்து என்மேல் இரக்கம் வைக்கும்படி சற்று என் விஷயத்தில் சிரத்தை யெடுத்துக் கொள்ளுமாறு உன்னை வேண்டுகின்றேன். என் முகத்தை இனி பார்ப்பதில்லையென்று சபதம் செய்துப்போன அம்மாதின் கடுஞ்சினத்தை மாற்றி, என்னை மற்றொருமுறைக் காணும்படிச் செய்வையாகில் மெத்தப் பேருபகாரமாக விருக்கும். இப்படிச் செய்வதற்காக நான் மிக்க நன்றியுள்ளவனும் தக்கபடி நடந்துக்கொள்பவனுகவும் இருப்பேன்"என்றுன்.

விஜயபூபதி படும் கஷ்டத்தைப் பார்த்த கிழவி, காலதாமதம்பண்ணுமல் விரைந்து, வடிவழகியிருக்கும் அறைக்குட் பிரவேசித்து அவளை நோக்கி. "அம்மா! மனேகரி! விஜயபூபதி ஏதோ தனது பாலிய சேஷ்டையினுல் செய்த குற்றத்தை மன்னித்து, இம்முறைமாத்திரம் அவன்மீதில் தயாதிருஷ்டி வைக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டனள். 'மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்' என்று கிழவியின் அபீஷ்டத்தின்படியே மனேகரி, மனேகரபால்யனுகிய விஜயபூபதியைக் காணும்படி அதிக தீவிரமாகத் தனது பரிவாரத்துடன் விஜயபூபதியிருக்கும் சாலைக்குட் சென்று அவனைப் பார்த்து நகைத்து, "ஓ பாலியனே! இனி நீ முன்போல் துணிந்து செய்த துராக்கிரமமான காரியத்தை மறிபடியும் செய்யமாட்டாயென்று நம்புகின்றேன். எண்ணிச் செய்கிறவன் செட்டி, எண்ணுமற் செய்கிறவன் மட்டி என்றதை யுணராமல் வீண் எண்ணங்கொள்வதினுல் என்ன பிரயோஜனம். நீ என்னிடம் கௌரவமாக நடந்துக்கொள்வையாகில் உன்னிடத்தில் நெருங்கி வார்த்தையாடச் சம்மதிப்பேன். தவிர உனது அந்தஸ்தும், உனது ஊர், பெயர் முதலியவைகளையறிய நான் விரும்புகின்றேன்

என்றனள். இதைக்கேட்ட விஜயபூபதி, மிகுந்த சந்தோஷமடைந்து அம்மாதை நோக்கித் தன் பெயர் விஜயபூபதி யென்றும், தான் இந் நாட்டரசனுக்கு அந்தரிய சிநேகனும் இராஜயோக்கியத்துக்கடுத்த மேரை மரியாதையுடன் அபிமானிக்கப்பட்டு அரசசமுகத்திலிருந்து இவ்விராச்சியத்திற்றனே வசிக்கிறவனென்றும், தன்னூர்பெயர் முதலியவைகளை யுள்ளதுள்ளபடி யெடுத்துக் கூறினன். அதற்கு மனோகரி, "ஐயா! நீர் இவ்வித அந்தஸ்துள்ளவரென்று நானறியேன். ஆனாலும் உமதுபேர் பிரஸ்தாப கௌரவங்களைப்பற்றி நான் வெகுநாட்களுக்கு முன்னமேயே விசிதமாய்க் கேள்விப்பட்டிருக்கின்றேன். இனி உமது சவிஸ்தாரத்தை விரித்துரைக்கவேண்டிய அவசியமில்லை. இப்போது உம்மைப்பற்றி எனக்கு செம்மையாய்த் தெரியவந்தமையால் உம்மை மற்றோர்முறை அவசியம் கண்டு உமது அந்தஸ்திற்குத் தக்க மரியாதைசெய்து, உம்மைச் சந்தோஷப்படுத்த ஆவல்கொண்டிருக்கின்றேன்" என்று சொல்லித் தன்னுடனிருக்கும் பளிங்குபோல மைதீட்டிய கண்ணொளிபாயும் கன்னிகைகளை நோக்கி, விஜயபூபதி சந்தோஷசாகரத்தி லாழ்ந்தி பரவசமாகும்படிப் பாடியாட ஆக்ஞாபித்தனள். அன்னநடையொத்த அம் மாதுகூட்டங்கள் ஆடையாபரணாலங்கிருதர்களாயணிவகுத்துநின்று வீணையைக் கரங்களிலேந்தி நவமான ஆடல்பாடல், கூத்து கேளிக்கைகளினால் விஜயபூபதி தன்னை மறந்து பரவசமடைந்துபோகும்படி நடித்து நொடித்துப் பாவனை செய்தார்கள். பின்பு மாலைப்பொழுது இருட்டு கப்பிக்கொண்டதால் அம் மங்கையர்களனைவரும் பற்பலவறைகளுக்கோடி, அங்கு சித்தப்படுத்தியிருந்த லஸ்தர் குளோப்புகளுக்கு வத்திகள் கொளுத்தித் தீபப்பிரகாசம் பண்ணவும்,

இராச்சாப்பாடு சித்தப்படுத்தவும் துரிதப்பட்டுச் சென்ற னர். இச்சமயம் வடிவழகியாகிய மனோகரிக்கு தனித்த சாவகாசகாலமாயிருந்தபடியால் விஜயபூபதியைப்பார்த்து, "ஐயா ! நீர் எப்போதும் ஜெயபால மகாராஜாவின் சமஸ் தானத்தில் அவருடைய பிரியா நண்பராயிருக்கிறபடியால் அரண்மனையி னந்தப்புரத்தில் வசிக்கும் ஸ்திரீகளை நீர் பார்த்திருக்கலாம். அங்கிருக்கும் பாலிப ஸ்திரீகளில், மனிதர் மனதைக் கவரும் பேரழகுடைய யௌவன ஸ்திரீ களும் உளரோ வென்றனள். அதற்கு விஜயபூபதி மாறுத் தரமாக "ஆம், அந்தப்புரத்தில் மிகவும் பேரழகுபடைத்த பாலியப்பெண்கள் அநேகரிருக்கின்றனர். ஆனால் அவர் கள் எல்லோரைப்பார்க்கிலும் **காந்தாமணி** என்னும் இராஜ பத்தினிதான் மிகுந்த பேரழகியாகவும், சந்திரபிம்பத்தை யொத்த முகவஜ்கரமும், சூரியனொளிபோன்ற தேககாந்தி யும், அன்னத்தைப் பழிக்கும் நடையழகும் வாய்க்கப் பெற்று அரசனைத் தன் சௌந்தரிய வழகில் சிக்குப்படுத் திக்கொண்ட அதிரூபவதியா யிருக்கின்றனள். அரசனும் அவளது யௌவன சுந்தர வடிவில் மதிமருண்டு மயங்கி, அவளுக்குச் சமமான ரூபவதி உலகத்தில் எத்திசையிலும் காண்பதற்கரிதென்று தீர்மானித்துக்கொண்டு, அவளையே தனக்குப் பட்டத்தரசியாக்கி யிருக்கின்றார். நானும் உன் னைப் பாராதிருந்து, அவ்வரசியையே பார்த்திருப்பேனுகில் அவளுக்குச் சமானமான ரூபவதி இப்பூமண்டலத்தில் எங் கும் காண்பதரிதென்றே எண்ணியிருப்பேன். ஆனால் உன் னைக்கண்ட என் கண்கள் உன் அழகின் பிரகாசத்தால் தியங்கி என்னையே நான் சுவாதீனப் படுத்திக்கொள்ள ஹேதுவில்லாமல் இருக்கின்றேன். உலகத்தில் புகழ்ந்து கொண்டாடும் பட்டமஸ்திரீகள், தெய்வகன்னிகைகள் முத

லானவர்களைவிட அழகில் நீ மேம்பட்டிருப்பதால் உன்னைக் காட்டிலும் அழகிலும் மிகுரப்பட்டவர்கள் உலகத்திலுண்டோ" என்றனன். மனோகரி இயற்கையாகவே ஸ்தோத்திரப் பிரீதியுள்ளவளும், தற்புகழ்ச்சிக்காரியுமானதால் விஜயபூபதியுரைத்த வார்த்தைகளால் சந்தோஷித்து, அவன்மீதில் அத்தியந்தநேசம் பாராட்டிக்கொண்டேயிருந்தனள்.

அப்பா! இதுவரையில் நான் சொல்லிவந்த மனோகரி என்பவள் இவ்வித உல்லாசத்தில் தன் காலத்தைக்கழித்து வரும் காரணம் யாதெனில், இந்த அதிரூபவதி அரசசமஸ்தானத்தைச் சேர்ந்த மந்திரிகளி லொருவராகிய புவனகேது என்பவருடைய ஏகபுத்திரி. இவள் தன் தந்தை இல்லாத காலங்களில் இவ்வித உல்லாசத்தையே விரும்பி நிஷ்கபடமாய் துர் எண்ணங்களின்றி தன்னுடனிருக்கும் அழகிய பாங்கிப்பெண்களுடன் ஆடவர் நடுவில் ஆடல் பாடல்களுடன் விளையாடிவருவதே இவளுக்கோர் வழக்கமா யிருந்தது. தவிர, பாலியர்களுடன் விருந்துண்டு அப்பாலியர்கள் விரகங்கொள்ளும்படியாய் ஆடல் பாடல் வேடிக்கை விநோதங்களைச் செய்து அவர்களில் எவனுகிலும் காமாந்தகாரனாய்ச் சொக்கிப்போய் ஏதாகிலும் துர்நடத்தைக்காக எத்தனிப்பானுகில், அப்படிப்பட்டவனைக் கடிந்து, தக்கபடி தண்டித்து விரட்டிவிடுவது இவளது வழக்கமா யிருந்தது. ஆனல் விஜயபூபதி, பட்டமஹிஷியைப் பார்க்கிலும் இவளது அழகு மெச்சத்தக்கதென்று சொன்னமையால் மனோகரி இவன் விஷயத்தில் விசுவாசம் பாராட்டி, அவனுடன் வேடிக்கையும் விந்தையுமாகிய பற்பல காரியங்களைக் குறித்து வார்த்தையாடி அவனைக் களிக்கச் செய்துக்கொண்டு வந்தனள்.

மனோகரி, இவ்விதமாய் விஜயபூபதியினிடம் அன்னி யோன்னியமாய் வார்த்தையாடும் புத்திநுட்பத்தையும் அவளது சோதிப்பிரகாச ஒப்பற்ற சுந்தரத்தையும் அவன் கண்டு காமாந்தகாரத்தில் மூழ்கி, பழையகுருடி கதவைத் திறடி என்பதைப்போல பழையபடியே அவள்மீதி லதிக காதல்கொண்டு, அவளை நோக்கி. "சுந்தரவதி! நான் உன் னுடன் நூறுவருடங்கள் நேசித்திருப்பினும் ஒரு கணப் பொழுதாகிலும் உன்னைப் பிரிந்திருக்கச் சகியேன். நான் உன்மேல்கொண்ட காதலால் என் மதியிழந்து ஏதாகிலும் அக்கிரமமான வார்த்தைகள் பேசியிருந்தால் அதற்காக என்னை மன்னித்து நாளைபதினமும் நான் உன்னை வந்து ஆனந்திக்கும் பாக்கியத்தை யளிக்கவேண்டும்" என்றான். மனோகரி, அவன் சொல்லியதற்குச் சம்மதித்தவளாய் அவனை நோக்கி, "நீர் எப்பொழுதும் இவ்விடம் வரத் தடையொன்றுமில்லை. இன்று நெடுநேரம் நாம் வார்த்தை யாடிக்கொண் டிருந்தமையால் நான்போய்ச் சயனித்துக் கொள்ளுகின்றேன், நீரும் உமதிருப்பிடம் சென்றுநாளைய தினம் வந்தால் உம்மைக் களிக்கச்செய்கின்றேன், என்று தனது விரலிலணிந்திருந்த ஓர் விலையேறப் பெற்ற மோதி ரத்தை யவனுக்கு வெகுமதியாக வளித்து விடையளித்த னள்.

விஜயபூபதி மிகவும் சந்தோஷமடைந்து மிகுந்த உப சாரத்துடன் தனது காதலியளித்த வெகுமதியைப் பெற் றுக்கொண்டு அவளுக்குப் பிரதிவந்தனஞ் செய்து, தானி ருந்த விடத்தைவிட்டு வெளிவந்தான். தன்னை முன்கூட்டி வந்துவிட்ட கிழவி அவனை யழைத்துக்கொண்டுபோய் அரண்மனைக்குப் போகும்வழியைக் காட்டிவிட்டுத் திரும் பிப் போய்விட்டாள். விஜயபூபதி, அரண்மனையடைந்து,

தன் படுக்கையறையில் சயனித்துக்கொண்டு, அன்றிரவெல்லாம் மனோகரியின் மையலினால் படுக்கையிற் பாம்பாய்ப் புறண்டு நித்திரையின்றி அவ்விரவைக்கழித்துப் பொழுது புலர்ந்ததும் அரசனவையையணுகினான். தன் தோழனாகிய விஜயபூபதி ஒருநாள் முழுதும் காணாத சோபத்தினால்விசாரத்துடனிருந்த ஜெயபாலராஜன் விஜயபூபதி வருவதைக் கண்டு சந்தோஷமடைந்து, அவனைப் பார்த்து, "நண்பா! நேற்றுமுழுதும் நீர் என் சமுகத்தின்முன்னிராமல் போன காரணந்தானென்ன ? உமக்கு என்ன சம்பவித்தது ? நீர் எங்கு சென்றிருந்தீர்?" என்றானன். விஜயபூபதி அரசனை நோக்கி, "ஐயா ! நேற்று நான் போயிருந்த இடத்தில் கண்டு களித்த காரியங்களின் வியப்பைச் சொல்லத்தரமல்ல. அதை நீர் நேரில் பார்த்திருப்பீரானால் மறுபடியும் அவ்விடத்தைவிட்டுத் திரும்பி வந்திருக்கமாட்டீர்" என்று சங்கதிகளை யாவும் ஆதியோடந்தமாய் எடுத்துச் சொன்னான். அரசன் இவை யாவுங் கேட்டுப் பிரம்மானந்தமடைந்து, "நீர் சொல்லியபடி அவள் மனிதர் மயங்கத்தக்க அவ்வளவு சுந்தரவடிவுள்ளவள்தானா? அல்லது நீர் வர்ணித்துப் பேசுகின்றீரோ ? சாதாரணமாய்ச் சிறப்பித்துப் பேசிவரும் வழக்கமுண்டு. அதைப்போல் நீரும் கண்டதை எண்மடங்காக்கிச் சிறப்பித்துச் சொல்லுகின்றீரா யானறியேன்" என்னார். விஜயபூபதி அரசனைப் பார்த்து, "ஐயா ! நீர் இவ்விதம் நினைக்கவேண்டாம். நான் வேடிக்கைக்காக என் வித்தியா சமர்த்தால் அவளது அழகை வர்ணித்துப் பேசவில்லை. உண்மையாகவே அவளது அழகின் சிறப்பைக் கூறினேன். நான் சொன்னதற்கெண்மடங்கதிகமாகவே அவள்சிறந்திருக்கின்றனள். சிற்ப சாஸ்திரிகளாலும் அவளழகைச் சித்திரிக்கமுடியாது. கண்

டோர் மயங்கும் கட்டழகி ஒருத்தி உலகத்தி லிருக்க வேண்டுமென்றும் கடவுள் தன் திறமையினால் அவளைப் படைத்திருப்பதாக எண்ணுகிறேன். நான் என் பூர்வ புண்ணியவசத்தினால் அவளைத் தரிசித்தேனே யொழிய மற்ற யாவராலும் அவளைத் தரிசிப்பது அசாத்தியம் என்றனன்.

இவை யாவுங்கேட்ட அரசன், விஜயபூபதியைநோக்கி "நீர் தெரிவித்தபடி அவள் அவ்வளவு அழகாயிருக்கும் பட்சத்தில் என் கண்களினால் அவளது மறுவில்லா சுந்தர வடிவைக் கண்டாலல்லாமல் மற்றும் உமது சாதுர்ய வசனங்களினால் கொள்ளேன். மேலும்,

"பொய்ந்நின்ற நெஞ்சிற்கொடியாள் புகுந்தாளைநோக்கி
நெய்ந்நின்ற கூர்வாளவனேருற நொக்குநங்காய்
மைந்நின்ற வாட்கண்மயினின் றெனவந்தென்முன்னர்
இந்நின்ற வளாங்கொலியம்பிய சீதையென்றான்."

அதாவது, சீதாபிராட்டியினுடைய ரூபலாவண்யத்தை சூர்ப்பநகையானவள் இராவணனுக்கு எடுத்துரைத்தமாத்திரத்தில், அந்த சீதாபிராட்டியி னுருவமே தன்னெதிரிலிருப்பதாக இராவணன் உணர்ந்ததைப்போல் நீர் அவ்வடிவழகியின் சவுந்தரியத்தைச் சொன்னவுடன் அவள் என் கண்முன் நிற்பதாகத் தோற்றுகின்றது. இனி அரைக்கணமேனும் அவளைப் பாராமல் என் உயிர் நிலைகொண்டிராது. ஆகையால் அவசியம் நான் இன்று உம்முடன் கூடவேவந்து அவளைப்பார்க்க ஆவல்கொண்டிருக்கிறேன்" என்றார்.

அப்பா! சித்திராங்கதா! வாய்க்கொழுப்பு சீராலழிந்ததைப்போல், நான் சும்மாவிராமல் அந்த தயாபரசுந்தரியின் ரூபலாவண்யத்தை யுமக்குச் சொன்னமையால் நீர்

மோகித்து ஒரே பிடிவாதமாய் அவளைப் பார்க்க விரும்பி யதுபோல், ஜெயபாலனும் மனோகரிமேல் ஆசையுற்று அவளைப் பார்க்க விரும்பியிருந்தான். அப்பொழுது விஜய பூபதி அரசனைப்பார்த்து, "ஐயா ! நீர் கொண்ட எண்ணம் கூடாதகாரியம், அந்த வடிவழகி சொல்ப ஸ்திரீகளைப்போ லிருந்தால் எளிதிற் காணலாம். அவளிருப்பிடமோ அரண்மனையைப்போல பந்தோபஸ்துள்ளதும், ராஜஸ்திரீ யைப்போல மகா அலங்கிர்த ரூபலாவண்ய!சௌந்தரவதி யாய்த் தன்னை யலங்கரித்துக்கொண்டு, அவள் உத்தரவு பெற்றவர்களன்றி மற்ற ஆடவர்கள் உள்ளே பிரவேசிக்கக் கூடாததுமா யிருக்கிறது. இதுவிஷயத்தில் என்னை மன் னிக்கவேண்டுகிறேன்" என்றான். அரசன், விஜயபூபதி யைப் பார்த்து, "நண்பா பேய்பிடித்தாலும் பிடிக்கலாம் பெண்கள் பிடித்துக்கொள்ளக் கூடாதென்னும் லோக வதந்தியின்படி சும்மாவிருந்த வெனக்கு அவளழகை மிகச் சிறப்பித்து வர்ணித்துப்பேசி காமத்தீயை மூட்டி, கடைசி யாய் அவளிருக்குமிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோகக் கூடாதென்று சொல்வது முற்றும் அடாதகாரியமா யிருக் கிறது. நீர் இன்று சாயந்திரம் அவ்விடத்திற்குப் போகும் போது நான் உம்மைப் பின்தொடர்ந்தே வருவேன்" என்று கூறினர். அதற்கு விஜயபூபதி வியாகூலமடைந்து இதற்கென்னசெய்வது, அரசனும் உயிர்த்தோழனுயு மிருக்கும் இவருடைய விருப்பத்திற்கு உடன்படாவிடில் நான் பிரயோஜன மற்றவனுவேன் என்று தனக்குள் நினைத் துக்கொண்டு, "ஐயா! ஆடவர் போகக்கூடாத கட்டுக் காவ லுடனிருக்கும் அவ்வழகியின் அந்தப்புறத்திற்கு நான் உம்மை எவ்விதமாப் அழைத்துப் போகக்கூடும். இவ்வரச கோலத்துடன் உம்மை அங்கு அழைத்துக் கொண்டுபோய்

அவளது பூரண சந்திரோதய வடிவழகைக் காண்பிப்பது முற்றும் கூடாதகாரியம்" என்ருன். அதற்கரசன் அப்படியானல் நான் உமது வேலையாளைப்போல் வேஷம்மாறி உம்முடன் வருகின்றேன், என்னை யாரென்று அங்குயாராகிலும் உம்மைக் கேட்பார்களானல் உமக்குக் குற்றேவல் செய்யும் பரிசாரகனென்று சற்றும் கூச்சப்படாமல் நீர் தாராளமாய்ச் சொல்லலாம். நானும் அக்கோலத்துடனே அவ்விடமிருந்து அங்குநடக்கும் வேடிக்கை விநோத ஆடல்பாடல்களையும், நீர் புகழ்ந்துகொண்டாடிய நங்கையினழகையும் கண்டு களிக்க சமயமுண்டாகு மென்றனர். இதைக்கேட்ட விஜயபூபதி ஆச்சரியப்பட்டு, போக்கற்றவனுக்குப் போனதெல்லாம் வழி என்பதைப்போல் அரசன், பணியாளனுகவிருக்கச் சம்மதித்தானே யென்று வருந்தி, அரசனுடைய இஷ்டத்திற்கு சம்மதித்து அவரை வேலையாளைப்போல் வேஷம்மாற்றிக்கொள்ளச் செய்து, சாயங்காலமானதும் தன் பின்னேடழைத்துக்கொண்டு போய் முன் கிழவியினல் குறிப்பிக்கப்பட்ட விடமாகிய சாலையினைரஞ் சென்று காத்துக்கொண்டிருந்தார்கள். கிழவி அவ்விடம் வந்து விஜயபூபதியையும், வேலையாளையும் பார்த்து, இவ்வேலையாளை இங்கு என் அழைத்துவந்தீர். உம்மைத்தவிர வேறுயாரும் உள்ளே பிரவேசிக்க உத்தரவுகிடையாதே. எஜமானியின் உத்திரவன்றி இவ்வாளை உள்ளே அனுப்ப முடியாதாதலால் இப்பொழுதே இவ்விடமிருந் திவனையனுப்பிவிட வேண்டுமென்றனள். இவ்வார்த்தைகளைக் கேட்ட அரசன் திடுக்கிட்டு பிடாரி வரங்கொடுத்தாலும் ஓச்சன் வரங்கொடுப்பது அரிதாயிருக்கிறதே. இவ்வளவு கஷ்டத்துடன் மாறுவேடம் பூண்டு வந்தும் கிழவி தடுக்கின்றனளே, இதற்கென்ன செய்வது

என்று முகம்வாடி சிந்தையுடனிருந்தான். உடனே விஜயபூபதி கிழவியை நோக்கி" அம்மா! இந்த வேலையாளைச் சாமானியனென்று நினைக்காதே. சங்கீத ஆடல்பாடல்களில் மிகவும் தேர்ச்சியுள்ளவன். வேடிக்கை விநோதங்களைச் செய்து சகலரையும் களிக்கச்செய்வதில் மிக்கநிபுணன். இப்படிப்பட்ட சாமர்த்திய சாதுர்யனை அவ்வடிவழகி கண்டவுடன் மெத்த சந்தோஷமடைவாள் என்றவுடன் இவனையும் விஜயபூபதியுடன் உள்ளே யழைத்துச்செல்ல கிழவி சம்மதித்து, இருவருக்கும் பெண் உடைகளைத்தரித்து அந்தப்புரத்தினுள்ளே அழைத்துக்கொண்டு போய்விட்டனள்.

சுகந்த வாசங்கமழ்கின்ற அலங்கார மண்டபத்தில் பூரணச்சந்திரன் உதயமானாற்போல்உட்கார்ந்திருந்த மனோகரி, விஜயபூபதியைக்கண்டு வந்தனைவழிபாடுசெய்து இவ்வேலையாளை என் இவ்விடத்திற் கழைத்துவந்தாய் என்றனள். விஜயபூபதி யவளைநோக்கி "பெண்ணே! விந்தையான வேடிக்கை விநோத காலட்க்ஷேபங்களிலும், வீணை முதலிய வாத்தியங்களை வாசிப்பதிலும் அகடவிகட கவி செய்வதில் இவன் மிகுந்த தேர்ச்சியுள்ளவன். ஆதலால் இங்கு நடக்கும் உன்னுடைய கேளிக்கை யுல்லாசத்திற்குத் தகுதியுள்ளவனாயிருப்பான்" என்றான். மனோகரி இதைக் கேட்டவுடன் அகமகிழ்ந்து அவ்வேலையாளை அங்கிருக்கச் சம்மதித்துப் பின்னும் அவனைநோக்கி, "நீ இங்கு நடக்க வேண்டிய வேலைகளைச்செய்து உன்மரியாதையைக் காத்து நடந்துக்கொள்ளவேண்டும். நீ மரியாதைதப்பிக் காமப்பித்தினால் நயங்குவையாகில் அவமானத்தை யடைவாய்" என்றனள்.

மாறுவேடம்பூண்ட மன்னன், மனோகரியின் வார்த்தைக்கிணங்கி, அவருக்கு வந்தனைவழிபாடுகள்செய்து அவ

ளுக்குத் தன்பேரில் பூரணப்பிரீதி யுண்டாகும்படி விந்தை யும் விநோதமுமான காரியங்களைச் செய்துகொண்டு வந் தான். இதைக்கண்ட மனோகரி அதிக ஆச்சரியமடைந்து, இவன் இங்கிருக்கத்தக்கவனே யெனமதித்தும் அவனிடம் அதிகப் பிரீதிகொண்டிருந்தனள். மேலும் அவனது முகக் குறியினால் அவன் ஓர் பெரிய அந்தஸ்துள்ள குடும்பத்திற் சேர்ந்தவனா யிருக்கவேண்டுமென்றும் ஊகித்தனள்.

பிறகு மனோகரி தன் தோழிகளுடன் வீணை முதலிய வாத்தியங்களை வாசித்து, ஆடல் பாடல், கேளிக்கைகளில் உல்லாசமாகச் சற்றுநேரம் போக்கி, விஜயபூபதியையும், மாறுவேடம்பூண்ட வேலையாளையும் தன்னருகிலுட்காரும் படி ஆஞ்ஞாபித்து அங்குபரிமாரப்பட்ட உணவை அவர்க ளுடன் உண்ண ஆரம்பித்தனள்.

அப்பா! சித்திராங்கா! அப்பாதகி மனோகரியினால் காமாந்தகாரத்தில் சொக்கியுழலும் விஜயபூபதிக்குநேரிடப் போகும் துன்பத்தைத் தெரிவிக்கின்றேன், அதைக் கவன மாய்க் கேட்பாயாக. விஜயபூபதி ஒருபக்கத்திலும்,வேலைக் காரனைப்போல் மாறுவேடம்பூண்ட மன்னனொரு பக்கத் திலும் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் மனோ கரி, விஜயபூபதியை நோக்கி, “ஐயா! நீர் உண்மையாக என்மேல் அதிகப் பிரியங்கொண்டிருப்பதாக உமது முகக் குறியினால் காணப்படவில்லை. ஏனெனில் நீர் முன்னதாக வே நமதரசனாகிய ஜெயபால ராஜாவின் நேசபத்தினியா கிய காந்தாமணியின்மேல் அதிகமையல் கொண்டிருக்கின் றீர். நீர் அவ்வழகிய ராஜமகிஷியின் நேசத்தைப் பாராட் டிருப்பது உமதந்தஸ்திற்குத் தகுந்ததே” என்றனள்.

விஜயபூபதி இவ்வார்த்தையைக் கேட்டவுடன் திடுக் கிட்ட மனத்தனாய்த் தலை நாணி இதேது அநர்த்தம் வந்து

விளைந்தது, வேலிக்குப்போட்டமுள் காலுக்கே தைத்தது, நாமொன்று நினைக்கத் தெய்வமொன்றுநினைத்ததே; என்று கலவரப்பட்ட சிந்தையுள்ளவனாய் வடிவழகியைப்பார்த்து, "பெண்ணே! எனது பாதுகாவலனாகிய மன்னனுடைய பட்டத்தரசியைக்குறித்து எப்பொழுதும் நான் கனவிலும் நினையாத உள்ளத்தை இப்பொழுது நீ வலிய முன்னிழுத்துப் பேசுவது உனக்குத் தகாது. அம்மாதோ பதிவிரதா தர்ம உத்தமி, அரசனோ சர்வகுணாலங்கிர்தசாத்மீக உத்தம புருஷன். அவர் விஷயத்தில் நானதிக பயபக்தி விசுவாசமுள்ளவனாய் நடந்துக்கொண்டு அவராலே முன்னுக்குக் கொண்டுவரப்பட்டு அவரால் அபிமானிக்கப் பட்டவனாயிருக்கின்றேன். தவிர,

"தன்னை யளித்தாள் தமையன் மனைக்குருவின்
பன்னி அரசன் பயில்தேவி—தன்மனையைப்
பெற்றாள் இவரைவர் பேசி லெவருக்கு
நற்றாய ரென்றே நவில்."

அதாவது தமையன் மனைவி, குருபத்தினி, அரசன்மனைவி மாமி ஆகிய இவர்களைத் தம்மைப்பெற்ற தாயார்களாக மதித்தல் வேண்டுமென்று சாஸ்திரம் முறையிடுகின்றபடி அரசன் மனைவியாகிய காந்தாமணியை நான் என தன்னைக்குச் சமமாகப்பாவித்து வருகின்றேன். அப்படியிருக்க இச்சமயத்தில் நீ அம்மாதரசியின் பேச்சை யெடுத்துப் பேசுவது உனக்குத் தருமமல்லவென்றனன். அப்போது மனோகரி குறுநகை கொண்டு விஜயபூபதியைப் பார்த்து, "ஏனையா முழு பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கிறீர்? இதற்குள் மறந்துவிட்டீரோ? நேற்று நீர் என்னுடன் தனித்து வார்த்தையாடிக்கொண் டிருக்கையில், அரசபத்தினி காந்தாமணியைப்பற்றி அதிகமாய்ப் புகழ்ந்துப்பேசி, அம்

மாதைப்போல ரூபவதி இவ்வுலகத்திற் காண்பதரிதென்று சொல்லி, அதை இப்போது மறுக்கின்றீர். நீர் அதை மறுத்துப் பேசுவதால் உண்மையாகவே அம்மாதின்மேல் நீர் காதல்கொண்டிருக்கிறீரென்றுப் பிரசித்தமாய் விளங்கவில்லையா? நாம் இப்போது உல்லாசமாய்க் காலம்போக்குவதுபோல், காந்தாமணியுடன் சரசமாய் நீர் விளையாடவில்லையா? என்று நீர் யோசித்துப்பார்த்து உமது மனதில் தோற்றும் உண்மையைக் கலவரப்படாமல் பேசுமென்று கூறினள்.

இவ்வார்த்தையைக்கேட்ட விஜயபூபதி, இடிவிழுந்த நாகம்போல் திப்பிரமைகொண்டு, பொல்லாதகாலம் சொல்லாமல் வந்தெய்திற்றே, இதற்கென்ன செய்வதுயென்று மனம் வருந்தி மனோகரியைப்பார்த்த, மாதே! நீ சொல்லும் வார்த்தையின் நோக்கம் இன்னதென்று எனக்கு விளங்கவில்லை, நான் இராஜபத்தினியாகிய காந்தாமணியைப் பற்றி ஒன்றும் பேசினவனல்லவே, நீ என்மேல் இவ்விதநிந்தனை சொல்லாமலிருக்கவேண்டுகின்றேன் என்றான். மனோகரி, விஜயபூபதியின் வார்த்தைகளைக்கேட்டவுடன் குலுங்க நகைத்துப்பின் அவன்மேல் கோபங்கொண்டவளைப்போல் தன்முகத்தை மற்றொரு பக்கமாய்த் திருப்பிக்கொண்டு, மாறுரூபத்துடனிருக்கும் மன்னனைப்பார்த்து, நீயாகிலும் உன் எஜமானனை சுயபுத்தி வரும்படிச்செய்து, நேற்று என்னுடன் சொன்ன விஷயங்களை நினைவுகூட்ட லாகாதாவென்றனள். வேலையாளாகவிருக்கும் மன்னன் விஜயபூபதியைப் பார்த்து, "ஐயா! இம்மாதரசி உம்மைப் பலமுறை வருந்திக்கேட்டும் காந்தாமணிக்கும் உமக்கு மிருக்கிற சம்பந்தத்தைக் குறித்து நேற்று நீர் எச்சரித்த விஷயத்தை இன்றைக்குச் சொல்ல என் கூச்சப்படுகின்றீர்" என்று

சொல்லி மறுபடியும் மனோகரியைப் பார்த்து, "அம்மா இச்சம்பவத்தால் நானும் உங்களைப்போலவே ஆச்சரியப் பட்டவனா யிருக்கின்றேன். இவர் எப்போதும் எவ்விஷ யத்தையும் எனக்கு அறிவிக்காமலிருப்பவரல்ல. ஆனால் காந்தாமணிக்கும் இவருக்கு மிருக்கும் சம்பவத்தைமாத்தி ரம் நான் அறியாவண்ணம் செய்திருக்கின்றனர். ஆதலால் இது விஷயத்தைப்பற்றி அவருக்கு யாதொரு தொந்திர வும் கொடாதிருக்க உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றனர்.

அவைகளை யாவுங்கேட்ட விஜயபூபதி மிகவும் விசனம் மேலிட்டவனாய்,

"உற்றபெருஞ் சுற்ற முறநன் மனைவியுடன்
பற்றிமிக வாழ்க பசுவின்வால்—பற்றி
நதிகடத்த லன்றியே நாயின் வால்பற்றி
நதிகடத்த லுண்டோ நவில்."

அதாவது, பொருந்திய பெரிய உறவினர்சூழ நன் மனையா ளோடு கூடிவாழவேண்டுமென்றும், பசுவின் வாலைப்பிடித் துக்கொண்டு ஆற்றைத்தாண்டுவதல்லாமல் நாயின் வாலைப் பிடித்துக்கொண்டு ஆற்றைத் தாண்டுவது கூடாதகாரிய மென்றும் சொல்லப்பட் டிருக்கிறபடி, நான் மதியிழந்து மங்கையர்களிடம் வலிய நேசிக்க விரும்பியதினாலல்லவோ அடாத வார்த்தைகளால் படாதபாடும் படும்படி நேரிட் டதே என்று ஒன்றுந்தோன்றாமல் மனோவிசாரத்துடன் மவுனமா யிருந்தான்.

இவனிப்படியிருக்க, மனோகரியின் வடிவழகைக்கண்டு மெய் மறந்திருக்கும் மாறுரூபம்பூண்ட மன்னன், தன்னையு மறியாமல் அத்தையலை நோக்கி," எந்திழையே] உன் கட் டழகைக்கண்டு மதிமயங்கி யிருக்கின்றேன். நீ பற்பல இரா

களில் சுதிகூட்டி மகா இன்பமாகப் பாடுவாயென்று கேள்விப்பட்டிருக்கின்றேன், ஆகையால் சில பாடல்களை மாத்திரம்பாடி என்னைச் சந்தோஷிப்பிக்க உன்னை மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேனென்றார். அடிமையாகிய அரசன் தன்னைப்பாடும்படி ஒடுக்க வணக்கமாய் கேட்டுக்கொண்டதற்காக மனோகரி வினைப்படாமல் அவர்மேல்மோகப்பார்வையைக்காட்டி, மோகலீலைக்கடுத்த வார்த்தைகளைப்பேசி அவர் மதியின்றி மரியாதை தப்பிப் பேசியதற்காகக் கோபங்கொள்ளாமல் புன்னகைகொண்டு, அப்பா! ஏவற்காரா! உனதெண்ணத்தை நிறைவேற்றுகிறேனென்று ஓர் வீணையை எடுத்துமீட்டி அதற்கிசைந்த சில பாடல்களைப்பாடினள். மாறுவேடம்பூண்ட மன்னன், இதற்குமுன் எப்போதும் இவ்வித பாடல்களைக் கேட்டுக் களிப்படைந்தவனல்லவாததால் ஆனந்தபரவசனாகி, தான் வேலையாளாகவேடம் பூண்டிருப்பதையும் மறந்து அவளைப் பார்த்து," ஆ! என் பிரியகாந்தலி! என் ஆஸ்தானத்தில் மிகவும் பிரக்யாதிபெற்ற கீதவாத்தியபண்டிதர்கள் தங்கள் திரமையைக்காட்டியிருக்கின்றனர். நானும் கீதவாத்தியத்தில் கியாதி பெற்றவன் என்றாலும் உன்னுடைய சாரீரத்தைப்போலவும், வீணைமீட்டும் திறத்தைபோலவும் நான் எங்கும்கேட்டதில்லை. விஜயபூபதி, உன்னுடைய சாமார்த்தியத்தையும் உனது வடிவழகையும் குறித்து மிகவும் சிலாகித்து என்னுடன் பேசியதால் நான் நேரில் பார்க்க இங்குவந்தேன் என்றார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் மனோகரி மிகுந்த கலக்கத்தையும் திகிலையுமடைந்து நமதரசனல்லவோ இவர். நான் இதுவரையிலும் அவரை வேலையாளென்றல்லவோ எண்ணியிருந்தேன். இனி என்ன செய்வேனென்று கைவிரல்களை முறித்துக்கொண்டு பதைத்து, தானிருந்தவிடம்

விட்டப்புறஞ்சென்று, மறுபடியும் மிகுந்த பயபக்தியுடன் வணக்கமாய் அரசனிடத்திற்குத் திரும்ப வந்து ஆசனத்தின் மீதமராமல் அரசனது பாதத்தண்டை நின்றனள். அரசன் அவளைப்பார்த்து "அம்மா! நான் வேலையாளாயிருந்து உன்னத ஆசனத்தில் வீற்றிருக்க நீர் எனதரசியாயிருந்தும் என் முன்னர் நிற்றல் தகுதியாமோ" வென்றனன். இதைக்கேட்ட மனோகரி, அவர்காலில் சாஷ்டாங்கமாய் விழுந்து," ஆ! என் அதிபதியும் மகிபதியுமாயிருக்கின்ற மன்னவனே! நான் ஒரு கன்னியாயிருந்தபோதிலும் இவ்வளவு துணிவுடன் ஆடவர்முன்னிலையில் அச்சமின்றி நடித்ததற்காக என்னை ஓர் கர்வங்கொண்ட கன்னியென்றே சொல்லவேண்டும். ஆதலால் என்மீது கிருபை வைத்து என் குற்றத்தை க்ஷமிக்கவேண்டுமென்று இரக்கத்துடன் கெஞ்சிக் கேட்டனள். அரசன் அகமகிழ்ந்து அவளுக்கு உபசாரங்கள் சொல்லி, அவள்செய்த காரியங்கள்யாவும் அவளுடைய இஷ்டகாலக்ஷேபத்திற்குச் செய்ததாகையால் மன்னிக்கத்தக்கதேயென்று மொழிந்து, நீ யாருடைய குமாரத்தியென்று வினவினன். மனோகரி தன் சரித்திரத்தையாவும் சொன்னவுடன் அரசன் மனமகிழ்ந்து அவ்விடத்தைவிட்டெழுந்துத்தன் அரண்மனையையடைந்தான். விஜயபூபதியும் மனோகரி தன்மேல் அபாண்டமாய் சுமத்திய பழியினால் அரசன் தன்னை என்னசெய்வானோவென்னும் ஏக்கத்துடன் அவ்விடத்தைவிட்டவனைத் தன்னிருப்பிடம் சேர்ந்தான்.

அரசன் தன்னரண்மனையைச் சேர்ந்தவுடன் விஜயபூபதியைப்பற்றி சந்தேகித்தவனாகி, ஆந்தரிகத்தில் விஜயபூபதிக்கும் தனது பத்தினியாகிய காந்தாமணிக்கும் பரஸ்பர சம்பந்தமிருக்குமென்று நினைத்து, அதை வெளியிட்டு

ரைக்கவாவது, விசாரணைக்குக் கொண்டுவரவாவது மனங்கொள்ளாதவராய் உடனே சில கொலையாளரை ஏவி அன்றிரவிற்றானே விஜயபூபதி நித்திரையி லிருக்கும்போதே கொலைசெய்துவரக் கட்டளையிட்டனன்.

"சொல்லுவார் வார்த்தைகேட்டுத் தோழமை யிகழ்வார்புல்லர்
நல்லவர் விசாரியாமற் செய்வரோ நரிசொற்கேட்டு
வல்லியும் பசுவுங்கூடி மாண்டதோர் கதையைப்போல
புல்லிய ரொருவராலே போகுமே யற்பர்நேசம்."

என்றபடி, மனோகரியின் அழகினால் சொக்கி மையல் கொண்ட மதியிலானாகிய விஜயபூபதி, நித்திரைபுரிகையில் அக்கொலையாளர்களால் கொல்லப்பட்டான்.

அப்பா! சித்திராங்கதா! இவ்வித திறமைவாய்ந்த விஜயபூபதியின் மதியானது ஓர் கன்னிகையால் கெட்டு கடைசியில் அவன் விரும்பிய இன்பத்துக்குப் பதிலாகத் துன்பத்தையடைந்து முடிவில் தன் பிராணனையும் இழந்தான். ஆகையால், தயாபரசுந்தரியின் அழகினால் நீ மருண்டு அவள்மேல் கொண்டிருக்கும் நினைவையொழிக்க உன்னை வேண்டுகின்றேன் என்றனள். சித்திராங்கதன் கிழவியைப்பார்த்து, தாயே! நீ யொன்றுக்கும் சிந்திக்க வேண்டாம். இதோ என்னிடமிருக்கிற பணப்பையும் என்னுடைய குதிரையும் உனக்கு வெகுமதியாக அளித்தேன். அக்குதிரையைவிற்று அதனால் வரும் தொகையையும் பெற்றுக்கொண்டு, என்பணத்தையும் வைத்துக்கொண்டிருப்பாயாகில் என்னுயிரிழத்தலுக்கு உனக்கோராற்றலாயிருக்கும். தயாபரசுந்தரி என் உயிரை அவள் கேள்விகளுக்குப் பரிசாகக்கொள்வாளோ? அல்லது அவளே எனக்குப் பாரியையாவளோ? நான் இருவகையு மறியேன் என்று சொன்னான்.

கிழவி, பைகிலறந்த மோகருக்களைக் கையில்வாங்கின வுடன் சித்திராங்கதனை நோக்கி, மைந்தா! நான் உன்னை இழக்குந்துன்பத்தை எனக்கு இப்போது வெகுமதியளித்த பணங்கள் ஆற்றுமோ? நான் மகனைப்போல்பாவித்திருந்த உன்னை, பணத்துக்காசித்துப் பறிகொடுக்குஞ் சிந்தனை யுள்ளவளேயல்ல. நாணவைகளை யெல்லாம் சத்விஷய மான காரியத்தில் செலவிட்டால் ஒருவேளை உன் ஜீவரட்சிக்கு ஓர் ஆற்றலான கருவியாயிருக்கும். அதாவது அப் பணத்தில் ஒரு பகுதியை ஆதுலர்சாலைகளுக்கும், மற்றோர் பகுதியை ஆலயங்களுக்கும் கொடுத்தால் கடவுள் உனக் காக அநுக்கிரகம் செய்வார் என்று சொல்லி, அக்குதிரை யைக் கொண்டுபோய் கடைத்தெருவில் விற்று அதனால் கிடைத்த பொருளையும், பையிலிருந்த பணத்தையும், ஆது லர்ச்சாலையிலிருக்கும் எளியோர்களுக்கும், தேவாலயங்க ளுக்கும் பங்கிட்டுக் கொடுத்துத் தன் வீட்டையடைந்து தயாபரசுந்தரியின் அரண்மனைக்குச் செல்லத் தயாராயிருக் கும் சித்திராங்கதனைப் பார்த்து, அப்பா! குழந்தாய்!

"தானே புரிவினையாற் சாருமிரு பயனுந்
தானே யனுபவித்தற் றப்பாது—கானூற
கோடிகற்பஞ் சென்றாலுங் கோதையே யெய்தவினை
நாடிநிற்கு மென்றார் நயந்து."

என்றபடி, அயன் அன்று எழுதியதை யழிக்க யாராலு மாகாது. பூர்வம்செய்த வினையின்படி நன்மை தீமைகள் உலகத்தில் சம்பவிக்கின்றன. ஆதலால் நீ தயாபரசுந்தரி யினிடஞ்சென்று, அவள்கேட்கும் கேள்விகளுக்குப் பதிலு ரைத்து, அவளை மணமாலைசூட்டிவர கடவுள் அனுக்கிரகம் செய்வாராக, என்று சொல்லி வாழ்த்தி விடை கொடுத்த னள்.

சந்திரனைப்பழிக்கும் சுந்தரவதனமுள்ள சித்திராங்கதன், பற்பல வாசனைவீச ஆடையாலங்கிர்தனாய் அரண்மனையை நோக்கிச்செல்லஅவ்வரண்மனை முகப்பில்,போர்ச்சேவகர்கள் அணிவகுத்துப் பாராகொடுத்துக் கொண்டிடிருந்தனர். அங்கிருந்த படைத்தலைவன் இவனைக் கண்டவுடன் இவனோர் நல்ல அந்தஸ்துள்ள அன்னியனென்றறிந்து, அவன் சமீபத்தில்வந்து, “ஓ! வாலிபா! நீயார்? இவ்வரண்மனைக்கு நீ வந்தகாரணம் யாது? என்று வினவினன். அதற்கு சித்தராங்கதன், நானோர் அன்னிய தேசாதிபதி, உங்களரசனிடஞ் சென்று அவர் குமாரத்தியாகிய தயாபரசுந்தரி கேட்கும் கேள்விகளுக்கு உத்தரம் பகர சக்தியுள்ளவனென்றறிவித்துச் செலவுபெற்றுக்கொள்ளப் போகிறேன்” என்றான். அத்தளகர்த்தன் இவனது வார்த்தையைக் கேட்டு பிரமித்து, ”! இராஜபுத்திரா நீ கொண்டகருத்து உன்னுயிரை இழப்பதற்கோர் முடிவென்றுனக்குத் தெரியாதா?

“நிலமதிற் குணவான்றோன்றி னீள்குடித்தனரும் வாழ்வார்
தலமெலாம் வாசந்தோன்றும் சந்தனமரத்திற் கொப்பாம்
நலமிலாக் கயவன்றோன்றி னற்குடித்தேசம் பாழாம்
குலமெலாம் பழுதுசெய்யும் கோடாரிக்காம்புபோலாம்.”

என்றபடி, அவ்விராஜபுத்திரி அரசகுமாரர்களை வேரறக்களைந்து தேசத்தை பாழாக்கப் பிறந்திருக்கின்றனள். ஆகையால் நீ துணிந்து அவளிடம்செல்வதைப்பார்க்கிலும் சுகமாக உயிருடன் உன்னிருப்பிடம் செல்வதேதகுதி தயாபரசுந்தரியை நீ வெற்றிக்கொள்வாயென்று கனவிலும் கருதாதே. நீ மிகவும் கற்ற கல்ஞானிகள் கூட்டத்தில் ஒருவனா யிருந்தபோதிலும் அவளுடைய சாதுர்ய வாக்கியங்களுக்கு உரைபகர உன்னால் முடியாது” என்றுகூறினான்.

அதற்கு சித்திராங்கதன், ஐயா ! நீர் சொல்வது விந்தையா யிருக்கிறது.

"பிரமனதுகருவமும், மாரன்புகழ்ச்சியும் பீடுபெறு
வாலியகமும்
பேரிலங்கைக்கரசனூற்றலும் ராட்சசப்பெண்தாடகைச்
சமர்த்தும்
திரிபுரர்களெண்ணமும் தக்கனதுவேள்வியும் தீங்குபுரி
துரியன்நினைவும்
சினங்கொள்கயிடவன் மதத்தொடுசூரபன்மன் செருக்கு
மிகவீரர்வலியும்
இரணியன்பிடிமானமும் பகாசூரன்நியம்பொணு வுயிர்
பழிப்பும்
இன்னும்பராக்கிரம மிகுந்தபுரவலர்மதமுமிறவாது நிலை
நின்றதோ."

ஆதலால், இந்த தயாபரசுந்தரியின் சாமர்த்தியம் எவ்வள விருந்தாலும் காலம் வந்தபோது நீடித்திராது. நான் முன் வைத்தகாலைப் பின்வைத்துப்போகேன்" என்று சொல்ல, அத்தளகர்த்தன். "தலையிலெழுதியிருக்கத் தலைசிரைத்தாற் போமோ"? ஆகையால் நீசுகமே போவென்று துடுக்காக உரைத்துப் போகச் செலவு கொடுத்தான்.

சித்திராங்கதன், ஆசாரவாசலைக் கடந்து குடிகளை விசாரணைசெய்துகொண்டிருக்கும் புத்திசேனமகாராஜனைக் கண்டு, அக்குடிகளுடன் இவனுமொருவனாய் நின்றுக் கொண்டிருந்தான். சக்ரவர்த்தி, இவனது வஸ்திராலங் கிர்தத்தால் இவன் வியாச்சியக்காரனல்லாத ஓர் அன்னிய னென்றறிந்து, தன்மந்திராலோசனைச் சபையில்ஒருவரைக் கைச்சாடைசெய்தழைத்து அவ்வன்னியனைச்சுட்டிக்காட்டி அவனிடம்போய் அவன் இங்குவந்த காரணம் யாதென்று வினவும்படிக் கட்டளையிட்டான். அரான் உத்திரவின்

படியே அவ்வாலோசனைக் கர்த்தன், சித்திராங்கதனிடம் சென்று, அவன் யாரென்றும் அவன் அங்கு வந்தகாரணம் யாதென்றும் உணர அரசன் அபிப்பிராயப்படுவதாகத் தெரிவித்தான். தான் ஓர் சக்ரவர்த்தியின் ஏகபுத்திரனென்றும், தன்பெயர் சித்திராங்கதனென்றும் அரசனுக்கு மருமகனாகவேண்டித் தான் இங்குவந்ததாகவும் சித்திராங்கதன் தெரிவித்தான்.

இவனது மறுமொழியை ஆலோசனைக் கர்த்தனால் கேள்விப்பட்ட புத்திசேனன், முகம் வேறுபட்டு சபையிலுள்ளோர் அனைவரையும் அப்புரம் போகச்செய்து, சிங்காதனத்தை விட்டிறங்கி சித்திராங்கதனை யருகிலழைத்து, "சற்றும் ஆலோசனையின்றி நெஞ்சந் துணிவுகொண்ட இராஜபுத்திரா! என் குமாரத்தியை மணம்புரிய வருபவனுடையகதி என்னவாகுமென்றும், அதற்கு முன்னெச்சரிக்கப்படவேண்டியவிவரணச்சட்டத்தின்கொடுமை எப்படிப்பட்டதென்றும் உனக்குச் செம்மையாய்த் தெரியுமோ" என்று வினவினன். சித்திராங்கதன், மன்னனைப்பார்த்து "அரசே ! அவ் விளம்பரத்தின் விவரத்தை நான் அறிந்திருக்கின்றேன். சில தினங்களுக்கு முன் இக்காரியத்திற்காக பதுமபுரியின் பாலியவரசன் அநியாயமாய்ப் பதைத்துத் துடித்திறந்ததையும் என் கண்ணாரப் பார்த்திருக்கின்றேன். சந்தேக விபரீதமறக் கல்விபயின்ற பண்டிதர்களெல்லாம் இராஜபுத்திரியால் காம விகாரங்கொண்டு அவளுடைய கடினமான கேள்விகளுக்கு உத்தரம் பகரத் தெரியாமல் தங்களுயிரைப் பரிசாகக்கொடுத்தது மிக்கப் பரிதாபமே. நானோ அவ்வித தன்மையுள்ளவனல்ல" என்று கூறினன். அதற்கு புத்திசேனன், இதென்ன பயித்தியம்? சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் அளவு என்றபடி,

ஒருவன்பின் ஞெருவனுகவல்லோ வந்துயிராணனைவிடுகின்ருர்கள். இவ்விதமாய்த் தங்களை பலியிடுகிறது, அவர்களுக்குச் சந்தோஷப் பெருக்கமாகவல்லோ விருக்கிறது. இது முற்றும் அறிவின்மையாகவும், துணிகரமுமாகவன்ருே விருக்கிறது, என்று தனக்குள் ஆலோசித்து, இராஜபுத்திரா! இதுவரையில் இங்குவந்த இராஜபுத்திரர்களைவிட நான் உன்மீதில் அதிகபிரீதிகொண்டிருப்பதால் நீஅநியாய சாவுக்காளாகாமலும் உன்பழிக்கு நீயேகாரணமாயிராமல் உன் தகப்பனுடைய அரசாட்சிக்குத் திரும்பப்போய்விடு. நீ மாதுமேல் மாருமையலாகி மாண்டு மடிந்துபோனு யென்னுந் துக்கசெய்தியை உன் தகப்பன் கேள்விப்பட்டால் மிகவும் வியாகூலப்படுவதல்லாமல், அதனுலவருக்கு அபகீர்த்தியு முண்டாகுமாகையால் இது வுனக்கு புத்தியல்ல, என்று மொழிந்தனன்.

சித்திராங்கதன் அரசனைப்பார்த்து, ஐயா! நானெருபோதும் திரும்பேன். நான் எண்ணிவந்தகாரியம் அனுகூலமாவதற்கு நற்குறியாகப் பல சகுனங்களைப்பார்த்து வந்தேன். தங்களுடைய சம்மதம் பெரும்பாக்கியம் தவிர வேருென்றும் எனக்கு வேண்டியதில்லை. உமது குமாரத்தியினுல் அநேக அரசர்கள் மாண்டுபோனதைப்போல் இனி மாளாதிருக்க என்னைக்கொண்டே அக்கொடிய காட்சியை யொழிக்கக் கடவுள் சித்தங்கொண்டிருக்கிருர் என்பதற்கோர் ஐயமில்லை. உமது புத்திரி கேட்கும் கேள்விகளுக்கு நான் விடை பகரமாட்டேன் என்று உமக்கெங்ஙனம்தெரியும்? அரசர்கள், அவளது சாமார்த்தியமான கேள்விகளுக்குப் பயனுரையாமல் அபஜெயப்பட்டதால் நானும் அவ்விதமாவேனென்று எண்ணுகின்றீரோ? அப்படியொருபோதும் எண்ணவேண்டாம். நீர் அதி சீக்கிரத்தில் என்

னருமை மாமனாராகப்போகிறீர்" என்று கூறினன். புத்திசேனன் அரசகுமாரனைப்பார்த்து, அப்பா! சித்திராங்கதா!

"இல்லாண் மறப்பவுஞ் சென்றேகிச் சலந்தரன்றன்
றொல்வலிபோய் மாண்டனனே சோமேசா—வல்லமையால்
எவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர்
போஒமளவுமோர் நோய்"

என்பதை யுணராமல், உன்ஜீவனுக்கு நீயே உலைவைத்துக்கொண்டாய். உன்னைப்போலவே இதுவரையில் வந்தவர்களெல்லாம் விருது கூறிவந்து, என் குமாரத்தியினுடைய கடின கேள்விக்கு உரைபகராமல் உயிர் இழந்தார்களே, இது கண்கண்ட காட்சியன்றோ? ஐயோ! நீயும் அவ்விதமாய் மோசம்போவானேன்? தனயா! நான் உன்மீதில் இரக்கங்கொண்டே இவ்வளவுதூரஞ் சொல்கின்றேன். நீ உன் பிடிவாதத்தை விட்டு உயிர்பிழைக்கும்மார்க்கத்தைத் தேடிக்கொள். என் குமாரத்தி தயாபரசுந்தரி கேட்கும் கேள்விகளோ மிகவும் கடினமானவை. அவைகளின் விடையை அரைக்கால்மணி நேரத்தில் அர்த்தப்படுத்தி மொழியவேண்டுமென்பதே அவளால் விதிக்கப்பட்ட சட்டம். மேலும் அவ்வர்த்தத்தை சமஸ்தானப் பிரபுக்களும் ஆமோதிக்கவேண்டும். நீ உத்தரம்பகரத் தாமதித்தால் தப்பாமல் மரணக்கினைக்குள் ஆளாகி இன்றிரவே கொலைசெய்யப்படுவாய். உன்னைப்போல் மங்கையின்மீது மாறுமையலாகிக் கெட்டவர்களின் கணக் கெத்தனையென்று உனக்குத் தெரியாதா? வயிரபுர மென்னும் பட்டணத்தைப் பரிபாலித்துச் செங்கோல் செலுத்திய வீரதீரனாகிய விக்கிரமகேது வென்னும் அரசன், மாரூபவதியான மாயாவதி என்னும் பெண்ணால் மாண்டதைச் சொல்லுகின்றேன். சற்று கவனமாகக் கேட்டு, பிறகாகிலும் தயாபரசுந்தரியின்

நினைவையொழித்து சுகஜீவியா யிருக்க வேண்டுகின்றேன். அதாவது:—

விக்கிரமகேதுவென்னும் அரசன் ஒருநாள் தன் நாட்டிற்கடுத்தக் காட்டில் வேட்டைமார்க்கமாய்ப் போயிருந்து வேட்டையாடும்போது, விலையுயர்ந்த ஆபரணங்களாலும் தகதக வென்று பளிங்குபோல மின்னும் மஞ்சள் நிறப் பட்டுப் பீதாம்பரத்தாலும் தன்னை யலங்கரித்திருந்த ஓர் சுந்தரவதி, தனக்கெதிரில் ஓர் மரத்தடியில் அகஸ்மாத்தாக நிற்கக்கண்டான். அவள் பேரழகினால் மன்னன்மனங் கலங்கி, அறிவழிந்து இக் காட்டில் தனித்து இம்மங்கை யிருக்க வேண்டிய காரணம் யாதோ வென்று நினைத்து அவளருகிற் செல்ல முயன்றான். ஆனால் கண்ணிமைக்குமுன் அம்மாது மறைந்து மாயமானாள். அரசன் மிகவும்ஆச்சரியமும் பிரமையுமடைந்து தியங்கி நிற்கையில், மறுபடியும் சற்று தூரத்திலுள்ள ஓர் நீரோடையின் கரையில் முன்னைப் பார்க்கிலும் அதிக அலங்காரத்துடன் அம்மாது காணப்பட்டாள். விக்கிரமகேது, அவளது சுந்தரத்தின் ஜோதியால் பீடிக்கப் பட்டவனாய் அதிகவேகமாக அவளிடஞ்சென்றான். ஆனால் அவ்வழகி மின்னற்றோன்றி மறைவதைப்போல் திடீரென அந்நீரோடையில் குதித்து மூழ்கி மறைந்தனள். விக்கிரமகேது வென்னும் அரசன் இக்கண்காட்சியைக் கண்டதட்சணம் அந்த வோடையை அனந்தமுறைச் சுற்றிச்சுற்றி வலமிடம்வந்ததும், அம்மாது புலப்படாதது கண்டு நீரில் குதித்து மூழ்கி பூமிவரையிலும் அளாவிச் சலத்தை நாலுபக்கத்திலும் குழப்பித் தடவித் தடவிப்பார்த்தும் அப்பெண்கைக்குத் தட்டுப்படாமலும், கண்ணுக்கு அகப்படாமற் போனதால் மிகவும் அலுப்புற்று, கைகால் அயர்ந்து வேசாரிக் கரையில் வந்து உட்

கார்ந்து, அகஸ்மாத்தாக சம்பவித்த இவ் வதிசயத்தை நினைத்து நினைத்து அலுத்துப்போய்மிகுந்த ஆச்சரியத்தை யும், பிரமையுங் கொண்டவராய் இதற் கென்னசெய்யலா மென்று ஆலோசித்துக்கொண்டிருந்தார். அப்போது அவ ருடைய மந்திரியும், அவருடன் வந்த தோழர்களும் அரச னைப்போலவே ஆச்சரியத்தினால் ஒன்றும் தோன்ருது தியங்கி நின்ருர்கள்.

அரசனே தான் கண்ட பிரத்தியட்சக் காட்சிதன்னை விட்டெடுபடாத மாட்சிமையாயிருந்ததைப்பற்றிக் கூர்ந்து யோசித்துத் தான் கண்ட அவ்வழகிய பெண் வனத்தில் சஞ்சரியாநின்ற வனதேவதையா யிருக்கவேண்டுமென்று நினைத்து, தான் கொண்ட பிரமை மண்டைக்கேறி, தனது கண்களை ஓடையை விட்டெடுக்க மனமில்லாதவராய், நிமி ஷத்துக்கு நிமிஷம் தன்னிருதயத்திலிருந்தெழும்பும் பெரு மூச்சுகளால் அயர்ந்து தன் மந்திரியை நோக்கி, "மந்திரீ! நாம் இன்றிரவில் இவ்விடத்திற்ருனே தங்கியிருந்து, இங்கு நடக்கும் அதிசய விநோதங்களைப் பார்ப்பதுமன்றி நம் கண்முன்னர் மின்னலைப்போல் தோன்றி மறைந்த அத் தெய்வக் கன்னியையுங் கண்டு சந்திக்கலாம். மேலும் இவ் வோடைக்குள் ஏதோ இரகசியார்த்தமான சில சப்தங்கள் என் காதில் கேட்கின்றன. இதை முற்றிலும் நாம் இங் கிருந்தே யறியவேண்டும். ஒருக்கால் அக்கன்னிகை இன் றிரவில் ஜலத்தைவிட்டுவெளிப்பட்டு நம்முடையகண்களுக் குத் தென்படக்கூடும். ஆகையால் நாம் இவ்விடம்விட்டு நீங்கலாகாதென்றனர். மந்திரியும் அரசன் கட்டளைக்குச் சம்மதித்து, தன்னுடன் வந்த பரிவாரங்க ளனைத்தையும் பட்டணத்திற்கனுப்பிவிட்டு, இருவரும்அவ்விடத்திலேயே இராப்பொழுதைப் போக்கத் தீர்மானித்து அவ்வோடைக்

கருகிலுள்ள பசும் புற்றரையிலுட்கார்ந்து, தாங்கள் கண்ட காட்சியைக் குறித்து சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள்.

இவ்விதமிருக்கையில், அரசனவர் அன்று பகல் முழுவதும் வேட்டையாடி பிறகு அந்த அழகிய மங்கையைக் கண்டுபிடிக்கத் தேடினதில் விடாய்த் திளைப்புற்ற அலுப்பினால் நித்திரைவருவதைக்கண்டு மந்திரியைநோக்கி, மந்திரி! நான் இனி அதிகநேரம் விழித்திருக்கக்கூடாமல் நித்திரை வருகிறது. நான் இதுவரையிலும் பட்ட கஷ்டத்தினால் யாதொரு பிரதிபலனுமில்லாமல் சற்று நித்திரைத் தணியும்பொருட்டு சயனித்துக் கொள்ளுகின்றேன் அதுவரையிலும் நீ கண்ணோடு கண் சிமிட்டாமல் நீரோடையைப் பார்த்தவண்ணம் இருக்கவேண்டும். உனதுபார்வை அவ்வோடையைவிட்டு சற்றுப் பிசகுமானால் சமுசயமின்றி மோசம் வந்து நேரிடும். அப்படி யாதாமொரு காரியம் நிகழ்ந்ததானால் தக்ஷணம் என்னை எழுப்பிவிட ஆலசியம் செய்யாதேயென்று திட்டமாய்ச்சொல்லி நித்திரைபோயினர். அரசன் ஆஞ்ஞாபித்தவண்ணம் மந்திரி மிகு ஜாக்கிரதையுடன் அரசனுக் கத்தியந்த பிரீதியுண்டாக்கவெண்ணி விழித்திருந்தான். ஆனால் மந்திரியும், அரசனுடன் அன்று பகல்முழுதும் வேட்டையாடினதில் அரசனைப்போலவே தனக்கும் நித்திரைவருவதைக்கண்டு, அதைப் பெரிதாய்ப் பாராட்டாமல் சர்வ ஜாக்கிரதையுடன் வெகுநேர வரையிலும் நீரோடையைப் பார்த்தவண்ணமாய் நிமையோடு நிமை மூடாமல் விழித்துக்கொண்டே யிருந்தான். இவன் விழிப்பும், ஜாக்கிரதையும் நித்திராதேவிக் கெதிர்நிற்கக் கூடாமல் போனதால் தானும் அரசனைப்போல சற்றிளைப் பாறலாமென்று தனக்கருகிலிருந்த புல்லின்மேல் சயனித்துக்கொண்டான். இவ்விதம் இவர்களிருவரும் நித்திரைப்

புரிகையில், சடுதியாய் ஏககாலத்தி லிருவரையு மொன்றாய்த் தட்டி எழுப்பியதுபோல் இருந்தபடியால், இருவரும் நித்திரை தெளிந்து எழுந் துட்கார்ந்தார்கள். அவர்களுக்குச் சமீபத்தில் மகா நேர்த்தியான கீதவாத்தியத் தொனிகள் இன்பரஞ்சிதமாய் வாசிக்கப்படுவதைத் தங்கள் காதாரக் கேட்டு, இச்சப்த மெவ்விடமிருந்து தொனிக்கப்படுகிறதென்று கவனித்து, அச்சப்த முண்டாகுந் திக்குக்கு நேராகத் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில், அவ்விடத்தில் மகா நேர்த்தியும் அலங்காரமுமான அரண்மனையொன்று அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பிரமித்து, அரசன் மந்திரியை நோக்கி, "மந்திரீ! நம்முடைய காதுகளில் கேட்கப்படுகிற கீதவாத்திய சப்தங்களேது? நமது பார்வைக்குப்பிரமிப்பாய் அமைக்கப்பட்டிருக்கிறஅவ்வரண்மனை யேது? இதைத் தீர ஆலோசித்துச் சொல்லவேண்டும்" என்றார். மந்திரி மறுமொழியாக, அரசே! இவ்வரண்மனை மனிதரால் நிரூபிக்கப்படாமல் மாய்கையால் உருவெளித் தோற்றம்போ லுண்டானதாய் இருக்கவேண்டும். மேலும் நமது கண்முன்னர், முன்பு தோன்றிமறைந்த மாயஸ்திரீ உம்மை மோசத்துக்குள்ளாக்கக் கருதி இவ்வரண்மனையைச் சமைத்து முடித்துவைத்திருக்கவேண்டும். இது யதார்த்தமானதால், நாம் இப்போதே ஓடையை விட்டுப் புறப்பட்டுப் போகலாம். நாம் இன்னம் இவ்விடத்தில் தானே ஆலசியம்பண்ணி தாமதித்திருப்போமானல் கட்டாயம் நாச மோசத்துக் குட்படுவோமென்பதற்குச் சந்தேகமில்லையென்று கூறினன்.

அப்பா! சித்திராங்கதா! என் மொழியை நீ ஏற்றுக் கொள்ளாமல் என் குமாரத்தியாகிய தயாபரசுந்தரியின்

கடின தண்டனைக்கு இலக்காக மனவுறுதி கொண்டதைப் போல், அரசனாகிய விக்கிரமசேதுவும்,

"நட்புப் பிரித்தல் பகைநட்ட லொற்றிகழ்தல்
பக்கத்தா ரியாரையு மையுறுத—றக்கார்
நெடுமொழி கோறல் குணம் பிரிதாதல்
கெடுவது காட்டுங் குறி"

என்றபடி, தான் கெட்டுப்போகக் காலம் வந்தமையால் தனது மந்திரியின் வாக்கை யசட்டைசெய்து அவனை நோக்கி, மந்திரீ! உனது வார்த்தைக்குக் கட்டுப்பட்டுநான் பயப்பட்டுப் பின்வாங்கி யோடமாட்டேன். அது என் போன்ற க்ஷத்திரியனுக் கழகல்ல. நான் அவ்வரண்மனை வரையிலும் போய் அதைக் கண்ணுற்று, அதில் வசிப்ப வர்க ளாரென்றும் பார்ப்பேன். தவிர நான் அங்குபோய் பார்ப்பதில் எனக் கெவ்வளவு நாசமோசங்கள் சம்பவிக்கு மென்று நீ முன்குறிப்பாய் எனக் கெச்சரிக்கின்றையோ அவ்வளவதிகமாய் நான் அவைகளைப் போய்ப் பார்க்கப் பிரியமா யிருக்கின்றேன் என்றனர். அரசன் இவ்வளவு பிடிவாதமும் உறுதியுமாய்க் கூறியதைக் கேட்ட மந்திரி, மறுத்து வார்த்தையாடக் கூடாதவனாய் அரசனுடைய அபிப்பிராயத்திற் கிணங்கினவனாயினன். இவர்களிருவரும் அவ்வரண்மனையை நாடிச் சென்று, கதவுகளெல்லாந் திறந் திருக்கக்கண்டு உள்ளே நுழைந்தார்கள். அங்கு சலவைக் கற்களினால் தளவரிசைப்படுத்தியதும், சுவர்கள் முழுதும் பல வர்ணங்களால் சித்திரிக்கப் படுத்தியதுமா யுருந்த தைக் கண்டு இன்னும் உள்ளுக்குச் சென்றனர். மிக வும் அலங்காரமுள்ள கூடத்தில் இவர்களை மயக்கும் விழிகளை யுடைய ரூபலாவண்ய முடைய ஓர் இராஜ குமாரத்தி, இப் பிரபஞ்சத்தில் தேடுதற்கரிய இரத்

திருபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, பொற்சிம்மாசனத்தில் வீற்றிருக்கக் கண்டு, அவளது மாந்தளிர்போன்ற அழகின் ஜோதி இவர்கள் கண்களைக் கப்பிக் கொண்டு அவர்களை ஏறெடுத்துப் பார்க்கவொட்டாமல் திகைப்பூண்டு மிதித்தவர்களைப்போல் திகைத்து நிற்கும்படிச் செய்வித்தது. அந்த யௌவன சவுந்தரவதியான இராஜகுமாரத்தி வீற்றிருந்த சிம்மாசனத்தைச் சுற்றிலும் பலவித பட்டுவர்ன உடுப்புக்களையும், விலையுயர்ந்த ஆபரணங்களையும் அணிந்த சிலமாதர்கள் சூழ்ந்து, சிலர் வீணைகள் வாசிக்கவும் அவர்கள் கண்களுக்குத் தோற்றப்பட்டன. அரசனையும் மந்திரியையும் கண்டவுடன் அம்மங்கையர்கள் தங்கள் கீதவாத்தியங்களையும், ஆடல்பாடல்களையும் நிறுத்தி, நிர்ச்சப்தமாகவிருந்தார்கள். இவையாவும் கண்டவரசன் மிதமற்றவாச்சரிய மடைந்து, இராஜகன்னிகை வீற்றிருந்த சிம்மாசனத்தருகிற் சேர்ந்து, இராஜ குமாரத்தியைப்பார்த்து, மிகுந்த மரியாதையோடு வந்தனஞ்செய்து அம்மாதைநோக்கி, “மகாரூபவதியும் என்கண்களை மயக்கி பிரமிக்கச் செய்யும் கட்டழகியுமாகிய இராஜ குமாரத்தியே! நான் மிகவும் ஆச்சரியப்பட்டு மயங்கத்தக்கதாய் இன்றென் கண்முன் மின்னலைப்போல் தோன்றி நீரோடையில் சடுதியில் மூழ்கி மறைந்த கன்னிகை யார்? அவளுடைய வடிவழகு என்னை பிரமிக்கச்செய்து, அவள் மேற்கொண்டகாதல் என் தலைமண்டைக்கேறினதாகையால் அவளுடைய சரித்திரத்தைச் சற்று சவிஸ்தாரமாய்ச் சொல்ல உன்னை மிகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்” என்றார். அதற்கந்த கன்னிகை அரசனைப்பார்த்து புன்சிரிப்புக்கொண்டு, “ஐயா! இன்று உமது கண்முன் தோன்றி, பின்பந்த நீரோடைக்குள்முழுகி மறைந்துவிட்டதாய் நீ கண்ட அப்பெண் நானே. நீர்

இதைப்பற்றி ஆச்சரியப்படத் தேவையில்லை" என்றனள். அரசன் மறுபடியும் அக்கன்னிகையை நோக்கி, "மாதே! இவ்வாச்சரியமான மாறுதலைக்குறித்து நான் எப்படிபிரமிக்காம லிருக்கக்கூடும்? எனதாசையானது இவ்வற்புதங்களைப் பார்த்து தியங்கும்படிச் செய்கிறதேயொழிய வேறொன்றுஞ்சொல்ல எனக்கு நாவெழவில்லை. ஆனல் நீயே முன் என் கண்முன்னர் தோன்றி மறைந்த வடிவழகியென்று இப்போதுணர்ந்தேன்" என்றார். இராஜகன்னிகை அரசனைநோக்கி, "ஐயா! நீர் ஆச்சரியப்படும் வண்ணம் நான் மறைந்தது என்னுடைய மந்திரபலத்தின் வல்லமையினற்றான். நான் நினைத்தபோது மனிதர் கண்களுக்கு மறைவதும், வேறு அற்புதச்செயல்கள் செய்யவும் கூடும். நீர் இப்போது பார்க்கும் அரண்மனையும் மற்ற வஸ்துக்களும் என்னல் நிரூபிக்கப்பட்டவைகள்" என்று சொல்லி சிம்மாசனத்தை விட்டுக் கீழேகுதித்து, அரசனையழைத்துக் கொண்டுபோய் விலையேறப்பெற்ற அநேகருசியுள்ளபதார்த்தங்கள் மேசையின்மேல் வைத்துப் பறிமாறியிராநின்ற அறைக்குட் கொண்டுபோய் அரசனை யுட்காரச்சொல்லி சகல உபசாரங்கள் செய்து, அப்படியே மந்திரியையும் ஓர் ஆசனத்திலிருக்கும்படிச்செய்து,இவர்களுக்கிடையில்தான் அமர்ந்து, இவர்களுடைய யோகக்ஷேமங்களையும், மற்றும் பல தேசவர்த்தமானங்களையும்பற்றி நெடுநேரம் வரையிலும்வார்த்தையாடிக்கொண்டிருந்தனள். இவை அனைத்தையும் பார்த்த மந்திரி, ஆச்சரியமடைந்து இது எக்காரணத்தினல்வந்தெய்தியபயனே? அரசனின் ஊழ்வினையோ? முண்டையைப்பிடித்த கண்டமாலை முருங்கையையுங்கூட பிடித்ததைப்போல் நானும் இவர்களிடம் சிக்கிக்கொண்டேனே. அரசன் தனதுபேதமையால் இம்மாதின்மேல் மையலாகி

அவளது மோகவலையில் சிக்குண்டு மருண்டு மதிமயங்கிக் கிடக்கின்றாரே. இவ்வித ஆபத்திலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள நமக்கு எப்போது சமயம்நேருமோ வென்றுபல வாறாய்ச் சிந்தித்துக்கொண்டிருந்தான். அரசனோ இந்த இராஜகன்னிகையின்மேல் அதிக மோகமாகி, தன்னை மறந்து மிதமற்ற காதல்கொண்டு தன்மோகத்தைத் தணிக்கச் சக்தியற்றவராய் அவளுக்கிவர் அடிமையாயிருந்துஊழியம் செய்யக் கருத்துக்கொண் டிருக்கிறதாகவும் காண்பித் தனர். இராஜகன்னிகை அரசனது கருத்தை நன்றாய்த் தெரிந்துகொண்டும், அதை வெளிக்குக் காட்டிக்கொள் ளாமல் அரசனைநோக்கி, உங்கள்முன் பரிமாறப் பட்டிருக் கும் உணவை அருந்தாமல் என் ஆலசியம் செய்ய வேண்டு மென்றனள். இதைக்கேட்ட அரசனும் மந்திரியும் உண வருந்தினார்கள்.

அரசன் இராஜகன்னிகையின்மேல் கொண்ட காதல் தலைக்கேறி,

"தீமையுள்ளன யாவையுந் தந்திடும் சிறப்பும்
தோமில்செல்வமும் கொடுக்குநல் லுணர்வினைத் தொலைக்கும்
ஏமநன்னெறி கெடுத்திரு ளுய்த்திடு மிதனால்
காமமன்றியே யொருபகை யுண்டுகொல் கருதில்"

என்றபடி, தன்னை முற்றும் மறந்தவனாய் இராஜகன்னி கையை நோக்கி, மோகத்துக்குரிய குறிப்புகளைக் காட்டி, பேசத்தகாத வார்த்தைகளைப் பேசத்தொடங்கினார். விக் கிரமகேதுவரசன் தன்னையு மறியாமல் தாருமாறாகப் பேசு வதைக்கண்ட மாயாவதி, அரசன் தன்வலையிற் சிக்குண்டா னென்று பூரணமாய் அறிந்து அவரைநோக்கி, "ஐயா! நீர் என்மேல் அதிக விசுவாசத்தைவைத்து மட்டடங்காத காதல் கொண்டதைப்போல் நானும் உமது மேல் அதிக

மோகம்கொண்டு பரவசங்கொண் டிருக்கின்றேன். ஆனால் நமது விருப்பம் நிறைவேறுவதற்கோர் இடைஞ்சலுண்டு. நான் என்பிறப்பு வளர்ப்புமுதலிய சரித்திரங்களை உமக்குத் தெரிவிக்கவேண்டிய தவசியம்'' என்று சொல்லத் தொடங்கினாள்:—

ஐயா! கீழ்சமுத்திரத்தின் மத்தியிலுள்ள மாளவபுரி என்பது எனது ஜனனதேசம். அதைப் பரிபாலித்துவரும் **வீரசேனன்** என்பவர் எனது தந்தை. அவருக்கு நானொருத்தியே குமாரத்தி, என்பெயர் மாயாவதி. தெய்வமாய்கையினால் எனது நாட்டிலுள்ளார் அனைவரும் நினைத்த இடங்களுக்கு மாயமாய்ச் செல்லவும், தங்கள் ரூபங்களை மாற்றவும், நினைத்த காரியங்களைச் செய்யவும் கூடும், நான் பல தேசங்களையுங்கண்டு, தேசாசாரநீதி நியாயங்களையும், செங்கோல் செலுத்தும் முறைமைகளையுங்கண்டு தெளியலாமென்று தீர்மானித்து லோகமுழுமையும் சுற்றிப்பார்த்துக்கொண்டு திரும்புகையில், இவ்விடத்தில் நீர் வேட்டையாடுவதைக்கண்டு, மதிமயங்கி உம்மைச் சற்று கண்டு சந்தித்துப் போகலாமென்று ஆசைகொண்டு நின்றேன். கொண்டவாசை கொழுந்துவிட்டெரிந்து, மனதை யூடறுக்கச் செய்து மோகவிச்சைகளை விளைவித்தமையால் கண்ணில் அம்பு தைத்ததுபோல காமவிகாரம் கண்டவிடமெல்லாம் பாய்ந்து மதியழிந்து சற்று சுதாரித்துக்கொண்டு, உமது கண்களுக்கு மறைவாயிருக்கவேண்டுமென்றேநினைத்தேன். ஆனால் உமது பேரழகு என்னைப்போகவொட்டாமல் மறித்து காமரசம் பொருந்திய விச்சைகளால் வாதிக்கப்பட்டு உம்மைப்பார்த்த கண்ணும் பூத்துப்போய் உமதாசையே என் தாகமாயிருந்து, அவ்விடாயைத் தணித்துக்கொள்ளும் பொருட்டு சற்று நின்று என் சொரூபத்தைக்காட்டி

மறைந்து, பிறகு நீரோடைக்குள் மூழ்கி மறைந்துவிட்டேன். நீரும் என்னைக் கண்டுபிடிக்கும்படி ஓடையில் மூழ்கி அடிவரையிலும் அளாவிப்பார்த்த அத்தருணத்தில் எனக்குண்டாயிருந்த சந்தோஷம் வாயினு லுரைக்கத் தக்கதல்ல. நான் உமது கண்களுக்கு மறைவாயிருந்தும் என்னுசை உம்மைவிட்டகலாமல் விடேன் தொடேனென்று இந்நீரோடையின் அருகில்தானே யிருந்து, எவ்விதத்திலாகிலும் என்னைக்கண்டுபிடிக்கவேண்டுமென்றே தீர்மானஞ்செய்து கொண்டிருந்ததையும், நான் ஞானதிருஷ்டியினுல் பார்த்துக்கொண்டேயிருந்தேன். ஆனுல் உம்மைக்கண்டு வார்த்தையாட விருப்பி நீர் நித்திரையிலிருந்த சமயமறிந்து, இவ்வரண்மனையை என்னுடைய மாய்கையால் உண்டாக்கினேன்” என்று சொல்லிக்கொண்டிருக்கையில் ஓர் கன்னிகை ஆழ்ந்தசஞ்சலத்தி லமிழ்ந்தவளாய்த் துக்கத்துடன் மாயாவதியினிடம் வந்து, அவளெதிரில் நின்று கலங்கினள். அக்கன்னிகை ஏதோ துக்கச்செய்தி கொண்டுவந்திருக்க வேண்டுமென்று இராஜகுமாரத்தி அவளது முகக்குறியினு லறிந்துகொண்டு, மகாவுரத்த சப்தத்துடன் ஓவென்றலறி கூக்குரலிட்டுத் தன் முகத்தி லறைந்துக்கொண்டு; அழுதக் கண்ணும் சிந்திய மூக்குமாயிருந்தனள்.

அப்பா சித்திராங்கதா! மாயாவதியின் மேல் ஆசை கொண்ட விக்கிரமகேது திடுக்கிட்டு இராஜகுமாரத்தித் தன்னையுமறியாமல் மெய்மறந்து பெருங் குரல்பாய்ச்சி கண்ணீருதிர்ப்பதைக் கண்குளிரக்கண்ட அவன் மனது எவ்வளவு பாகாயுருகிப் பதைபதைத் திருக்குமென்பது உனக்கே விளங்கும்.

அரசன் மனதையுருக்கின கண்ணுட்டி, அகஸ்மாத்தாய் மண்ணில்புரண்டலறி யழும்படியான ஸ்திதியிலிருக்

கும்போது, நிச்சயமாய் அவரிருதயத்தில் ஓர் அம்பு தைத்ததுபோல் அவர் சடுதியில் திடுக்கிட்டலறும்படிச்செய்வித்தது. ஆகிலும் அதன்வயணமென்னவென்றும், என்ன காரியத்திற்காக இப்படி புலம்பி பிரலாபிக்க வேண்டியதென்றும் அறியமனமுள்ளவராய் அவளிடத்திற் கிட்டி நெருங்கிக் கேட்கப பிரயத்தனிக்கையில், துக்கத்துடன் வந்த கன்னிகை இராஜகுமாரத்தியி னருகிற்சென்று "அம்மா! மானிடராய்ப் பிறந்தவர்கள் யாவரும் இறக்க வேண்டியவர்களே. தங்களுடைய தந்தை தன்னரசாட்சியைத் துறந்து, என்றுமழியா பரமபதத்துக்கேகினர் குடிகள்யாவரும் உமது தந்தையின் அரசாட்சியை உமக்கேயளித்து, இராஜரீகத்திற்குறிய கௌரவமாகிய முடியைச் சூட்டி சிம்மாதனத்திலேற்றி உம்மையே தங்களரசியாயேற்றுக்கொள்ள முழுப்பிரீதிகொண்டு உமது வருகைக்கு ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். முதல்மந்திரியாகிய எனது தந்தை உம்மை யழைத்து வரும்படி எனக்கு ஆஞ்ஞாபித்த வண்ணம் உம்மைத்தேடி இங்கு வந்தேன். நீர் இதற்குப் போக்குச்சொல்லாமல் என்னுடன் வந்து, உனக்காகக் குடிகள் பிரீதிகொண்டு சூட்டும் முடியைத்தாங்கி, அரசாட்சியை அங்கீகரித்துக் கொள்ளவேண்டுமென்று உபசாரமாய் வருந்திக் கேட்டுக் கொண்டாள்.

இவ்விதமாய் துக்கசமாசாரத்துடன் மகுடாபிஷேகஞ் சூட்டும் விசேஷசமாசாரங்கொண்டுவந்த மந்திரிகுமாரத்தி தன்விஷயத்தில் எடுத்துக்கொண்ட சிரத்தைக்கும் தொந்திரைக்கும் நன்றியறிதலான வந்தனம்புரிந்து, அவள் தன் நன்மையைக்கோரி நாடு நகரம், காடு, மலை, வனம், வனாந்திரங்களைக்கடந்து, தன்னுயிரை அருமையாய்ப்பாராமல் கஷ்

டப்பட்டு வந்ததற்காக அவளைப்புகழ்ந்து, அவளுடன் அப்போதே வாச்சித்தமாயிருப்பதாகத தெரிவித்து இராஜகுமாரனைப்பார்த்து, ஐயா! உமக்கு வந்தனம்புரிகின்றேன். நான் எனது அரசுரிமைக்குப்போக செலவுதாரும். நான் இவ்விடம் இன்னும் ஒரு க்ஷணப்போதும் தாமதிக்கக்கூடாது. ஆனால் கனிந்தொழுகும் காமரசத்தை நாம் பானம் பண்ணக்கூடாத துர்ப்பாக்கியம் நம்மிருவருக்கும் சடுதியாய் சம்பவித்ததற்கு நாமென்ன செய்யலாம். இது தெய்வசங்கற்பத்தாலன்றி வேறுவிதத்தில் நடந்ததல்லவென்று விக்கிரமகேதுவின் பக்கமாய்த் திரும்பித் தனது வடிவுள்ள கரங்களால் அரசனைத் தழுவி முத்தஞ்செய்து, இப்போது கட்டாயம் நான் உம்மைவிட்டுப் பிரிந்துபோக வேண்டியதா யிருக்கிறது. ஆகிலும் நாம் ஒருவரையொருவர் மறுபடிங் கண்டு சந்தித்து ஆலிங்கனம் பண்ணும்படியான ஓர்நாள் வரும். அப்போதுதான் நாம் கொண்ட காதலைத் தணித்துக்கொள்ளவேண்டுமே யொழிய இப்பொழுது அணில் கொம்பிலும், ஆமை கிணற்றிலுமிருந்து தவிப்பதுபோல நாமிருவரும் தத்தளிக்க வேண்டியதா யிருக்கிறது. உமது பட்சம் என்னை விட்டகலாமல் என்மீதில் கொண்டகாதலுறுதிகொண்டு விசுவாசகாதலனாய்க்காணப் படுவீரானால் நான்கொடுக்கும் அஸ்தம் உமக்கேயல்லாமல் மற்றும் வேற்றரசர்களை மணம்புரியக் கனவிலும் நினையேன். சந்திர சூரியர்களறிய உறுதியாய் வாக்களிக்கின்றேனென்று கூறினாள். இவ்விதமாய் அரசனுக்கு வாக்களித்தவுடன் மனமும் வாக்குமொத்த கண்ணாட்டியும், மனோகரியும், மதனலீலா குணசரசவல்லாசியு மாயிருந்த மாயாவதி தன் முழுப்பிரீதியையும் கொள்ளைகொண்ட கண்ணாளனைவிட்டுத் தன் பரிவாரங்களைச் சேர்த்துக்கொண்டு மாயமாய்க் கண்ணுக்குத் தோன்றாமல் மறைந்துபோனாள்.

மாயாவதி மறைந்தவுடனே அவளாற் சமைப்பிக்கப் பட்ட அழகான உப்பரிகையும், அதில் ஜொலித்துக்கொண் டிருந்த கோடிசூரியப் பிரகாசமான வெளிச்சங்களும் மங் கிப்போய் அந்தகாரஞ் சூழ்ந்துக்கொண்டது. அவ்வந்த காரத்தில் அரசனும் மந்திரியுமிருந்து இராப்பொழுதைப் போக்கினர்கள். அவர்கள் மாயாவதியின் ரூபலாவண்ணி யத்தைக் கண்டு மதிமயங்கின ஆசைப் பெருக்கத்தின்வெள் ளத்தால் அலைப்புண்டு கிடந்ததால், தாங்கள் இருந்த விடம் முன்கண்ட யதாஸ்தானமாகிய அரண்மனையி லிருப்பதா கவே நிச்சயித்துக்கொண்டிருந்தார்கள், ஆனல் பொழுது புலர்ந்து நாலுபக்கங்களிலும் பார்க்கும்போது தங்களைச் சுற்றிலும் அடர்ந்தகாடுகளிருந்ததேயல்லாமல் முன்னிருந்த அரண்மனையைக் காணமல் மிகுந்த கிலேசத்தையும் கலக் கத்தையுமடைந்து,விக்கிரமகேது வரசன் தன் மந்திரியைப் பார்த்து, ஓ மந்திரீ; நாம் வீண்பிரம்மையாய் ஆசைகொண் டலைந்ததும், கண்டகாட்சியாய்க் கண்டதும் திண்டாட்ட மாயுண்டதும், உடலைஊணுயுறுக்கி வாட்டினதுமாகியகாரி யங்களெல்லாம் யதார்த்தமா யிராமல் சொர்ப்பனந்தானே வென்று சந்தேகார்த்தமாய் வினவினர். அதற்கு மந்திரி, ஆம், அரசே! நாம் கண்டதும், உண்டதும் உமது கருத்தின் படி சொர்ப்பனமாயிராமல் மாய்கையாகிய உருவெளித் தோற்றமா யிருக்கிறது. இத்தோற்றம் உமக்குமோகத்தை யெழுப்பி,உம்மைமோகாந்த காரணக்கும்பொருட்டு உமது பார்வைக்கு முன் மகா நேர்த்தியாய்க் காணப்பட்டாளே யொழியவேறென்றுக்குமல்ல. அம்மாதுடன் ஆடியும்பாடி யும் வீணைகள் கையிலேந்தி மகாநேர்த்தியான சுரத்தொனி களால் வாசித்துக்கொண்டு மிருந்த சௌந்திரவதிகளாகிய கன்னிப்பெண்களெல்லாம் அவ்விராஜ கன்னிகைக்கு ஊழி

யம் செய்பவர்களன்றி வேறல்ல, என்று தனது சந்தேகம் நிவாரணமாகும் பொருட்டு உள்ள நிலைமையை யெடுத்துக் கூறினன்.

"அஞ்சனவைவேற்க ணரிவையர் தம்பேராசை
நெஞ்சுபுகினொருவர் நீங்குநிலைமைத்தோ
எஞ்சல்புரியா துயிரை யெந்நாளுமீர்ந்திடுமால்
நஞ்சமினி நம்மவோ நாளுநலியாதே"

என்றபடி, அரசனது புத்தியும் நினைப்பும் மாயாவதியின் பேரிலேயே யிருந்தமையால், அவள்மீதில் மோகாந்தகார மனோவிசாரங்கொண்டு தன் னரண்மனைக்குத் திரும்பியும் அனுதினமு மவளழகின் தோற்றத்தினலே அருண்ட சிந்தையும் மருண்டமதியுமா யிருந்தார். ஆகிலும் வெகுகால மாய் அவளைப்பற்றிய சமாசாரங்களொன்றும் அரசனுக் கெட்டாததால் அவளை மறந்துபோகவேண்டியவரா யிருந்தும், அவள் அரசன் விஷயத்திற் காட்டிய மிதமற்ற மதி யானை மோக வெறிகொள்ளும்படிச் செய்ததால் சஞ்சலத் தையும் வியாகூலத்தையுமே அவர் முடியாகக்கொண்டு எப் போதும் அதே சிந்தையும் நினைப்புமாய் அவளைத் தன் ஞாபகத்தில் நினைத்து நினைத்து உருகி அங்கம் மெலிந்து அங்கலாய்த்துக்கொண்டே யிருந்தார். அரசன் இவ்வித விசனப் பிராந்தியடைந்து மனோசஞ்சலப்பட்டுக்கொண்டி ருப்பதை மந்திரி பார்த்து, அவருடைய சஞ்சலம் அவரை விட்டு நீங்கும்படியான யுக்தி வார்த்தைகளைக் கொண் டொழிக்கப் போராடியும் பலிதப்படாமல் வியர்த்தமா யிற்று. அரசன் தான் முன் வேட்டையாடினவிடத்திற்கே மறுபடியும் போனல் ஒருவேளை அச்சௌந்தரவதியை அங் கே சந்திக்கலாமென்று விருப்புற்றவராய் இன்னொருமுறை வேட்டைக்குப்போகப் பிரீதிகொண்டு, இரவும் பகலும்

மாறு நினைப்பைக் கொண்டிருந்தாரேயல்லாமல் அவர் தன் இன்பானுபவ சுபங்களையாவது, குடிகள் பரிபாலனத்தில் கவனப்பிரீதியையாவது செலுத்தினவரேயல்ல. இப்படி ஒருவருஷகாலமாய் அரசன்கொண்டவெண்ணம் ஒன்றும் கைகூடாமல் வியர்த்தமாய் கடைசியில் தன் விசனம் நீங்கும்பொருட்டு வனசஞ்சாரம் செய்துவர நிச்சயித்துக் கொண்டு மந்திரிவசத்தில் தன்னிராச்சிய பரிபாலனங்களைக் கையளித்து, இவ்விஷயத்தில் மந்திரி தன்னைத் தடுக்கா திருக்கும்படிப் பலநியாயங்களை யெடுத்துக்காட்டி, அன்றிரவிற்றானே தன்னுடன் யாவரையும் வரவொட்டாமல் தன்னந்தனியாகத் தன னரண்மனையைவிட்டுப் புறப்பட்டு, மிகவும் வேகமாகச் செல்லக்கூடிய தனது புரவியின்மே லமர்ந்து, காட்டை நோக்கிச் சென்றனர்.

இப்படி யரசன் தன் னிராச்சியத்தைவிட்டு நெடுந்தூரஞ் சென்று காடு, மலை, நாடு, நகரம், வனம், வனாந்திரங்களைக் கடந்து பிரயாணப்பட்டு ஓர் நாள் ஓர் வனத்தில் தழைத்தோங்கி யிரானின்ற மரத்தடியின் குளிர்ந்தநிழலில் தன் பிரயாணவலுப்பைத் தணித்துக்கொள்ளும்பொருட்டு குளிர்ச்சியான அம் மரத்தடியின் நிழலிலிருந் திளைப்பாறப் போகக் கருத்துக்கொண்டு அம்மரத்தடியில் சயனித்துக் கொண்டு ஆழ்ந்த நித்திரையிலிருந்தார்.

இங்ஙனமிருக்க மாயாவதி, மாளவபுரி என்னும் தீவை யாண்டு இராச்சியபரிபாலனம்பண்ணு மரசியாய் முடிசூட்டப்பட்டபின்பு, பாலியசிட்சையிலடைந்த தேர்ந்த இராஜானுபவ காரியங்களை நடத்தும் அனுபவத் தேர்ச்சிக்குப் போதாமையால் அவ் வரசாட்சியைச் சிலகாலம் இராஜகார்ய துரந்தரர்வசம் ஒப்புவித்து நடத்தவேண்டியதாயிருந்தது. அவ் விராஜஸ்திரீக்கு விக்கிரமகேதுவின் மேல்

அதிகப் பிரீதியிருந்தும் அவர் அவள் விஷயத்தில் பற்றுதலா யிருக்கின்றாரோ இல்லையோவென்றறிய சிலகாலம் பொறுத்திருந்து அவரது பற்றுதலான விசுவாசத்தைச் செம்மையாய்த் தெரிந்துகொண்டு அவருக்குப் பூரணமா யளித்த வாக்குப்பிரகாரம் தன்னிடத்தில் ஏவல்பணிசெய்யும் மந்திரோபதேசம் பெற்ற பெண்மணிகளில் சிலரை ஏவி, விக்கிரமகேதுவை க்ஷணப்பொழுதில் கொண்டுவர வேண்டுமென்று ஆஞ்ஞாபித்தனள். அப்பெண்களும் தங்கள் மந்திரபலத்தால் மனோவேகம்'வாயுவேகமாகப்பறந்து, மரத்தின்கீழ் சயனித்து நித்திரையிலிருந்த விக்கிரமகேதுவை யசையாமல் ஆகாயமார்க்கமா யெடுத்துவந்து மாயாவதியின் அந்தப்புரத்தில் விட்டனர். விக்கிரமகேது நித்திரைதெளிந்து தன் னெதிரிலிருக்கும் மாயாவதியைக் கண்டவுடன் அவர் மனம்பூரித்து தேகம் பரவசமாகி, "ஆ கடவுளே" இந்த வடிவில்லாவழகியை நான் திரும்பவும் காண்பேனென்று கனவிலும் நினைத்திலேன். ஆ !என் குடியைத் தழைக்கவைத்து என்னை கொள்ளைகொண்டுபோக வந்த மாதே ! நான் உன்னை மறுபடியும் காணும்படியான பாக்கியம் நான் முன்செய்த நோன்பின் பயனேயொழிய வேறல்ல. இவ்வளவுநாள் தனியாய்விட்டு என்னை ஏங்கும்படிச்செய்து இப்போதுதான் என்னைக் காண உனக்கு மனம் வந்ததோ? உன்மேல் கொண்ட நீங்காக் காதலினால் கானகத்தி லின்னொருதரம் கண்டு சந்திக்கக் கொடுத்துவையேனோ என்று ஆசைகொண்டு அதனால் உன்னை காடு, கானகம், மலை, வனம், வனாந்திரங்களெல்லாந் தேடித் தேடிப் பார்த்தும் காணாமையால் இனிஎப்பொழுதும் உன் முகதரிசனத்தைக் காணவே போகிறதில்லையென்று தீர்மானித்து, உன்னைக் காணாத ஏக்கத்தால் நீ என்னை முற்றும்

மறந்தாயென்றே யிருந்தேன்" என்றார். மாயாவதி இவ்வார்த்தைகளைச் செவியுற்று, "இல்லை, இல்லை. அரசனே! நான் நெடுநாளாக உம்மைக் காணாதிருந்தாலும் நான் ஒருவருக்குக் கொடுத்த வாக்கை மீறி நடப்பேன் என்று எண்ணுதேயும். காலம் வந்தபோது ஒருவரையொருவர் காணும் படியான சமயம் நேரிடுமென்றிருந்தேன்" என்றனள். அதற்கரசன், "பெண்ணே! இந்த நம்முடைய பாலியகாலத்தில் நாமிருவரு மேகபோகமாய் ஒருமித்திராமல் என்னை மாத்திரம் தனித்திருக்கவிட்டிருப்பது உனக்குத்தருமமா? என் கண்கள் உன்னைப் பார்க்காமல் எவ்வளவுகாலந்தான் பஞ்சடைந்திருக்கும். நீ எனக்கு மூட்டிய காதல் என்னால் சகிக்கக்கூடாததா யிருக்கிறது" என்றார். மாயாவதி அரசனைப் பார்த்து, "ஐயா! இதுவரையிலும் உம்மைக் காணாமலிருந்த காரணம் நீர் என்னிடத்தில் உண்மையான பற்றுதலுடன் நிலைத்திருக்கின்றீரோ இல்லையோவென்று பரீட்சிக்கத்தானிருந்தேன். இப்போது நீர் என் மனதில் மிதமற்ற காதல்கொண்டிருக்கிறீரென்று நான் பிரத்தியட்சத்தில் கண்டமையால் உம்மை இங்கு கொணர்ந்து உமக்கு நான் சொல்லியிருக்கும் வார்த்தையின்படி நாமிருவரும் சுகித்து வாழக்கடவோம்" என்றனள். அரசனும் இதைக் கேட்டு மகிழ்ந்திருந்தான்.

பிறகு மாயாவதி தான் விக்கிரமகேதுவை மணம்செய்துகொள்ளும் ஏற்பாட்டைப்பற்றிப் பேச சமஸ்தானத்துப் பிரதானிகளையும், பிரபுக்களையும் கொலுமண்டபத்திற் கழைத்துவரச்செய்து அக்கூட்டத்தாரை நோக்கி, "சபையோர்களே! எனது தந்தை தேகவியோகமுற்றபின்பு நீங்கள் என்னைப் பரிபாலனியாக்கி, சர்வாதிகாரியாய்ச் செங்கோல் பிடித்தாளச் செய்தீரல்லவா? அப்படியிருக்க

நீங்களனைவரும் எனக்குக் கீழ்படிந்து எனது கட்டளைப்பிரகாரம் நடக்கவேண்டியவர்களாதலால் இப்போது நீங்கள் பார்க்கப்போகின்ற அரசகுமாரனை எனக்கு நாயகனாகத் தெரிந்துக்கொள்ளப்போகின்றேன். உங்களுக்கு அதைப் பற்றித் தெரிவித்து, உங்கள் சம்மதம் பெற்றுக்கொண்டு மெய்மணம் முடிப்பதற்காக உங்களனைவரையும் இங்கு வரவழைத்தேன். நீங்கள் இனி அவரை உங்கள் எஜமானனாகப் பாவித்து நடந்துக்கொள்ள வேண்டியதென்று சொல்லி, அரசனாகிய விக்கிரமகேதுவை அங்கழைப்பித்து அவர்களுக்குக் காட்டினள். அவர்களெல்லாம் அரசனைக் கண்டு மகிழ்ந்து மாயாவதியின் அபிப்பிராயத்திற் குடன்பட்டு, அரசனுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளையாவும் செய்து அவ்வரசனுக்கே அவ்விராச்சியத்தை முடிசூட்டி வைத்தார்கள்.

பிறகு மாயாவதி, மணத்துக்கு வேண்டிய காரியங்களைச் சித்தப்படுத்தக் கட்டளையிட்டு அவைகள் யாவும் குறைவின்றி நடந்துகொண்டிருக்கும்போது மாயாவதி அரசனை நோக்கி, “என்னை நீர் விவாகம் செய்துக்கொள்வதற்கு வேண்டிய காரியங்களெல்லாம் சித்தமாகிக்கொண்டிருக்கின்றன. ஆனால் அதற்குமுன் நான் ஓர் பிரதான ஆந்தரீக சங்கதியைப்பற்றி உம்மிடத்தில் ஓர் பிரமாணிக்க வாக்கு பெற்றுக்கொள்ளவேண்டியதாயிருக்கின்றது. அப்பிரமாணவாக்கு சந்திர சூரியர்கள் தங்கள் நிலையைவிட்டு மாறினாலும் அவ்வாக்கு மாறாததாயிருக்கவேண்டும். ஒருக்கால் காலவித்தியாசத்தால் அவ்வாக்கை நிறைவேற்றாமல் நீர் தவறிப்போவீராகில் நீர் என்மேல் வைத்திருக்கும் நேசத்துக்கு முறிவுண்டாகி, நான் உன் முகத்தைப் பார்க்கக்கூடாத சத்துருவாகி, உம்மைவிட்டு நீங்குவேன்.

பிறகு நீர் மாளாத் துயரத்துக்குள்ளாகி மடிய நேரிடும். ஆகையால் நீரதைத் தீரயோசித்து உறுதியான வார்த்தை யைச் சொல்லவேண்டு மென்றனள்.

அப்பா ! சித்திராங்கதா ! எனது குமாரத்தியாகிய தாயாபரசுந்தரி ஏற்படுத்தியிருக்கும் கடின ஏற்பாட்டை அலட்சியமாக எண்ணி, நீ நெஞ்சு துணிந்து அவளை அடைய விரும்பி யிருப்பதைப்போல், விக்கிரமகேதுவும் மாயாவதி யின் வார்த்தைக்கிணங்கி அவளது மனோபீஷ்டப்படி நடந் துக்கொள்ளக் காத்திருக்கிறதுமன்றி அவள்கேட்கும் வாக் கெப்பேர்க்கொத்ததா யிருந்தாலும் தான் ஒப்புக்கொள்வ தாயும், தான் தவறும்பட்சத்தில் தனதுயிரைப் பலியிட சித்தப்பட்டிருப்பதாகவும் மொழிந்தனர். மாயாவதி அர சனைப் பார்த்து, 'நான் உம்மிடத்தில் பெற்றுக்கொள்ளப் போகிற பிரமாணிக்கம் மிக்க கன்னகடூரமாயிருப்பதுமன்றி அது உம்மால் தாங்கக்கூடாததாகவும் இருக்குமென்று பயப்படுகின்றேன். நான் ஆழிசூழ்ந்த இத்தீவில் வசிப்ப தால் உமது தேசங்களிலிருக்கும் மானிடர் செய்யும் காரி யங்களைப் பார்க்கிலும் மீசுரப்பட்ட மாந்திரீக வல்லமை களும், தெய்வகடாட்சமும் எனக்குண்டு. அதனல் எனது விருப்பங்களும், செய்கைகளும் விபரீதப்பட்டிருக்கும். நான் உமது கண்களுக்கு முன்னுக உமக்குக் கோபத்தை வருவிக்கத்தக்க யாதாமொரு காரியத்தைச் செய்யத்துணி வதை நீர் காணும்போது அதற்கென்னை குற்றவாளியாக் கிக் கண்டிக்கலாகாது. நான் அக்கிரமமாக ஓர் காரியத் தைச் செய்வதாக உமது கண்களுக்குத் தோற்றுமாகில் நீர் மனந்தாளாமல் என் இவ்விதம் செய்கிறுயென்று என்னை வினவலாகாது. இவ்வித உடன்படிக்கைக்குட்பட்டு தவராமல் நீர் நடந்துக்கொள்ளும் பட்சத்தில் நாமிருவரும்

சதாகாலமும் சகல வைபவத்துடன் சுகித்திருக்கலாம். அப்படிச்செய்ய தவறிப்போகுங் காலையில், நாமிருவரும் ஒருவரைவிட்டொருவர் பிரிந்துபோகும் காலம் சம்பவிப்ப துடன் அதனால் நீர் மாளாத்துயரத்துக்குள்ளாகி மரண மடைய நேரிடும்' என்றனள்.

அப்போது அரசனான விக்கிரமகேது 'கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே' என்றபடி தனக்கு வரப்போகும்ஆபத்தை நினைக்காமல் அப்பெண்ணை நோக்கி, மாதே! இதுதானா நீ என்னிடத்தில் கேட்க சந்தேகித்துக் கொண்டிருந்த உடன்படிக்கை? நீ என்னை எக்காலமும் விட்டுப் பிரியாமல் இருக்கவேண்டும். நீ எனக்குச் சொல்ல விருப்பமில்லாத எந்தக் காரியத்தையுங் குறித்துக் கேட்க மாட்டேன். நீ என்னிடத்தில் ஏதாகிலும் குற்றத்தைக் கண்டுபிடிப்பாயாகில் என்றும் உன் சமுகத்தைவிட்டு நீங்கி யிருப்பேனென்று உறுதியாய்ச் சொல்லுகின்றேன் என்று சத்தியப்பிரமாணிக்கஞ் செய்துக் கொடுத்தனர். அரசனது பிரமாணிக்கத்தினால் திருப்தியடைந்த மாயாவதி அரசனைப் பார்த்து, ஐயா! நீர் எனக்குச் செய்துக்கொடுத்த சத்திய வாக்கின்படி நடப்பீரென்று நானுறுதியாக நம்புகின்றேன். ஆனால் நான் உமக்கு விரோதமாய் நடப்பிக்கும் காரியத் தைப்பற்றி உமக்கு ஆச்சரியமாய்க் காணப்பட்டால் அதை என்னிடம் வினவாமலும், மற்றவர்களிடம் வெளியிடாம லும், உம்முடைய மனதிலேயே வைத்துக்கொள்ளவேண் டும். நிற்க, நீர் அவ்விஷயத்தைக் குறித்து திகிலையும், பயத்தையும் அடையாமல், காரணமில்லாமல் ஒன்றையும் நான் செய்யமாட்டேனென்று உம்முடைய புத்தியில் பதித் துக்கொள்ளவேண்டும் என்று பலமாய் அவரிடம் வாக்குப் பெற்றுக்கொண்டனள்.

விக்கிரமகேதுவரசன், மாயாவதியின் விஷயத்தில் மட்டற்ற காமசன்னதங் கொண்டவராதலால் அவளாற் கூறப்பட்டதற்கு யாதொரு எதிர்மொழியும் பகராமல் அவளுடையகட்டுப்பாட்டுக்கு உட்பட்டமையால் கலியாணவிஷயமான வார்த்தைகள் தவிர வேறொன்றும் பிறகு பேசப்படவில்லை. மாயாவதி விக்கிரமகேதுவை பொற்சிங்காதனத்திலேற்றித் தானும் அவருடன் உட்கார்ந்து, மாளவபுரியின் சகல பெரிய மனிதர்களையும், இராஜகுடும்ப மனைத்தையும் மணக்கோலத்திற்கு வரவழைத்தாள். அவரவர்கள் ஆஜராய்த் தங்கள் தங்கள் அந்தஸ்திற்கும் யோக்கியதைக்கும் தக்கபடி சிம்மாசனத்தி னிருபக்கங்களிலும் உட்கார்ந்து, தாங்கள் செய்யவேண்டிய உற்றுரிமைக் கடமைகள் எல்லாம் சரிவர நிறைவேற்றி விவாகச்சடங்கை ஓர் உற்சவதினம் போல் மூன்றுநாள் வரையிலும் விதம்விதமான வேடிக்கைகளினாலும், ஆடல் பாடல் கூத்துகளினாலும் செய்துமுடித்தார்கள்.

விக்கிரமகேது அத்தியந்தசந்தோஷமடைந்து, இராஜகுமாரத்திக்கிணங்க அவளிஷ்டம்போல் நடந்து அவளுக்குத் திருப்தியுண்டாகும் விஷயத்தில் முயற்சிசெய்து அவளைப் பிரதிதினமும் களிக்கச்செய்வதே அவருடைய முக்கிய வேலையாக யிருந்ததல்லாமல் தன் தேசத்தினுடைய வியாபகமும் மந்திரிப் பிரதானிகள் முதல் குடிகள் யாவரும் அரசில்லாமல் தத்தளிப்பார்களேயென்ற கலக்கமுமில்லாத சிந்தையுடனிருந்தார். விவாகம்முடிந்த ஒருவருஷத்திற்குப் பின்னர் அரசியாகிய மாயாவதி நல்ல சுபமுகூர்த்தத்தில் ஓர் ஆண்குழந்தையைப் பிரசவித்தனள். இக்குழந்தை மிகவும் சௌந்தரியத்துடன் விளங்கினமையால் அந் நாட்டிலுள்ளார்யாவரும் அக்குழந்தையை ஆவலுடன்

வந்துபார்த்து மகிழ்ச்சியடைந்து அந்நாளை சந்தோஷத்துடன் கொண்டாடினார்கள். அச்சமயத்தில் அரசன் அரண்மனையிலிராமல் வேட்டையாடக் கானகஞ்சென்றிருந்தமையால், பட்டத்தரசி சூரியகாந்திபோன்ற சுதனைப் பெற்றெடுத்தாளென்ற சமாசாரத்தைக் கேட்ட வரசன் அதிக சந்தோஷமடைந்து, கடவுளை ஸ்தோத்திரம்செய்து, பிள்ளையைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பத்தினால் அதிக தீவிரமாக அரண்மனை வந்துசேர்ந்தார். அப்போது அரசி அக்குழந்தையைக் கையில் வைத்துக்கொண்டு ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருந்தாள். அரசன் அப்பிள்ளையைத் தமது கரத்திலெடுத்து மார்போடணைத்து உச்சிமோந்து அன்பாக முத்தமிட்டுப் பின்பு தனது மனைவியின் மடிமீது வளர்த்திவிட்டனர். அப்போது யாவரும் பயப்படும்படியான உக்கிரத்துடன் ஓர் ஆண்நாய், தன் அகண்டவாயைத் திறந்துவண்ணம் அரசிக்கு எதிரில் நின்றது. இதைக்கண்ட அரசி, முன்பின் பாராமல் இக்குழவியை அருமையாய் ஈன்ற தந்தை எதிரிலிருப்பதையும் எண்ணாமல், குழந்தையை அந்நாயின் முன் வைத்தனள். உடனே அந்நாய் அக்குழந்தையை ஒரே வாயாகக் கவ்வி விழுங்கி வேகமாய் ஓடி, அவ்விடமிருந்து மறைந்தது.

விக்கிரமகேது தற்செயலாய்கண்ட சிசுஹத்திதோஷத்திற்காக வடைந்த திகிலும், கலக்கமும் இவ்வளவென்று சொல்லமுடியாது. அவர் தமது பாலியத்தில் பெற்றெடுத்த அரும்புதல்வனின் பேரழகு, அவர் அறிவை மயக்கிக் கொண்டிருக்க, சதிகாரியாகிய தன் மனைவிசடுதியில் பிள்ளையை நாய்க்கு இரையாக்கின கொடுஞ் செய்கைக்காக அவர்பட்ட துயரமும் சஞ்சலமும் ஆற்றமுடியாததா யிருந்தது. கடினசித்தமுடைய தாய், தன் பிள்ளையைச் சற்றும்

இரக்கமின்றி இப்படிச் செய்து, அரசனுடைய மனதைக் கொழுந்துவிட்டெரியும் தீப்போல் வெந்துருகி யிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் அரசனை மாயாவதி வதுவை செய்யுமுன் கொடுத்த வாக்கின்படி இதன் காரணத்தைத் துணிந்து கேட்க வழிவிடாததால், மதியின்றித் தான் செய்துகொடுத்தப் பிரமாணவார்த்தைக்காக சிந்தித்து, தன்னறைக்குள்ளே தனித்துப்போய் பெருந் துக்கத்துடன் அழத்தொடங்கி. "ஆ! கடவுளே! நான் என்னசெய்வேன்? துரோகியாகிய எனக்கு ஒரு அரும் புதல்வனைக் கட்டளையிட்டீர். அச்சிசுவைப்பெற்ற தாயே என் கண்முன்னர் நாய்க்கு இரையாகச் செய்தனள். இக்கொடூரச் செய்கையைக் குறித்து நானென்றும் பேசக்கூடாதென்று அவள் கட்டளைப்பெற்று பிரமாணிக்கத்துக்குள்ளாகி யிருக்கின்றேன். ஓ கொடும் பாதகியே! நான் காரணமில்லாமல் யாதொரு கொடுஞ்செய்கையும் செய்யமாட்டே னென்றாயே. உன்னுடைய குற்றமற்ற அரும் புதல்வனை இப்படியும் நாய்க்கு இரையாகச் செய்யலாமா? ஆ! சண்டாளி! என்ன நியாயத்துடன் இப்படிச்செய்தாய்?" என்று தனக்குத்தானே சொல்லி அங்கலாய்த்துக்கொண்டிருந்தனர். இவ்விதமாய் அரசன், மாயாவதியின் கொடூரச் செய்கைகாகத் தன் மனதிற்றானே சிந்தித்துக்கொண்டிருந்தாரேயன்றி அதைப்பற்றி யவளுடன் வார்த்தையாடினவரேயல்ல. இப்படியிருக்க மறு வருஷத்தில் மயாவதி கருப்பவதியாகி மகா சௌந்தரியம் நிறைந்த ஓர் பெண்மகவைப் பெற்றனள். அக்குழந்தையின் தேககாந்தியினாலும் சிறந்த அழகினாலும் பெற்றோர்கள், முன்பிறந்த குழந்தையைப் பார்க்கிலும் இதன்மேல் அதிக பாசம்வைத்து, மூன்றுநாள் வரையிலும் புத்திரியின் பிறப்பைப் பெருமகிழ்சியுடன் கொண்டாடினார்கள்.

விக்கிரமகேது தனக்குப் பிறந்த புத்திரியின் அழகினாலுண்டான மிதமற்ற சந்தோஷத்தினால் அக்குழந்தையை விட்டுப் பிரிய மனமில்லாதவராய் சதா அதனருகிற்றானேயிருந்து மகிழ்ச்சியுடனிருந்தனர். ஆனால் அவருடைய சந்தோஷம் நீடித்திருக்கவில்லை. அவர் எவ்வளவு சந்தோஷமடைந்தாரோ அவ்வளவுக்கவ்வளவு மனோவேதனையுண்டாயிற்று. எப்படியெனில் சிலநாட்களுக்குப் பின்னர் அரசியும் அரசனும் குழந்தையுடன் கொஞ்சிக்குலாவி மகிழ்ந்திருக்கையில், முன்போலவே ஓர்பெட்டை நாய் தன் அகண்ட வாயைத் திறந்தவண்ணம் அவர்களருகில் வந்து நின்றது. உடனே அரசி தன் குழந்தையை அந்நாயின் முன் வைத்தனள். அந்த நாய் க்ஷணப்பொழுதில் அக்குழந்தையை ஒரே கவ்வாகக் கவ்வி விழுங்கிட்டு அவ்விடத்தைவிட்டு ஓடி மறைந்தது. இதைக் கண்ணாரப்பார்த்திருந்த விக்ரமகேது, முன் தனக்கிருந்த ஆற்றாமைக்கு இப்போது நடந்த இக்கொடுஞ்செயல் அதிகமாக அவரை கஷ்டத்திற்குள்ளாக்கியது. அரசி செய்யும் எவ்வித காரியத்தைப்பற்றியும் எவ்வளவும் வினவலாகாதென்றுவாக்களித்திருந்த போதிலும், அரசனுக்கு இப்போது ஏற்பட்ட அடங்கா ஆற்றாமையும் தாளாச்சஞ்சலமும் பெருகி, தனது சத்தியவாக்கைத் தவிர்ப்பதே தர்மமென்றெண்ணவேண்டியதாயிற்று. செங்கோல் செலுத்து மரசனாதலால் தான் சத்தியம் தப்பலாகாதென்றும், அப்படிச் செய்த சத்தியத்தை மறுப்பதைவிட அரசியை விட்டுத் தனித்து, அவளாசையை அடியோடு நீக்குவது தகுதியென்றும், இதற்கு மிஞ்சிய வழி வேறொன்றுமில்லையென்றும் பலவாறாய்ச் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

மாயாவதியின் கொடும் பழிக்காக சற்றும் மனந் தாளாமலிருக்கும் விக்கிரமகேது, ஓர்நாள் தன்மனைவியினி

டம் வார்த்தையாடிக்கொண்டிருக்கையில் அவளை நோக்கி, "மாதே! என் அரசாட்சியை நிர்மிமித்தமாய் விட்டு உன்னிடமே நெடுநாளாகத் தங்கியிருப்பதால் என் தேசபரிபாலனம் நிர்வகிக்கப்படும்வழி யேதென்பதையு மறியாததால் ஒருமுறை நான் என் தேசம்போய் என் குடி ஜனங்களைக் கண்டு, அவர்களுடைய நிர்வாகங்களை யறிந்துவர எனக்கு விடைகொடுத்தனுப்பவேண்டும். என் வருகைக்காக எனது குடிஜனங்கள் சதா எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள்"! என்றார். மாயாவதி அரசனை நோக்கி, "நாதா! நீர் தெரிவித்த விஷயமோ மறுக்கத்தக்கதன்று; உமது தேசத்திற்கு நீர் திரும்பிப்போய் உமது குடிஜனங்களைக்கண்டு களித்து, உமதரசாட்சியின் காரியங்களைப்பற்றி விசாரித்தறிவது எனக்கு மிகவும் இஷ்டந்தான்; தவிர நீர் இப்போதே ஆலசியமில்லாமல் உமது நாட்டுக்குச் செல்ல வேண்டி யிருக்கின்றது. ஏனெனில் வல்ல பராக்கிரம வீரர்களாகிய உமது அயல்நாட்டரசர்கள் நீர் உமது சிங்காதனத்தில் வீற்றிராமல் காணமற்போன சமயமறிந்து உமது சேனைகளுட னெதிர்த்துச் சண்டைசெய்து உமதுநாட்டை யபகரித்துக்கொள்ள இப்போது படையெடுத்து உமது தேசத்தின் எல்லையில் வந்திறங்கி யிருக்கிறார்கள். ஆதலால் இப்போதே அவர்களுடனெதிர்த்து சண்டைசெய்வதற்கானப் பிரயத்தினங்களைச் சர்வ ஜாக்கிரதையுடன் செய்ய வேண்டியிருப்பதால் நீர் கணப்போதேனும் தாமதியாமல் போகவேண்டியது. உமது படைகள் வீரசூரர்களா யிருந்தாலும் மாற்றரசர்கள் மிகுந்த பராக்கிரமசாலிகளானதால் நீர் அவர்களை வெல்வது கடினம். ஒருக்கால் எனக்கு சமயம் வாய்க்கின் உம்மை அங்கு வந்துக் காண மறக்கமாட்டேன்" என்று சொல்லித் தனது மந்திரபலத்தால் ஓர்

பூதத்தை வரவழைத்து, எதாப்பிரகாரம் அவரது தேசத்தையடுத்த வனத்தில் விட்டுவரும்படி ஆக்ஞாபித்தனள். உடனே அப்பூதம் ஆகாசமார்க்கமாய்த் தூக்கிக்கொண்டு வந்து அவரது நாட்டைச்சார்ந்த காட்டில் விட்டுச் சென்றது. அரசன் அக் காட்டைக்கடந்து நாட்டிற்குள்பிரவேசித்து, தனது அரண்மனையைச் சேர்ந்ததும் நெடுநாள்விட்டுப் பிரிந்திருந்த விசனம்தீர மந்திரிப்பிரதானிகளும்,மற்றுமுள்ள குடிகளும் சந்தோஷசாகரத்திலாழ்ந்தார்கள். பட்டணத்தைப் பரிபாலித்துவந்த மந்திரி அரசனையணுகிப் பணிந்து, அரசே! நீர் இங்கில்லாதகாலத்தில் உமதடிமையாகிய நான் நெடுநாள் கைப்பற்றி யரசாண்டுவந்த செங்கோலிதோ விருக்கின்றது. இதைக் கைப்பற்றிற்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தான். அரசன் மகிழ்ந்து, மந்திரி தனக்குப் பதிலாகப் பிரதி அரசுசெய்து செங்கோல் வழுவாமல் நீதியுடன் அரசாண்டு வந்ததற்கு அவனை வாழ்த்தி, தான் அகஸ்மாத்தாக மாளவபுரிக்குக் கொண்டுபோகப்பட்டதும், அங்கு மாயாவதிக்கும்தனக்கும் நடந்த வியப்பும் விந்தையுமாகிய சங்கதிகள் யாவையும்ஒளியாமற் சொல்ல,மந்திரி இதைக்கேட்டுப்பரமானந்தமடைந்தனன். இவர்க ளிவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் அயல்நாட்டரசர்கள் தங்கள் சேனைகளுடன் புடைசூழ்ந்துவந்து இப்பட்டணத்தைச் சூழ்ந்திருக்கின்றனரென்று ஒற்றர்கள் தெரிவித்ததைக்கேட்ட வரசன் தமது படைகளைச் சித்தப்படுத்தி பகையாளிகளுடன் போரிடச் சென்றனன். தமது படைகளுக்குத் தேவையான உணவுப்பொருள்களை மந்திரி சேகரித்துக்கொண்டு அவைகளை வண்டிகளிலும்,கோவேறு கழுதைகளின்மேலும் ஏற்றிக்கொண்டு சென்றான். அப்போது திடும்பிரவேசமாக மாயாவதி சில மாதர்களுடன்

அங்குப் பிரவேசித்து, அவ்வுணவுப் பொருள்களாகிய ரொட்டி, பழங்கள் முதலிய யாவையும் கொட்டிக்காலால் துவைத்துச் சின்னுபின்னமாக்கி விட்டனள். இதைக்கண்ட மந்திரி ஒன்றுந்தோன்ருமல் நிற்கையில், மாயாவதி அவனை நோக்கி, நீ அதிசீக்கிரமாக அரசனிடம்சென்று, மாயாவதி யென்னும் பெயருடைய உமது மனைவி, நீ கொண்டுவந்த உணவுப்பொருள் யாவையும் சேனைகளுக்கு உபயோக மாகாதபடி காலில்மிதித்துச்சின்னபின்னமாக்கினளென்று தெரிவிக்கும்படிக் கட்டளையிட்டனள். மந்திரி அவ்வாறே அரசனிடத்திற்கு ஓடி, மாயாவதி செய்த கொடுமையைத் தெரிவித்து, படைகள் யாவும் பட்டினியால் வருந்தும் கோரத்தை விவரித்தான்.

இதைக்கேட்ட அரசன் துடிதுடித்த மனத்தனாய்த் தன் இரு குழந்தைகளையும் கொன்ற கொலைக்கார ஸ்திரீ எனது சேனைகளையும் வதையும்படிச் செய்தனளே. அவ ளுடைய முதலிரண்டு குற்றங்களும் மன்னிக்கப்பட்டாலும் முன்பின் யோசியாமல் படைகள் பட்டினியால் இறக்கும் படி உணவுப்பொருள்களை நாசமாக்கிய இக்கொடுங் குற் றத்தை மன்னிக்கமாட்டேன் என்றும்மட்டடங்காக்கோபத் துடன் இருக்கையில், மாயாவதி தனக்கெதிரில்வரக்கண்டு கோபத்தை வெளிக்குக் காட்டாமல் அவளை நோக்கி மாதே! இனி நான் சற்றும் பொறுமைக்கையாடாமல் எனக்கு மேலிட்டதுன்பமே மிதமற்ற வியாகூலத்தையும், மனமுறிவையும் உண்டாக்கிவருவதால் உன்னுடைய அக் கிரமச் செயல்களைப்பற்றி நான் மவுனம் சாதிப்பது பய னற்றதாகும். நீ என் அரும்புதல்வனையும், புதல்வியையும் நாய்களுக் கிரையாக்கி, நான் சதாகாலமும்விசனத்திலிருக் கச் செய்தாய். இப்போது என் படைகள் பசியால்நொந்து

லருந்தும்படி அவர்களுடைய உணவை நாசஞ்செய்துவிட்டாய். ஓ நன்றிகெட்டவளே! நான் உன்மீதுவைத்த தயவுக்கும், மிதமற்ற அன்புக்கும் நீ என்விஷயத்தில் காட்டவேண்டிய பிரதிபலன் இதுதானா? நீ எனக்குச்செய்த கொடுஞ் செயல்களின் பயன் ஏதென்பதை விரித்துரைக்கப் பிரார்த்திக்கிறேன். இதோ என் சைந்நியங்களெல்லாம் ஆகாரமின்றி மடிகின்றார்களே. நீ செய்த கொடுஞ்செயலால் நான் சத்துருக்களுடன் எதிர்த்துச் சண்டைசெய்ய ஏதுவில்லாமற் போய்விட்டதே. நீ என் ஆபத்துக்காலத்தில் சகாயம் செய்வதைத் தவிர்த்து, நீயேஇப்படிகாரியஞ் செய்தனையே என்று துக்கித்துக்கொண்டிருந்தனர்.

அரசன் நெடுநேரம் வரையிலும் இப்படிப் பேசுவதை மாயாவதி பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்து,பிறகு அரசனை நோக்கி, "ஐயா! தாங்கள் எனக்குக் கொடுத்த வாக்கை மீறி இவ்விதம்பேசுவது நீதிதானோ? நான்செய்த காரியங்கள் உமது பார்வைக்கு அக்கிரமமாய்க் காணப்படினும், அதுவிஷயத்தில் நீர் தலையிடப்படாதென்று நான் உம்மிடத்தில் கடினமாய் வாக்குப்பெற்றுக்கொண்டேனல்லவா? அதற்கு மாறாக நீர் நடப்பதுடன் என்னையும் நிந்திக்கலானீர். இது உமக்கு தருமந்தானா? ஆ! சற்றும் அறிவில்லாத அரசனே!

"பொல்லாத சொல்லிமறைந் தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுத்தும்—நல்லாய்
மணலுண் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும்."

என்றபடி,உமதுநாவையடக்கிக்கொண்டிராமல்நான் நடப்பித்துவந்த காரியங்களைப்பற்றி விபரீதார்த்தங்கொண்டு என்னைக் காரணம் கேட்பது உமதுஅழிவுகாலத்தின்பலன்

என்பதை நீர் உணரக்கடவீர். நான் செய்துவந்தகாரியங்கள் யாவும் தக்க நியாயத்தைக்கொண்டே செய்துவந்தேன். எப்படியெனில், நான் இரு குழந்தைகளையும் எனது குருவாகிய பூதகணங்களிடம் வளர்த்து கல்வி பயிலுவதற்காக அனுப்பியிருக்கிறேன். ஆனால் உமது கண்முன் அவைகள் நாயினால் கவ்வப்பட்டு விழுங்கப்பட்டதென்று தோன்றிற்று. இப்படி நான் சொல்வது உமக்கு நிச்சயம் ஏற்படாவிடில் அவர்களிருவரையும் இதோ கண்டுகளிக்கப் போகிறீர்" என்று தெரிவித்தனள். உடனே அவ்விரு குழந்தைகளும் அகஸ்மாத்தாகத்தன்னெதிரில் வரக்கண்ட விக்கிரமகேது, ஆச்சரியவந்தனாய் அக்குழந்தைகளை வாரியெடுத்துமடியில்வைத்துக்கொண்டு முத்தமிட்டு சந்தோஷ சாகரத்திலாழ்ந்திருந்தான். மாயாவதி, அரசனைப்பார்த்து "உமது படைகளின் உணவுப்பொருள்களைத்தக்ககாரணத்துடன் நான் அழித்திருக்க, அதுவும் உமது கண்களுக்கு அக்கிரமமாய் ஏற்பட்டது. எப்படியெனில், இப்போது படையெடுத்துவந்த மாற்றரசர்கள் உமது நாட்டை எவ்விதத்திலும் கைப்பற்றிக்கொள்ள நினைத்து, உமது மந்திரிக்கு ஏராளமான பொருளைக்கொடுக்க, அவன் உமது சேனைகளுக்குச் சித்தப்படுத்திய உணவுப்பொருள்களில் நஞ்சு கலந்திருக்கின்றான். அவ் விஷத்தினால் நீரும் உமது படைகளும் மாண்டபிறகு மாற்றரசர்கள் சுலபமாக இந்நாட்டைக் கைப்பற்ற விருந்தனர். ஆகலால் அவ்வுணவுப் பொருள்களைச் சின்னபின்னமாக்கினேன். வேண்டுமானால் சிதறிக் கிடக்கும் உணவுப் பொருள்களில் கொஞ்சம் எடுத்து உமது மந்திரியை உண்ணும்படிச் செய்வீராகில் அதன் உண்மைத் தெரியவரும் என்றனள். அரசனும் அவ்விதமே செய்ய, தனது குற்றம் வெளிப்பட்டதை யறிந்த மந்திரி

புசித்து உயிர் துறந்தனன். அப்போது மாயாவதி அரசனைப் பார்த்து, ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டென்றபடி, முடிவுவரையிலும் எனது செயலைப்பாராமல் உமது முடிவைச் சீக்கிரத்தில் தேடிக்கொண்டீரே என்று சொல்லித் தனது பூதகணத்தை நினைத்தவுடன் ஆயிரக் கணக்கான பூதங்கள் தோமரம், உலக்கை, பிண்டி முதலிய ஆயுதங்களுடன் மாற்றரசர் படையிற் புகுந்து சின்னபின்னமாகப் படைகளைச் சிதறவடித்து நாசமாக்கி மாயமாய்ப்போயின. மாயாவதியும், இரு குழந்தைகளும் மாயமாய்ப் போய்விட்டார்கள். தனக்கு நல்லெண்ணத்துடன் மாயாவதி செய்த காரியங்களைப் பொறுமையுடன் சகித்திராமல் அவசரப் பட்டமையால் மாயாவதியின் கடின வாக்கின்படி அவளை விட்டுப்பிரிய நேர்ந்ததே யென்று விக்கிரமகேது நினைத்து சதாகாலமும் அவள்மேல் நியாபகமாயிருந்து ஊண்உறக்கமின்றிச் சிலநாட்களில் மரணமடைந்தான்.

ஆசையால் அப்பா! சித்திராங்கதா! விக்கிரமகேதுவைப்போல் நீயும் மங்கையரது மையலால் உயிரிழக்காமல் உனது நாட்டை யடையக்கடவாய். இதைப்பற்றி திர யோசித்து, உனது முடிவான கருத்தை எனக்கு நாளைய தினம் தெரிவிக்கவேண்டுமென்று அரசன் சொல்லித்தான் அந்தப்புரஞ் சென்றனன்.

சித்திராங்கதன் அரண்மனையைக் கடந்து, அரசன் சொன்ன தெதையும் லட்சியம் பண்ணாமல் சாவுக்குத் துணிந்த சிந்தையையே மேற்கொண்டு கிழவியின் வீட்டையடைந்தான். அரசனாகிய புத்திசேனன் தனக்கு மொழிந்த புத்திமதிகளை யெல்லாம் ஆதியோடந்தமாய் கிழவிக்குரைத்து, அன்றிரவைப் போக்கி மறுநாளுதயம் அரண்மனையைச் சேர்ந்தனன். சித்திராங்கதனைக் கண்ட

வுடன் அரசன் அதிக திகிலடைந்து, அவனைத் தன்னே காந்தமண்டபத்திற் கழைத்துக்கொண்டுபோய்.'' இராஜ புத்திரா ! நான் உன்னை இப்போது பார்த்ததற்கு என்னைக் களிக்கும்படிச் செய்வையோ? அல்லது கலங்கும்படிச்செய் வையோ ? உன் முடிவான யோசனை யாது ? நான் உனக் குத் தெரிவித்த புத்தி போதனைகள் நன்காராய்ந்தனையா என்று வினவினர். சித்திராங்கதன் மன்னனைப் பார்த்து நான் முதலில் கொண்ட நோக்கமே என் புத்தியில் பதிந் திருக்கின்றது. தைரியமே ஜெயத்தைத் தரும் என்பது உலக அனுபவம். எப்படியெனில், மகா சிறப்புற்றோங்கிய **தனேஸ்வரம்** என்னும் நகரை யாண்டுவந்த **வீரபத்மன்** என் னும் அரசனுடையகுமாரன் **வசந்தகேது** என்பான், தான் சில வருடங்கள் வரையில் யாத்திரை செய்துவர அவாக் கொண்டுத் தன் தந்தையின் அனுமதிபெற்று வழிக்குத் துணையாகச் சில படைவீரர்களையும், தனது பொக்கிஷத் திலிருந்து ஏராளமான பொருள்களையும், நவரத்தினங்களை யும் கணக்கு வழக்கின்றி எடுத்துக்கொண்டுத் தன்தந்தை யால் தனக்கு உயிர்த்துணையாக அனுப்பப்பட்ட **சுப்பிர காசன்** என்பவனுடன் பிராயாணப்பட்டான்.

இவ்விதம் பிரயாணப்பட்டவசந்தகேது, தான்சென்ற விடங்களிலெல்லாம் மனங்கொண்டமட்டும் பொருளை ஆங் காங்குள்ள நாட்டு ஜனங்களுக்கு வெகுமானமாய் வாரி யிறைத்து பூரிகொடுத்துக்கொண்டு வந்தமையால், பிரஜை கள் அவனது தயாளகுணத்திற்கு நன்றி கூறி அவனைப் போன்ற ஓர் அரசகுமாரனை இப் பிரபஞ்சத்தி லெங்குங் கண்டதில்லை யென ஆசிகூறிப் புகழ்ந்துக் கொண்டாடி னார்கள்.

இப்படியிருக்க, ஓர்நாள் வசந்தகேது தன் துணைவ னை சுப்பிரகாசனைப்பார்த்து, "நண்பா ! நான் இதுகாறும்

அரசகோலமாய் யாத்திரை செய்துவந்ததைத் தவிர்த்து, சாதாரண மனிதர்களைப்போல் பிரயாணஞ்செய்ய விருப்புற்றிருப்பதால் என்னைச் சூழ்ந்துவரும் திரளான இராணுவங்களால் ஏழை மனிதர்களுடைய காரியா காரியங்களைக் கண்டு மகிழ இடமில்லாம லிருக்கின்றது. அவ்வித சாதாரண மனிதர்களின் நடவடிக்கைகளையறிய எனக்கு மிகவும் ஆசையாயும் வேடிக்கையாயு மிருப்பது மன்றி, பிற்காலத்தில் உபயோகப்படக்கூடிய அநேககாரியங்களை அதனும் கற்றுக்கொள்ளவும் இடமாகும்" என்றான். சுப்பிரகாசன், அரசகுமாரனுடைய எண்ணத்திற்குச் சம்மதித்தமையால் இருவரும் சாதாரண மனிதர்களைப்போல் உடைகளைத் தரித்துக்கொண்டு, இரண்டு குதிரைகளுடன் தங்களுக்கு வேண்டிய நவரத்தின பூஷணாதிகளையும், பணங்களையும் எடுத்துக்கொண்டுத் தாங்கள் திரும்பி வருமளவும் குறித்த இடத்திலேயே இருக்கும்படி சேனைகளுக் குத்தரவளித்துப் பிரயாணத்தைத் துவக்கினார்கள்.

இவர்கள் சிலநாள் பிரயாணஞ்செய்தபின்னர், **பிரதாபசீலன்** என்னும் அரசன் அரசாண்டுவரும் **சிம்மபுரியைச்** சேர்ந்து, அங்குள்ள ஓர் சத்திரத்திற்றங்கினார்கள். அவர்கள் வெளிப்பார்வைக்கு வழிப்போக்கர்களாகவே காணப்பட்டு, அங்குவந்துசேர்ந்த மறுநாளில் பட்டணத்தைச் சுற்றிப்பார்க்கப்புறப்பட்டு, அவர்கள் எண்ணியிருந்தபடி அப்பட்டணம் சிறப்பும் செழிப்புமாகவே யிருக்கக்கண்டார்கள். அவ்விடத்திலிருக்கும் அரண்மனையின் அரணிப்பான விநோத வேலையானது அவர்களுக்கு மிதமற்ற ஆச்சரியத்தை யுண்டாக்கினதுமன்றி அவ்வரண்மனை மற்றதேசங்களிலிருக்கும் மாதிரியாய்க் கட்டப்படாமல் பிரத்தியேகமாய் மைதானமொன்றில் தாழ்ந்த மதில்களால் சூழப்

பட்டு, அதன்மத்தியில் தனித்தனியாகிய சிறுகட்டடங்கள் பலகட்டப்பட்டிருந்தன. அவர்கள் அம்மதில்களுக்குள்ளே போகாமல் சுவருக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருக்கையில், அக்கட்டடங்களுக்குள் மனிதர்களுடைய பேரிரைச்சல் அவர்களுடைய காதுகளைச் செவிடுபடச் செய்தது. உள்ளிருக்கும்மனிதர்களை அவர்கள் பார்க்கவிடமில்லாமற் போனபோதிலும், அவர்கள் சொல்லும் வார்த்தைகளெல்லாம் இவ்விருவருக்கும் நன்றாய்க் கேட்டன. அம்மனிதர்களிற் சிலர் உரத்து வசனித்தும், மற்றும் சிலர் பலத்த தொனியுடன் பாடியும், வேறு சிலர் கெக்கலிக்கொட்டி உரத்துச் சிரித்தும் வந்ததால் அக்கட்டடம் பயித்தியக்காரர்களை யடைத்துவைக்குமிடமென்று அறிந்துகொண்டார்கள். அவ்விடத்திலுள்ள பயித்தியக்காரர்களிலொருவன் சில கவிகளைப் பாடிக்கொண்டிருந்தான். அக்கவியின் கருத்தாவது, "அத் தேவதாஸ்திரீயைப் போன்றவள் இப்பிரபஞ்சமென்னும் சிங்காரவனத்தில்மலரும் புஷ்பங்களுக்கெல்லாம் மேலான புஷ்பம்போல மலர்ந்திருக்கிறாளென்றும், அவளுடைய வாய் மதுரமாகிய பானங்களை வார்க்கும் கிண்ணத்தைப் போலும், அவளுடைய முறுவல் உயர்ந்த முத்துக்கள் சொரிவதுபோலும், அவள் பேசும் வார்த்தைகள் குயிலின்தொனியைப்போலும், அவளுடைய கூந்தல் கருமணலைப்போலும் இருக்கின்றதென்றும் கூறினான்.

வசந்தகேதுவும், சுப்பிரகாசனும் அவ்விடத்தைவிட்டு சற்றுதூரம் போகையில் மற்றோர் மனிதனும் ஸ்திரீயின் ரூபலாவண்ணியத்தையே புகழ்ந்து பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டார்கள். இப்படியே ஒவ்வோர் கட்டடத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும், ஸ்திரீயின்மேல் கொண்ட

காதலைப்பற்றியே வாய்க்கு வந்தபடி பிதற்றிக்கொண்டிருந் தார்கள். வசந்தகேது சுப்பிரகாசனைப்பார்த்து, நண்பா! இம்மனிதர்களெல்லாம் ஓர் ஸ்திரீயின் மாய்கையிற் சிக்கித் தங்கள் மதியிழந்து பைத்தியம் கொண்டவர்களாகத் தோன்றுகின்றது. ஏனெனில், இவர்களில் ஒவ்வொருவ னும் காதலின் மகத்துவத்தையே வர்ணித்துப் பேசிக் கொண்டு வருகிறார்கள்” என்றான்.

இவ்வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருந்த அவ்வூர் வழிப்போக்கனொருவன் வசந்தகேதுவை நோக்கி, இக்கட் டடத்தினுள்ளிருக்கும் பைத்தியக்காரர்களனைவரும் காதல் மீறியே இவ்வகையான நிர்ப்பந்த ஸ்திதிக்குள்ளாக ஏற்பட் டது, இவர்கள் பைத்தியத்திற்கெல்லாம் மோகவிவாரமே காரணமானதால், மோக லீலாவினோதங்களை வர்ணியாது பின்னொன்றைத்தான் பிதற்றிக்கொண் டிருக்கக்கூடும். இவ் வூர் அரசனுடைய குமாரத்தியின் ரூபலாவண்யத்தை இம் மனிதர் கண்டதால், அவர்களுக்குச் சித்தப்பிரமை யுண் டாகிப் புத்திக்கலங்கிப்போ யிருக்கிறதென்று உங்களுக் குத் தெரியாதிருத்தலால், நீங்களிருவரும் அந்நியதேசஸ்த ரென்று அறிந்துக்கொண்டேன். நீங்கள் இந்நகரில் எத் திக்கில்போய் விசாரித்தபோதிலும் இவ்வூர் அரசகுமாரத்தி யின் அழகே இந்நிர்ப்பாக்கியர்கள் அனைவரையும் பைத்தி யக்காரர்களாகச் செய்வித்ததென்றே சொல்லுவார்கள். அவ் விராஜபுத்திரி, சில சமயங்களில் சகலரும் தன்னைப் பார்க்கும்படி பகிரங்கமாய் நடனசாலையில்வந்து விளையாடு வாள். அப்போது அவளைப் பார்ப்போரனைவரும் அவ ளது மையிட்டக்கண்களை மலரவிழித்து மிரட்டும் பார்வை யில் சொக்கி, மதனனம்பால் வெந்துநொந்து வாடிவதங்கி, அவளது ஏக்கத்தால் ஊக்கமழிந்து, நிலைதளர்ந்து, புத்தி

சித்தமெல்லாங் கலங்கி, பைத்தியக்காரர்களாகின்றார்கள். இவ்வித பைத்தியக்காரர்களுக்கென்றே அரசனால் கட்டி வைத்திருக்கும் இக்கட்டடங்களில் அவர்களுடைய மீதி வாழ்நாட்களைக் கழித்து வருகின்றார்கள். பிரதாபசீலன் என்னும் பெயர்படைத்த இவ்வரசன் சகலகாரியங்களிலும் சர்வோத்தமனும், புண்ணியபுருஷனுமாயிருந்தபோதிலும் தன் குமாரத்தியை மறைத்து வைப்பதற்குப் பதிலாய், தேவகன்னிகைகளுக் கொப்பாகிய அவளது சுந்தரத்தை எத்தேசத்தாருங் கண்டு, அதனால் அவர்கள் கெட்டுப் போகச்செய்வதே தனக்கோர் பெருத்த புகழென்று நினைத் திருக்கின்றார்" என்றான்.

அத்தருணத்தில் திரளான ஜனங்களும், சில சேவகர் களும் இரண்டு வாலிபர்களை பைத்தியக்காரர்களிருக்கும் கட்டடத்திற்குநேராய் நடத்திக்கொண்டு வருவதை வசந்த கேது கண்ணுற்று, ஆ! நாம் வசனித்துக்கொண்டிருந்தவண் ணமே இதோ நடப்பித்துக்கொண்டுவரு மிவ்விருவரும் காதல்மீறி பைத்தியங் கொண்டவர்களாகவே யிருக்கவே ண்டுமென்றான். அதற்கு அத்தேசத்தான் "ஆம். அது உண்மைதான். இப்பொழுது சோதிமதி என்னும் அவ விராஜகுமாரத்தி நடனசாலையில் ஆடிக்கொண்டிருக்கிறா ளென்றான். வசந்தகேது உடனே அவ்விடம்விட்டு அப் பால் நடக்கத் துரிதப்பட்டான். சுப்பிரகாசன், அவனைப் பின்தொடர்ந்து, அவன் அவ்வளவு தீவரத்துடன் ஓட்ட மும் நடையுமாய்ப்போகவேண்டிய காரணமென்னவென்று வினவினான். வசந்தகேது தன் நண்பனைப்பார்த்து, "சிம்ம புரியின் அரசகுமாரத்தியாகிய ஜோதிமதி என்னும் அழகு சுந்தரி! நடனசாலையில் நடனஞ் செய்கின்றாளாம்; நான் அவளை நேரில்பார்த்து அவளழகு எவ்வண்ணம் இருக்கிற

தென்றுப் பார்த்தறியவேண்டும். ஏனெனில், அவளைப் பார்ப்போரெல்லாம் மெய்மறந்து மதிமயக்கங் கொண்டு பைத்தியக்காரர்களாகின்ருர்கள் என்பது எனக்கு ஆச்சரியமும் வியப்பும் உண்டாகின்றதாதலால், அதன் உண்மையை நானே நேரில் கண்டுதெளிய தீர்மானித்துக்கொள்கிறேன்" என்ருன். அதற்கு அவன் உயிர்த்தோழனுகிய சுப்பிரகாசன் தடுத்து, அவனை நோக்கி, "அரசகுமாரா! என்னகாரியஞ் செய்யத்துணிந்தீர்? நாம் இப் பைத்தியக்காரர்களைக் கண்ணுரக்கண்டும், இந்தநகரத்தானெருவனுல் சகல சங்கதிகள் கேட்டிருந்தும் பழிபாவத்திற்குள்ளாக்கும் ஆசையை உள்ளத்தில் வைக்கலாமா? நீர் அப்படிப்பட்ட மாதுமேல் மையல்கொண்டு, காமப்பித்து மீறி கலக்கத்துக்குள்ளா யிருக்கும்படி நேரிடில், நான் என்னசெய்வேன். நலமாக நாம் கண்டும் கேட்டுமிருக்கிற மாநிர்ப்பாக்கியர்களின் முடிவைப் பார்த்தாகிலும் நீர் திகிலடையவில்லையா?" என்ருன்.

வசந்தகேது இதைக் கேட்டவுடன் குலுங்கநகைத்து, நண்பா! நீ உண்மையாகவே மெத்த சபல சித்தமுள்ளவன். உன் வார்த்தைகள் நகைப்புக்கிடமாகின்றது. நீ திடசித்தமுள்ளவனென்று நான் இதுவரையில் நினைத்திருந்தேன். நான் அவளுடைய கட்டழகால் மற்றவர்களைப் போல் காமப்பித்துக்கொண்டு மெத்தவும் தத்தளிப்பேனென்று நீ எண்ணுதே. என் தந்தையின் அந்தப்புரத்தில் அதிவிந்தையாகிய சுந்தரப்பெண்களெல்லாம் சிந்தைகலங்கும்படி யிருந்தும், நிந்தையாகிய சொல்லுக் கிடங்கொடாமல் அவர்களைக் கனவிலும் நினையாமலல்லவோ விருந்தேன், இப்பூவுலகிலிருக்கும் எல்லா இராஜபுத்திரர்களைப் பார்க்கி

னும் நான் ஒருவனே காமசிந்தையற்றவனென்றுப் பல ரும் என்னை மெச்சிக்கொள்வதுண்டு. நீயும், ஆஸ்தானத்தி லுள்ளார் யாவரும் அப்படியே என்னை நிந்தாஸ்துதியாய் பேசுவது வழக்கமாயிருக்க, நான் ஸ்திரீகளின் மாயவலை யிற் சிக்கி, என் புகழுக் கழிவுதேடிக்கொள்வேனென்று நீ அஞ்சுகின்றாய். நான் அவளழகைக் கண்டுவர இஷ்டப்பட் டிருக்கிறதே தவிர வேறல்ல. அநேக அரசகுமாரர்கள், அவ ளழகால் சிறைப்பட்டபோதிலும் நான் அவளது அழகால் மதிமயங்காமல் அவளை மேற்கொண்டே வருவேனென்று நீ உண்மையாய் நம்பு" என் றிவ்வாறு உறுதிகூறி, சமா தானப்படுத்தி, அரசகுமாரத்தி நடனஞ்செய்யுமிட மெங் குள்ளதென்று விசாரித்துக்கொண்டே போனான். சற்று தூரம் போகையில் தனக்கெதிர்ப்பட்ட ஓர் வேதியரைக் கண்டு, அவருக்கு மிகுந்த மரியாதைசெய்து, நடனசாலைக் குப் போகும்வழி யெதுவென்று வேண்டிக்கொண்டான். அவ்வந்தணன், வசந்தகேதுவை நோக்கி, அப்பா! வாலிபா! நீ நடனசாலையின்மேல் ஆடுவதற் கிஷ்டமிருந்தால் நாளை வரையிலும் பொருத்திருக்கவேண்டும். ஏனெனில், இன் றையதினம் இராஜகுமாரத்தியான ஜோதிமதி யென்பாள் நடனசாலைக்குவந்து, தன்னாட்டத்தைத் துவக்கிவிட்டாள், ஆதலால் நீ வந்தவழியைப் பார்த்துக்கொண்டு திரும்பிப் போகவேண்டுமென்பதே நான் உனக்கறிவிக்கும் நல்லோ சனை யென்றான். அதற்கு வசந்தகேது அவரைப்பார்த்து, ஐயா! நான் அங்குபோய் நடனஞ்செய்யவேண்டுமென் பது என் கருத்தல்ல. இராஜகுமாரத்தியின் நடனத்தைக் கண்ணுற்று வரவேண்டுமென்னும் அவாவுள்ளவனா யிருக் கின்றேன்" என்றான். அதற்கவ் வேதியர், அவன்மேல் அதிக கோபமடைந்து "ஆ துணிகரமுள்ள வாலிபனே! நீ

இன்னும் சிலகாலம் இம் மண்ணுலகில் உயிரோடிருக்கப் பிராப்தியில்லையோ? அவளது சௌந்தரியத்தின் மகிமையால் உனது சித்தங்கலங்கி மெத்த தடமாட்டமாகிப் பயித்தியம்பிடிக்கக் காலம் வந்ததோ? ஜோதிமதி என்னும் அவ்வணங்கின் முகவஜீகரத்தைக் கண்டவர்களெல்லாம் நின்ற நிலை தெரியாமல் தடமாட்ட மடைந்து, சபல சித்தமடைந்ததை நீ கேட்டது மில்லையோ. அங்கமெல்லாம் நஞ்சு தோய்ந்த அவ் விராஜபுத்திரியைப் பார்க்காமல் நீ ஓடிப் போகாவிடில், உன்னைப்போ லொரு சண்டாளன் இப் பிரபஞ்சத்தி லிருப்பானென்று நான் நினைக்கவேமாட்டேன்" என்றார்.

அவ்வேதியர் உரைத்த இவ்வித கடினமான வார்த்தைகளையும் வசந்தகேது செவிகொடாமல், தான் கொண்ட நோக்கத்தையே கருதி, நடனசாலைக்குப் போகும் வழி ஏதென்று மறுபடியும் அவரைக் கேட்க, அவர் அதிக கோபத்துடன், "அடா துஷ்டா! சாகத்துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் ஆழம், என்றபடி உனக்குக் கெடுமதி கண்ணுக்குத் தோன்றவில்லை; நான் சொல்லும் புத்திமதிகளை நீ அசட்டை செய்துப் போகத் துணிந்தமையால் நீ துன்பத்தை யனுபவிக்கவேண்டிய இடத்திற்குப் போகும்வழி இதுதான்" என்று காண்பித்தான்.

பிறகு வசந்தகேது தன் தோழனுடன் அதிக தைரியமாய் நடனசாலைக்குச் சமீபமாய்ச் செல்லுகையில், அங்கு பேரிரைச்சலா யிருப்பதைக்கண்டு அதென்னவென விசாரிக்கும்போது, தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளையும் மற்றவர்கள் பந்துக்களாகிய வாலிபர்களையும் பின் சென்றோடி, அரங்கத்திலாடும் அத்தையல்மேல் மையல் கொள்வதற்கேதுவாகிய அவள் முகவிலாசத்தைப் பார்க்

காதிருக்கத் தடுத்து மறித்து இழுத்துக்கொண்டு மூலைக் கோர் கும்பலாய் நிற்கக்கண்டு நிகைத்து, வசந்தகேது தன் நண்பனைப் பார்த்து, "இவர்கள் எப்படிப்பட்ட பைத்தி யக்காரர்களா யிருக்கவேண்டும். தோலும், தசையுங்கூடிய ஊற்றச் சரீரத்தையுடைய பூவையரைக்கண்டும் மயங்கி மோகவிகாரங் கொள்ளலாமா? இவர்களுடைய மூடத்தன மென்ன?" என்று சிரித்துக்கொண்டு நடனசாலையின் மதில் களைத் தாண்டி இருவரும் உட்சென்றனர். அங்கு சில முதி யோர்கள் பெருங்கூட்டமா யிராந்ததுமல்லாமல் ஜோதிமதி நடிக்கும் சமயங்களில் மாத்திரம் அவளைப்பாராமல் விலகி யிருந்தார்கள். அவர்கள் வயதில் தளர்ந்த முதியோரா யிருந்தபோதிலும் அவ்வணங்கின் ரூபலாவண்யத்தைக் கண்டு மதிமருண்டு காமன்கணைக்கிலக்காகி, நமனுலகடை யும்வரையில் சிறைச்சாலையிலடைப்பட்டு அதோகதியாய்ப் போக நேரிடுமே யென்று நடுங்கிப் பயந்திருந்தார்கள்.

ஆனால் அந்நடனசாலையைச் சுற்றிலும் ஜனங்களொரு வருமிராமல் கண்ணுக்கெட்டாத தூரம் விலகியிருந்தார்கள். வசந்தகேது அதிக தைரியத்துடன் முன்னுக்குச்செல்வதை இங்கிருந்த முதியோர்கள் பார்த்து, அவன் விஷயத்தில் மிகுந்த பச்சாதாபப்பட்டு, அவன் வந்த வழியே திரும்பிப் போகும்படி உரத்தசத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்கள். வசந்தகேது அதைக் கேளாதவன் போல அதிவிரைவாக ஜோதிமதிக் கெதிரில் போய்விட்டான். அச்சமயத்தில் ஜோதிமதி தன்னாட்டத்தைச் சற்று நேரத்திற்குமுன்னே நிறுத்தித் தன் அந்தப்புரம்போகத் தன் சிவிகையி லேறிக் கொண்டு, தோழிகள் புடைசூழப் பிரயாணப்பட்டாள். ஆகையால் வசந்தகேது அவளுடைய முகத்தினழகைநேரில் பார்க்கமுடியாமற் போய்விட்டமையால் அதிக துக்காக்

ரேந்தனைய் அவனுடைய தோழனை நோக்கி, "நண்பா ! நானதிக துரதிஷ்டமுடையவன். ஏனெனில் நான் ஓர் விநாடிக்குமுன் இங்கு வந்திருப்பேனாகில் ஜோதிமதியின் ரூபலாவண்யத்தைக் கண்குளிரப் பார்த்திருப்பேன்" என்றான். அதற்கு சுப்பிரகாசன் "அரசகுமாரா ! அவளது ரூபத்தைக்கண்டு மதிமயங்கி நீர் துன்பமனுபவிக்கநேரிடுமே யென்று ஏங்கி யிருந்தேன். கடவுள் என்விஷயத்தில் அனுகூலமாயிருந்து அம்மாதை நீர் பார்க்காதவண்ணஞ் செய்ததற்கு நான் அதிக சந்தோஷமடைந்தேன்" என்றான்.

வசந்தகேது இதைக்கேட்டவுடன் நகைத்துத் தன் நண்பனைப்பார்த்து, "தோழா ! நீ தப்பபிப்பிராயங்கொண்டனை, இன்றைக்கு அவளைப் பாராவிட்டாலும் நாளைக்குத் தப்பாமல் அவளைக்காணவே போகின்றேன். நான் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றாமல் விடுவேனா? என்றைக்கு அவ்வடிவழகி நடனசாலைக்கு வந்து ஆடுகின்றனளோ அது வரையிலும் நான் காத்திருந்து அவளது சௌந்தரியத்தைக் கண்டு களித்துவருவேன் " என்று சொல்லி, அன்றுமுழுதும் அவள் நினைவால் காலத்தைப் போக்கி மறுநாள் நடனசாலைக்குப்போக வாயத்தமாயிருக்கையில் மந்திரிகளின் வேண்டுகோளால் ஜோதிமதி இனி நடனசாலையில் பஹிரங்கமாய் நடனஞ்செய்யக்கூடாதென்று அரசன் கட்டளைப்பிறப்பிக்க, அவ்விளம்பரத்தை யொருவன் பட்டணமுழுவதும் பறைசாற்றிக்கொண்டு வருவதை வசந்தகேது செவியுற்றுப் பொறிகலங்கி, பிரதிக்கினைத் தப்பித்தடுமாறினான்.

சுப்பிரகாசனுக்கோ இவ் விளம்பரத்தைக் கேட்டவுடன் பெருமகிழ்ச்சி யுண்டாகி அரசகுமாரனைப் பார்த்து, "இராஜபுத்திரா ! நீர் என் வீண்பிரமை கொள்கின்றீர்?

இவ்விளம்பரத்தால் தாங்கள் சகல ஆபத்துக்கும் நீங்கி யிருப்பது எனக்கு மிகுந்த சந்தோஷம். இனி அரசகுமா ரத்தியினழகால் காமப்பித்துக்கொள்ளும் வாலிபர்களுக்கு யாதொரு தீங்கும் நேரிடாது" என்ருன். வசந்தகேது அவனைப்பார்த்து, "நீ என்ன சொன்னபோதிலும் நான் கொண்ட எண்ணத்தை முடிக்காமல் போவேனென்று நீ நினைக்கவேண்டாம். இன்று அவ்வழகிய ஜோதிமதியைக் கண்டு சந்திக்காவிட்டாலும் எப்பொழுதும் நான் அவளைப் பாராமலேயிருப்பேனென்று நீ திடசித்தங் கொள்ளாதே" என்று சொல்லிப் பலபலவிதமாய் யோசித்து ஓர் உபாயஞ் செய்து தன் எண்ணத்தை முடிக்கவேண்டுமென்று, பொன் னும் பூஷணங்களும் போதுமான வரையில் எடுத்துக் கொண்டு அரசனுடைய தோட்டக்காரனைக்கண்டு, "ஐயா! இதை நீர் அங்கீகரித்துக்கொள்ள வேண்டியது. இது தவிர இன்னும் அதிக வெகுமதிகளை யுமக்குத் தருவேன். இதைச் சொல்ப வெகுமதியென்று எண்ணவேண்டாம்" என்ருன்.

விருத்தனுகிய அத்தோட்டக்காரன் அப்பையை வாங் கிக்கொண்டு வசந்தகேதுவைப் பார்த்து, " அப்பா! நீ கொடுத்த வெகுமதி சாமன்னியமானதன்று. அரசர்கள் அன்றி ஏனையோர் கொடுக்கத் தகுந்ததல்ல. என்னுல் ஏதோ உனக்குப் பிரயோசன முண்டாகுமென்றே இவ் வெகுமதி கொடுத்திருக்க வேண்டும். உனக்கு என்னுல் ஆகத்தக்க காரியமென்ன?" என்ருன். வசந்தகேது மறு மொழியாக, "ஐயா! அரசகுமாரத்தியான ஜோதிமதி இனி மனிதர் காணும்படி வெளிவரக்கூடாம லிருப்பதால் நான் அவளைக்கண்டு களிக்கும்படியான சமயமெனக்குண்டாக அவளுடைய அந்தப்புரத்தைச்சேர்ந்த தோட்டத்தில் நான்

காத்திருந்து, அவளைப்பார்க்கும்படிச் செய்ய உம்மை வேண்டிக் கொள்ளுகின்றேன்" என்றான்.

இவ்வார்த்தையைக்கேட்ட அக்கிழவன் அதிககோபங் கொண்டு, வசந்தகேது தந்த அப்பணப்பையைத் திரும்ப அவனிடந்தந்து, 'அஞ்சாத நெஞ்சுபடைத்த வாலிபா! நீ அவ்விராஜ குமாரத்தியைப் பார்த்தமாத்திரத்தில் மதி மயங்கி பித்தம்பிடித்தவனாவது உண்மை. அப்படியும்மீறி அவளைப்பார்க்க ஆசைகொள்வையேயாகில் தப்பாமல் நம திருவருயிரும் எமனுலகம் சேர்வது திண்ணம். ஆகையால் நீ வந்தவழியைப்பார்த்துக் கொண்டுபோ" என்றான் இதைக்கேட்ட வசந்தகேது சற்றும் அதைரியப்படாமல் பணப்பையை பின்னும் தோட்டக்காரனிடம் தந்து, "ஆ என் தந்தைக்கொப்பானவரே! எனக்கு உம்மைத்தவிர சகாயம் செய்வோர் வேறொருவரு மில்லையாதலால் உம்மையே நாடிவந்தேன். இனியாகிலும் என்விஷயத்தில் மறுத்தொன்றுஞ் சொல்லாமல் அவ்விராஜகுமாரத்தியை நான் பார்க்கத்தக்க உபாயஞ் செய்ய வேண்டுகின்றேன். அடுத்தவனை ஆதரிப்பது முக்கிய தர்மமாகையால், என் மீதில் கருணைபுரிந்து இப்பெரியதோர் சகாயத்தை எனக்குச் செய்யவேண்டும். இல்லையாகில் நான் சஞ்சலமென்னும் சாகரத்தில் சதாமூழ்கி மரணமடைய வேண்டியவனாயிருக்கிறேன்" என்றான்.

இவ்வார்த்தைகளை யெல்லாம் அருகிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த அத்தோட்டக்காரனுடைய மனைவி வசந்தகேதுவின்மே லிரக்கங்கொண்டு அவன்விஷயத்தில் கூடிய சகாயஞ்செய்யும்படி அவள் புருஷனுடன் விடாமல்போராடினமையால் அவன் யாதொருவிடையும் பகராமல் சற்று நேரம் ஆழ்ந்த யோசனையிலிருந்து, பிறகு வசந்த கேது

வைப்பார்த்து, "அப்பா! நான் உன்னை முதலில் கண்ட போதே உன்மீதில் எனக்குப் பிரியமுண்டாகி உனக்கு ஒத்தாசை செய்யவேண்டுமென்றே தீர்மானித்துக் கொண்டேன். உன் அபிப்பிராயத்தை நிறைவேற்றுகையில் உனக்கும் எனக்கும் யாதொருதீங்கும் நேரிடா வண்ணம் நான் ஒரு உபாயத்தை யோசித்திருக்கிறேன். அதாவது, உன்னை எனக்கு உதவியாளாக நியமித்துக் கொள்ளுகிறேன். நீ உன் தலைமயிரை அழுக்குப்படிந்த கந்தையால் மூடி தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டு, நரைத்தமயிரால் செய்யப்பட்ட பொய்மீசையும்தாடியையும் உன்முகத்தில் பொருந்த வைத்துக்கொண்டு அழுக்குநிறைந்த பழைய கந்தலொன்றை இடுப்பில் கட்டிக்கொள்வையாகில் உன்விஷயத்தில் அரசகுமாரத்தியாவது அவளுடையதோழிகளாவது சந்தேகிக்க இடமிராமலிருக்கும். இவ்விதம் செய்தாலொழிய சுந்தரமிலகிய அம்மாதை நீ காணமுடியாது. இதே என் முடிவான யோசனையாதலால் இதற்குன் கருத்தியாது?" என்று வினவினான்.

வசந்தகேது இவ்வுபாயத்திற்குச் சம்மதித்து தோட்டவேலைசெய்யும் கூலியாளைப்போல வேஷமாறி, தன் அழகிய கூந்தலை கிழவனால் கொடுக்கப்பட்ட கந்தையால் மூடி, அழுக்குப்படிந்த கந்தையைத் தரித்துக்கொண்டு, நரைத்த பொய்மீசையையும் தாடியையும் முகத்தில் பொருந்தவைத்துக்கொண்டான். சுப்பிரகாசன் தன் நண்பனுக்காக நெடுநேரம் காத்திருந்தும் வாராமையால் எக்காரணத்தினாலோ தோட்டக்காரனைக்கண்டு பேசப்போனவர் இன்னம் வாராத காரணத்தையறிய ஆவல்கொண்டு, அங்குபோய் வசந்தகேதுவை ஏற இரங்கப்பார்த்து, அவன் முற்றும் வேஷமாறியிருப்பதை யறிந்து ஆச்சரியமடைந்து நிற்கையில்,

தோட்டக்காரன் சமீபித்து, அவனை யார் என விசாரித்தான். வசந்தகேது, அவன் தன் சகோதரனென்றறிவிக்க, கிழவன், 'நல்லது, இப்போதே என்னுடன் நீ தோட்டத்திற்கு வந்து நான் உனக்கிடும் வேலைகளைச் செய்யவேண்டியதே தவிர வேறொன்றுமில்லை. ஆகையால் உன் சகோதரன் தன்னிருப்பிடம் பொய் அப்போதைக்கப்போது என்னிடம் வருவானுனால் இங்கு நடக்கும் விருத்தாந்தங்களை அறிவித்துக்கொண்டிருப்பேன்' என்றவுடன் சுப்பிரகாசன் தன்னிருப்பிடம் திரும்பிப் போய்விட்டான். பிறகு தோட்டக்காரன் வசந்தகேதுவை தோட்டத்திற்கழைத்துக்கொண்டுபோய் அவன் கையில் ஓர்மண்வெட்டியைக் கொடுத்து அதை உபயோகிக்கும் விதம் இப்படியென அவனுக்குக்காண்பித்து, வேலையையும் நியமித்தான். வசந்தகேது கிழவன் கட்டளையின்படி தனக்கிடப்பட்ட வேலையைக் கிரமமாகச் செய்துக்கொண்டு வந்தான்.

இப்படியிருக்க, ஒருநாள் தோட்டக்காரன் வசந்தகேதுவுடன் உணவருந்தியபின் தன்னிடத்திலிருந்த ஓர் வீணையைக் கையிலெடுத்து சுதிமீட்டி வாசிக்க ஆரம்பித்தான். வசந்தகேது கீதவாத்தியத்தில் தேர்ந்த நிபுணனுதலால் அக்கிழவன் வாசித்ததில் தனக்கவ்வளவு திருப்தியில்லாமையால் அதைப்பற்றி சந்தோஷப்படாமல் அத்தோட்டக்காரனை நோக்கி, "நீர் கற்றவித்தையைப் பிறர் கேட்டு உம்மைப் புகழவேண்டுமே யல்லாது உம்மை நீரே மெச்சிக் கொள்வது சரியல்ல" என்றுன். இவ்வார்த்தையைக்கேட்ட அவ்விருத்தாப்பியன் மிகுந்த கோபமடைந்து, உடனே அந்த வீணையை வசந்தகேதுவின் கையில் கொடுத்து, அவனுக் கேதாகிலும் தெரியுமாஞல் வாசிக்கச் சொன்னுன். வசந்தகேது, கிழவன் ஆனந்தமடையும் வண்ணம் சில சங்

கீதசுரங்க ளமைத்துப் பாடினன். அத்தருணத்தில் தோட்டத்தில் உலாவவந்திருந்த முதல் மந்திரியானவர், பாடல்களையும் அதற்குச் சம்பந்தமான வீணையின் சப்தத்தையும் கேட்டு சந்தடிசெய்யாமல் இவர்களிருவரும் இருக்கும் பக்கமாய்வந்து சற்றுநேரம் செவிகொடுத்து கேட்டுக்கொண்டிருந்து, பாட்டு முடிந்தவுடனே அவர்க ளிருக்குமிடத்திற்கு வந்து வசந்தகேதுவைப் பார்த்து, மறுபடியும் பாடும்படிக் கேட்டனர். உடனே அவன் வீணையைக் கையிலெடுத்துக்கொண்டு மந்திரிக் கவன்மீதில் மிதமற்ற பிரியமுண்டாகும் வண்ணம் பாடி வீணை வாசிக்க, அவர் ஆனந்த பரவசராய் அரசனிடஞ் சென்று இவனுடைய பிரதாபத்தைச் சொல்லிப் புகழ்ந்தார்.

மறுநாள் அரசன் தன் ஆஸ்தானத்திலுள்ள பிரபல சங்கீத வித்வான்களுடன் மந்திரி தெரிவித்த தோட்டக்காரனுடைய வேலையாளின் பாண்டியத்தை அறியவேண்டி தோட்டத்திற்கு வந்தார். அப்போது வசந்தகேது பழைய அழுக்குக்கந்தல்களைத் தரித்துக்கொண்டு நரைத்துப்போன மீசை தாடியுடன் அரசன்முன்வந்து வந்தனஞ்செய்தான், அரசன் இவனுடைய உடைபாவனைகளைப்பார்த்து, "அடா! அருவருக்கப்பட்ட சண்டாளா! நீ யார்? என்முன் இந்த ரூபத்துடன் ஏன் வந்தாய்? அப்பால் போ" என்று துரத்திக்கொள்ளவே, தோட்டக்காரன் அரசனையணுகி, "சுவாமி! இவன் தோட்டவேலையில் தேர்ந்தவனும் புத்திசாலியுமானதால் எனக் குதவியாக இவனை வைத்துக்கொண்டேன். இவன் பார்ப்பதற்கு அசங்கியப்படத்தக்கவனாயிருப்பினும் இவனுக்கிணை யாருமில்லையென மெச்சத்தக்க ஆடல்பாடல் சங்கீதங்களில் தேர்ந்த நிபுணன்" என்றான்.

இதைக்கேட்ட அரசன் வசந்தகேதுவைப் பார்த்து, இச்சபை முன்னர் உனக்குத் தெரிந்த பரதநாட்டியத்தை யும்,சங்கீதவர்ணனைகளையும் சகலரும்பார்க்கும்படிக் காண் பிக்கவேண்டு மென்றவுடன் அவன் அரசனும் மற்றுமுள்ள பரதநாட்டிய சங்கீதவித்வான்களும் ஆனந்தபரவசமாகும் படி நடனஞ்செய்து, இதைக்காட்டிலும் பதின்மடங் கதிக மாக சகலரும் சந்தோஷமடையும் வண்ணம் வீணையை மீட்டி வாசித்தான். பிறகு கின்னரம், வீணை, புள்ளாங் குழல் மூன்றையும் ஒருமிக்க வாசித்துத் தனது பிரதாபத் தைக் காட்டினன். அரசன் அவனுடைய சாமர்த்தியத் திற்கு மெச்சி 100-ரூபாய்களடங்கிய பை யொன்றை அவ னுக்குப் பரிசாகவளித்தான். வசந்தகேது அப்பணத்தை யாவும் அங்குக் கூடியிருந்த வித்வான்களுக் கெல்லாம் கொடுத்தான். ஆனல் அவர்களெல்லாம் இவனுடைய உதாரத்துவ குணத்திற்காக மெச்சிப் புகழ்ந்தார்கள்.

அரசனும் மற்ற பிரபுக்களும் தோட்டத்தைவிட்ட கன்று பிறகு வசந்தகேது தான் ஜோதிமதியைப் பார்க்கத் தனக்கிருக்கும் ஆசையை தோட்டக்காரனுக்குக் கியாபகப் படுத்தவே, அவன் வசந்தகேதுவைப்பார்த்து "வாலிபா ! நீ அதிசீக்கிரத்தில் அவ்வழகிய இராஜகுமாரத்தியைப் பார்க்க சமயம் வாய்க்கும். ஆனல் ஐயோ ! அம்மாதைக் கண்டவுடன் துன்பப்படநேரிடுமே யென்று விசனப்படு கிறேன்" என்று கூறினன். இப்படி தோட்டக்காரன் சொன்னது அவனுக்குப் பயத்தை யுண்டாக்குவதற்குப் பதிலாய் ஆசையையே அதிகமாக உண்டாக்கியது. மூன் றும் நாள் காலையில் வசந்தகேது தோட்டத்தில் வேலை செய்து சற்று இளைப்பாரவேண்டி ஓர் புட்பச்செடியின்கீழ் உட்கார்ந்து வீணையைக் கையிலேந்தி வாசித்துக்கொண்டி

ருக்கையில் ஓர் ஸ்திரீ அவனருகில் வந்து, "ஏ கிழவா! நீ எழுந்துபோ. இராஜகுமாரத்தி இங்கு வரப்போகிருள். நீ தோட்டக்காரனுடைய வேலைக்காரனுதலால் இராஜகுமாரத்திக்காக புஷ்பங்களைச் சேகரஞ்செய்வது உன்னுடைய வேலையல்லவா?" என்றுள்.

இராஜகுமாரத்தியைப் பார்க்க சமயம் அதிசீக்கிரத்தில் நேரிடப்போவதற்காக வசந்தகேது அதிக ஆச்சரியமடைந்து உடனே தோட்டக்காரனிடஞ் சென்று பூக்குடலையை எடுத்துக்கொண்டு, அதில் புஷ்பங்களைப்பறித்து நிரப்பி அந்த ஸ்திரியின்பின் செல்ல, அவள் அவனை அத் தோட்டத்தின் மத்தியிலிருந்த ஓர் மண்டபத்திற் கழைத்துச் சென்றுள். வசந்தகேது, தன் அசங்கியப்படத்தக்க வேஷத்துடன் பூக்குடலையைக் கையிலேந்திச் சென்றுன். இராஜகுமாரத்தி அங்கு சுமா 20-பெண்கள் புடைசூழ அங்குள்ள மண்டபத்தின் மத்தியில் தங்கக் சிம்மாதனத்தில் வீற்றிருந்தனள். அத்தாதிகள் ஒருத்தியைவிட மற்றொருத்தி அழகில் சிறந்தவளா யிருந்தமையால் ஜோதிமதியின் கொலுக்கூடத்தைச் சிறப்பிக்க அவர்களே தகுந்தவர்களென எண்ணவேண்டியிருந்தது. கண்ணெளிமழுங்கும்படியான அவ்விராஜபுத்திரியின் பிரகாசம் அவனது திருமுகத்தில் ஜொலித்துக்கொண்டிருந்தமையால் வசந்தகேது அந்த மண்டபத்தின் மத்தியில் அசையாமல் நின்று ஆச்சரியத்தினுல் மெய்மறந்து நிலைதளர்ந்தவனுய் அவளை யுற்றுப் பார்த்துக்கொண்டே நின்றுன். அவன் அப்போதிருந்த நிலைமை அத்தாதிகளனைவரையும் ஓயாமல் சிரித்துக்கொண்டிருக்கச் செய்ததுந் தவிர தங்கள் இராஜகுமாரத்தியின் பேரழகால் அவன் பரவசமாகி அவனது புத்தி சித்தமெல்லாங்கலங்கி மதிமயங்கிப்போனுனென் றெண்ணிக்கொண்

டிருக்கையில், அவன் அத்தருணத்தில் மெய்மறந்து கலக்கத்தால் தத்தளித்து இடிவிழுந்தவனைப்போல் ஏங்கி பிரமைகொண்டிருந்தும் அவ்வளவாக நினைவழிந்து போகாத ஸ்திதியிலேயே யிருந்தான்.

அப்போது தாதிகளி லொருத்தி வசந்தகேதுவைப் பார்த்து, "நீயேன் அசைவற்ற கற்சிலைபோல நின்ற நிலை பெயராமல் நிற்கின்றாய்? நீ கொண்டுவந்த புஷ்பங்களைக் கொண்டுபோய் அரசகுமாரத்திக்குச் சமர்ப்பி" என்றாள். வசந்தகேது உடனே தன் பிரமிப்பிலிருந்து சற்று சுதாரித்துக்கொண்டு அரசகுமாரத்தியின் ஆசனத்தைக் கிட்டிச் சென்று பூக்குடலையை வைத்து, அந்நங்கையின் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்தான். அரசகுமாரத்தி அவனை எழுந்திருக்கச் சொல்லும் வரையில் அவன் தரையைக் கவ்விக்கொண்டிருந்து பிறகு ஜோதிமதியின் உத்தரவின் பிரகாரம் அவன் எழுந்திருக்க, தாதிப்பெண்களெல்லாரும் அவனது அசங்கியப்படத் தக்க உருவத்தைப் பார்த்து சிரித்துக்கொண்டே யிருந்தனர். இராஜகுமாரத்தி, வசந்தகேதுவைப் பார்த்து, "நேற்றியதினம் என் பிதாவாகிய சக்ரவர்த்தியைச் சந்தோஷப்படுத்தினப் பிரகாரம் நீ இன்றையதினத்திலும் என்னை களிக்கச்செய்ய வேண்டும். நீ வீணை வாசிப்பதிலும் பரதநாட்டியஞ் செய்வதிலும் பூரணபாண்டித்திய முடையவனென்று என் பிதா சொல்லியிருந்தும் நான் அதை நம்பாமல் நேரில் உன்னைப் பரிட்சிக்க வந்தே" என்று சொல்லி ஓர் வீணையை அவன் கையிற் றந்தனள்.

வசந்தகேது உடனே வீணையைக் கையிலேந்தி சுதிமூட்டிப் பாடவாரம்பித்தான். அங்கிருந்தவர்களனைவரும் அவனைப் புகழ்ந்துக் கொண்டாடினார்கள். பிறகு அவ

னிடத்திலிருந்த வீணையை வாங்கிக்கொண்டு புள்ளாங் குழல், கின்னூரம், தம்புரு இவைகளை ஒன்றின்பின் ஒன்ருய்அவனிடங்கொடுக்க அவன் அவைகளை மிகவும் சாமர்த் தியமாய்க் கையாடி அவர்களனைவரையும் ஆனந்தசாகரத்தி லாழும்படிச் செய்தனன். பிறகு அரசகுமாரத்தி யவனைப் பார்த்து, "நண்பா! நான் உன்னைப்பற்றி கேள்விப்பட்ட வண்ணம் நீ சங்கீதத்தில் மெத்த நிபுணனென்பதையுணர்ந் தேன். நீ நாட்டியத்தில் மெத்த கெட்டிக்காரனென்றும் கேள்விப்பட்டேனுதலால் அதையும் நான் பார்க்க இஷ்டப் பட்டிருக்கிறேன்" என்று சொன்னவுடன் வசந்தகேது வாத்தியக்கருவிகளுடன் யாவரும் கண்டுகளித்து பரவச மாகும்படி நாட்டியஞ் செய்தான். இவன் ஆஸ்தானத்தி லுள்ள பண்டிதர்களெல்லாரிலும் மிகச் சிறந்தவனென்று யாவரும் கொண்டாடினார்கள்.

பிறகு அரசகுமாரத்தியும், பாங்கிமார்களும் அரண் மனைக்குச்சென்றவுடன்வசந்தகேதுதோட்டக்காரனுடைய வீட்டிற்குச் சென்ருன். அங்கு தன் நண்பன் சுப்பிரகாசன் வந்திருக்க, அவனுடன் தான் ஜோதிமதியைக்கண்ட விருத் தாந்தத்தைத் தெரியப்படுத்தி, இன்னும் சிலநாள் இவ்வே ஷத்துடனிருந்து இராஜபுத்திரிக்கு இன்னும் தன்மேல் இஷ்டமுண்டாகும் பிரயத்தனங்களைச் செய்யப்போவதா கத் தெரியப்படுத்தி, மறுநாளும் வழக்கப்படி தோட்ட வேலைக்குச் சென்ருன். சற்றுநேரம் வேலைசெய்தபிறகு இளைப்பாறுவதற்காக நீரகம்பொருந்திய சோலையினிழலில் பசும்புற்றரையின்மேல் உட்கார்ந்தான். அச்சோலையில் தழைத்திருக்கும் மரங்கள் ஏராளமாயிருந்ததால் குளிர்ந்த காற்றுவீச சற்று நித்திரை புரிந்து, யாரோ தன்னையழைக் கும் சப்தம் கேட்டு உடனே விழித்துகொண்டு, தன்னெதி

ரில் இராஜகுமாரத்தியின் தோழிகளிலொருத்தி நிற்பதைக் கண்டான் அம்மாது அவனை நோக்கி, அடா தோட்டக் காரா! உனக்கு என்ன அதிர்ஷ்டம் வந்தது. உன் அந்தக் கேடையும் கவனியாமல் அரசகுமாரத்தி உன்மேல் பிரிய முள்ளவளாய் இன்றிரவுக்கு உன்னை அவளிருக்கும் அந்தப் புரத்திற்கு வரும்படி கட்டளையிட்டிருக்கின்றனள். இன் ஹெருதரம் நீ பாடும் இனிய வோசையைக் கேட்கவும், நீ ஆடும் பரதநாட்டியத்தைப் பார்க்கவும் ஆசைகொண்டிருக் கின்றனள். ஆகையால் அஸ்தமிக்கும் வரையில் இங்கு தானே யிருவென்று சொல்லிப் போய்விட்டனள்.

வசந்தகேது தனக்குச் சம்பவிக்கப்போகும் அதிர்ஷ் டத்திற்காக சந்தோஷித்து, அதிவிரைவாகத் தோட்டக் கர்ரனிடம் ஓடி, நடந்த சமாசாரங்களைத் தெரிவித்து, உடனே திரும்பி முன்னிருந்த இருப்பிடத்தைச் சேர்த்து பசும்புல்லின்மேல் சயனித்துக்கொண்டு, அவன்எதிர்பார்த் திருக்கும் நற்சமயம் வரும்வரையிலும் வெகு ஆத்திரத் துடன் காத்துக்கொண்டிருந்தான். அப்போது சிப்பாய் ஒருவன் அவனைத்தன்னுடன்வரும்படி யழைத்துக்கொண்டு போய் இராஜகுமாரத்தியிருக்கும் அரண்மனை வாயிலில் விட்டு உள்ளேபோகும்படித் தெரிவித்தான். வசந்தகேது உள்ளேசென்று பார்க்கையில் அரசகுமாரத்தி ஓர்பொன்னு சனித்தி லுட்கார்ந்திருக்க அவளைச்சுற்றிலும் தாதிகள் உட்கார்ந்துக்கொண்டுத் தங்கள் எஜமானி சந்தோஷிக்கும் படியான வேடிக்கைக் கதைகளைச் சொல்லிக்கொண்டிருந் தார்கள். அவர்களனைவரும் வசந்தகேதுவைக்கண்டவுடன் அதிக சந்தோஷத்துடன் நம்மை உல்லாச காலஷேபத்திற் குள்ளாக்கும் தோட்டக்காரனுடைய வேலையாள் இதோ வந்தனனென்று பெருங்கூச்சலிட்டார்கள். உடனேஜோதி

மதி என்னும் அவ்வரசகுமாரத்தி, வசந்தகேதுவைப் பார்த்து, "தோட்டக்காரா! நேற்று நீ என்னைச் சந்தோஷிக்கச் செய்ததால் மறுபடியும் உன்னைப்பார்க்கும்படியான ஆவல் இன்றும் எனக்குண்டாயிற்று" என்றுசொல்லி ஓர்வீணையை அவன் கையிற்றந்தனள். வசந்தகேது அவ்வீணையைக் கையில் வாங்கினவுடன் சூல் கொண்ட மேகம் வருஷிப்பது போல காமவிச்சையைத் தரும்படியான சிற்றின்பப்பாட்டுகளைப் பாடி முடித்தான். பிறகு மற்ற வாத்தியங்களையும் வரிசைக்கிரமமாக வாசித்து அரசகுமாரத்திக்கு மட்டற்ற மகிழ்ச்சியுண்டாகும்படிச் செய்தபின்னர் இன்னும் அவளைப் பரவசமாகும்படி யாடி தன் முழுவல்லமையும்காட்ட வெண்ணி பரபரப்புடன் அதிவிரைவாகத் தலைகால் தெரியாமல் ஆடவாரம்பித்தான்.

அந்தோ! பரிதாபம்! இவன் தன்னை முற்றும்மறந்தவனாய், ஆடிக்கொண்டிருக்கையில் தலையில் கட்டிக் கொண்டிருந்த பழைய கந்தலும், முகத்தில் ஒட்டவைத்திருந்த நரைத்தமீசையும் தாடியும் தளர்ந்து கீழேவிழுந்தன. இதுவரையில் அவன் மறைத்து வைத்திருந்த மோசத்தைக் கண்ட தாதிகளெல்லாரும் உரத்தசப்தமாய் பெருங்கூச்சலிட்டார்கள். ஜோதிமதி திடுக்கிட்டு கன்னகடூரகோபத்துடன் கண்கள் சிவந்து நெருப்புப்பொறி பறக்க வசந்தகேதுவைப்பார்த்து, "அஞ்சா நெஞ்சம் படைத்த துஷ்டா! நீ என்னை சந்தோஷிக்கச் செய்ததனால் உன் துஷ்டத்தனம் மன்னிக்கப்படுமென்று நீ ஒருபோதும் நினைக்காதே!" என்று சொல்லி சில சிப்பாய்களை வரவழைத்தனள். அவர்கள் உடனே நமனைப்போல் வசந்தகேதுவின்மேல் விழுந்து நெட்டித் தள்ளிக்கொண்டு போய் அன்றிரவு முழுமையும் அவனை ஓர் அறையிலடைத்துவைத்து பொழுது புலர்ந்த

வுடன் அரசன் முன்னிலையில் அவனைக் கொண்டுபோய் நிறுத்தி சங்கதியைத் தெரிவித்தார்கள்.

அரசன் வசந்தகேதுவைப்பார்த்து, "அடா துஷ்டா! நீ உன் சொந்த ரூபத்தை மறைத்து சிற்றாள் வேடம் பூண்ட உன் அபிப்பிராயந்தானென்ன? நீ சற்றும் யோசியாமல் மிகுந்த துணிகரத்துடன் அந்தப்புரத்தில் எனக்கோர் அபகீர்த்தி யுண்டுபண்ணி வைக்கப் பிரயத்தனித்ததால் உனக்குக் கொலைதீர்ப்பு தவிர வேறொருதண்டனையும் செய்யலாகாது. உன் முகக்குறியால் நீ ஒரு அரசகுமாரனென்றுதோற்றுகிறது. எவராயிருப்பினும் என் தீர்ப்புத் தவறாது. உன்னைத் தன்னிடம் வேலைக்கு அமர்த்திக் கொண்ட அத்தோட்டக்காரனும் உனக்கு உடந்தையாயிருந்திருக்கவேண்டும். ஆகையால் அவனும் உன்னுடன் கொலைசெய்யப்படவேண்டியவன்தான்" என்றான். வசந்தகேது அரசனைப்பார்த்து "ஐயா! நான் மாறுவேடத்துடனிருந்த உண்மை தோட்டக்காரனுக்குத் தெரியவராது. ஆகையால் அவனை மன்னிக்க வேண்டுமென்று அவனுக்காக மிகவும் பரிந்துபேசினான். அரசனோ, இவன் சொன்னதைக் கேளாமல் இருவரையும் கொலையாளிகளிடம் ஒப்பிக்குந்தருவாயில் முதல் மந்திரி அரசனிடம் ஓடி வந்து, "அரசே! நான் இப்போது ஓர் துக்க சமாசாரத்தைக் கேள்விப்பட்டேன். அதாவது சந்திரபுரியின் அரசன் சில மாதங்களுக்கு முன் உமது குமாரத்தியைத் தன் புதல்வனுக்கு விவாகஞ் செய்யக்கருதி தூதனுப்பியதற்கு நீர் மறுத்ததை யவனறிந்து கோபங்கொண்டு தனக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்களைத் தனக்குத் துணையாகக் கொண்டு நமது நாட்டின்மேல் தண்டெடுத்து யுத்தத்திற்கு வந்திருக்கின்றான்" என்றான்.

ஐயா! உத்தமபுரியை யாளும் அரச சிகாமணியே! தங்கள் குமாரத்தி தயாபரசுந்தரியினுல் நான் ஆவி இழப் பேனென்று நினைத்திருக்கும்வண்ணம் இன்னும் ஒருவிநாடி காலம் மேலே தெரிவித்த சண்டையின் சமாசாரத்தை சிம்மபுரியின் அரசனுன பிரதாப சீலனுக்கு அவன் மந்திரி யானவன் அப்போது தெரிவிக்கத் தாமதித்திருப்பானுகில் வசந்தகேது கொலையாளிகளால் ஆவியை இழந்தே யிருப் பான். காலவித்யாசங்கள் எப்படி மாறுகின்றன வென்ப தைத் தாங்களே யறியவேண்டி வசந்தகேதுவின் மற்ற சரித்திரத்தையும் தெரிவிக்கின்றேன்.

அரசனுன பிரதாபசீலன் சண்டையின் சங்கதியைக் கேட்டவுடன் திடுக்கிட்டு, உள்ளங் கலங்கி இதற்கென்ன செய்யலாமென்று மந்திரியைக் கேட்டான். அவன் மறு மொழியாக, அரசே! நீர் இப்போது சற்றும்காலதாமதஞ் செய்யாமல் உமது சேனைகளைச் சேகரித்து, பகையாளிகள் இப்பட்டணத்தில் பிரவேசிக்காமல் பின்னிட்டோடும்படி போர்த் துவக்கவேண்டியதுடன் கடவுள் கருணை யுமக்குண் டாகும்வண்ணம் சகல ஆலயங்களில் பூஜைகளும் தானதரு மங்களும் செய்து, சிறையிலிருக்கும் கொடிய பாதகர்களை யெல்லாம் சிறைவிடுத்துப் பரோபகாரசிந்தையைக் காட்ட வேண்டியது என்றான்.

இவ்விதம் மந்திரிசொல்லிய ஆலோசனையானது வசந்த கேதுவின் பிராணனையும், விருதாப்பியனுகிய தோட்டக் காரனுடைய பிராணனையும் காப்பாற்றியது. அரசன் மந் திரியை நோக்கி, நீ சொல்லியவண்ணம் நான் நடக்கச் சித்தமா யிருக்கிறேனுதலால் நமது சேனைகளனைத்தையும் ஒன்று சேர்த்து நீயே அப்படைகளுக்குத் தலைவனுகச் செல்வாயானுல் நமது சத்துருக்கள் பயந்து பின்னிட்டு

ஓடிப்போவதற்கோர் சந்தேகமுமில்லை. தவிர ஆலயபூஜைகளை சம்பிரமாய் நடத்தக் கட்டளையிட் டிருக்கின்றேன். சிறையிலிருக்கும் குற்றவாளிக ளனைவரையும் விடுதலை செய்வதுடன் இப்போதென்முன் கொலைக்காளாக்கப்பட் டிருக்கும் இவ்விரண்டு குற்றவாளிகளுடைய குற்றங்களையும் மன்னித்து இரட்சை செய்தேன் என்றான்.

மரண தண்டனையிலிருந்து விடுதலையான வசந்தகேதுவும், தோட்டக்காரனும் வீட்டுக்குச் சென்றதும் அங்கு சுப்பிரகாசன் இருக்கக்கண்டவசந்தகேது, தனக்குநேர்ந்த சங்கதிகள்யாவும் அவனுக்கு மொழிந்து பின்னிம் அரசகுமாரத்தியிருக்கும் அந்தப்புறம்சேர்ந்து, அவளைக்காணத் தக்க நூதன உபாயங்களைச் செய்ய யோசித்திருப்பதாய்த் தெரிவித்தான். சுப்பிரகாசன், வசந்தகேதுவைப் பார்த்துக் கண்களில் நீர்த்தளும்ப, "ஐயா! எட்டாப்பழத்துக்குக் கொட்டாவி விட்டதுபோல ஜோதிமதியின்மேல் வைத்த ஆசையால் உமது உயிருக்கே யுலைவைத்துக்கொண்டதினின்றும் கடவுளருளால் விலகியிருக்க இன்னும் அந்த ஆசையை நீர் விட்டவரல்ல. ஐயோ! உமக்கு நேர்ந்த விருத்தாந்தங்களை உமது தந்தை யறிவாராகில் அவர் எவ்வளவு விசனப்படுவா ரென்பதை நினைக்கும்போது என் மனந் தத்தளிக்கின்றது, ஆகையால் ஜோதிமதியை இனி கனவிலும் நினையாமல் மறந்துவிடும். அவள் உமது உயிரை வாங்க எப்பொழுது எத்தனித்தாளோ அப்பொழுதே அவள்மீதில் கொண்ட காமப்பித்தை யொழித்து அவளை முற்றும் வெறுக்கவேண்டியது நியாயமன்றோ. அப்படியிருக்க இன்னும் அவள்மேல் காதல்வைப்பது என்ன மதியீனம். ஆதலால் என் ஆலோசனைக்கிடங்கொடுத்து இந்த க்ஷணமே இந்த சிம்மபுரியின் எல்லையைக் கடந்துபோவது

மன்றி தனேஸ்வரத்தையாளும் உன் தந்தை வீரபத்ம சக்ரவர்த்தியின் தளர்ந்த வயதைக் கவனித்து ஒருக்கால் அவர் அசவுக்கியத்தினல் மரிக்க யேதுவா யிருப்பாரேயாகில் நீர் ஒருவரே அவருக்குப்பின் செங்கோல் பிடித்து அவரையடுத்தவர்க்குவேண்டிய ஆதரணை செய்யத்தக்கவரா யிருக்கின்றீர். குடிகள் யாவரும் உமது வரவுக்கல்லோ ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண் டிருப்பார்கள். ஆகையால் உம்மை மறுபடியும் கண்டு சந்தோஷமடைய விருக்கும் உமது குடிகளுக்குச்செய்யும் பிரதியுபகாரம் இதுதானே? என்றான்.

வசந்தகேது தன் நண்பன் மொழிந்த புத்திமதிகளைக் கேட்டு அவன் அபிப்பிராயத்திற்கிணங்கி சிம்மபுரியை விட்டுப்போக சம்மதித்து, இருவரும் பிரயாணத்தைத் துவக்கி வழியில் தாங்கள் நிறுத்திவிட்டுவந்த சேனைகளையு மழைத்துக்கொண்டு தனேஸ்வரத்தை யணுகிச் செல்லும்போது ஓர் அஞ்சற்காரன் இவர்கள் முன்னிலையில் ஓடிவந்து வசந்தகேதுவின் தந்தை வியாதியா யிருக்கின்றாரென்றும், அவர் தற்காலம் புத்தி ஸ்வாதீனத்துடனிருந்தாலும் சீக்கிரத்தில் மரணமடைவாரென்றும், அவர் சாகுமுன் அவரிடம்வந்து அவரைக் காணும் ஆசையிருக்குமாகில் அதிக துரிதத்தில் வந்து சேரவேண்டுமென் றறிவித்தான்.

வசந்தகேது இத் துக்க சமாசாரத்தைக் கேட்டமாத்திரத்தில் மனது கலங்கி அதிக வேகமாக நடந்து அரண்மனைப்போய்ச்சேர்ந்தான். சீவன் பிரியப்போகும் சமயமாயிருந்த அவனது தந்தையின் தேகத்தைப் பார்த்து அதிகமாகப் பிரலாபித்தான். பிரதாபசீலன் தனது கண்களைத் திறந்து அவர் கரங்களைத் தன் குமாரனிடம் நீட்டி, ஆ! என்மகனே! நீ திரும்பவந்தனையா? என் மனக்குறை நீங்

கிற்று" என்று சொன்னவுடன் அவர் மூச்சடங்கிப்போ யிற்று. பிறகு அவருக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன் களை யாவும் வசந்தகேது குறைவறச் செய்து அவருக்குப் பிறகு தான் இராச்சியபரிபாலனஞ் செய்துக்கொண்டு வந் தான். சில நாட்களுக்குப் பிறகு ஜோதிமதியின் நினைவு அவனுக்கு நாளடைவில் குறைந்துபோகாமல் அதிகமாகித் கொண்டேவந்து, மன்மதன் அவனைப் பம்பரம்போ லாட் டினபடியால் அவன் தனது நண்பனுன சுப்பிரகாசனுக்கு இவ்விரகசியத்தை வெளியிட்டான்.

சுப்பிரகாசன் வசந்தகேதுவை நோக்கி, அரசரே! நீர் இப்போது முடிதரித்த மன்னனுய் பிரதாபசீலனைப்போல் அரசியற்றுகின்றமையால் இனி நீர் பஹிரங்கமாய் அம் மன்னனுக்கு அவனது குமாரத்தியான ஜோதிமதியை பாணிக்கிரகணம் செய்துக்கொடுக்கும்படி நமது ஸ்தானுதி பதியை அனுப்பலாம். தவிர அவ்வரசன் நாட்டின்மேல் தண்டெடுத்துவரும் பகையாளிகளை ஜெயிக்க நீர் துணை வருவதாயும் சொல்லியனுப்புவது யுக்தமென்று எனக்குத் தோன்றுகிறது என்முன். வசந்தகேது அவனது யோச னைக்குச் சம்மதித்து அவனையே ஸ்தானுதிபதியாக அவ் வரசனிடம்போகக்கட்டளையிட்டான். சுப்பிரகாசன் தனது நண்பனுகிய வேந்தனுடைய் கட்டளையைச் சிரமேற்றுங்கி சிம்மபுரியை நாடிச் சென்றனன். ஸ்தானுதிபதி கொண்டு வரும் சுபசமாசாரத்திற்காக வசந்தகேது நிமிஷத்திற்கு நிமிஷம் எதிர்பார்த்துக்கொண்டே யிருக்கையில், சுப்பிர காசன் பிரதாபசிலனைக்கண்டு திரும்பிவந்து "அவ்வரசன் தன்னைப் பட்சமாய் உபசரித்து வரவேற்றினபோதிலும் அவன் குமாரத்தியாகிய ஜோதிமதி என்பாள் நமது கைவச மாகும் ஆசையை முற்றும் நீக்கவேண்டியதே" என்முன்.

வசந்தகேது, இச் செய்தியைக் கேட்டவுடன் இடி விழுந்த நாகம்போல்தியங்கி ஒன்றும்தோன்றமல் மௌன மாய்ச் சிம்மாசனத்தின்மேற் சாய்ந்தான். சுப்பிரகாசன் வசந்தகேதுவைப் பார்த்து, "ஐயா! சந்திரபுரியின் அரசன் பிரதாபசீலனுடைய குமாரத்தியான உமது காதலி ஜோதி மதியை தனக்கு பட்டமகிஷியாகத் தரும்படிக்கேட்டு மன் னன் மறுத்ததால் அவ்வரசன் சிம்மபுரியை எதிர்த்து சண்டைசெய்து பிரதாபசீலனுடைய படைகளைச் சின்னு பின்னப் படுத்தியதால் இனி தனது இராச்சியத்தைக் காப் பாற்றிக்கொள்ளக் கருதி சந்திரபுரியின் அரசனுக்கே தன் குமாரத்தியைக் கொடுப்பதாய் வாக்குக் கொடுத்திருக்கின் றன். சந்திரபுரியின் அரசன் ஜோதிமதியைத் தனக்குக் கொடுக்கவேண்டுமென்றே அவருடன் போர் செய்தான். இவ்விரு அரசர்களும் சமாதானப்பட்டுப் போனமையால் இன்னும் இரண்டுநாளில் அரசகுமாரத்தியாகிய ஜோதிமதி தனது நாயகனுகிய சந்திரபுரி யரசனிடம் அனுப்பப்பட வேண்டியவளா யிருக்கின்றுள்" என்று கூறினன்.

வசந்தகேது இச்செய்தியாவும் கேட்டமாத்திரத்தில் அவன் எண்ணங்களெல்லாங் குலைந்து, பலவாறய்த் தன் நண்பனுடன் முறையிடத் தலைப்பட்டு மனவேதனையால் நொந்து புண்ணுகி, எண்ணுதனெல்லாம் எண்ணி, அவன் சிந்தைகலங்கி, அதே வியாதியாய்தேறுதற்கான நம்பிக்கை யின்றி மன்மதன் கணையால் வாதைப்பட்டுக்கொண்டிருந் தான். அவனுக்கு மனக்குழப்பமே பெரிதாய், அதி சுந் தரவதியாகிய ஜோதிமதி யென்பவளையே அல்லும் பகலும் அவனது சிந்தையில்வைத்து, அவள் தனது புருடனை சந் திரபுரியின் அரசனிடம் களித்திருப்பதாகவே அவனுக்குத் தோற்றப்பட்டு அதிக திகிலடைந்திருந்தான். சுப்பிர

காசன், வசந்தகேதுவின் மனவேதனையை நன்றாயறிந்து ஜோதிமதியின்மேல் அவனுக்கிருக்கும் நீங்காத ஆசையை யொழிக்க வெண்ணி, மிகவும் சுந்தரவதிகளான ஸ்திரீகளை பற்பல இராச்சியங்களிலு மிருந்து பொருக்கி யெடுத்து அவர்க ளனைவரையும் அரசனது அந்தப்புரத்தில் பெருங் கூட்டமாய்ச் சேர்த்தான். அந்த அழகிய மாதர்களைக் கண்டு மதிமருண்டு மையல்கொண்டு அவர்களின்மேல் வசந்தகேது நாட்டமா யிருப்பானாகில் ஜோதிமதியின் நினைவை யொழிக்கலா மென்பதே சுப்பிரகாசனுடைய வெண்ணம்.

ஆனால் இவ்வித பிரயத்தினங்கள் யாவும் பயன்பெறு மல் அவர்களை வசந்தகேது ஏறெடுத்துப்பாராமலு மிருப் பதையுணர்ந்த சுப்பிரகாசன், ஓர்நாள் அரசகுமாரனிடம் வந்து தனேஸ்வரத்திலுள்ள ஆலயமொன்றில் சில நாட்க ளாக யாவரும் பார்த்து மெச்சத்தக்க சித்திரவினோதமாய் மகா அலக்காரத்துடன் சலவைக் கற்களால் கட்டப்பட்ட படித்துரைகளும் தூண்களுமுள்ள ஓர் நீராழிமண்டபம் அமைக்கப்பட்டிருப்பதாயும், அதன் ஜலமோ பளிங்குபோ லத் தெளிந்து சுத்தமாயிருப்பதால், அது வினோதமாய் ஏற் பட்ட குளமாயிருக்கிறதாயும், அது ஒருவராலும் கட்டப் படாததாய் அகஸ்மாத்தாய் உண்டானதென்றும், ஜனங் கள் ஆச்சரியத்துடன் பேசிக்கொள்ளுகிறபடியால் இதைத் தங்களுக்குத் தெரிவித்தேனென்றான். வசந்தகேது இதைக் கேட்டு ஆச்சரியபபட்டு அவ்விந்தையை அவன் சிந்தை களிக்கும்படி கண்ணாரப் பார்க்கவெண்டுமென்று ஆசை கொண்டு தனது மந்திரியுடன் அங்குசென்று அது கட்டப் பட்டிருக்கிற வினோதத்தைக் கண்டு மேலும் மேலும் ஆச் சரியப்பட்டு, அங்கு சில இல்லைஞர்கள் ஒரேசாயலாய் இங்கு

மங்கும் திரிந்துக்கொண்டிருப்பதையுங் கண்டான். அந்த நீராழிமண்டபத்தின் தலைவனானவன் ஏறக்குறைய ஐம்பது வயதுடையவனாகவும் பார்வைக்கு மிக்க காம்பீரமுள்ளவனாயுமிருந்து அங்கு வருபவர்களுக்கெல்லாம் உபகாரஞ் செய்துக்கொண்டிருந்தான்.

இவ்வதிசயத்தைப் பார்த்த வசந்தகேது தன்னரண்மனைக்குத் திரும்பிவந்து தன் ஆஸ்தானத்துப் பிரதானிகளைவழைத்து அந் நீராழிமண்டபத்தைக் குறித்து ஆலோசித்ததில் அதன் விவரம் ஒன்றும் தெரியவராமையால் அதை நிரூபித்த மனிதனையே கண்டறிய வேண்டுமென்று நிச்சயித்துத் தனது நண்பனை அவனிடமனுப்பி யழைத்து வரும்படிக் கட்டளையிட்டான். சுப்பிரகாசன் அரசன்ஆணையின்படியே நீராழிமண்டபத்தினிடஞ் சென்று, அதைக் கட்டின மனிதனை யழைத்துவந்து வசந்தகேதுவின் முன் விட்டான். அம்மனிதன் உடனே வசந்தகேதுவின் பாதங்களில் சாஷ்டாங்கமாய் விழுந்தான். வசந்தகேது அவனைத் தன் கரங்களால் தூக்கியெடுத்து அதிக உபசாரஞ்செய்ய, அவன் மிகுந்த ஆனந்த பரவசனாகி அரசனது பிரஸ்தாபத்தை மிகுந்த மேலாக ஸ்துதிசெய்து. வசந்தகேதுவும் மற்றப் பிரதானிகளும் அதிசயிக்கும்படி மகா சாதுர்யமாய் வசனித்துக்கொண் டிருந்தான். வசந்தகேது அவனது சாதுர்யமான வார்த்தைகளால் அவனை வரவழைத்த காரணத்தை மறந்திருந்து பிறகு நினைவு வந்தபடியால் அம்மனிதனைநோக்கி, "ஐயா! அவ்வளவு அலங்காரமான நீராழிமண்டபத்தை அரணிப்பாய் கட்ட உமக்கு எப்படி சக்தி வந்ததென்றும், யாரும் கண்டுகொள்ளா வண்ணம் நீர் அதைக் கட்டிமுடித்த தெவ்விதமென்றும் நான் அறிய ஆவல் கொண்டிருக்கிறேனென்றான்.

அதற்கம்மனிதன் "அரசே! என்னிடத்தில் மிகவும் நிபுணர்களாகிய சிற்பசாஸ்திரிகள் முப்பது பேரிருக்கின்றனர். அவர்களின் ஒத்தாசையால் நான் அம்மண்டபத்தையும் குளத்தையும் ஒரே தினத்தில் கட்டி முடிததேன். அவர்களனைவரும் ஒரே மனதுடையவர்களாதலால் இன்னும் விநோதமான அலங்காரமண்டப மொன்று இன்று தினத்தில்தானே கட்டிமுடிக்கவு ம்சக்தி அவர்களுக்குண்டு. அவர்களைத் தாங்கள் வரவழைத்து ஏதாகிலும் நூதன வேலை யொன்று அவர்களுக்குக் கட்டளையிடுவீராளுல், ஓர் நிமிஷத்தில் அவ்வேலையைத் தாங்கள் மகிழும் வண்ணம் நிறைவேற்றுவார்கள்" என்றவன் தெரிவித்தவுடன், இந்த வல்லசாமர்த்தியத்தை நேரில்காணவேண்டுமென்ற எண்ணமுடையவனாய் வசந்தகேது, அத்தொழிலாளிகளை தக்ஷணம் அழைத்துவர ஆஞ்ஞாபித்தான். அவர்கள் வந்ததும் அவர்களெல்லாரும் அந் நீராழிமண்டமத்தில் தான் பார்த்தபோது அங்குமிங்கும் திரிந்துக்கொண்டிருந்தவர்களாகவே யிருக்க அச்சிற்பிகளின் தலைவனைநோக்கி, இவர்களெல்லாரும் ஒரே ரூபத்துடனிருக்கின்றனரே; இவர்கள் ஒரே தாய்வயிற்றுப் பிள்ளைகளோவென்று விசாரித்தான். அம்மனிதன் பதிலுத்தாரமாக ஆம் அரசே! இவர்கள் எல்லாம் ஒரே தாயின் பிள்ளைகள்தான். உமக்கிஷ்டமான வேலைகளைச் செய்ய இவர்களுக்கு உத்தரவு கொடுப்பீராகில் உமது மனங்களிக்க ஆலசிய மில்லாமல் செவ்வையாய் செய்து முடிப்பார்கள். ஆனல் நீர் ஒருவர்மாத்திரம் இங்கிருந்து அவர்கள் செய்யுந் தொழிலைப் பார்க்கவேண்டுமென்றான்.

அம்மனிதன் மொழிந்ததை ஆஸ்தானத்திலிருந்த பிரபுக்கள் கேட்டுக்கொண்டிருந்தபடியால் சபை கலைந்து எல்

லாரும் அவ்விடத்தைவிட்டகன்றனர். பிறகு வசந்தகேதுவும், நீராழிமண்டபத்து யஜமானனும், 30-வேலைக்காரருமிருக்க வசந்தகேது அவ்வேலைக்காரர்களைநோக்கித் தனது அரண்மனையில் ஓர் நீராழிமண்டபம் கட்டி முடிக்கும்படியாஞ்ஞாபித்தான். அவர்களனைவரும் சற்றுநேரம் அவ்விடத்தைவிட்டு நீங்கியிருந்து பற்பல நிறமுடைய கல்லுகளையும் மற்றும் கட்டடத்திற்கு வேண்டிய சாமான்களையும் எடுத்துக்கொண்டு வந்து பரபரப்பாய் வேலைசெய்ய வாரம்பித்தார்கள். சிலமணிநேரங்களில் அவ்வேலையைக் குறைவறச் செய்து முடித்தார்கள். அக்கட்டடத்தைப் போல அழகிய கட்டடம் வேறெங்கும் இல்லையென்றே சொல்லத்தக்கதாய் கண்ணாடிபோல் மெருவிட்ட சாந்தும், மிகவும் அலங்காரமாய் செதுக்கப்பட்ட கற்றூண்களும் நிறுத்தப்பட்டு அதன் சமீபத்தில் நீர் பெருகத்தக்க அநேகம் நீரூற்றுகளெடுத்து அவைகளினின்றும் ஜலம்வெள்ளைச் சலவைக் கற்களினல் கட்டப்பட்ட தடாகத்தில் விழுந்துக் கொண்டிருந்தது.

வசந்தகேது இவை யாவையுங் கண்டு ஆச்சரியப்பட்டு அவர்களுடைய சாமர்த்திய வித்தையின் திறத்தைக் குறித்து மிகவும் புகழ்ந்து, அத்தலைவனை நோக்கி, "ஐயா! இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வழகிய மண்டபமும் தடாகமும் பார்ப்போர் கண்களைப் பறிக்கத்தக்கவிதமாய் எப்படி முடிந்ததென்று நான் அறிய ஆவல்கொண்டிருக்கிறேன். ஆகையால் அதை எனக்குத் தெரிவிக்கவேண்டுமென்றான். சிற்பித்தலைவன் மாறுத்தாரமாக, அரசே! அதன் விவரத்தை விரித்துரைக்க வேண்டுமாகில் உமக்கு சலிப்பும் ஆயாசமும் உண்டாவதுமன்றி வியர்த்தமாய் காலங் கழிந்துபோகும். நான் முப்பத்தொன்பது வித்தைகளில் முழுதுந்தேர்ந்த

பண்டிதனென்று உமக்குத் தெரிவிப்பதுமாத்திரம் போது மென்று நினைக்கிறேன். எனது நாடோ மாயாபுரி, எனது பேரோ சாந்தசீலன். நான் பாலியம் முதல் தேசதேசங்கள் திரிந்து, வனங்களிலுள்ள ரிஷிகளையும், தபோதனர்களையு மடுத்து, சமஸ்தமும் கைவல்லியமாகும் மந்திரோபதேசங் களைப் பெற்றுள்ளேன். நீர் பார்க்கும் இம் முப்பதுவாலி பர்களும் எனது மந்திரபலத்தால் பூமியினின்றும் ஜனித்த வர்கள். ஆதலால் நான் இவர்களனைவரும் ஒரு தாய்வயிற் றுப் பிள்ளைகளென்று தெரிவித்தேன். இவர்களால் ஆகத் தகாத காரியங்கள் உலகத்திலில்லை என்றான்.

இப்படியவன் சொல்லி முடித்தவுடன் வசந்தகேது அவனைப் பார்த்து. "ஆ! கல்விச்சமுத்திரமும், கற்பனைக் களஞ்சியமுமாகிய ஞானியே!நான் உம்மால்கேள்விப்பட்ட அற்புதக் செய்கைகளைக்குறித்து அணைகடந்த சந்தோஷ முள்ளவனாக உம்மை எனக்கு சினேகிதனாக்கிக் கொள்வது எவ்வளவு பெருத்த பாக்கியம். நீர் உமது வல்ல மகிமை யின் பிரஸ்தாபத்தைச் சொல்லிய பின்பு உம்மாலாகத் தகாத தொன்றுண்டோவென்று நம்புகிறேன். நீர் சிருஷ் டித்த உமது வேலைக்காரர்கள் நினைத்த காரியங்களைச் செய்ய நீரவர்களுக்குப்போந்த சக்தி கொடுத்திருப்பதால் உம்மால் ஆக்கியாபிக்கப்பட்ட யாவையுஞ்செய்ய அவர்கள் தகுதியான சக்தி வாய்ந்தவர்களென்பதைக் குறித்து நானெவ்வளவும் அனுமானிக்க விடமுமில்லை. மேலும் அதிரூபசௌந்தரவதியாகிய சிம்மபுரியரசகுமாரத்தி ஜோதி மதியை தட்சணம் இவ்விடம் கொண்டுவாருங்களென்று நானவர்களுக்குக் கட்டளையிடுவேனாகில் தட்டாமல்அவர்க ளதைச் செய்துமுடிப்பார்களென்று நான் உறுதியாய் நம்பு கின்றேன் என்றான். அதற்கம்மனிதன் "ஐயா! சந்தேக

மின்றி அக்காரியத்தை அவர்கள் செய்வார்கள். நீர் பிரியப் படுவீராகில் அவர்கள் அவளிருக்கும் அரண்மனை யந்தப்பு ரஞ்சென்று அவளை அவள் தாதிகள் மத்தியிலிருந்து எடுத் துக்கொண்டு ஓர்நிமிஷத்திற்குள் இவ்விடங் கொண்டுவந்து சேர்த்துவிடுவார்கள்" என்றான். வசந்தகேது இதைக்கேட் டவுடன் உள்ளங்களிப்படைந்து பின்னும் அம்மனிதனை நோக்கி, "ஐயா! எனக்கபிப்பிராயமிருந்தால் அப்படிச் செய்யலாமென்றுசந்தேகத்துடன்உபயார்த்தப்படப்பேசு கின்றீரே. இது உம்மால் முடியாத காரியந்தானோ? என் றான். அம்மனிதன் நகைத்து, அரசே! இது ஓர் பெருத்த காரியமா? இதையுஞ் செய்வேன் இன்னும் அந்த சிம்ம புரியை யதஞ்செய்து சின்னபின்னமாக்கி பிரதாபசீலனைக் கட்டிக்கொண்டு வரச்சொன்னாலும் செய்வேன் என்று சொல்லித் தனது வேலையாட்களில் ஒருவனைப் பார்த்துப் போய் வாவென்று சொல்ல அவ்வடிமையானவன் ஆரவா ரித்து மறைந்துபோய் சில நிமிஷங்களுக்குள் ஜோதிமதியை தூங்கும் மஞ்சத்துடன் தூக்கிக்கொண்டு திரும்பிவந்தான்.

வசந்தகேது, அவளைப் பார்த்தவுடன் மதிமயங்கி அவ ளது உருவம் ஒரு தோற்றமோ அல்லது வேஷமோ வென் றஞ்சி அவன் உறுதியை விட்டுப் பின்வாங்கச் செய்ததால் அவன் அக்கலைஞானியை நோக்கி, "ஐயா! இப்போது நாமிருவரும் பார்க்கின்ற இவ்வுருவமானது சிம்மபுரியின் இராஜபுத்திரியினது சரியான தேகமோ? அல்லது அவள் சாயலுக்கொத்த வேறு ரூபமோ? இவ்விஷயத்தில் என்னை வஞ்கியாமல் உண்மையையுரைக்கும்படி உம்மைப் பிரார்த் திக்கிறேன்" என்றான். அதற்கந்த ஞானி, "ஐயா! நீர் இவளை ஜோதிமதியென்றே நம்பும். இவள் நீர் கோரிய அவ்விராஜகுமாரத்தி தான்" என்றான்.

இதற்குள் ஜோதிமதி விழித்துக்கொள்ளவே, வசந்தகேது அவளைப்பார்த்து, "என் கண்ணுக்கினிய காதலியே! நான் உனது தோட்டக்காரனுடைய சிற்றாளாய் அசங்கிய உடை தரித்துக்கொண்டு வீணை முதலிய வாத்தியங்ககளை வாசித்து உன்னைக் களிக்கச்செய்தவன் நானே. நான் மாறு வேடம் பூண்டு வந்திருக்கிறேனென்கிறதை நீ உன் அந்தப்புரத்தில் கண்டென்னைத் துரத்திவிடக் கட்டளைகொடுத்த உன் கொடூரச்செய்கையும், பின்பு உன் தந்தையால்யெனக்கு விதிக்கப்பட்ட அபகீர்த்தியுள்ள பிராணபாயத்தினின்றும் நான் கடவுளருளால் தப்பி வந்தேன். அக்கொடுஞ் செயல்களுக்காக நான் பகைத்துப் பெரிதாய் பாராட்டாமல் உன் மீதில் எனக்குண்டாயிருந்த அடங்கா மோகத்தை என் சிந்தையைவிட் டெடுக்காதிருந்தேன். இவைகளை யெல்லாம் நானுனக்கு நினைப்பூட்டியபடியால் உன்னை என்கை வசமாக்கிக் கொள்ள மனமுண்டா யிருக்கும் என் மீதில் உனக்குண்டாகிய கோபத்தைத் தணித்து என் காமப் பசியை யாற்றவேண்டுகின்றே னென்றான்.

ஜோதிமதி தான் அக்கிரமமாய் எவ்விதமாகவோ தன்னரண்மனையி லிருந்துகொண்டு வரப்பட்டதை யுணர்ந்து, வசந்தகேதுவை நோக்கி, "ஐயா! நீர் இப்போது செய்திருக்கும் துராக்கிரமச் செய்கை மன்னிக்கத் தக்கதல்ல. என்றாலும் நான் முற்றும் பகைத்திருந்த சந்திரபுரியின் அரசனுக்கு மனைவியாகப்போகும் சமயத்தில் நீர்என்னை இங்கு கொண்டுவந்ததற்காக நான்மிகவும் சந்தோஷப்படுகிறேன். நீர் எனது தந்தையின் பகையாளியாகிய அந்தசந்திரபுரியின் அரசனைச் சமரில் வென்று, என் தந்தையின் அனுமதி பெற்று என்னை மணந்துகொள்வதற்கு யாதொரு தடையுமில்லை. இல்லையாயின் நான் சந்திரபுரியின் அரசனுக்கு

மனைவியாக வில்லையென்ற கூஷாத்திரங்கொண்டு அவன் சிம்ம புரியின்மேல் படையெடுத்துவந்து, எனது தந்தைதனை யும் உயிர்வதைச் செய்வான்" என்றனள். இவ்வார்த்தை யைக்கேட்ட வசந்தகேது கலேஞானியாகி! சாந்தசிலனைப் பார்க்க, அவன் இவ்வெண்ணத்தையறிந்து தன் அடிமைக ளுடன் அப்போதே சிம்மபுரியை நோக்கிச் சென்றனன்.

சிம்மபுரியையாளும் பிரதாபசீலன் தன் உடன்படிக் கையின்படி மறுநாள் தன் குமாரத்தியாகிய ஜோதிமதியை யவனிட மனுப்பவில்லையென்று சந்திரபுரியரசன் பலாத் காரமாய் அவளைக் கொண்டுபோக நினைத்துத் தனது பெருஞ் சேனைகளுடன் சிம்மபுரியை முற்றுகைப் போட் டிருந்தான். பிரதாபசீலன் பயந்து தன்மகள் அகஸ்மாத் தாக அந்தப்புரத்தில் மஞ்சத்துடன் காணுமலிருப்பதால் மனம் நொந்து ஒன்றுந்தோன்றுமல் பகையாளியால் நாச மடைய நேரிட்டதே யென்று ஏங்கிக்கொண்டிருந்தான். அச்சமயத்தில் மாந்திரீகவாதியாகிய சாந்தசீலனும், அவன் அடிமைகளும் பட்டணத்தைச் சுற்றிலும் முற்றுகை போட் டுக்கொண்டிருக்கிற சேனைகளின்மேல் விழுந்து எல்லாரை யும் முறியவடித்து அச்சேனைகளுக்குத் தலைமை வகித் திருந்த சந்திரபுரி யரசனையும் கொலைசெய்தனர். பிறகு சாந்தசீலன் பட்டணத்திற்குள் பிரவேசித்து அரசனுகிய பிரதாபசீலனைக் கண்டு தான் இன்னுனென்பதையும், தான் தானேஸ்வரத்தை யாளும் வசந்தகேதுவால் அனுப்பப்பட் டதையும், தான் பகையாளிகளை வதைத்து சந்திரபுரி யா சனையும் கொலைசெய்ததையும், தன்குமாரத்தியாகிய ஜோதி மதி வசந்தகேதுவினிட மிருப்பதாயும் உள்ளசங்கதிகள் யாவும் மொழிந்தான். பிரதாபசீலன் தன்னெதிரி மாண்ட தையும், தன் குமாரத்தி சுகமா யிருப்பதையுங் கேட்டு சந்

தோஷமடைந்து தனது பிரதானிகளும சாந்தசீலனைப் பின்பற்றி தனேஸ்வரத்தை யடைந்து, வசந்தகேதுவின் கொலுக்கூடத்திற்குச் சென்றான். வசந்தகேது அவ்வரசனை மரியாதையுடன் வரவேற்றுத் தகுந்த ஆசனத்திலமரச்செய்தான். பிறகு தான் மதியின்றி வசந்தகேதுவை கொலைக்காளாகும்படி முன் தான் செய்த தீர்ப்புக்காகத் தன்னை மன்னிக்கும்படி பிரதாபசீலன் வேண்டிக்கொண்டு நல்ல சுபமுகூர்த்தத்தில் தன் குமாரத்தியாகிய ஜோதிமதியை வசந்தகேதுவுக்குத் திருமணம் செய்து முடித்தான்.

ஆதலால், உத்தமபுரியையாளும் புத்திசேன மகாராஜனே! அதிர்ஷ்டம் ஒருவர் பங்கல்ல. தான் முற்றிலும் வெறுத்திருந்த வசந்தகேதுவையே ஜோதிமதி விவாகம் செய்துக்கொள்ளவில்லையா? தங்கள் குமாரத்தி தயாபரசுந்தரியும் ஒருக்கால் என்னை விவாகஞ் செய்துக்கொள்ள சம்மதித்தாலும் சம்மதிப்பாள். இல்லையேல் நான் சாவுக்குத் துணிந்தேயிருக்க கடவுள் எனக்கு விதித்தாற்போல் தோன்றுகின்றது என்று சொன்னதும், அரசன் திகில்டைந்து, இதென்ன பரிதாபம், இதுவரையில் அரசர்கள் மரணமடைந்தது எனக்கோர் பெரிதாயிராமல் இவன்மீதில் எனக்குப் பட்ச மதிகரித்திருக்கிறது என்று தனக்குள் நினைத்துக்கொண்டு அவனைப்பார்த்து, "குழந்தாய்! நான் சொல்லும்வார்த்தைகள்உனக்கு சமாதானப்படவில்லையா? உன் பிடிவாதத்தை நீ விடமாட்டாயோ? உனக்கு வரும் அழிவை நீ சற்றுகிலும் நினைக்கவில்லையே! ஏதோநற்காலத்தின் பலனைய் யாருக்கோ நடந்த கதையைத் தெரிவிக்கின்றாய். என் குமாரத்தி கேட்கும் கேள்வி கடினமென்று உனக்கு நான் தெரிவிக்கவில்லையா? அவளைப்போன்ற ரூபவதி உலகத்திற் கிடையாதா? நான் உனக்கு அழகிய தாதி

கனி லொருத்தியை விவாகம் செய்வித்து அவ்வரண்மனையி லேயே நீ இருக்க ஏற்பாடு செய்கிறேன். கொலைசெய்யத் துணிந்திருக்கும் என்குமாரத்தியினாசையைவிட்டொழித்து விடு" என்று மொழிந்தனன்.

சித்திராங்கதன் புத்திசேன மகாராஜனைப் பார்த்து "ஐயா! இது விஷயத்தில் இனி என்னைக் கஷ்டப்படுத்த வேண்டாம். உன் புத்திரியின்மேற்கொண்ட காதல் எனக் கதிகமானதால் சாவு எனக்கோர் திரணமே. ஆகையால் அவளைக் காணாது அரைக்கணமேனும் ஜீவித்திரேன்" என்றான். அவனைச் சாவுக்குத் தப்புவிக்கத்தக்க உபாயம் வேறொன்றையுங் காணாத புத்திசேனன் கலங்கி "தைரிய பாலியா! நீ உன் புத்தித் தடுமாறி என் குமாரத்தியை மணந்துக்கொள்ள எண்ணியமையால் சாவே உனக்குப் பிராப்தி. பழி என்மீது கிஞ்சித்துமில்லை. நான் உனக்கு எச்சரித்ததற்குக் கடவுளே சாட்சி. நீ என்வார்த்தைக்குச் செவிகொடாததால் தப்பாமல் உனக்கு அழிவுவரும். ஆகி லும் உன் அபீஷ்டப்படியே என் சம்பந்தத்தை விரும்பு வோருக்குச் செய்யும் முறைமைப்படியே உனக்குச் செய் கிறேன்" என்று சொல்லி ஓர் போர்ச்சேசுவனையழைத்து சித்திராங்கதனை ராஜபுத்திரி யிருக்கும் அந்தப்புரத்திற் கழைத்துபோகும்படி உத்தரவளித்தனன். பிறகு புத்தி சேனன் சித்திராங்கதன் மீதிலுள்ள கருணையால் தனக்குச் சினேகனும் சாதுர்யப் பிரசங்கியுமாகிய ஓர் பண்டிதரை யழைப்பித்து, சித்திராங்கதனுடைய வழக்கையும் அவன் தன் குமாரத்தியின் விஷயமாக வந்திருக்கும் நோக்கத்தை யும் அவனுக்கு அநேகவிதங்களாகத் தான் புத்தி சொல்லி யும் கேளாமல் தன் குமாரத்தியை மணம்புரிய அவன் வைராக்கியங் கொண்டிருப்பதையும் மொழிந்துப் பின்னும்

அவரை நோக்கி "பண்டிதரே! நீர் அவன் விஷயத்தில் தக்க பிரயாசை யெடுத்துக்கொண்டு அவன்கொண்டவெண்ணத்தை விட்டொழிக்கும்படி உமது சாதுர்யப் பேச்சினல் வசப்படுத்தவேண்டும்" என்று கூற பண்டிதரும் சித்திராங்கதனிடஞ் சென்று அடனிடத்தில் நெடுநேரம் வார்த்தையாடியும் அபலமாகி அவன் மிக்க சாதுர்யனென்றே திடங்கொண்டு அரசனிடம் வந்து "இறைவனே! அந்த இராஜ புத்திரனின் மனதைத்திருப்புவ தொருவராலும் முடியாத காரியம். அவன் தான் கொண்ட எண்ணத்தால் தங்கள் புத்திரியை ஜெயித்து அவளை மணந்துக்கொள்ளவோ அல்லது அவளுக்காக உயிரை யிழப்பதோ இவ்விரண்டிலொன்றுக்கு தீரங்கொண்டிருக்கிறுன். நான் சதுர்வித உபாயங்களைக் கொண்டும் கல்வியின் சாமர்த்தியத்தைக் காட்டி வார்த்தையாடியும் அவன் கலங்காத சித்தனுய் என்னிலும் மிஞ்சின சாமர்த்திய முடையவனுகவே காணப்படுகிறுன். இராஜபுத்திரியின் கேள்விகளுக்கு விடையளிப்பவ னெருவன் உலகத்திலிருந்தால் அவன் இவனுகத்தானிருக்கவேண்டும்" என்று கூறினுன்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட புத்திசேனன் மிகவும் களிப்படைந்து மற்ற இராஜபுத்திரர்கள் போல இவன் சீவனிழக்காமல் பாக்கியவந்தனுயும் சுகஜீவியாகத் தனக்கு மருகனுகவேண்டு மென்றுக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு தனது முதல்மந்திரியை ஏவி நாளையதினம் இராஜபுத்திரியின் கேள்விகளுக்கு உத்தரம் பகர சித்திராங்கதனை ஆயத்தத்துடனிருக்க எச்சரிக்கும்படித் தெரிவித்தனன். இதைக்கேள்வியுற்ற சித்திராங்கதன் அதிக தீரமுள்ளவனுயிருந்தபோதிலும் அதிகபீதியினுல் அன்றிரவெல்லாம் தன்னுறுதியினின்றும் பின்னிடைந்து இராஜபுத்திரியின்

கேள்விகளுக்குப் பகரும் உத்தரம் சகல பண்டிதர்களுக்கும் ஒத்ததாயிருக்குமோ? இராதோ? அதனால் ஒருவேளை மோசம்போய்வெட்கத்துக்கும் துக்கத்துக்கும் உள்ளானால்என் கதி பரிதாபந்தானே. நான் ஒருக்கால் இறக்கநேரிட்டால் என் தாய் தந்தையர்கள் என்ன நிலைமையிலிருப்பார்கள்? என்று பலவாறு நினைத்துக் கொண்டிருந்து அருணோதயமானதும் பேரிகையின்முழக்கத்தைக்கேட்டுத் தன்னை ஆஸ்தானத்திற் கழைப்பிக்கும் பிரயத்தினமே யென்று நினைத்துக்கொண் டிருந்தான் அரசனால் அவனுக்கு வெகுமதியாயனுப்பப்பட்ட பொற்சரிகைப் பூவினால் செய்த சிவப்புப் பட்டங்கியையுடுத்திக்கொண்டுமிகவும் தீரங்கொண்டவனாய் நியாயசாஸ்திரிகளின் வரவுக் கெதிர்நோக்கிக் கொண்டிருந்தான். இச்சமயத்தில் அரசனுடைய பிரதானிகளிற் சிலர் இராஜபுத்திரனுடைய அறைக்குட்சென்று அரசன்சபைக்கு அவனை யழைத்துப்போக வந்ததாக வெளியிட்டார்கள். இராஜபுத்திரன் அவர்கள் பின்னோடே போயினான். உருவின கத்தியை உறையில் போடாமல் அணிவகுத்து நிற்கும் போர்வீரர்களின் காவலைக்கடந்து ஆலோசனைச்சங்கத்தின் முன்வந்து சேர்ந்தார்கள். அங்கு ஆயிரக்கணக்கான பாடகர்களும் நட்டுவர்களும் பலவிதமான கேளிக்கைகள் செய்துக்கொண் டிருந்தனர்கள், பின்பதைக்கடந்து அரண்மனைக் கொலுச்சாவடிக்குச் சென்றனர். அங்கு ஆஸ்தானத்துப் பிரபுக்களும், நியாயாதிபதிகளும், பிரபல பண்டிதர்களும் உட்கார்ந்திருக்க அவர்களுக்கு மத்தியில் சிம்மாசனங்க ளிரண்டமைத்து அதில் பிரத்தியேகமாய் ஆசனங்கள் போட்டிருக்க இராஜகுமாரன் கண்டான்.

இராஜபுத்திரனைக் கண்டவுடன் அங்கிருந்தோரெல்லாம் மரியாதை செய்து அரசனுடைய வரவுக்கெதிர்பார்த்திருந்

தனர். சற்றுநேரத்திற் கெல்லாம் சபாமண்டபத்தின் திரை திறக்கப்பட்டது. உடனே உத்தமபுரியின் அரசனும் அவ ருக்குப் பின்னால் தங்கச்சரிகையினால் பொதியப்பட்டு மிக விலையுயர்ந்த பட்டாடையுடன் முக மூடியையும் தரித்துக் கொண்டுஇராஜபுத்திரியான தயாபரசுந்தரியும்வந்து சிம்மா சனங்களில் அமர்ந்தார்கள். அச்சிம்மாதனங்களுக் கிடை யில் இரண்டு தாதிகள் மைக்கூடும்,இறகும் தயாராய்வைத் துக்கொண்டு அங்கு நடக்குங் காரியங்களை உடனுக்குடன் எழுதசித்தமாயிருந்தார்கள். அரசனும் அரசகுமாரத்தியும் அங்கு விஜயஞ்செய்தவுடன் அங்கிருந்த பிரபுக்களும்,பண்டி தர்களும் மிகுந்த பயபக்தி விசுவாசத்துடன் வந்தனஞ்செய் தார்கள். சித்திராங்கதன் மாத்திரம் அஞ்சா நெஞ்சுடன் இங்கிருக்கும் சபைக் கூட்டத்தையும் கவனியாமல் தயாபர சுந்தரியையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு புத்தி சேன மகாராஜன், பிரதானிகள் முதல் பலரையும் அவரவ வர்களாசனத்தி லமரும்படிச் செய்து, ஓர் பண்டிதரைக் கொண்டு சித்திராங்கதனை எதிரிலழைத்துவர ஆக்ஞாபிக்க அவர் அப்படியே யழைத்து வந்து எதிரில் நிறுத்தி இராஜ புத்திரியாகிய தயாபரசுந்தரியை சித்திராங்கதன் மணஞ் செய்து கொடுக்கும்படி விண்ணப்பித்துக் கொண்டதை அங்கிருக்கு மனைவரும் கேட்கத்தக்க உரத்த சப்தத்துடன் விளம்பரப்படுத்திப் பின் சித்திராங்கதனை அரசனிடம் சென்று மும்முறை அவரை வணங்கும்படிக் கட்டளையிட் டான்.

அவ்விதம் வணங்கிய பிறகு சிரேஷ்ட பண்டிதரொரு வர் எழுந்துநின்று இராஜபுத்திரி தயாபரசுந்தரியைவிரும்பி மணம்புரிய வருவோர் எவ்வித உயர்ந்த அந்தஸ்துள்ள வரா யிருந்தபோதிலும் அவளுடைய கேள்விகளுக்குத்

தகுந்த விடையளிக்கச் சக்தியற்றவர்களாயின் அவர்கள் சிரசு உடனே கண்டிக்கப்படுவதே அதற்கேற்ற பரிசாயிருக்குமென்று அரசனால் ஏற்படுத்தப்பட்ட கட்டளையை யாவரும் கேட்கத்தக்கவிதமாய் உரத்தசப்தமிட்டு வாசித்த பின்பு சித்திராங்கதனை நோக்கி, "இராஜ புத்திரா! நான் இப்போது வாசித்த உடன்படிக்கையை நீ கேட்டனையல்லவா? இராஜபுத்திரியை விரும்பி மணம் புரிய வருபவர்கள் இச்சட்டத்திற் குடன்படவேண்டியது. இது அரசனால் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனை. இவ்விதம் செய்ய உன்னால் முடியாவிட்டால் இப்போதே நீ வந்த வழியே திரும்பிப்போக யாதொரு தடையுமில்லை. ஆனாலிதற்கு உடன்பட்ட பின் உன் அதிர்ஷ்டம் என்னமாகுமோ தெரியாது. ஆகையால் உன்னபிப்பிராயத்தை இச்சபையோர் அறியத் தெரிவிக்கவேண்டும்" என்றார்.

சித்திராங்கதன் அச்சபையோரைப் பார்த்து, "நான் பிராண பயத்துக்கஞ்சி ஓடிப்போக இங்குவரவில்லை. இராஜ புத்திரியின் கேள்விகளுக்குத் தக்க விடைபகரச் சக்தி கொண்டே இங்கு வந்தேன். அப்படி நான் தவறிப்போவேனாகில் தப்பாமல் என் தலையைச் சட்டப்படி வாங்கி விடலாம்" என்று தீரமாய் மொழிந்தான். அரசனான புத்திசேனன் தன் குமாரத்தியின் கேள்விகளுக்கு இப்பாலிய வரசன் விடையளிக்கத் துணிந்திருப்பதைக்கண்டு, தன் குமாரத்தியை நோக்கி, "அம்மா! இனி நீ இவ்விராஜ புத்திரனுக்குப் போடத்தக்க வினாக்களைக் கேட்கத் தடையென்ன? சீக்கிரம் அவைகளைத் தெரிவிப்பாயாக" என்று சொன்னவுடன், அம்மாது தன் தந்தையைப் பார்த்து, "என்னிமித்தம் உயிர்விட்ட அநேக இராஜ புத்திரர்களுக்காக நான் மிகவும் வருந்தப்படுகின்றேன். அவர்கள் என்

பேரழகின் மயக்கத்தால் பிடிவாத சித்த முள்ளவர்களாய் ஏன் தங்கள் பிராணனை யிழக்கவேண்டும்? ஐயோ! இது மிகவும் பெரிய பாதகமன்றோ? என்னைத் தவிர பேரழகுள்ள இராஜகன்னிகைகள் இவ்வுலகத்தில் கிடைக்கார்களா? சுகமாக என்னை அரண்மனையி லிருக்கச்செய்யாமல் இவ்வித வீண்தொந்தரவை ஏன் எனக்குக் கொடுக்கவேண்டும்" என்று சொல்லி அரசகுமாரனைப் பார்த்து, "இராஜபுத்திரா! நீ மிகவும் அஞ்சாத நெஞ்சுடன் என்னை மணம் புரிய வந்தமையால் உனக்கு நேரிடப் போகும் பழிக்கு நான் எவ்வளவும் உத்திரவாதியல்ல. இதற்குமுன் என்னிடம் வந்து இறந்துபோனவர்களின் முடிவே உனக்கும்சம்பவிக்குமென்று நீ அறியக்கடவாய்.

மேலும் எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி மேதமையென்று நீநினைத்திருக்கின்றாய். ஸ்திரீகளின் தந்திரசாமார்த்தியத்தை நீ அறியமாட்டாய். அத்தியின் மலரையும், வெள்ளைக் காக்கையையும், மீன் பாதங்களையும் கண்டாலும் ஸ்திரீகளின் மனதையறிவது அசாத்தியமென்று பிரபல பண்டிதர்களாலும் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? அதற்குத் திருஷ்டாந்தமாக **கனகாம்பாள்** என்னும் ஸ்திரீ ஓர் பிரபல வர்த்தகனையும், கிராமாதிகாரியையும், நீதிபதியையும், தேசாதிபதியையும் அவளுடைய சாமார்த்தியத்தினால் அவமானப்படுத்தி சகலரும் அவர்களைப்பார்த்து நகைக்கும்படி செய்ததை நீ கேட்டதில்லையா? அதாவது, சில வருஷங்களுக்குமுன் **கோடீஸ்வரன்** என்னும் ஓர் விருத்தன் வச்சிரபுரத்தில் வாழ்ந்து வந்தான். அந்நகருக்குச் சமீபத்தில் அவனுக்கு சிலநேர்த்தியான கிராமங்களும், தோட்டந் துரவுகளும் இருந்ததுமல்லாமல் அவனிடம் விலையுயர்ந்த நகைகளும், ஏராளமான

திரவியமும் இருந்தன. இத்துடன் அவனுக்கு இராஜ கன்னிகைக்குச் சமானமாய்ப் பேரழகுடைய கனகாம்பாள் என்னும் பாலிய மனைவியையும் பெற்றிருந்தான். இவன் அதிகமாகத் தன் புகழை விரும்பினதால் பணத்தை ஏராளமாக அநேக விஷயங்களில் செலவு செய்து வந்தமையால் இவனைக் கொடையாளி யென்று அநேகர் புகழ்ந்துக் கொண்டு வந்தார்கள். தவிர இவனுடைய சினேகிதர்களுக்கு விருந்திடுவதில் அதிக விருப்புள்ளவனுகி, அவர்கள் விஷயத்தில் வேண்டிய திரவியத்தைச் செலவழித்து அவர்களுக்குக் கடனும் கொடுத்து வந்ததுமல்லாமல் தங்களுக்குக் குறைவுண்டென்று சொல்பவர்களுக்கெல்லாம் பணத்தைக்கொடுத்து உதவி செய்து வந்தான்.

இவ்விதம் அவன் பரோபகார சிந்தையுடன் பணத்தைக் கொண்டமட்டும் கையாடி வந்தமையால் அவனுடைய கையிருப்பு பணம்யாவும் செலவழிந்து, கிராமம், தோட்டந் துரவுகளையும் விற்க வாரம்பித்ததுந் தவிர நாளடைவில் அட்டதரித்திரத்திற்குள்ளானுன். கோடீஸ்வரன், தனக்கு வறுமை சம்பவித்ததை யுணர்ந்தபோது தன்னிடம் முன் சகாயம் பெற்றுக்கொண்ட நண்பர்களால் தான் ஜீவிக்கலாமென்று பிரயத்தினப்பட்டும் அவர்கள் அவனுக்கோர் சகாயமும் செய்யாமற்போகவே கடன்பாபத்தாய் வாங்கினவர்க ளிடத்திலாவது தண்டல் செய்யலாமென்று அவர்களைக் கேட்டும் அவர்களிற் பெரும்பாலார் அவனிடத்தில் கடன் வாங்கினதேயில்லை யென்று மறுத்தார்கள்; சிலர் அவனுடன் வீண்வழக்கிட்டு விரட்டி விட்டார்கள்.

கோடீஸ்வரன் மிகவும் கலக்கமடைந்து, தான் அறிவீனத்தால் செல்விட்டதை நினைத்து வருந்தி யவஸ்தைப் படுகையில் தனக்கு மிகவும் பழக்கமான சுந்தரசெட்டி

யென்னும் வர்த்தகனுக்குத் தான் ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்திருந்தது நினைவுக்குவந்து, தன் மனைவியை யழைத்து அவளைநோக்கி, "பெண்ணே! நமது பொருள் பலபேரிடத்திலிருக்க நாமிப்போது துன்பப்படவேண்டிய காரணமேன்? நான் முற்றும் மறந்துபோயிருந்த வர்த்தக னுடைய கியாபகம் இப்போது தோன்றியபடியால், அவ னுக்கு ஆயிரம் ரூபாய் கடனாகச் சிலமாதங்களுக்குமுன் கொடுத்திருக்கிறேன். அவன் பெயர் சுந்தரசெட்டி. அவன் மற்றவர்களைப்போல் நாணயப்பழுதுள்ளவனல்ல. இப் போது நான் நேரே அவனிடம் போய் கேட்க அசக்தனு யிருக்கிறபடியால், நீ சென்று அவன் என்னிடம் வாங்கின ஆயிரம் ரூபாயையும் இச்சமயத்தில் கொடுத்து உதவும் படிக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றுக்கியாபித்தான்.

கனகாம்பாள் தன் புருஷனுடைய உத்திரவின்படி வர்த்தகனிடத்திற்குப் போகப் புறப்பட்டு வர்த்தகனு டைய மனையை விசாரித்துக்கொண்டுபோய் அவன் வீட் டிற் புகுந்தவுடன் வர்த்தகன் அவளைக்கண்டு மரியாதை யுடன் உட்காரச்செய்து வந்தகாரியம் யாதென விசாரித் தான். அப்பாவியமாது, அவனைப்பார்த்து, "ஐயா! நான் கோடீஸ்வரருடைய மனைவி. அவருக்குத் தற்காலம் ஜீவனத்துக்கே கஷ்டமா யிருப்பதால் அவரிடத்தில் நீர் கடனாகவாங்கிய ஆயிரம் ரூபாய்களையும் என்னிடத்தில் தரும்படி உம்மைப் பிரார்த்திக்கின்றார்" என்றாள். சுந்தர செட்டியென்னும் அவ்வர்த்தகன், கனகாம்பாளைக் கண்ட வுடன் காமவிகாரம் அதிகரித்து அவளைநோக்கி, "அழகில் அரம்பையைப்பழிக்கும் ஆயிழையே! நீகேட்டபொருளைக் கொடுக்க யாதொரு தடையுமில்லை. ஆனால் அத்தொ கையை நான் என்றும் உனது கணவனிடத்தில் கடனாக

வாங்கினதேயில்லை. நீ வெகு பிரயாசையுடன் உனது மாந்தளிர்போன்ற பாதங்கள் வருந்த என் வீடுதேடி வந்தமையால் அப்பணத்தை யுனக்குத் தருகின்றேன். உன்னைக் கண்டமாத்திரத்தில் உன்னுடைய பேரழகால் என் புத்தி சித்தமெல்லாங் கலங்கி காமனெய்யும் மலர்பாணத்தால்மிகவும் வருந்துகின்றேன். ஆகையால் என்னைப் பாக்கியவந்தனாகச் செய்வது உன்னுடைய கடமை. உனது கணவனோ உனக்குக் கண்ணிறைந்த புருஷனாயிராமல் விருத்தாப்பியனா யிருப்பதால் உன் விருப்பத்திற் கிசைந்தவனல்ல. நான் உன்னால் விரும்பிய காரியத்தை உனது கரும்பொத்த மனங்கொண்டு என்னைக் களிக்கச்செய்வையேயானால் நான் இப்போது உனக்கு வாக்களித்த ஆயிரம் ரூபாயுடன் இன்னும் ஆயிரம் ரூபாய் கொடுப்பதுடன் உனது ஆயுட்காலம் வரையிலும் நீ விரும்பியதைத்தர சித்தமாயிருக்கின்றேன்" என்று சொல்லி காமவிச்சையால் அவன் மனம்போனபடி பேசினதுமன்றி அவளைத் தழுவி யணையும்படி பிரயத்தனப்பட்டான்.

நாராசங் காய்ச்சி நடுச்செவியில் விட்டதுபோல் இவனது வார்த்தைகளைக் கேட்டிருந்த கனகாம்பாள், சற்று தூரத்தில் விலகி, அவனைக் கடுகடுத்துச்சீறி, "ஆ நீதிதப்பிய வர்த்தகா! நீ எனக்குக் கொடுப்பதாகச் சொல்லும் ஆயிரம் ரூபாயல்ல உனது ஆஸ்திமுழுமையும் எனக்கு நீ கொடுப்பதாயிருந்தாலும் என் கற்பை யிழக்கமாட்டேன். எனது கணவனிடத்தில் நீ கடனாக வாங்கின ஆயிரம் ரூபாயைக் கொடுத்துவிடுவையேயல்லாமல் மற்றொருவருக்கு வாழ்க்கைப்பட்ட மங்கைமனதை மயக்க வெண்ணங்கொள்ளாதே" என்றனள்.

சுந்தரசெட்டி யென்னும் வர்த்தகன், கனகாம்பாள் தனக்கிணங்கவில்லையே யென்று வருத்தப்பட்டு அச்சுந்தர வதியை மிகவும் உதாசினமாய்ப்பேசித் தான் அவள் புருஷனிடம் கடன்பட்டதில்லையென்றும், ஆகையால் தான் ஒரு காசும் கொடுக்கமுடியாதென்றும் சொல்லி அம்மாதை வெருட்டித் துரத்திவிட்டான், கனகாம்பாளோ மிகவும் வாடினமுகத்துடன் தன்புருஷனிடம்வந்து அவ்வர்த்தகன் மகா கொடியனென்றும், தான் கடன் வாங்கினதில்லை யென்றும் சொன்னதாகத்தெரிவித்தவுடன் கோடீஸ்வரன் அதிக கோபங்கொண்டு, 'அடா வஞ்சகா! எனது கஷ்ட காலத்தில் இப்படியும் நீ மோசஞ்செய்யலாமா'? என்று தன் மனையாளை நோக்கி, "மாதே! அவ்வர்த்தகன் மிகுந்த நாணயமுள்ளவனென்றல்லவோ கைக்கடனுக ஆயிரம் ரூபாய் தந்தேன். அத்தொகைக்காக அவனிடமிருந்து யாதொரு ஈடும் வைத்துக்கொள்ளாமற்போனேனே; என்றாலும் இதுவிஷயத்தில் அவனைச் சும்மாவிடுவேனென்று நீ நினைக்காதே. நம்மால் கூடியவரையில் அவனிடத்திலிருந்து பணத்தை வாங்க முயலவேண்டும். ஆனதால் நீ உடனே இவ்வூர் கிராமாதிகாரியிடஞ் சென்று சுந்தரசெட்டியின் மோசத்தைக் குறித்துத் தெரிவிப்பையாகில் அவர் எனக்காக மனதிரங்கி அவ்வர்த்தகனிடமிருந்து பணத்தை வசூல் செய்துக்கொடுப்பார்" என்றான். கனகாம்பாள், தன்புருடனுடைய வாக்கை மீறாமல் உடனே கிராமாதிகாரியிடம் சென்றனள்.

கிராமாதிகாரி சுபாவத்திலேயே பெண்களாசைக் கொண்டவனுதலால்கனகாம்பாளைக்கண்டவுடன் சமீபத்திலமரச்செய்து, அவளது ரூபலாவண்யத்தைக் கண்டு பரவசமாகி மதியிழந்தவனாய், "ஆ! மாதர்க்கரசியே! நீ இங்கு

வந்தகாரிய மின்னதென்று எனக்குத் தெரிவிப்பையாகில் அதை இந்தக்ஷணமே சூனுகூலப்படுத்துவேன்" என்றான். கனகாம்பாள் மாறுத்தரமாக வர்த்தகனுகிய சுந்தரசெட்டி, தன் புருஷனிடம்வாங்கின ஆயிரம்ரூபாய்கடனைக்கொடுக்க மாட்டேனென்று நிராகரிப்பதால் தாங்கள் அதை வாங்கிக்கொடுக்கப் பிரார்த்திக்கின்றேன் என்று மொழிந்தனள். கிராமாதிகாரி, கனகாம்பாளைப்பார்த்து, அப்படியா! அந்த வர்த்தகன் அப்பணம் முழுமையும் தரும்படியான முயற்சியைத் தட்டாமற் செய்வேன். அவன் கடன்வாங்கினதில்லையென்று மறுதலிப்பானுனல் அவனைத்தொழுவில்மாட்டித் தொந்திரவுசெய்து, அவனிடமிருந்து பணத்தை வாங்கித் தருவேன். நீ இதற்காக அஞ்சவேண்டியதில்லையென்று சமாதான வார்த்தைகளைச் சொல்லிப் பின்னும் அவளை நோக்கி, "ஆ என் மனதைக்கவரும் மாதங்கியே! உனது வடிவழகின் சோதியில் என்மனது தடுமாற்றமடைந்து விரகதாபம் மேலிட்டதனுல் என்மேல் கருணைவைத்து எனக்கு இணங்குவையாகில் உனக்கு நாலாயிரம் ரூபாய்த் தருகின்றேன்" என்றான். கனகாம்பாள் இதைக் கேட்டவுடன் மனங்கொதித்து, ஆ கடவுளே! உலகத்தில் புண்ணிய புருஷர்கள் ஒருவருமில்லையா? குற்றம் புரிபவர்களை விசாரித்து, கிராமத்தில் அக்கிரமம் நடக்கவொட்டாமல் பாதுகார்க்கிறவர்களிடத்திலும் இக்கெட்டவெண்ணங்கள் அதிகரித்திருக்கின்றதே யென்று புலம்பினள்.

கிராமாதிகாரி எவ்விதத்திலாகிலும் அவளைத் தனக்கிணங்கும்படிச் செய்யவேண்டுமென்று அநேக இதமான வார்த்தைகளைச் சொல்லியும் பயன்படாமையால் அதிக கோபங்கொண்டு தன்விருப்பத்திற்கவள் உடன்படாவிடில் அவள் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வதில்லை யென்று

கண்டிப்பாய் மொழிந்தான். உடனே கனகாம்பாள் அவ்விடத்தைவிட்டகன்று தனக்கு சம்பவித்த அநியாயத்தைக் குறித்து வெகுவாய் விசனப்பட்டுக்கொண்டுபோய்த்தனது வீட்டையடைந்தனள். கோடீஸ்வரன், தன்மனைவி வாடின முகத்துடன் வந்ததைக்கண்டு அவளை நோக்கி, "கிராமாதிகாரியிடத்தில் உனக்கு நியாயங் கிடைக்கவில்லையோ?" என்றான். அதற்கவள், சுந்தரசெட்டிக்கு இவ்வூர் கிராமத்தலைவன் நண்பனாதலால் உமது பொருள்கிடைக்கும் மார்க்கம் இல்லையென்றாள். கோடீஸ்வரன், அப்படியானால் நீ இப்பட்டணத்திலுள்ள நீதித்தலைவனிடம் போய் இதைப்பற்றி முறையிடுவாயானால் அவர் சுந்தரசெட்டியின் பாக்கி பணத்தை எவ்விதத்திலாகிலும் வாங்கித்தருவார். அவர் மிகவும் நல்லவர், நீதியாய் ஆராய்ந்து எத்தொழிலையும்செய்பவர். எனக்கும் அவர் மிகவும் வேண்டியவராதலால் கூடிய பிரயாசைப்பட்டுப் பணத்தை நமக்குச் சேர்ப்பிப்பார்" என்றான்.

கனகாம்பாள், கணவன் வார்த்தைக் கிணங்கி நீதித்தலைவனுடைய வீட்டையறிந்து, அவ்வீட்டிற்குட் சென்றாள். அந்த நீதித்தலைவன் அவளைக் கண்டவுடன் உபசாரத்துடன் வரவேற்று அவளது முகவஜீகரத்தையும், தேககாந்தியையும் பார்த்து காமசன்னதமுள்ளவனாய், சுந்தரசெட்டியும், கிராமாதிகாரியும் விரகதாபத்தால் வெந்து வெறிகொண்டதுபோல நீதித்தலைவனும் அதிக மோகமாகியவளை நோக்கி, "ஆ என் மனதுக்கிசைந்த மாதரசே! நீயார்? எங்கிருப்பது? உனக்கு நான் என்னசெய்யவேண்டுமென் றெனக்குச் சொல்லென்றான். கனகாம்பாள் மறுமொழியாக, நீதிபனே! நான் இப்பட்டணத்திலுள்ள கோடீஸ்வரர் என்பவருடைய மனைவி என்றதும் அவன்

அப்படியா! நான் சோமேஸ்வரனை யறிவேன். அவன்விஷ யத்தில் நான் மிக நம்பிக்கையும் சினேகத்தன்மையுள்ளவ னுயு மிருக்கின்றேன். இவ்வளவு சௌந்தரியமுடைய அரம் பையையொத்த பாரியமனைவி அவனுக்கிருப்பது அவனது பெருத்த பாக்கியமேயென்றான். கனகாம்பாள் நீதித்தலை வனைப்பார்த்து, "ஐயா! என் கணவனை சினேகிதனுகப் பாவிப்பதிலும் அவர்மீதில் இரக்கங்கொள்ளப் பிரார்த்திக் கின்றேன்" என்று சொல்லித் தான் வந்தகாரணம் இன்ன தென விவரமாய்த் தெரிவித்தாள். நீதித்தலைவன் வழக் கின் சங்கதியை விவரமாய் அறிந்துக்கொண்டு, கனகாம் பாளை நோக்கி, "நான் என் அதிகாரபலத்தால் சுந்தர செட்டி உன் புருடனிடம் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவனை விடமாட்டேன். நான் இப்போது அந்த செட்டியை வரவழைத்து அவன் பட்ட கடனுகிய ரூபாய் ஆயிரத்தையும் அவனிடம் வசூல்செய்து உனக்குத் தருவேன். ஆனல் என்னைப்போன்ற பெரிய உத்தியோ கஸ்தர்கள் தாங்கள் செய்யப்போகும் உபகாரத்திற்கு எப் போதும் முன்னதாகவே பிரதியுபகாரம் பெற்றுக்கொள் ளும் வழக்கமுண்டானதால் நான் உனக்குச் செய்யப் போகிற உபகாரத்திற்கு நீ பிரதியுபகாரமாக நான் உன் மேல் கொண்டிருக்கும் மையலைத்தீர்க்கவேண்டுமென்றான்.

நீதித்தலைவனுடைய வார்த்தைகளைக்கேட்ட கனகாம் பாள், மற்ற இருவர்களைப்போல இவனும் தனக்கனுகூலஞ் செய்யப் போகிறதில்லையென் றெண்ணி மிகுந்த கவலை யுடன் வீடுசேர்ந்துத் தன் புருஷனை நோக்கி, "நாதா! நாம் கொடுத்தகடன் வருமென்று இனிநாம் நம்புவதற் கிடமில்லை. நமதுமேல் பரிதாபப்பட்டு நமக்கோர் ஒத் தாசை செய்பவர்கள் யாருமில்லை என்று தெரிவித்த

ளன். இதைக்கேட்ட கோடீஸ்வரன் வயிறெரிந்து தன் கஷ்டகாலத்தில் உதவியை மறந்த அக்கொடும்பாவிகளைத் திட்டிக்கொண்டிருக்கையில் அவன்மனைவியவனைத்தடுத்து, நமது வறுமைக்கு ஏதுவாயிருந்தவர்களை நீர் திட்டுவதில் உபயோகம் யாது? நாம் மனம் நொந்து பலவாறு அவர்களைத் தூஷிப்பதினால் நமக்கென்ன நன்மை கிடைக்கும். நமது பணம் வரும்படியான உபாயத்தை நாம் தேடவேண்டும். அதற்காக நான் ஒரு யோசனைசெய்திருக்கின்றேன். அதை இப்போது உமக்குத் தெரிவிக்கக்கூடாததா யிருக்கிறபடியால் அதை உம்முடன் சொல்வது யுக்தமல்ல. நீர் சம்மதிப்பீராகில் நம்மை மோசஞ்செய்தஅம் மூவரிடத்திலும் நமது பழியைத் தீர்த்துக்கொள்வதுமன்றி நமது வறுமைக் கேதுவான பணத்தையும் பெறலாம்'' என்றனள்.

கோடீஸ்வரன் தனது மனைவியின் அபிப்பிராயத்திற்கிணங்கினபடியால் உடனே கனகாம்பாள் தன் வீட்டைவிட்டு வெளிப்பட்டு, கடைத்தெருவுக்குப்போய் மனிதனடங்கக்கூடிய பெட்டிகள் மூன்று பெட்டிகளை விலைகொடுத்து வாங்கி, அவைகளைத் தனது வீட்டிற்குக் கொண்டுவந்துசேர்த்து, சுகந்த கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களணிந்து ஆடையாபரணங்களைப்பூண்டுப் பிறர் தன்னைக் கண்டவுடன் மோகிக்கும்படியாய்த் தன்னை சிங்காரித்துக்கொண்டு,சுந்தரசெட்டியினிடம்போய் அவன் மீதில் அதிக காதல்கொண்டவளைப்போல் அபினயித்து அவனைப்பார்த்து, "ஐயா! நீர் எனது புருஷனுக்குத் தரவேண்டிய ஆயிரம் ரூபாயையும் மறுபடியும் உம்மைக் கேட்டுவர என்கணவன் ஆக்யாபித்தபடியால் உம்மிடம் வந்தேன், நீர் என்மேல் வைத்திருக்கும் அன்பினாலாவது

அந்தப்பணத்தைத் தருவீராகில் நான் அதற்குத்தகுந்த நன்றியறிந்தவளா யிருப்பேன்" என்றனள்.

வர்த்தகன் அவளைநோக்கி, "ஆ! என் காதற்கிளியே! நான் உன்னைக் கேட்டுக்கொண்டதைப்போல் நீ என்காமப் பிணியைப்போக்கி இன்பசுகமளிப்பையாகில் நான் உனக்கு வாக்களித்த இரண்டாயிரம் ரூபாய் கொடுக்கத் தவறமாட்டேன்" என்றான். கனகாம்பாள் அவனது கையைத் தானே வலியப் பிடித்துக்கொண்டு 'இதுவிஷயத்தில் தாங்கள் தவறமாட்டீரென்று நம்பியே இரண்டாம் முறையும் தங்களிடம் வந்தேன். நீர் எனக்கு இப்போது வாக்களித்தப்பிரகாரம் பணத்தை யெடுத்துக்கொண்டு இன்றிரவு சரியாய் பத்துமணிக்கு என் வீட்டிற்குவந்து மெதுவாகக் கதவைத் தட்டுவீராகில் எனது அந்தரங்கமுள்ள வேலைக்காரி கதவைத்திறந்து, நான் இருக்கும் சயனவறைக்கு அழைத்து வருவாள். அங்கே நாமிருவரும் ஏகபோகமாய் சுகமனுபவித்து இரவைக் கழிக்கலாம்' என்றனள். இவ்வார்த்தையைக் கேட்ட வர்த்தகன் மிகவும் சந்தோஷமடைந்து அப்படியே அன்றிரவு சரியாக பத்துமணிக்குப் பணத்துடன் வருவதாகச் சொன்னவுடன், கனகாம்பாள் அவனிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு கிராமாதிகாரியின் வீட்டுக்குப் போய் அவன் தனித்திருக்கக்கண்டு அவனருகிற் சென்று, "ஐயா! நான் தங்களிடம் வந்துபோனதுமுதல் தாங்கள் தெரிவித்த சங்கதியைப்பற்றிப் பலவாறு யோசித்ததில், உம்மைநான் அப்போதே ஆசைமணாளனாக அங்கீகாரஞ் செய்யாமல் அலட்சியஞ் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டுகின்றேன். சாதாரண ஸ்திரீகளில் ஒருத்தியாகிய நான் ஓர் கிராமாதிகாரிக்கு மனைவியாவதென்றால் நான் பூர்வஜென்மத்தில் புண்ணியஞ்செய்தே யிருக்கவேண்டும்" என்றனள்.

கிராமாதிகாரி, கனகாம்பாள் சொன்னதைக் கேட்டவுடன் அதிக அகமகிழ்ந்து, 'என் ஆசைக்குகந்த நேசக்கிளியே! உன்னை நான் அதிகமாய் விசுவாசித்திருக்கின்றேன். உனக்கு நான் கொடுப்பதாக வாக்களித்திருக்கின்ற நாலாயிரம் ரூபாயையும் கொடுக்க சித்தமாயிருக்கின்றேன். அதை நீ பெற்றுக்கொண்டு என் மட்டடங்கா காமப்பிணியைப்போக்க உன்னை வேண்டுகின்றேன். அல்லது விருத்தனாகிய உன் கணவனைவிட்டு என்மனையில் என்னும் வசிக்க இஷ்டமிருக்கின் அதற்கும்யான்சம்மதித்திருக்கின்றேன்'' என்றான். கனகாம்பபாள் அவனைப்பார்த்து, ''ஐயா! என் கணவனைத் தனித்துவிட்டு அவனைத் துன்பத்துக்குள்ளாகச் செய்வது எனக்கிஷ்டமில்லை. அப்படிச் செய்வதினால் உலக அபவாதத்திற்கு உட்படவேண்டுமென்பதுத் தங்களுக்குத் தெரிந்தவிஷயமல்லவா? ஆகையால் நமதிருவருக்குமுள்ள ஒற்றுமை யாருக்கும் வெளிப்படுத்தாமல் இரகசியமாய் நமது அபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டுவர எனது வீட்டிற்கு வருவீராகில் என் புருஷனை ஏமாற்றி நான் கற்ற உபாய தந்திரங்களைக் கையாடுவேன். ஆகையால் நீர் தனித்து இன்றிரவு சரியாகப் பதினொரு மணிக்கு என் வீட்டுக்கு வருவீராகில் நாமிருவரும் சாசல்லாபமாய்க் கூடி இன்பசுகத்தை யனுபவிக்கலாம்'' என்றனள். கிராமாதிகாரி இதைக் கேட்டவுடன் பரம சந்துஷ்டியடைந்து அவளிட்ட கெடுவில் தனியாக அவள் வீட்டிற்கு வருவதாக ஒப்புக்கொண்டான்.

பிறகு கனகாம்பாள் வர்த்தகனையும், கிராமாதிகாரியையும் தன் வீட்டுக்கு வரச்சொன்னதைப்போல் நீதிபதியையும் அன்றிரவு பன்னிரண்டு மணிக்குத் தன் வீட்டுக்கு வரும்படிச் சொல்லித் தன் வீட்டையடைந்து அக்காமுகா

களை உணவுகளால் உபசரிக்கும்பொருட்டு மிட்டாய் தினுசுகளையும் கனிவர்க்கங்களையும் சேகரித்து வைத்து, தனக்கு மிகவும் ஆந்தரீகமுள்ள வேலைக்காரியிடத்தில் தான் செய்யப்போகும் காரியத்தையும் அன்றிரவில் அவளால் ஆக வேண்டிய வேலைகள் இன்னின்னவை யென்றும் தெரியப்படுத்தி, அவர்கள் வருகைக்கு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

முதலில் வர்த்தகனாகிய சுந்தரசெட்டி அன்றிரவு குறித்த பத்துமணிக்கு கனகாம்பாளின் வீட்டுக் கதவைத் தட்டினான். வேலைக்காரி உடனே கதவைத்திறந்து அவனைத் தனது யஜமானியிருக்கும் சயனவறைக்கு அழைத்துப்போய் விட்டு, மற்றோர் அறையில் நித்திரை செய்கிற கோடீஸ்வரன் விழித்துக்கொள்ளும்படியான அரவம் செய்யாமலிருக்கும்படி சொல்லிப் போயினள். அங்கிருந்த கனகாம்பாளை செட்டிக் கண்டவுடன், 'ஆ! மின்னற்கொடியிடையாளே! நான் உனக்கு வாக்களித்த இரண்டாயிரம் ரூபாய் இதோ கொண்டுவந்தேன். நான் உன்னிடத்திலடையப்போகும் இன்பத்துக்கு இது ஈடல்ல'' என்றான்.

கனகாம்பாள் அவன் கொண்டுவந்த பணத்தைப் பத்திரப்படுத்தி, வர்த்தகனுடைய கையைப்பிடித்து மஞ்சத்தின்மேல் உட்காரவைத்து, மிட்டாய், பழம் முதலிய சிற்றுண்டிகளை யருந்தச்செய்து, வேடிக்கையாக அவனுடன் சற்றுவார்த்தையாடிக்கொண்டிருக்கையில் வீட்டில் ஏதோ சந்தடியுண்டாக, கனகாம்பாள் தானொன்றும் அறியாதவள்போலவும், மிகவும் பயந்தவளைப்போலவும் அபிநயித்து, தாதியை யழைத்து அங்குண்டாகிய சந்தடி யாதென்றறிந்துவர ஆக்கியாபித்தனள். அவ்வேலைக்காரி போய் சிலது நிமிஷங்கள் பொறுத்து மிகவும் கலக்கமடைந்தவ

ளாய்த் திரும்பிவந்து, கனகாம்பாளை நோக்கி, தாயே! இப்போது பெருத்த ஆபத்துவந்து நேர்ந்தது. உனது தமையன் ஊரிலிருந்து வந்து உனது நாயகனிடத்தில் வார்த்தையாடிக் கொண்டிருக்கின்றார். அவர்களிருவரும் உன்னிடம் வரயிருக்கிறார்கள்" என்றாள்.

இந்தச் செவியுற்ற கனகாம்பாள் மிகவும் நடுக்கமடைந்து, இவ்வித ஆபத்து இச்சமயத்தில்தானு வரவேண்டும்? ஐயோ! நான் எனது சோரநாயகனுட னிருப்பதை அவர்கள் பார்த்துவிட்டால் நகைப்புக்கும், அவமானத்திற்கும் உட்படுவதன்றி ஆயுட்காலமுழுமையும் நான் நிந்தனைக்குள்ளாக வேண்டியிருக்கின்றதே, இவ்வெட்கமான காரியத்தை இச்சமயத்தில் நான் எப்படி நிவர்த்திப்பேன் என்று புலம்பினாள். அப்போது வேலைக்காரி யவளைப் பார்த்து. நீயேன் இப்படி வருந்துகின்றாய், சற்றுநேரம் உனது காதலன் இதோயிருக்கும் இப்பெட்டியில் பதுங்கியிருப்பாராகில் ஒரு ஆபத்தும் நேரிடாது" என்றனள்.

இதைக்கேட்ட வர்த்தகன் இதுவும் நல்ல சூழ்ச்சிதானென்று அப்பெட்டியில் புகுந்துக்கொள்ள சம்மதித்து அதில் இறங்கி பதுங்கிக்கொண்டான். கனகாம்பாள் அவனை நோக்கி, "எனது அன்புக்குரிய ஐயா! நீர் யாதொன்றும் சிந்திக்கவேண்டாம். எனது தமையனும் கணவனும் இவ்விடம்வந்து போனபின்பு நான் பெட்டியைத் திறந்துவிடுகின்றேன். பிறகு நாமிருவரும் ஏகபோகமாயிருந்து இவ்விரவைக் கழிக்கலாம். எதிர்பாராத ஆபத்து சடுதியில் நேர்ந்ததே" என்று அவனுக்குத் தேறுதல்சொல்லி பெட்டியைப்பூட்டி சாவியைத் தன்னிடம் வைத்துக்கொண்டனள். வர்த்தகன் தான் அவமானத்திற் கேதுவாய் அவன்பட்டதைச் சற்றும் எண்ணுமல்,

தான் அவளால் அதிகமாய் நேசிக்கப் பட்டவனென்று தானே தன்னை மெச்சிக்கொண்டு, காமமயக்கத்தால் சொக்கித் தான் அனுபவிக்கும் துன்பங்களெல்லாம் இன்பமாகவே எண்ணி, ஆறுதலடைந்து அப்பெட்டிக்குள் உட்கார்ந்திருந்தான்.

பிறகு கனகாம்பாள் அவ்வறையைவிட்டு வெளியில் வந்து தனது தாதியைநோக்கி, 'ஒருவன் என் கையில் சிக்குண்டான். மற்றவர்களும் எனக்குத் தப்பிப்போவார்களோ பார்ப்போம்' என்றதும் "அதையும் இன்னும்சற்று நேரத்திலறியலாம்" என்று தாதி விடைபகர, தெருக்கதவு தட்டப்படுகிற சப்தத்தைக்கேட்டு தாதியோடிக் கதவைத் திறந்து நீ யாரென்க, அவன் நான் கிராமாதிகாரி என்று சொல்ல, தாதி யவனைநோக்கி, ஐயா! மெதுவாகப்பேசும், கோடீஸ்வரன் விழித்துக்கொண்டால் உமது காரியம் கைகூடாது. உமதுமேல் அதிக மோகங் கொண்டிருக்கிற எனது யஜமானி யிருக்கும் சயனவறைக்கு உம்மை யழைத்துவரும்படி எனக்கு உத்தரவு செய்திருப்பதால் அவ்விட மழைத்துக்கொண்டு போகிறேனென்று தெரிவித்து அவனைத் தன் பின்னோடு அழைத்துக்கொண்டு போய் சயனவறையில் விட்டனள். கிராமாதிகாரி கனகாம்பாளைப் பார்த்து, "என் இன்பரஞ்சிதக் குயிலே! இதோ நான் உனக்கு வாக்களித்த நாலாயிரம் ரூபாயும் கொண்டுவந்தேன். இனி என்னுடைய ஆவலைத் தீர்ப்பது உன்கடன்" என்றான்.

கனகாம்பாள் அப்பணத்தைப் பத்திரப்படுத்தி அவனைத் தன் மஞ்சத்தின்மேல் உட்காரச்செய்து சிற்றுண்டிகளால் அவனை யுபசரித்து, சரசசல்லாப வார்த்தைகளைச் சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து, பிறகு தன் புருஷன்

தூங்குகிறதும் அல்லது விழித்திருக்கிறதையும் ஒருநொடியில் பார்த்துவருவதாக வெளிச் சென்றனள். கிராமாதிகாரி மஞ்சத்தின்மேல் சயனித்துக்கொண்டு, தன் எண்ணம் கைகூடி வந்ததென்று சந்தோஷப்பட்டுக்கொண்டு கனகாம்பாள் வரவுக்கெதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் கனகாம்பாள் திரும்பிவந்து, கிராமாதிகாரியைப் பார்த்து, "ஐயா! இனி நான் என்ன செய்வேன், வெண்ணெவரும் சமயத்தில் தாழி உடைந்ததைப்போல ஆயிற்றே. தாங்கள் எனது சயனவறைக்குள் வருவதை ஓர் வேலைக்காரன் பார்த்து என் புருஷனுடன் தெரிவித்துவிட்டான். அவர் தன் பந்து ஜனங்களை வரவழைத்து எனது சோரத்துவத்தை அவர்களுக்கு ரூபிக்கவெண்ணி இங்குவர 'யிருக்கிறார். இப்பழியினின்றும் நான் எவ்வாறு தப்புவேன்" என்று அழ ஆரம்பித்தனள்.

கிராமாதிகாரி அவளை நோக்கி, மாதே! நீ சஞ்சலப்படாதே. நான் கிராமாதிகாரியானதால் என்னைக்கண்டவுடன் யாவரும் பயந்து உனக்கொரு தண்டனையுஞ்செய்யமாட்டார்கள்? என்று தைரியஞ் சொல்ல, கனகாம்பாள், "ஆ! என் நேசதுரையே! என் கணவனுக்காகவும், பந்துக்களுக்காகவும் தங்கள் கடாட்சம் பூர்த்தியாய் என்மேல் இருக்குமளவும் நான் பயப்படமாட்டேன். ஆனால் விபசாரி என்னும் பெயர் உலகத்தில் நான் எடுக்க நேரிடுமேயென்று விசனப்படுகிறேன்" என்றுத் தேம்பியழ ஆரம்பித்தனள். அப்போது வேலைக்காரி அங்குவந்து கிராமாதிகாரியைப் பார்த்து, "ஐயா! என் யஜமானியின் மானத்தைக் காப்பாற்றவும், தங்களுடைய காம இச்சைய பூர்த்தியாகவும் நானோர் உபாயஞ் சொல்லுகிறேன். அதாவது, இதோ இருக்கும் பெட்டிக்குள் சற்றுநேரம் நீர் பதுங்கிக்கொண்

டிருப்பீராகில் கோடீஸ்வரனும், அவன் பந்துக்களும் இங்கு வந்துபார்த்து சமுசயிக்கத்தக்க நடவடிக்கை யொன்று மில்லையென்று போய்விட்டபிறகு நீரும் கனகாம்பாளும் இன்றிரவை கேளீவிலாசமாய் கழிக்கலாம் என்றனள். இதுவும் ஓர் நல்ல யோசனையென்று கிராமாதிகாரி நினைத்து பெட்டிக்குள் புகுந்துக் கொண்டவுடன் கனகாம்பாள் அதைப் பூட்டி சாவியைத் தன்னிடம் வைத்துக்கொண்டனள்.

இவ்விதம் இவ்விருவர் அடைப்பட்டபிறகு நீதிபதி இரவு பன்னிரண்டுமணிக்கு கனகாம்பாளுடைய வீட்டுக்கு வந்து அவனும் அவளுடைய தந்திரோபாயமான ஜாலங்களால் மற்றோர் பெட்டியில் அடைப்பட்டான்.

கனகாம்பாள் இக்கொடும்பாவிகளாகிய மூவரையும் பெட்டிகளில் அடைத்தபிறகு தன் கணவனிடம் போய் தான் செய்திருக்கும் காரியத்தைத் தெரியப்படுத்தினள். கோடீஸ்வரன் மிகவும் ஆச்சரியமும் சந்தோஷமுமடைந்து அவர்களை எப்படி விடுவிப்பதென்று வினவினன். அதையும் அவள் சீக்கிரத்தில் தெரிவிப்பதாக உரைத்து, பழிக்குப் பழியாக அம்மூவரையும் அரசனறிய அவமானப் படுத்தி, ஊரிலுள்ளார் யாவரும் அவர்களை வெறுக்கும் படிச் செய்யவெண்ணி பொழுது விடிந்தவுடன் தன்னை அதிகமாய் அலங்கரித்துக்கொண்டு அரசசபையை யணுகினள்,

வச்சிரபுரத்தை யாளும் மன்னனும் மகா கொடியவனையும் ஸ்திரீகளை வலியநேசித்து வற்புறுத்தி யணைபவனையும் இருந்தபடியால் அவனிடத்தில் மிகவும் சாமர்த்தியமான தந்திரோபாயங்களால் தன் னெண்ணத்தை முடிக்க வேண்டுமென்றும், அவனும் தன்மேல் மோகித்து தகாத

வார்த்தைகளாடி மருவவழைப்பானுகில் அவனையும் அவமானப் படுத்தவேண்டுமென்றும் நினைத்திருந்தனள். அரசன் கனகாம்பாளைக் கண்டதும் கார்மேகங் கப்பியிருந்த வானத்தில் சூரியப்பிரகாச வொளி ஜொலித்ததுபோல் அவளது ஜோதியால் மதிமருண்டு, ஆ! ஈதென்ன பேரழகு! முத்தர் சித்தர் பத்தர் தொழும் பைங்கிளியோ? கணுவெலாந் தேனொழுகும் கட்டிக்கரும்போ? கந்தர்வ ஸ்திரீயோ? வென்று கலக்கமடைந்து, "மூவுலகோரையும் மயக்கும் முற்றும் சௌந்தரவதியே! நீயார்? எங்கிருப்பது? எக்காரணத்தினுல் இங்குவந்தாய்? என்னுல் உனக்காகத் தக்க காரியம் யாது?" என்று வினவினன்.

அப்போது கனகாம்பாள், மன்னனை நோக்கி, துஷ்ட சங்காரஞ்செய்து சிஷ்டபரிபாலனம் பண்ணும் அரசே! உம்மாலாகத்தக்க காரியமொன்றிருக்கின்றது. நீர் நீதி வழுவாமல் வலியோருக்கும் எளியோருக்கும் நடுநிலைமையாய் நியாயம்பகரும் வள்ளலென்றுகேள்வியுற்று என்வழக்கையும் தங்கள் சமுகம் சொல்லி, தங்கள் பரிபாலனத்தின் கீழ் பரம அயோக்கியர்கள் அதிகாரிகளாய் இருப்பதைத் தாங்கள் உணரும் வண்ணம் நான் இங்குவந்தேன்" என்றதும் மன்னன் அவளைப்பார்த்து அவ்வித அயோக்கியர்கள் யார்? என்று விசாரித்தான். கனகாம்பாள் மன்னனைப் பார்த்து, பரஸ்திரீகளை விரும்புவது பாதகமென்றெண்ணுமல் என்னைப் பலரும் இகழத்தக்க பரத்தையாகும்படி எண்ணங்கொண்டதால் அவர்களை என் சாமர்த்தியத்தினுல் பெட்டிகளில் அடக்கஞ் செய்திருக்கின்றேன். தாங்கள் அவர்களைப் பார்க்கும் வண்ணம் இதோஒருநொடியில் அவர்களைத் தங்கள் முன்னிலையில் ஆஜர்ப்படுத்துகிறேனென்று பரபரப்பாய்த் தன் வீட்டையடைந்து தன்

வேலையாட்களைக்கொண்டு அம்மூன்று பெட்டிகளையும் எடுத்துவரச்செய்து அரசனது கொலுமுகத்தில் இரக்கியானவுடன் மூன்றுபெட்டிகளையுந்திறந்தாள். அப்பெட்டிகளில் அப்பட்டணத்து பிரபல வர்த்தகனாகிய சுந்தரசெட்டியும், கிராமாதிகாரியும், நீதிபதியும் இருப்பதைக் கண்ட அரசனும் சபையிலிருந்த யாவரும்பார்த்து பெருநகைகொள்ள, அம்மூவரும் அவமானத்தை யடைந்து தலைகுனிந்தவண்ணமாய் நின்றார்கள்.

அரசன் கனகாம்பாளின் சௌந்தரியத்தைக் கண்டு தேனில்விழுந்த ஈயைப்போல் தவித்து அம்மூவர்களை விசாரிக்கவேண்டு மென்பதையுமறந்து, சபையிலுள்ளார் யாவருக்கும் விடைகொடுத்தனுப்பிவிட்டு, கனகாம்பாளை யோர் தனியறைக்கழைத்துக்கொண்டுபோய் 'பெண்ணே! உன்னை நான் பார்த்தமாத்திரத்தில் உனது அழகினால் மதிமருண்டு காமசோகத்தால் களைத்து என்னை நானே ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளக் கூடாத நிலைமையி லிருக்கின்றேன். நீ என் ஆவியைக் கொள்ளைகொண்டு போகவந்த தேவியோ? அல்லது என்னைச் சிறைப்படுத்தும் அரம்பையோ? நீ என் அபீஷ்டத்தை நிறைவேற்றாவிடில் நான் ஆவியையிழப்பேன்' என்று பலாத்காரமாய் அவளைப் புணர எத்தனித்தான். இவன் இவ்விதம் காமநோயால் வருந்தி வார்த்தையாடிக்கொண்டிருக்கையில் சபையில் நின்றிருந்த வர்த்தகனும், கிராமாதிகாரியும், நீதிபதியும் பரபரப்பாய் அவ்விடம் விட்டகன்று அப்பட்டணத்தில் தலைகாட்டநாணி, தங்கள் சமுசாரங்களுடன் வெவ்வேறு பட்டணங்களுக்குப் போய்க் குடியேறினார்கள்.

மன்னன் தான் எண்ணியிருந்தபடி நீதியொன்றும் விசாரியாமல் தன்னை மறுவும்படி வற்புறுத்தி பலவந்தஞ்

செய்வதைக்கண்ட கனகாம்பாள் அரசனையும் ஏமாற்றித் தப்பித்துக்கொள்ளவெண்ணி அவனைநோக்கி, 'ஐயா! தாங்கள் நீதிதவரா மன்னனானதால் சற்று பொறுத்துக் கொண்டு என்வரலாற்றைச் சற்று சாவகாசமாய் கேட்க வேண்டுகின்றேன். அதாவது, தங்கள் பார்வைக்கு யாதோர் பழுதுமில்லாத என்னை என்தந்தை கன்னிகழிய வொட்டாமல் கடுஞ்சிறைப்படுத்தி புருஷர்களாவது ஸ்திரீகளாவது என்னை யணுகிப் பார்க்கவொட்டாமல் வைத்து என்னை மணம் புரியச்கேட்க வருபவர்களுக்கெல்லாம் மறுத்தவார்த்தைகளாலும், நான் அங்கவிகார அகோர ரூபமுடையவளென்றும், ஆணும் பெண்ணுமல்லாத அலியென்றும், உடம்பெல்லாம் எலும்பேயொழிய சதையிராத விகாரரூபியென்றும், குஷ்டநோயுள்ளவளென்றும், ஒருகாலும், கையும் குறைந்தவளென்றும் இப்படிப் பலவிதமாகச் சொல்லித்தட்டழித்து எனக்குத்தகுந்த நாயகனைத் தேடி விவாகம்செய்துவைக்காமல் உயிருடன் வதைத்துக் கொண்டு வருகின்றான். தங்களைப்போன்ற அரசற்குரிய ரூபலாவண்யத்தையும் தேககாந்தியையும் நான் அடைந்திருப்பதால் சாதாரண அந்தஸ்துள்ளவர்களை மணந்துக் கொள்ள நான் கருதினவளல்ல. நேற்றையதினம் என் தந்தை ஓர் அவசர நிமித்தமாக தெளிவூருக்குப் போயிருக்கும் சமயத்தில் எனது ரூபலாவண்யத்தை எனது வேலைக்காரியால் கேள்விப்பட்டிருந்த வர்த்தகனும், கிராமாதிகாரியும், நீதிபதியும் தங்களுடைய செல்வத்தினாலும் அதிகார பலத்தினாலும் என்னைப் பலவந்தமாய் அணையவிரும்பி ஒருவர்பின் னொருவனாக என் வீட்டிற்கு வர நான் என் தந்திர யுக்தியினால் அவர்களைத் தனித்தனி பெட்டியில் அடக்கஞ் செய்து, தங்களுக்கு எனது சௌந்தரியத்தைக் காட்டி

என்னை விவாகஞ் செய்துக்கொள்ளச்செய்வதற்கு இதுவே தகுந்த சமயமென்று தங்கள் சபையை யணுகி, அம்மூவர் செய்த அக்கிரமத்தைத் தெரியக்காட்டி, அவர்களையும் தாங்கள் நேரில் பார்க்கும்படிச் செய்தேன். நான் ஓர் அரசனுக்கு வாழ்க்கைப்பட நினைத்திருந்தபடித் தாங்கள் என்மேல் அதிக விசுவாசத்தைக் காண்பிப்பதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகின்றேன். தாங்கள் என்மேல் பிரியப்பட்டபடியால் என்னை விவாகஞ் செய்துக்கொள்ளா விடில் நான் பிராணத்தியாகஞ் செய்துக்கொள்ளுவேன் என்பது நிச்சயம். ஆனால் சதிதுரோகியும் சத்துருவுமாகிய என்தந்தை நாளையதினம் திரும்பிவந்துவிடுவான். தங்களுடன் நான் வார்த்தையாடினதை அவனறிவானாகில் என்னைக் கொடிய நிர்ப்பந்தத்திற் குள்ளாக்குவதுந்தவிர என்னுடைய விருப்பத்தையும் முன்னுக்குக் கொண்டுவரானென்றனள்.

இதைக்கேட்டமன்னன் கனகாம்பாளைநோக்கி, என் ஆயிழையே! நீ இதற்காகக் கிலேசப் படவேண்டாம். உன் தந்தையின் நாமதேயம், அவன்தொழில், அவன் இருப்பிடம் முதலியவற்றைமாத்திரம் விவரமாகத் தெரிவிப்பாயாகில் மற்றக்காரியங்களை நான் பார்த்துக்கொள்ளுகிறேனென்றான். அதற்கு கனகாம்பாள், தன்தந்தையின் பெயர் குணாகரன் என்றும், அவன் செய்யுந் தொழில் வர்த்தகமென்றும், அவனிருப்பிடம் வடக்கு வீதியில் 24-வது எண்ணுள்ளவீடென்றும் தெரியப் படுத்தினபின் பேரில் அவளைத் தன் வீட்டுக்குப் போகும்படிக்கும், நாளைக்கே அவளைத் தான் சகலருமறிய மணம்புரிய எற்பாடுசெய்வதாயும் சொல்லி விடையளித்தான். கனகாம்பாள் தன்வீட்டையடைந்து நடந்த விருத்தாந்தங்கள்

யாவும் தன்கணவனுக்குத் தெரிவித்துப் பழிக்குப்பழியாக வர்த்தகனையும், கிராமாதிகாரியையும், நீதிபதியையும் அவமானப்படுத்தினதையும், அவர்களிடமிருந்து பணம் வசூல் செய்த மார்க்கத்தையும், அவர்களைப்போலவே தன்மேல் மோகங்கொண்ட அரசனும் அவமானமடைய ஏற்பாடு செய்திருப்பதையும் தெரிவித்தாள். கோடீஸ்வரன் தன் மனைவியின் சாமர்த்தியத்தினால் சம்பாதித்த ஆறுயிரம் ரூபாயையும் வைத்துக்கொண்டு முன்போல் செலவழிக்காமல் தன் மனைவியுடன் காலங்கழித்துவந்தான்.

இப்படி யிருக்க மறுநாள் அரசன் ஓர் ஆபீசரை யழைத்து குணாகரனுடைய வீட்டு விலாசம் முதலியவற்றைச்சொல்லி அவனை யழைத்துவரும்படிக் கட்டளையிட அவனும் குணாகரனைக்கண்டு அரசனது ஆஞ்ஞையை அவனுக்குத் தெரிவித்தான். குணாகரன் இதைக் கேட்டவுடன் கலங்கித் தன்மேல் யாரோ வொருவன் பிரியாது செய்திருக்கவேண்டுமென்று யோசித்து, அந்த ஆபீசரின் பின்னேசென்று அரசகொலுவை யடைந்தான். அரசன் அவனைக் கண்டதும் அதிக மரியாதையுடன் வரவேற்று தகுந்த ஆசனத்திலுட்காரச் செய்து அவனை நோக்கி, "ஐயா! குணாகரரே! நான் இன்று உனது முகதரிசனையைக்கண்டு சந்திக்கப்பெற்றதே பெரும்பாக்கியம். நீ நல்ல ஜீவகாருண்யனென்றும், இம்மை மறுமை யின்பங்களை யடையும்பொருட்டு லோகோபகாரமாக சகல தர்மங்களையும் நடப்பிப்பதாயும், தெய்வபக்தியில் மிகவும் சிரேஷ்டரென்றும் கேள்விப்பட்டு உன்னைக் கண்டுகளிக்க இங்கழைப்பித்தேன்" என்றான். அதற்கு குணாகரன் "தாங்கள் என்னைப்பற்றி கேள்விப்பட்ட யாவும் உண்மையே. உயிரிருந்தால் இவ்வருடம் காசியாத்திரை செய்துவரவேண்டு

மென்ற எண்ணத்துட னிருக்கின்றேன்" என்றவுடன் அரசன் அவனைப்பார்த்து இப்படிப்பட்ட மகான்களுடைய தரிசனையைக் காண்பதல்லோ பெருமை. உமக்கு யௌவனமுள்ள கலியாணத்திற் கேற்ற புத்திரி உண்டோ வென்று வினவினர். அதற்கு குணாகரன், "ஆம், 20-வயதுடைய ஓர் புத்திரி எனக்கிருக்கின்றாள். அவளுடைய பூர்வகன்மத்தின்பலனால் அவள் ஓர் புருஷனுக்கும் மனைவியாகத்தக்க பிராப்த பலனில்லாதவளும், கண்டோர் அருவருத்து வெட்கி நாணும்படியான அகோர ரூபியாயும், ஒரு காலுங்கையும் குறைந்த அவலட்சணத்துடன் குஷ்டரோகியுமாயும் இருக்கின்றாள். அதற்காகவே அவளை மனிதர் கண்ணுக்குக் காட்டாமல் மறைத்து வைத்திருக்கின்றேன்" என்றான்.

அவன் சொன்னதைக் கேட்ட அரசன் நகைத்து, "ஐயா! எல்லாரையும் ஏமாற்றுவதைப்போல் என்னையும் ஏமாற்றாதே. நீ இவ்விதமாகவே உன் மகளைப்பற்றி தூராய்ப்பேசி மாறாய்க்கூறுவாயென் றெனக்குத் தெரியும். ஆகிலும் உன் வாய்பிறப்பைக்கேட்டு உன் சம்மதம் பெற்றுக்கொள்ளத்தான் நானுன்னை இங்கழைப்பித்தேன். நீயுமதற் கொத்தாப்போல் மொழிந்தாய். எப்படியிருக்கினும் மனிதர் அருவருக்கத் தக்க அவ்வித அகோர ஸ்திரீயை ஒருவன் மணஞ்செய்துக்கொள்ள விரும்பினால் நீ சம்மதிக்கமாட்டாயா? நானே அவளை மணஞ்செய்துக் கொள்ள விரும்பி யிருக்கின்றேன். இதற்குன் சம்மதம் யாது?" என்றான். குணாகரன் பிரமித்து, "அரசே! தாங்கள் நிஷ்பிரயோஜனமாகிய இவ்வித கிருத்தியத்திற் குள்ளாகி பங்கப்பட்டுப்போக கருத்துக்கொண்ட பகையாளி யாரோ ஒருவன் மோசடியாய் உமது மனதைக்

கலைத்து உம்மைலோகத்தார்நகைக்குப்படிஏற்பாடு செய்த செய்கையே யல்லாமல் வேறல்ல" என்றான். அதற்கு அரசன் "நீ சொல்வது முற்றும் பிசகு. எனக்கு யாரும் அவளைப்பற்றி தெரிவித்ததேயில்லை. நானே யவளைநேரில் தரிசித்து அவளது அடங்காமோகத்தால் காமாந்தகாரனாகி உன்னை இங்கு வரவழைத்தேன்" என்றதும் குணாகரன், குலுங்கநகைத்து, அரசே! கடவுள் சாட்சியாக என் மகள் அங்கப்பழுதுள்ள அகோரரூபியென்று பிரமாணிக்கஞ் செய்கின்றேன். ஆகையால் இது விஷயத்தில் நீர் மோசம் போகாதிருக்க உண்மை வேண்டுகின்றேன் என்றான். அதற்கு அதிபதியவனைக் கோபக்குறிப்புடன்பார்த்து 'அவளெப்படிப் பட்டவளென்பதை நான் நன்றாய் உணர்வேன். நீ அவளைப்பற்றி இனியாதும் தெரிவிக்கவேண்டுவதில்லை. நீ இவ்வளவு கண்டிப்பாய்ச் சொல்லும் அந்த அங்கப்பழுதுள்ளவளே என் மனைவியா யிருக்கின்றாள்' என்றான். மற்றோர் முறையும் குணாகரன், தன் மகளால் அரசன் அவமானமடைந்து உலகம் சிரிக்கும்படி யாகுமென்றுசொல்லியும் அரசன் கேளாமல்வெகுண்டு, "குணாகரா! நீ இனி எனக்கு ஆயாசம் பெருகும்படி அடிக்கடி அதையே சொல்லிக்கொண்டிருப்பதில் பலனில்லை. உன் புத்திரியை எனக்கு மனைவியாய்க் கையளிக்கப் பிரியங் கொண்டிருக்கிறையோ வென்று மற்றோர் முறை உன்னைக் கேட்கின்றேன்" என்றான். இதைக்கேட்ட குணாகரன், இதேது மோசமாயிருக்கிறது. அரசன் தான் பிடித்ததே பிடிவாதமாய் என் மகளைக் கலியாணஞ் செய்துக்கொள்ள சாதிக்கின்றாரே. நயவஞ்சகர் யாரோ நட்பாய் போதித்ததை நம்பியல்லோ மோசம் போகிறார். ஏதோ என் நற்காலத்திற்காக கடவுள் இவ்விதம் செய்கிறாரென்று

திடங்கொண்டு அரசனைப்பார்த்து, ஆண்டவனே! தங்கள் அபீஷ்டத்தின் படியே என் குமாரத்தியை தங்களுக்குக் கொடுக்கின்றேன். ஆனால் தாங்கள் பதினாயிரம் ரூபாய் அவளுக்குப் பரியமாக முன்னாடி என் கையில் கொடுத்தாலல்லாமல் என் புத்திரி உமக்குப் பாரியாளாகும் பாக்கியத்தைப் பெறவே மாட்டாளென்று கூறினன். அதற்கு அரசன் "நீ உன் மகளுக்காகக்கேட்கும் சீதனத்தொகை வரம்பு கடந்ததேயாயினும் அத்தொகையை உன் குமாரத்தி மீதில் கொண்டிருக்கும் காதலினால் அதை யொரு பொருட்டா யெண்ணாமல் இதோ தருகிறேனென்று ஒரு பை நிறைந்த பதினாயிரம் ரூபாய்களை குணாகரன் கையிற்றந்தனன். உடனே பிராம்மணோத்தமரை அரசன் வரவழைத்து முகூர்த்தப் பத்திரிகையாவும் எழுதி முடித்து அதில் குணாகரனுடைய கையெழுத்தும் பதியச்செய்தான். மறுதினமே முகூர்த்தநாள் நிச்சயித்திருந்தபடியால் அரண்மனையாவும் பூப்பந்தல்களாலும், கமுகு, வாழை முதலிய மரங்களாலும் சிங்காரிக்கப்பட்டு பட்டணம் முழுவதும் கலியாணச்சடங்கின் சமாசாரம் பறை சாற்றப்பட்டு வீதிகளெல்லாம் தோரணங்களால் சிங்காரிக்கப்பட்டது. குணாகரனாகிய வர்த்தகனுடைய குமாரத்தி எவ்வளவழகாயிருந்தால் ஊராளும் மன்னன் மணம்புரிவான். அவ்வித அழகியைப் பார்க்கவேண்டுமென்று பிரபுக்களெல்லாம் முகூர்த்த காலத்தை எதிர் நோக்கி யிருந்தார்கள்.

இப்படியிருக்க, இவ்வரசனுக்கு மற்றோர் மனைவியுண்டு அவள் இவனது இரண்டாவது விவாகத்தைக் கேள்வியுற்றுத் தன் கணவனை யணுகி, "உத்தம தத்துவநிலை தவறிப் போன நாயகா! கொண்டவளுக்கிரண்டகம் பண்ணும் சதி துரோகி! ஓர் உறையில் இரண்டுவாள் நுழைப்பதுண்டோ?

சபல சித்தமும், நிலையில்லாதவனுமாகிய அன்பில்லாத வனே! யௌவனமும் பேரழகும் வாய்ந்த என்னை நிஷே தித்து, அதிரூப சுந்தரவதியின் அழகுக்காசை கொண்டு உன்மனம் வேறுபட்டதால் இனியொரு நிமிஷமும் இங் கிருந்து உன் விவாககோலத்தைக் கண்ணாரப் பார்த்துச் சகிக்கேன். ஆதலால் நான் என் தாய்வீட்டுக்குப் போகி றேன்'' என்றுசொல்லி அரண்மனையை விட்டுத் தன் பிறந் தகஞ் சென்றனள்.

மணவறையாவும் மகா நேர்த்தியாய் அலங்காரப் படுத்தி சர்வகாரியங்களும் சர்வசித்தமான பிறகு பிராம்ம ணோத்தமர்கள் மண்டபத்தில் நிறைந்திருக்க மேளவாத்தி யங்கள் இடி முழக்கம்போல் ஆரவாரித்துக் கொண்டிருந் தன. அனைவரும் புது மணப்பெண்ணின் வரவுக்காக எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். முகூர்த்தகாலம் நெருங் கினபடியால் அரசன் ஓர் படைவீரனை யனுப்பித் தன் மனோகரி இன்னும் வராமல் தாமதித்திருப்பது எது கார ணம்? அவளுக்காக ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேனென்று தெரிவிக்கும்படிச் சொல்லி யனுப்பினான். இவ்விதம் சொல்லிக்கொண் டிருக்கையில் ஓர் கூலியாள் பச்சைத்தாப்தாவினால் மூடப்பட்ட பெட்டி யைத் தலையின் மீதிலெடுத்துக்கொண்டு அரசன் முன்வந்து நின்றவுடன் அரசன் அவனைப்பார்த்து, அப்பா! நீ என்ன கொண்டுவந்தாய்? என்று வினவினார். அதற்கவன் ஆண்ட வனே! முந்தி பெட்டியைக் கீழே இறக்குங்கள் என்று சொல்லி பெட்டியைக் கீழே யிறக்கியவுடன் 'அரசே! இந் தப் பெட்டியில் நீர் வாதாடிப் போராடின உமது மனை விதானிருக்கின்றாள். அவளைத்தான் இங்குக் கொண்டுவந் தேன். அவளது சௌந்தரியத்தைக்கண்டு மகிழுமென்று கூறிப் பெட்டியைத் திறந்தான்.

அரசன் மூடியிருந்த பட்டுத்தாப்தாவை யெடுத்து விட்டுப் பெட்டியிலிருக்கும் அவலட்சண ரூபத்துடன் ஒரு கால் ஒரு கை கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் ஓர் கோரணிமாதைக் கண்டு பயந்து கைகாலெல்லாம் உதற லெடுத்து தட்டுத்தடுமாறித் தொப்பென்று கீழேவிழுந்து பின்பு தன்னைச் சுதாரித்துக்கொண்டெழுந்து கூலியாளைப் பார்த்து, "கண்டோர் கர்ப்பங்கலங்கும்படி அகோரரூபப் பெண் குரங்கை இங்கேன் கொண்டுவந்தாய்?" என்றான். அதற்கந்த கூலியாள் "ஐயா! இந்த அம்மாள்தான் குணா கரனுடைய குமாரத்தி. இந்தப்பெண்ணையே நீர் வதுவை செய்துக்கொள்ளப் போகிறீர்' என்று குணாகரன் என்னி டஞ் சொல்லி உமக்குச் சமர்ப்பிக்க உத்தரவருளினர்' என்றான்.

இதற்குள் குணாகரனும் அங்குவர அரசன் கண்களில் நெருப்புப் பொறிபறக்க கோபங்கொண்டு, "ஏ சண் டாளா! நீ யாரை எனக்கு மனைவியாகக் கொண்டுவந்தாய்? என்னை அரசனென்று நீ கொஞ்சமும் நினைக்கவில்லையா? உன் சொந்த மகளை மறைத்துவைத்து இவ்வகோர ரூப முள்ளவளை எங்கிருந்து கொண்டுவந்தாய்? உடனே இவளை யப்புறப்படுத்தி, வடுவில்லா சிரோமணியாகிய உனது குமாரத்தியை உடனே இங்கு கொண்டுவந்தாஜர்ப்படுத்து. முகூர்த்த காலத்திற்குள் அவளைக் கொணராவிடில் நீ கடுந் தண்டனைக் குள்ளாவாய்" என்றார். அதற்கவன் "அரசே நீர் என்னை மிரட்டுவதனால் நான் அஞ்சேன். அண்டசராசர புவன கர்த்தரறிய இந்த என் குமாரத்தியைத்தவிர வேறு புத்திரி எனக்கில்லவேயில்லை. இந்த பங்கமாகிய அகோர சிருஷ்டியே கடவுள் எனக்களித்தபாக்கியம். இவளுடைய ரூபத்தின் அவகேடைப்பற்றி நான் பலதடவை தர்க்கித்தும்

நீர் என்னுடன் வாதாடிப்போராடி அவளையே மணம்புரிய உற்சாகங்கொண்டு இப்போது என்னைப் பழிகூறுவது நியாயமல்ல" என்றான்.

அரசன் தன்னை இப்படுமோசத்திற் குள்ளாக்கின மங்கை எவளென்று தன்னாலான வரையில் விசாரித்தும் தெரியவராமையால் மனமருண்டு குணாகரனுக்கு இன்னும் பதினாயிரம் ரூபாய் தந்து தன் மகளைக் கொண்டுபோகும் படி வேண்டிக்கொண்டதும், குணாகரன் அப்பெட்டியை யெடுத்துக்கொண்டு வீடுபோய்ச்சேர்ந்தான். அரசன் தன் புத்தியீனத்தால் நேரிட்ட அவமானத்தினால் சிலமாதங்கள் வரையிலும் அரண்மனையை விட்டு வெளிவராதிருந்தான். பட்டணத்திலுள்ள பிரஜைகள் முதல் பிரதானிகள் வரையி லும் அரசனுடைய மதியீனத்திற்காக கெக்கலி கொட்டி நகைத்தார்கள்.

ஆகையால் சாமான்னிய ஸ்திரீயாகிய கனகாம்பா ளுக்கே இவ்வளவு சக்தி வாய்ந்திருந்தால் உலகையாளும் மன்னனாகிய புத்திசேன மகாராஜனுடைய குமாரத்தியாகி யும், வித்வத்தேர்ச்சியும் பெற்று பண்டிதர்களால் தயாபர சுந்தரியென்ற நாமதேயம்பெற்ற எனக்கு எவ்வளவு சக்தி யிராது. நீ என்னை கைவழித்த மண்போல் எண்ணி அஞ்சா நெஞ்சுடன் என் கேள்விக்கு விடைபகர வந்தனை" என்று சித்திராங்கதனை மிகவும் கடுகடுத்துச் சொல்லினள்.

சித்திராங்கதன் மிகவும் தீரத்துடன் அவளை நோக்கி, "இராஜபுத்திரியே ! நீ தெரிவித்த காரியங்களின் முடிவோ மிகவும் பயங்கரமானதென்று ஏற்கனவே எனக்குத் தெரி யும். நீ வீண் வார்த்தைகளுக் கிடங்கொடாமல் என்னைக் கேட்கவேண்டிய வினாக்களைக் கேட்டால் என்னாற் கூடிய பிரயாசைப்பட்டு அவளுக்கு விடைபகர பிரயத்தனப்

படுவேன்" என்று கூறினதும் அம்மாது சித்திராங்கதனைப் பார்த்து, "இராஜபுத்திரா !

இப்பூலோக அமைப்பில் தனக்குச் சமானமில்லாத சிரேஷ்டனும், உலகமுழுதும் கொண்டாடத்தக்க நண்பனுமாயிருக்கின்றவன் யார் ?"

என்றாள்.

சித்திராங்கதன் அவளைப் பார்த்து, பெண்ணே ! அவன் யாருக்கும் சமமாக ஒளிவீசாநின்ற மித்திரனாகிய சூரியன் என்றான்.

அப்போது அங்கிருந்த பிரபுக்களும், ஆம், உண்மைதான் என்று உரத்த சப்தமாய்க் கூவினார்கள். பின்பு இராஜபுத்திரி சித்திராங்கதனைப் பார்த்து,

பிள்ளைகளை யனேகமாய்ப் பெற்று அவைகள் விருத்தியாகவொட்டாமல் இரக்கமின்றி அவைகளை விழுங்கும்பாதகி யார் ?"

என்றனள்.

உடனே சித்திராங்கதன், "பெண்ணே !" அவள் "ஜானவி என்னும் பெயரையுடைய சமுத்திரம். ஏனெனில் ஆறுகளென்னும்பிள்ளைகள் வெள்ளப்பெருக்கால் அகன்று விருத்தியாகவொட்டாமல் அவைகளை விழுங்கி அவ்வாறுகளை வற்றச்செய்கின்றனள் என்றான்.

தன்னுடைய கேள்விகளுக்கு சரியான விடைகளை இராஜபுத்திரன் பகருவதைக்கண்ட தயாபரசுந்தரி. பின்னும் அவனைப்பார்த்து, "இராஜபுத்திரா !"

பக்சம் வெண்மையும் ஒரு பக்கம் சறுமையுமான இலைகளை உடைய மரம் எது ?"

என்று கேட்டு இராஜபுத்திரன் யோசித்து விடையளிப்ப தற்குமுன், தன் முகத்தை இதுவரையில் மறைத்திருந்த துணியை எடுத்துவிட்டுத் தன்முகத்தின் சௌந்தரியத்தை அவனுக்குத் தெரியக்காட்டினள். அவளது முகத்தின் அழகையும், மூன்றாம்பிறைச் சந்திரனையொத்த அவளது நெற்றியையும், நட்சத்திரக்களையொத்த கண்களையும் சித்திராங்கதன்பார்த்து மயங்கி அவளுடைய வினவுக்கு விடைபகருவதைமறந்து, அவளழகில் சொக்கி, கனவுகண்ட ஊமையன்போல ஒன்றுந்தோன்றாமல் பிரமித்து நிற்பதைக்கண்ட பிரபுக்களும், பண்டிதர்களும் கலக்க மடைந்தார்கள். இவ்விராஜபுத்திரனையும் இழக்க நேரிட்டதே யென்று அரசன் முகமும் வேறுபட்டது.

இப்படியிருக்க சித்திராங்கதன் சற்றுநேரம் கண்களை மூடிக்கொண்டிருந்து, பிறகு தன்னைச்சுதாரித்துக்கொண்டு இராஜபுத்திரியைப்பார்த்து, 'ஓமயக்கும்விழியைப்படைத்த மாதே! இப்போது வினவிய மூன்றாவது கேள்வியை இன்னொருதரஞ் சொல்லப் பிரார்த்திக்கின்றேன். ஏனெனில் நான் அக்கேள்வியைக்கவனிப்பதற்கில்லாமல் உன்னழகின் சோதியால் என் புத்தி மயங்கிற்று. அதற்குக்காரணம் நீயேயாதலால் அதை மற்றோர் முறைத் தெரிவிக்கவேண்டும்" என்றான். தயாபரசுந்தரி மறுபடியும் சித்திராங்கதனை நோக்கி,

ஒரு பக்கம் வெண்மையும், ஒரு பக்கம் கறுமையான இலைகளையுடைய மரம் எது?"

என்றனள்.

இராஜபுத்திரன் உடனே, "பெண்ணே! பகல்வெளுப்பும், இரவு கறுப்புமான இலைகளைக் கொண்டு பகிர்ந்து

காண்பிக்கும் தினங்கள் தான் அம்மரம் என்றான். இவ் விடையைக் கேட்ட பிரபுக்களும், பண்டிதர்களும் சித்தி ராங்கதனை வெகுவாய்ப் புகழ்ந்து கொண்டாடினர். புத்தி சேனமகாராஜன் உடனே தன் புத்திரியைப்பார்த்து, "அம்மா! நீ தோற்றுப்போனதைச் சகலருமறியச்செய்து உன்னை ஜெயித்த இராஜபுத்திரனை மணந்துகொள்வதற்கு இனி என்ன தாமதம்? இதற்கு முன்வந்த இராஜபுத்திரர் களில் ஒருவனாவது இவனைப்போ லவ்வளவு சாதுர்யமான கல்வித்திரங்கொண்டு விடை யளித்தவனல்லவே" என்று மொழிந்தனன். அதற்கு தயாபரசுந்தரி தன் தந்தையைப் பார்த்து "அவ்விராஜபுத்திரன் இன்னும் ஜெயங்கொண்ட வனே யல்ல" என்று கூறி தன் முகமூடியைக் கீழே யெறிந்து கலக்கத்தால் கண்களில் நீர்த்தளும்ப "நான் இன்னம் கேட்கவேண்டிய கேள்விகள் அநேக மிருக்கின் றன. அவைகளை நாளையதினம் நான் கேட்க அநுமதி கொடுக்கவேண்டுமென்றனள்.

அரசன் தன் புத்திரியைப் பார்த்து, "அம்மா! நீ ஒருபோதும் இவ்விதம் சொல்லலாகாது. நீ கேட்க வெண்ணியிருக்கும் வேறு கேள்விகளுக்கு யான் உத்தரவு கொடேன். அப்படி உத்தரவு கொடுப்பேனாகில் நீ கேட் கும் கேள்விகளுக்கோர் முடிவுமிராமல் நீண்டுகொண்டே யிருக்கும். அப்படி நீ வேறு கேள்விகள் கேட்கப் பிரிய மிருந்தால் அவைகளை இப்போதே கேட்கலாம்" என்று கூறினர். உடனே இராஜபுத்திரி, "தந்தையே! நான் இப்போது கேட்பதற்கு கேள்விகளை இன்னம் சிந்தைப் படுத்திக் கொள்ளவில்லை. நாளையதினம் அவைகளைத்தயார் செய்துக்கொண்டு அவன் கல்வியிற் சிறந்தவனா வென்று இன்னொருமுறை பார்க்கச் செலவுதரவேண்டு மென்றுப் பிரார்த்தித்தாள்.

புத்திசேனன் இதைக்கேட்டவுடன் அதிக சினங்கொண்டு தன் குமாரத்தியைப் பார்த்து, "குழந்தாய்! உன் மோச எண்ணத்தினுல் இவனையும் கொலைசெய்ய நீ நினைத்திருப்பதால் உனக்கு அனுமதி கொடேன். நான் புத்தியிழந்து ஒப்புக்கொண்டு தீர்மானித்தப் பிரமாணச் சட்டத்திற்கு இனி உத்தரவாதியாய் இருக்கமாட்டேன். நீயோ எனக்கு முற்றும் வெறுக்கத்தக்க குமாரத்தியா யிருக்கின்ருய். நீ உன்மீதில் காதல்கொண்டு வருபவர்களை யெல்லாம் கொன்றுப் பழியை ஏற்றுக்கொள்வது உனக்கோர் விநோதமா யிருக்கின்றது. நீ மகா சாமர்த்தியமாய் வினவிய வினுக்களுக்குத் தக்க விடைபகர்ந்த இந்த இராஜபுத்திரனை உன் மணுளனுக ஏற்றுக்கொள்ளாமல் அவன் விஷயத்தில் இன்னும் வன்மனங்கொண்டு அவனைப் பழிவாங்க நினைக்கின்ருய். இச்சமஸ்தானத்திலுள்ள பிரபுக்களும், பண்டிதர்களும் அவன்சொன்னவிடைகளை ஏற்கனவே ஒப்புக்கொண்டதை நீ யறியாயா? என்றனர்.

அப்போது அங்கிருந்த பிரதமபண்டிதர் எழுந்து அரசனைப் பார்த்து "எனதிறைவனே! தாங்களேற்படுத்தியப் பிரமாணச்சட்டத்திற்குப் பிசகாய் நடப்பவர்களைக் கொலைபுரிதலல்லோ தங்களால் விதிக்கப்பட்ட தீர்மானம். இப்போது இந்த அரசகுமாரன் தகுந்த விடையளித்திருந்தும் அவன் விஷயத்தில் இன்னும் தீங்கு நினைக்கும் தங்கள் குமாரத்திக்கும் அவ்வித தீர்மானத்தையே விதிக்கவேண்டுமன்றே? இராஜபுத்திரி தன் கேள்விகளுக்கு விடை பகர்வோனுக்கு மனைவியாவதென்னும்விதி இப்போது நியமணமாக வேண்டியதல்லவா? ஆகையால் அரசகுமாரி தன்வாக்குப் பிசகின்றி நடந்தாலாயிற்று இராவிடில் அவளால் மற்றவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை அவளுக்கே உபயோகப்படுத்தல் வேண்டும்" என்று கூறினர்.

இவை யனைத்தையுங் கேட்ட இராஜபுத்திரி மிகவும் சிந்தை நொந்து வெட்கத்தால் தலைகுனிந்த வண்ணமா யிருந்தாள். இவளுடைய ஸ்திதியைக் கண்ணுற்ற சித்தி ராங்கதன் அரசனைப் பார்த்து, "ஐயா! தங்கள் குமாரத்தி இச்சபையில் இதற்கு முன்னிருந்த தன் விரக்தன்மையை யிழந்து அதிக சஞ்சலத்துடன் முகம் வாடியிருக்கின்றாள். அவளுடைய அபிப்பிராயத்தின்படியே என்னை இன்னும் வினவவேண்டிய கேள்விகளை யெல்லாம் வினவட்டும். அவ் வினக்களுக்குப் பதிலளிக்க நான் சக்தியுள்ளவனென்றே நீர் என்னை நினைக்கவேண்டும். அவள் எவ்விதத்திலாகி லும் என்னைக் கொல்லவேணுமென்றகருத்தே அவளுக்குப் பூரணமாயிருந்தாலும் அதற்கு நான் சற்றும் பின்வாங்க மாட்டேன். நியாயமாய் அவள் எனக்கு மனைவியாகத்தக்க நிலைமையிலிருந்தபோதிலும் அவளுக்குப் புருஷர்கள்மேல் உண்டான வெறுப்பினால் பலவாறு யோசித்துக்கொண் டிருப்பதால் நான் அதை க்ஷமித்து நான்போடுங் கேள்வி களுக்குத் தக்க விடையை அவள் பகர்வாளேயானால் என்னையே அவளுக்கு ஆதீனமாய் ஒப்புக்கொடுக்கச் சித் தமா யிருக்கின்றேன்" என்றான்

அச்சபையிலுள்ளோர் யாவரும் இவன் மொழிந்த தைக்கேட்டு, இது என்ன விந்தை! இவ்விராஜகுமாரனுக்கு என்ன பைத்தியமோ? தனக்கு வலியவந்தவளைச் சட்டப் படி ஒப்புக்கொள்ளாமல் தானே தன் பிராணனை யிழக்க மார்க்கந் தேடிக்கொண்டானே. இவனுடைய கேள்வியி னால் தயாபரசுந்தரி பதில் சொல்லாளென்று நினைக்கின் றானே? இவனே தோற்றுப்போனா லாகாதோ; நிச்சய மாய் இவன் சபலசித்தமுள்ளவனாகவே யிருக்கவேண்டும்' என்று தங்களுக்குள்ளாகப்பேசிக்கொண்டனர். அரசனை

புத்திசேனனும், சித்திராங்கதன் தானே வலிய ஆபத்துக் குள்ளாக்குகிறானே யென்று நினைத்து அவனை நோக்கி, அவன் இப்போது தெரிவித்தக் காரியங்களினால் அனுகூல மடைவானென்னும் நினைப்பவனுக்குண்டோ என்றுவினவ, அவனும் தன் கோரிக்கைப்படியே செலவுகொடுக்கும்படி மன்னனை வேண்டினான். அரசனும் அதற்குச் சம்மதித் துத் தன் பிரமாணச்சட்டத்தினின்றும் இனித் தான் விலகி யிருப்பதாயும், இனி கடுங்கொலை புரிவதொன்றும் தன் ஆஸ்தானத்தில் நடக்க சம்மதிப்படான் என்றும் கூறி னான். சித்திராங்கதன் தயாபரசுந்தரியைப்பார்த்து,மாதே! இங்குக் கூடியிருக்கும் வித்வசிரோமணிகளாலும் மற்றப் பிரபுக்களாலும் நீ எனக்குச் சொந்தமானாயென்று பூரண அபிப்பிராயங்கொண்டனர். இதை நீ யுணர்ந்தே கலக்கங் கொண்டிருக்கின்றாய். 'ஆகிலும் நான் உன்னை ஓர் கேள்வி கேட்கின்றேன். அக்கேள்விக்குத் தக்க விடையை நீ சொல்வாயானால் உன்னைப்பற்றி எனக்கிருக்கும் பாத் தியதை யாவும் முற்றுமொழிந்து பற்றற நீக்கிவிடுவேன். இதனால் பூலோகமெல்லாம் பணியும்படியான என் மேன் மையையும், செல்வத்தையும் உன்னதாக்கிக் கொள்வாய். நானும் உன்சொற்படியே நடந்துக்கொள்ளுவேன். ஆனால் அக்கேள்விக்கு நீ விடைபகராமல் அபஜெயப்படுவாயானால் நீ என் கட்டளைக்குட்பட்டு என்மனைவியாயிருப்பதற்கு ஓர் ஆட்டங்கமும் செய்யக்கூடாது. இது உனக்குகுச் சம்ம தமா?' என்றுவினவினான். இராஜபுத்திரியும் அதற்குச் சம் மதித்தவுடன் அங்குக் கூடியிருந்தஎல்லோரும் இராஜபுத்தி ரன் எப்படிப்பட்ட கேள்வியைக் கேட்பானோ வென்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

இராஜபுத்திரன் தயாபரசுந்தரியை நோக்கி, "ஓ சுந்தரவதியே ? சர்வ கஷ்டங்களையும் ஆயிரம் ஆயிரமாய் அனுபவித்துச் சாண் அங்கத்திற்காகப் பிரதித்தினம் யாசக ஜீவனம் செய்து இத்தருணத்தில் மகிழ்ச்சியையும் ,பெருமையையும் அடைந்திருக்கும் இராஜபுத்திரன் நாமதேயம் என்ன ?" என்றனன். தயாபரசுந்தரி சற்றுநேரம் ஆலோசனை செய்து பிறகு இராஜபுத்திரனைப்பார்த்து "உம்முடைய கேள்விக்கு உடனே விடைபகர்வது கூடாமையா யிருக்கிறபடியால் நாளையதினம் அவ்விராஜபுத்திரனுடைய நாமதேயத்தைத் தெரிவிக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்றனள். உடனே சித்திராங்கதன் அவளை நோக்கி, "ஓ மாதுசிரோமணியே! இச்சிறிய கேள்விக்கு ஆலசியப்படுவானேன் ? இதற்கு இடமும், காலமும், தவணையும் கொடுக்க எவ்வளவும் நியாயமில்லை. ஆனால் என்னைப்பற்றிய வெண்ணம் உனக்கதிகமாயிருந்து என்னையே மணம்புரிந்துக்கொள்வாய் என்னும் நல்லெண்ணத்தினால் உன் இச்சையின்படியே தவணைக் கொடுக்கிறேன்" என்றான். உடனே அரசனும் தாயாபரசுந்தரியும் சிம்மாதனத்தைவிட் டந்தப்புரம்போய் பின்னர், பிரபுக்கள் முதலானோர் சபையைவிட்டு அவரவர் இருப்பிடம் சென்றனர். முன் சித்திராங்கதனை யழைத்துவந்த போர்ச்சேவகர்கள் பழயபடி அவனை அரண்மனைக் கழைத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

இராஜபுத்திரியாகிய தயாபரசுந்தரி இரண்டு தாதிகளுடன் தன்னரண்மனைச்சேர்ந்து, மிகுந்த கோபத்தினால் தன்னிருகண்களுஞ் சிவந்து ஓர் சோபாவின்மேல் சாய்ந்து துக்கம் மேலிடக் கலங்கி உணவையும் வெறுத்து முடித்திருந்த மலர்களைப் பிய்த்துத் தரையிலெறிந்துக்கொண்டு, கண்களில் ஜலம் கலங்க வெட்கத்தாலும் துக்கத்தாலும்

ஊண் உரக்கத்தைவெறுத்து, அவமானமென்னும்கொடிய வியாதியால் பிடிக்கப்பட்டு படுக்கையாய்க் கிடந்தனன். தாதிகள் தங்களா லியன்றவரையில் அவளைப் பலவிதத்தில் தேற்றியும் அவள் புத்தி ஸ்வாதீனப்படாமல் ஏக்கத்திற் குள்ளாகி இருப்பதையறிந்தஓர் பாங்கிப்பேண் தயாபரசுந் தரியை நோக்கி, அம்மா! இராஜபுத்திரியே நீ ஏன் கல வரத்தினல் ஏக்கமடைந்து உன் சரீரத்தை இளைக்கச் செய் கின்றனை. அப்படிச் செய்வதனல் உனதாவியை உள்ளபடி யிழக்கநேரிடுமே. சிலநாட்களுக்குமுன் தெய்வசங்கற்பத் தால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை யறிந்த குணவதி என்னும் இராஜமகிஷி ஊண் உரக்கத்தை வெறுத்துத் தேகம் மெலிந்து உயிர்விட்டதை நீ யறியாயா? அதாவது, வயிரபுரமென்னும் பட்டணத்தைப் பரிபாலித்து அரசு செலுத்திவந்த சத்தியவிரதன் என்னும் அரசன் தன்மனைவி யாகிய குணவதியுடன் சகல சம்பத்துடன் சம்பிரமமாய்ச் சுகித்து பரம சந்துஷ்டியுட னிருக்கையில் பருத்துப் பெருத்த பால்யசந்நியாசி யொருவன் அவரது அரண் மனைக்கு அல்லும் பகலும் வரத்துப்போக்குமாயிருந்தான். அச்சந்நியாசியின் புத்திகோசரத்தையும், வித்தியாசமர்த் தையும் அறிந்த அச்சபையிலுள்ளார் அனைவரும் அவனைப் புகழ்ந்துபேசி அவன் ஓர் பிரக்கியாதிபெற்ற வீரனென்றே போற்றி ஸ்துதிசெய்துக்கொண்டிருந்தார்கள். அரசனும் அவனது முகதரிசனையைக்கண்டு சந்திக்க ஆசைகொண் டிருந்தமையால் ஒருநாள் இச்சந்நியாசியை அரண்மனைப் பிரபுக்கள் தங்களுடன் விருந்துமண்டபத்திற் கழைத்து வந்து அவனைக்கொண்டு விநோத வேடிக்கைகளையும், கால க்ஷேபங்களையும் செய்வித்து அரசனுக் கவனை அறிமுகப் படுத்தினர்கள்.

அரசனும் அவனுடன் சம்பாஷித்து சரஸ்வதியும் நாணத்தக்க பூரண கல்விப்பயிற்சியும், எவர்களாலும் வெல்லப்படாத வீரமும் தீரமும் அவனிடத்தி லிருப்பதை யுணர்ந்து அவனிடத்தில் அதிகபட்சமாய் வார்த்தையாடிக் கொண்டு வருவான். இவன் நாளடைவில் அரசனிடத்தில் நடந்துகொண்ட நல்லொழுக்க வணக்கத்தாலும், கோர புத்தியின் தெளிவினாலும் ஸுதர்க்கம்பண்ணி, தன் சாதுர்ய சமத்காரத்தால் அரசனது புத்தியெல்லாம் அவன் பட்சத்திலே நிலைத்திருக்கும்படிச் செய்தான்.

அரசனாகிய சத்தியவிரதன் அச் சந்நியாசியைப்போல் திருத்தமாகிய புத்தியும் பொருத்த யோசனையுமுள்ளவர்கள் தனது சமஸ்தானத்திலொருவருமில்லையென்று தெரிந்துக் கொண்டான். ஆதலால் அச்சந்நியாசியையே தனது மந்திராலோசனைச்சபையில் பிரதமபுருஷனாய் நியமிக்கக் கருத்துக்கொண்டு, தனது அபிப்பிராயத்தை அச்சந்நியாசிக்கு வெளியிட்டபோது அவன் துறவிக்கு வேந்தன் துரும்பு என்றபடி முற்றும் துறந்த துறவியாய், சேவகத் தொழிலையே ஒருவரிடத்திலுஞ் செய்கிறதில்லையென்றும், சுவாதீனசித்தமாய் நடப்பதே தனக்கு வாய்த்த பலனென்றும், அழிதலுக்குரிய சேவகமும், சம்பத்தும் அவனுக்கோர் திரணமாக யிருப்பதால் கடவுள் மற்ற ஜீவப்பிராணிகளுக் களிப்பதுபோல் தனக்கும் புசிப்பை யளிப்பாரென்று மனவுறுதிகொண்டிருப்பதாகவும் சாதித்தான். அவன் தனது பாலியவயதிற்றானே உலகத்தை வெறுத்து உண்ணவும் உடுக்கவுமாத்திரம் கடவுள் தனக்குத் தந்தால் போதுமென்றுயிருக்கும் அவனுடைய மேன்மையான ஞானத்தை அரசன் வியந்து, அவனுடன் சிநேகித்துப் பொழுதுபோக்கப் பிரீதிகொண்டு தனதரண்மனைக்கு அவன்வரும் சமயங்

களி லெல்லாம் அவனிடத்தில் அதிக விசுவாசமாய் நெருங்கி வார்த்தையாடிக்கொண்டு வருவான்.

சத்தியவிரதன் தன்னுடைய சமஸ்தான பிரபுக்களுக் கெல்லாம் அச்சந்நியாசியை அதிகமாக கௌரவப்படுத்தி வைத்திருந்ததால் அரசசபையில் அவனிராமற்போவானே யாகில் அரசன் ஓர் கண்ணிழந்தவனைப்போல் விசாரங் கொண்டு தயங்குவான். கடைசியில் அரசன் அந்த சந்நி யாசியைத் தனது ஆந்தரீகச்சிநேகனுக்கித் தனது முழுப் பிரீதியையும் அவனிடத்தில் வைத்து, அவனைவிட்டோர் விநாடியும் பிரிந்திருக்கக்கூடாதவனு யிருந்தான். இப்படி யிருக்க ஓர்நாள் சத்தியவிரதன் காட்டில் வேட்டையாடுவ தற்காகத் தனதுபரிவாரங்களைச்சேர்த்துக்கொண்டு தனது உற்ற நண்பனுகிய சந்நியாசியையும் அழைத்துக்கொண்டு வரும்போது அச்சந்நியாசி சத்தியவிரதனுடன் தனித்து வசனிப்பதற்கு இதுவே யேற்ற சமயமென உணர்ந்து, அவன் உலகமுழுதுஞ் சுற்றிப் பற்பலதேசங்களில் கண்ட விந்தையான சமாசாரங்களையும், நவமான புதுமைகளையும் மிக வுன்னதமா யெடுத்துக்கூறி அரசன் ஆச்சரியமும் பிர மையும் அடையும்படித் தன் விருத்தாந்தங்களைச் சொல்ல வாரம்பித்தான்.

அதாவது, "ஐயா! சக்ரவர்த்தியே? காந்தாரம் என் னுந் தேசத்தில் மிகப் பிரபல்லியமாய்த் தக்கப் புகழுடன் வாழ்ந்துவந்த ஜெயதேவர் என்னும் பெயருள்ள நவமணி வியாபாரியாகிய என் பிதாவுக்கு நானொருவனே யேகபுத் திரன். நான் இளந்தையா யிருக்கும்போதே என் தந்தை தகுந்த உபாத்தியாயர்களை ஏற்படுத்தி, பற்பல வித்தை களில் பூரணபாண்டித்தியமடையச் செய்தனர். நான் அதி பாலியத்திலேயே மிக டம்பமாய் நடந்து, என் இஷ்டகாமி

யங்களையெல்லாம் அனுபவித்து, கிரமமில்லாத வாழ்க்கையை னுகி, எனது தந்தையின் திரண்ட ஆஸ்தியை வீண்செலவு செய்துவருவதைக்கண்ட என் தந்தை அதிக விசனமுற்று, சிக்கனமாய்செலவழிக்கும்படி அடுத்தடுத்துஎனக்குவேண்டிய புத்திமதிகளைச் சொல்லிக்கொண்டே வந்தார். தந்தை சொன்மிக்க மந்திரமில்லை என்னும் வாசகத்தை முற்றும் மறந்தவனாய் அவர் வார்த்தைகளையலட்சியஞ்செய்து, என் மனம்போனவண்ணமாய்ப் பணத்தைச் செலவு செய்துக் கொண்டே வந்தேன்.

என்னுடைய நடத்தைகளினால் என் தந்தை மனந் தாளாதவராய் என்னை நோக்கி, "அப்பா! குழந்தாய்! பணத்தின் அருமை இன்னதெனத் தெரியாமல் என்வார்த்தைகளை யசட்டைசெய்து உன்னிஷ்டப்படி வ்ண்விரயம் செய்துக்கொண்டு வருகின்றாய். நீ இவ்விதம் செய்வாயென்று நான் நினைத்தவனல்ல. உன் நடத்தைகளினால் என் மனந்தளர்ந்து மரணத்துக் கேதுவா யிருக்கின்றேன். என்னை யழைத்துப்போகும் நமன் இதோ என் கண் முன்னே நிற்கின்றான். என் காலமோ சமீபித்துவிட்டது. நான் வைத்துப்போகும் திரண்ட ஆஸ்தியை புத்தியாய் நீ கையாடாமல் கொண்டமட்டும் செலவழித்திடுவாயாகில் பிறகு நீ அதிகமாய் வருத்தத்தை யனுபவிப்பாய். இப்போது நான் கடைசியாகச் சொல்லும் புத்தியையுங்கேளாமல் ஆஸ்திமுழுமையும் செலவழித்து, நீ முற்றும் அற்ற தரித்திரனாய்ப் போகுங்காலையில், இதோ இருக்கும் பூசையறையின் தூலத்தில் கயிற்றை மாட்டித் தூக்குண்டு சாவதே தரித்திரத்தினும் தக்க சுகமடையும் வழி" என்று சொல்லித் தனது ஆவியை விட்டனர்.

பிறகு நான் அவருக்குச் செய்யவேண்டிய பிரேதக் கடமைகளையெல்லாம் கிரமமாய்ச் செய்தானதும் அவர் வர்த்தகமூலமாய்ச் சம்பாதித்த திரண்ட ஆஸ்திகளையெல்லாம் என் கைவசமாக்கிக்கொண்டு, பெருத்த கூட்டமாகிய வாலிபர்களைச்சேர்த்துக்கொண்டு அவர்களுக்குவிருந்தளிப்பதிலும், ஆடல்பாடல் கேளிக்கைகளிலும் செலவழித்துவர ஆரம்பித்தேன். சிலநாட்களில் ஆஸ்தியாவும் மாண்டுபோய், கையிலொரு காசுமில்லாமல் வறண்டுபோயிற்று. இவ்விதமாய் நான் மிக வறியவனும் எளியவனுமானதைக் கண்ட என் உற்ற நண்பர்களெல்லாம் என்னை முற்றுங் கைவிட்டுச் சென்றனர். என்னுடைய பணியாளர்களும், உறவினரும் அவ்வாறே ஒருவர்பின்னொருவராக என்னை விட்டு நீங்கினார்கள். அப்பொழுது நான் எனக்குள்ளதிசயித்து,

"திரவியந்தானேபுத்தி திரவியந்தானேவித்தை
திரவியந்தானேசுத்தந் திரவியந்தானேசித்தி
திரவியந்தானேசத்தி திரவியந்தானேமுத்தி
திரவியந்தானேயாதும் செய்வதல்லாதுமுண்டோ"

"சத்துவம்புத்திவித்தை சதுர்விதார்த்தங்களான
வித்தனைவிதமுஞ்செல்வ மில்லையேயில்லையாகுஞ்
சத்துவம்புத்திவித்தை சதுர்விதார்த்தங்களான
வித்தனைவிதமுஞ்செல்வ மெய்திடிலெய்துமன்றே"

"வறுமையாலேயாசிக்க வருமவர்தமக்குமாவி
யிறுமவர்தமக்குஞ்செய்யு மியற்கையொன்றுமேதென்னி
லுறுதிபோங்கைகால்சோரு முள்ளமுங்கலங்குமெய்யுங்
குறுகியோடுங்கும்வாயுங் குழறுநல்லறிவும்போமே"

என்றபடி, உலகம் பணங்கண்டா ருறவிலல்லோ வொட்டியிருக்கிறது. என் தந்தை எனக்குரைத்த புத்திமதிகளைக் கேளாமையினாலன்றோ கஷ்டமனுபவிக்க நேர்ந்தது. இனி

யாரிடஞ் செல்வது? எவரை யடுப்பது? என் ஜீவனோபா யத்திற்கு வழி யாது? என்று நான் பலவிதமாய் யோசித்து மனம் புண்ணுகிக் கடைசியில் என் தந்தை உயிர்விடும் போது, நான் தரித்திரதிசை யடையுங்கால், நான் பூசை யறையின் தூலத்தில் தூக்குண்டு உயிர் விடுவதே நல மென்று தெரிவித்த சங்கதி என் ஞாபகத்திற்கு வந்தது. இரந்துண்டு ஜீவித்தலோ அல்லது பட்டினி கிடந்து சாவதோ இவ்விரண்டி லொன்றைக் கைக்கொள்வதைவிட நான் என்னைப் பிராணத்தியாகம் செய்துக்கொள்வதே நல மென் றெனக்குள் தீர்மானித்துக்கொண்டு உடனே ஓர் கயிற்றையெடுத்து பூசையறையின் தூலத்திற்கட்டி, ஓர் கல்லை எனக்கு மேடாக்கி அதன்மேலேறி அக்கயிற்றின் மற்றோர் முனையை என் கழுத்தில்மாட்டி முடிச்சுப்போட்டு ஊசலாடினேன். அந்த தூலம் என் பளுவைத் தாங்கக் கூடாமல் இரண்டாக முறிந்தது. உடனே நான் திடுக் கிட்டு மயங்கும்படிப் பொன் நாணயங்களும், நவரத்தினங் களும் அத்தூலத்தின் ஒடிந்தவிடத்திலிருந்துச் சொரிந்தன. உடனே நான் என் கழுத்தில் மாட்டிக்கொண்டிருந்த கயிற்றை யவிழ்த்துவிட்டு அந்த தூலத்தைப் பரிசோதிக் கையில் அது நான்கு பலகைகளினுல் மூடப்பட்டு அதில் முற்றிலும் விலையுயர்ந்த வச்சிரக் கற்களாலும், உச்சித மாணிக்கங்களாலும், மரகதம், புஷ்பராகம் முதலிய ரத்தி னங்களாலும், பொன் நாணயங்களாலும் நிரப்பியிருந்தது. இக்காட்சியைக்கண்டவுடன் புளகாங்கிதனுகி, என்னுடைய அதிர்ஷ்டத்திற்காக ஆனந்தபரவசனுகி என் தாரித்திரியம் துலைந்ததென்று அப்பொருளை யெல்லாம் வாரியெடுத்து பத்திரப்படுத்திவைத்தேன்.

என் தந்தை எவ்வளவு தயாள குணவந்தரா யிருந்து, இவ்வித ஏராளமான திரவியத்தை என்மேல் வைத்தப் பிரீதியினால் அரும் பிரயாசைப்பட்டு என் ஆபத்துக்காலத்தில் உதவியாயிருக்கச் சேர்த்துவைத்தாரென்று அவரைப் புகழ்ந்து, முன் என் மனம்போன போக்கின்படிச் செலவு செய்ததைப்போலல்லாமல் என் தந்தைசெய்த வியாபாரத் தொழிலையே நானும் பார்க்க உறுதியான தீர்மானஞ்செய்துக்கொண்டு, என் தந்தையின் கூட்டுவியாபாரிகளாயிருந்த காந்தாரதேசத்து இரண்டு இரத்தின வியாபாரிகளுடன் கூடப் பங்குவைத்துங்கொண்டு இரங்கோன், பினங்கு முதலிய தூரதேசங்கள் சென்று வியாபாரஞ் செய்வதாகத் தீர்மானித்துக்கொண்டு அவர்களுடன் கப்பலிற் பிரயாணப்பட்டேன், நாங்கள் மூவரும் அதிக அந்நியோன்னியமாக நேசம் பாராட்டிக்கொண்டு கப்பலிற் போய்க்கொண்டிருந்தோம்.

ஓர்நாள் நடுநிசியில் நான் என் சோபாவின்மேல் படுத்து நித்திரை செய்துக்கொண் டிருக்கையில் என் தோழர்களிருவரும் என்னைப் படுக்கையினின்றும் மெதுவாகத் தூக்கினார்கள். நான் நித்திரைதெளிந்து, அவர்கள் என்னதான் செய்யக் கருத்துக்கொண் டிருக்கிறார்களென்பதை யறியவேண்டி என் கண்களை மூடினவண்ணம் நித்திரை செய்பவனைப்போல் அசையாமலிருந்தேன். ஆனால் அப்பாதகர்கள் சற்றும் இரக்கமின்றி என்னைக் கப்பலின் பலகணி வழியாய் சமுத்திரத்தில் விசைகொண்டெறிந்துவிட்டார்கள். கடவுளினருளால் நான் அச்சமுத்திரஜலத்தில் மூழ்கி மாண்டுபோகாமல் ஓர் பெருத்த அலையானது என்னை யடித்துக்கொண்டேபோய் சற்று தூரத்திலிருந்த ஒரு மலையடிவாரத்தில் என்னைக் கொண்டுபோய் சேர்த்

தது. நான் சமுத்திரத்தில் ஆழ்ந்திறந்து போகாமல் தப்பிப் பிழைத்ததற்காகக் கடவுளைத் தியானித்து, நான் துணையென்று நம்பிவந்த அச்சதிகாரசண்டாளர்கள்செய்த கொடுமைக்காக வருந்தி, அன்றிரவை அம்மலையடிவாரத்திற் கழித்துப் பொழுது புலர்ந்தவுடன் அம்மலையின்மீதேறினேன். அம்மலை மிகவும் செங்குத்தா யிருந்தமையால் வெகு பிரயாசையுடன் அதனுச்சியில் ஏறினேன். இரங்கோன் நகரத்திலிருந்து வழக்கமாய் இம்மலையிலுள்ள சந்தனக் கற்களை ஏற்றுமதிசெய்துக்கொண்டுபோய் தமது பட்டணத்தில் விற்கும் மனிதர்கள் சிலர் அங்கு கூடியிருப்பதைக் கண்டு மிகவும் சந்தோஷமடைந்து அவர்களிடம் எனக்குச் சம்பவித்த ஆபத்தையும் எனது கூட்டாளிகள் செய்த படுமோசத்தையும் விவரமாய்ச் சொன்னவுடன், அவர்கள் என்மீது அதிக இரக்கங்கொண்டுத் தங்களிடமிருந்த உணவிற் கொஞ்சமீந்து என் களையைப்போக்கி என்னையும் அவர்களுடன் கப்பலிலேற்றிக்கொண்டுபோய் இரங்கோன் பட்டணத்தில் விட்டுச்சென்றனர்.

நான் அப்பட்டணத்தில் ஓர் சத்திரத்தைக் கண்டுபிடித்து, அதிற் றங்குவதற்குப் போகும் சமயத்தில் சதியோசனைசெய்து என்னைச் சமுத்திரத்தில் தூக்கிப்போட்ட என் கூட்டாளிகளில் ஒருவன் என்னெதிரில் வரக்கண்டேன். பிறகு நான் தங்கவேண்டியவிடத்தில் தங்கின சில நிமிஷங்களுக்கெல்லாம் என் கூட்டாளிகளா யிருந்த அப் படுமோசக்காரராக விருவரும் நானிருக்கும் சத்திரத்தின் வாசலுக்கு நேராய்ச் செல்வதைக் கண்டு, "ஆ! துரோகிகளே! உங்களுடைய சதியோசனையொன்றும் பயன்படாமல் நான் கடவுளருளால் சமுத்திரத்தில்மூழ்கி மரணமடையாமல் பிழைத்துவந்தேன். இவ்வித கடினசித்தமுள்ள

துஷ்டசண்டாளர்களுடன் இனி கூட்டுப்பங்கு வைத்திருப்பது எவ்வளவும் பொருந்தாதாகையால் என் பங்காசாரப்படி எனக்குச் சேரவேண்டிய ரத்திநாபரணங்களை இந்நிமிஷமே தரவேண்டுமென்றேன். அதற்கவர்கள் மிறண்ட பார்வையுடன் என்னைப் பார்த்து, "அடா மோசக்காரா! எத்தனைப்பெயரை இப்படி ஏமாற்றிப் பொருள் சம்பாதித்தனை? நீ யார்? உனது பொருள் எங்களிடத்திலேது? வழிப்போக்கர்களை ஏமாற்றிப்பொருள்பறிக்கும் பரமசண்டாளா! உன்னைச் சும்மா விடமாட்டோம்" என்று இருவரும் என்னை நன்றாயடித்துப் பூமியில் உருட்டிவிட்டார்கள். நான் அவ்வளவு அடிகளையும் அவர்களிடம்பட்டுக்கொண்டு அவர்களை நோக்கி, "படுமோசக்காரர்களே! வைத்தவன் பொருள் வல்லாருக்குக் கொள்ளையென்பதுபோல முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கவா பார்க்கிறீர்கள், என்னுடைய பொருளை யுங்களிடத்தில் வாங்காமல் விடப் போவதில்லை. தவிர நீங்கள் என் மரணத்திற்கு முடிவு தேடியதையும் அம்பலத்திற்குக் கொண்டுவந்து, நீங்கள் தக்க சிட்சையடையும்படி நான் நியாயாதிபதியிடத்தில் இப்போதே பிரியாது செய்யப்போகிறேன்" என்றேன்.

அவர்கள் எமனையும் பலகாரஞ் செய்து ஏப்பமிடுவோர்க ளாகையால் எனக்கு முன்னதாக நியாயாதிபதியிடஞ்சென்று, அவருக்கு மிகவும் வந்தனஞ்செய்து என்னிடத்திலிருந்து அபகரித்த விலையுயர்ந்த இரத்தினங்களைக் காணிக்கையாக வைத்து அவரைப் பார்த்து, "நீதிபராகிய கருணையங் கடலே! நாங்கள் வெகுதூரத்திலிருந்து இப்பட்டணத்தில் பிழைக்கலாமென்று எண்ணி வர்த்தகப் பிரயத்தினத்துடன் வந்திருக்கின்றோம். நாங்கள் இப்பட்டணத்திற்கு முகமறியாச் சுத்த அன்னியர்க

ளாயும், ஆதரவற்ற ஏழைகளாயு மிருக்கின்றோம், எங்களுக்கு உதவி புரிபவர் ஒருவருமில்லை. நாங்கள் மிகப் பிரயாசையுடன் அநேக அபாயகரத்திற்குத் தப்பி நெடுநாளாகச் சம்பாதித்த எங்கள் பொருட்களை தந்திரோபாயத்தால் எங்களை ஏமாற்றிக் கொள்ளையடிக்க ஓர் கள்ளன் எத்தனித்திருக்கின்றான்" என்றார்கள். நீங்கள் இப்போது முறையிடுகிற அவ்வெதிரி யாரென்று நியாயாதிபதி வினவ, அவர்கள் பிரபுவே! அவன் யாரோ எங்களுக்குத் தெரியாது. நாங்கள் அவனை எக்காலத்திலும் கண்டவர்களேயல்ல என்று சொல்லிக்கொண்டிருக்கையில் நானும் என் முறைப்பாட்டைச் சொல்ல நியாயாதிபதியிடத்திற்குச் சென்றேன். அப்பாவிகள் என்னைக் கண்டவுடன் நியாயாதிபதியை நோக்கி, "பிரபுவே! இவன் தான் நாங்கள் முறையிட்ட அக்கள்வன். துஷ்ட நிக்கிரகம் பண்ணுந் தங்கள் சமுகத்திற்கு முன் இவன் சற்றாகிலு மஞ்சாமல் நெஞ்சந் துணிவுகொண்டு வந்திருக்கிறதைப் பாருங்கள். இத்துஷ்டனுடைய படுமோசத்தினின்றும் எங்களைக் காப்பாற்றும்படித் தங்களை மிகவும் பிரார்த்திக்கின்றோம். இவன் தன்னுடைய குற்றத்தினின்றும் தப்பித்துக் கொள்வதற்காக ஏதோ பொய் பிராது கொண்டுவந்திருப்பதாகத் தெரிகிறதென்றார்கள். நான் நியாயாதிபதியிடத்தில் இவ்விருவரும் செய்த கொடுஞ்செயலை ஆதிடோடந்தமாய் முறையிட்டுக் கொண்டேனேயல்லது என் கையில் ஒரு காசு மிராததால் அவருக்கு யாதொரு காணிக்கையும் சமர்ப்பிக்கவில்லையாதலால் அவர் என் முறைப்பாட்டைச் சற்றும் செவிகொடுத்துக் கேளாமல், நான் கொண்டுவந்த தாவா பொய்யென்றும் அவ்விருவர் சொன்னதே மெய்யென்றும் தீர்ப்புசெய்து, அநியாயமாக அவர்களுடைய

பொருளை அபகரிக்க முயன்றதற்காக என்மேல் குற்றத்தைச் சுமத்தி, எனக்கு ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை விதித்தார். எனது கூட்டாளிகள் இத்தீர்ப்பைக் கேட்டவுடன் மிகவும் சந்தோஷமடைந்துத் தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றார்கள். பிறகு நியாயாதிபதியின் உத்தரவின்படிப் போலீஸ்காரர்கள் என்னைத் தகுந்தபந்தோபஸ்துடன் கைக்கு விலங்கிட்டு அழைத்துக்கொண்டுபோய் சிறைச்சாலையி லடைத்துவிட்டார்கள்.

இப்படியிருக்க, சந்தணக்கல் மலையினின்றும் என்னையழைத்துவந்த, வியாபாரிகள் நான் சிறையிலடைப்பட்ட விருத்தாந்தங்களைக் கேள்விப்பட்டு நியாயாதிபதியிடம் வந்து உண்மையாய் நடந்த சங்கதிகளையாவும் அவருக்குரைத்தார்கள். நியாயாதிபதி என்மேல் அதிக பச்சாத்தாபப்பட்டுத் தான் தீரவிசாரியாமற் செய்த தீர்ப்புக்காக மிகவும் விசனமடைந்து என்னைச் சிறையினின்றும் விடுதலைச்செய்து மறுபடியும் புனர் விசாரணைச்செய்ய எண்ணங்கொண்டு, எனது கூட்டாளிகளாகிய அச்சதிகாரர்களைத் தட்சணம் அழைத்துவரும்படிச் சேவகர்களை யனுப்பினார். ஆனால் எவ்விதமாகவோ அப்படுபாவிகளிருவரும் இச்சங்கதியைக் கேள்விப்பட்டு உடனே தங்களுடையகப்பலேறிப் பாய் விரித்துக் காற்றும் வாட்டமா யிருந்தபடியால் கடலில் நெடுந்தூரம் போய்விட்டார்கள்.

நான் நம்பிவந்த கூட்டாளிகள் என்னைப் படுமோசப்படுத்திப்போய் விட்டமையாலும் நான் பிழைக்கும் வழியேதென்றும் எனக்குப் புலப்படாமையாலும், நான் இரங்கோன் நகரத்தைவிட்டு என் மனம்போன போக்காக ஓர் மைதானத்தின் வழியாகச் செல்லும்போது சில வியாபாரிகள் கூட்டமாய்ப் போய்க்கொண் டிருப்பதைக் கண்டு

அவர்களையணுகி அவர்களுக்குத் தொண்டுசெய்து ஜீவித்துக்கொண்டு அவர்களுடன் மங்களகிரியென்னும் பட்டணம்போய்ச் சேர்ந்தேன். ஓர் நாள் நான் அப்பட்டணத்தைக் சுற்றிப் பார்த்துக்கொண்டு வரும்போது அப்பட்டணத்தின் அரசசமஸ்தானத்தைச் சேர்ந்த ஓர் ஆபீசர் என்னைச் சந்தித்து என்னை யாரென்று வினவ, நான் இப்பட்டணத்திற்கு அன்னியனென்றும், நான் இங்குவந்த காரணம் இன்னதெனவும் ஆதியோடந்தமாக என் சரித்திரத்தை யாவும் அவருக்குச் சொன்னேன்.

அப்போதவர் என்மேல் கருணைகூர்ந்து என்னை அரசனுடைய அரண்மனைக்கழைத்துக் கொண்டுபோய் அரசசமஸ்தானத்தில் எனக்கோர் உத்தியோகந்தந்து, நான் வசிப்பதற்கும் அரசனரண்மனையிற்றனே ஓர் விடுதியை நியமித்தார். நான் அவருடைய கட்டளையின்படியே எனக்குக் குறித்தவேலையைக் கிரமமாகச் செய்துக்கொண்டு வந்தேன். ஒவ்வோர்நாளும் சாயந்திரம் ஆறுமணிக்குமேல் அப்பட்டணத்தரசன் புதல்வி அரண்மனைத் தோட்டத்தில் உலாவிவருவது வழக்கமானபடியால் அக்காலத்தில் அரண்மனை யுத்தியோகஸ்தர்க ளனைவரும் அங்கிருக்கப்படாதென்றும், அப்படியாராகிலுமிருந்தால் அவர்கள் கண்டிப்பாய் கொலை செய்யப்படுவார்களென்றும் அரசனால் கட்டளையிடப் பட்டிருந்தது.

இப்படியிருக்க ஒருநாள் நான், அத்தோட்டத்தில் தனித்திருந்து அரசனுடைய கட்டளையைச் சற்றும் கவனியாமல் நான் ஒருகாலத்தில் செல்வவந்தனா யிருந்ததையும், பிறகு கூட்டாளிகளின் சதிகாரியத்தால் கடலில் விழுந்து உயிர்பிழைத்ததையும், கடைசியில் சிறைச்சாலையி லடைப்பட்டு விடுதலையானதையும் நினைத்துக்கொண்டிருந்தேன்

சற்றுநேரத்திற்கெல்லாம் என்னறிவு என் சுவாதீனத்துக்கு வந்து, அரசனுடைய கண்டிப்பான கட்டளையைக் குறித்துச் சிந்தித்து, இனியென்ன செய்வேன்? மோசம் வந்ததே; நெடுநேரம் தோட்டத்தி லிருந்துவிட்டேனே; இனி இங்கிருந்து தப்பித்துக்கொள்ளும் உபாயம் யாதென்று சற்றுநேரம் யோசித்துப் பிறகு அவ்விடத்தைவிட்டு அதிவேகமாக ஓட எத்தனித்தேன். அப்போதொரு பாலியப் பெண் என் எதிரில்வந்து, நான் ஓடுவதை நிறுத்தி, நான் அப்படி ஓடுவதற்குக் காரணம் யாதென வினவினுள். சாயந்திரம் ஆறுமணிக்குமேல் ஆடவர் இத்தோட்டத்தி லிருக்கப்படாதென்றும், அப்படி யிருக்கும் பட்சத்தில் அவர்கள் கொலை செய்யப்படுவார்களென்றும் அரசன் சட்டளைப் பிறப்பித்திருப்பதால் நான் கூடிய துரிதத்தில் வெளியிற்செல்வதற்காக ஓடுகிறேனென்றுசொன்னவுடன், அந்த பாலியஸ்திரீ என்னை நோக்கி "ஐயா! நீர் சொல்லுவது வாஸ்தவந்தான், ஆனால் நீர் அதைக் கவனிக்காமல் ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருந்துவிட்டீர். நீர் இப்போது என்னைச் சந்தித்திராவிடில் அரசனது கொடுந்தண்டனைக்குக் கண்டிப்பாய் உட்படவேண்டியவரா யிருப்பீர். ஆனால் இன்னும் சிலகாலம் இம்மண்ணுலகில் ஜீவிக்கவேண்டிய பிராப்தி இருப்பதால் இனி நீர் சஞ்சலப்படவேண்டியதில்லை. ஏனென்றால் இம்மங்களபுரியின் அரசகுமாரத்தியான **குணபூஷணி** என்னும் சௌந்தரியவதி உம்மைக் கண்டு உம்முடன் கூடிக்குலாவ மனதுள்ளவளா யிருக்கிறாள். நான் **ஜீவரேகை** என்னும் நாமமுடைய அவளுடைய அந்தரங்கத்தோழி. நீர் ஏதோ ஆழ்ந்தயோசனையிலிருப்பதை அவள் இச்செடி மறைவிலிருந்துப் பார்த்து உம்மிடத்தில் காதலாகி உம்மை அழைத்து வரும்படி

யாஞ்ஞாபித்து, அதோ யிருக்கும் பூங்காவினிடத்தி லிருக்கின்றாள். ஆகையால் என்னுடன் நீர் தைரியமாய் வரலாமென்று என்னை அழைத்துக்கொண்டுபோய் பூங்காவினிடத்தில் ஒரு சோபாவின்மீது அமர்ந்திருந்த அரசகுமாரத்தியினிடம் விட்டனள். அரச தண்டனைக்கே உட்பட வேண்டுமென்ற அச்சம் என் மனதில் வேரூன்றி யிருந்தமையால், நான் அந்த இராஜகுமாரத்தியி னழகைக்கண்டு சொக்கிப் போவதற்குப் பதிலாய் என்னறிவின்மையால் நான் அனேக ஆபத்துகளுக்குத் தப்பிப் பிழைத்தும் இன்று என்பிராணன் அபாயகரஸ்திதிக் குள்ளாகவல்லோ இருக்கிறது. அரசனது கட்டளையை யறிந்திருந்தும் நான் ஆலசியமாக இத்தோட்டத்திலிருந்தது என் மூடத்தனமே யல்லவாவென்று உரத்த சப்தமாய்ப் பிரலாபித்தேன்.

அப்போது குணபூஷணி என்னும் அந்த அரசகுமாரத்தி என் கையைப்பற்றி அவள் சமீபத்தில் அமரும்படிச் செய்து, "நீர் ஏன் உமது பொன்னானமனதைப் புண்ணாக்கிக்கொண்டு இவ்வாறு சஞ்சலப்படுகிறீர். நீர் என்னைக் கண்ட இப்போதே உமது சஞ்சலங்களும் கஷ்டங்களும் நீங்கிற்றென்று உண்மையாய் நீர் அறியக்கடவீர்" என்றனள். நான் அவளை நோக்கி, "அரசச் செல்வியே! நான் பூர்வகாலத்தில் செய்த புண்ணியத்தின் பலனால் நீ இங்கு நேரிட்டாய். நான் உன்னுடைய பேரழகினால்மயங்கி பிரமைகொள்ளாதிருப்பது நான் இப்போதிருக்கும் அபாயகர ஸ்திதியில் நீ இருப்பையாகில் உன்னுடையநிலைமை எப்படி யிருக்குமென்பதை நீயே யோசித்துப் பார்த்தால் உனக்கே தெரியவரும்" என்றேன். அதற்கவள், ஆம் உண்மைதான்; நீர் இப்போதிருக்குமநிலைமை அபாயத்திற்

குள்ளானது தான். என்றாலும் உமது பிராணனுக்கு யாதொரு சேதமும் வருமென்று நீர் கிஞ்சித்தும் நினைக்க வேண்டாம். எனது தந்தையாகிய அரசன் மிகவும் நல்லவ ரானதால் நீர் செய்த இந்த குற்றத்தை மன்னித்து விடுவா ரென்பதற்கோ ரையமில்லை. அப்படி உமது பிராணன் போவதா யிருந்தால் உமக்குப் பதிலாக என் பிராணனைத் தருகிறேன் என்று பலவிதத்திலும் தைரிய முரைத்து என்னை அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்றனள். நான் இவளது வார்த்தைகளைக் கேட்டவுடன் அத்தியந்த மனக் கிளர்ச்சி யடைந்தவனாய், எனக்குண்டாயிருந்த பிராண அபாயத்தைச் சற்றும் சட்டை பண்ணாமல் எனக்குக் கிடைத்த இன்பசுகத்தை யனுபவிக்கும் சமயத்தைப் பிர யோசனப் படுத்திக்கொள்ள ஆசையாகி, அம்மாதுடன் சென்று அரண்மனையை யடைந்தேன்.

அவ்வரண்மனை, அரசனது கொலுக்கூடத்தை விட மகா விந்தையும் விநோதமுமாய்க் கட்டப்பட்டதாயும், மகா சித்திரவலங்கார பதுமைகளால் சுவரெங்கும் அலங் கரிக்கப்பட்டு எங்கு பார்த்தாலும் கமகமவென்று கமழ் கின்ற பரிமள வாசனை வீசும் சாம்பிராணி வர்த்திகள் கொளுத்தப்பட்டு அவ்வரண்மனை முழுதும் தங்கமயமாய் கண்ணொளி மழுங்கும்படி பிரகாசித்துக்கொண்டிருந்தது. அரசகுமாரத்தியாகிய குணபூஷணி என்னை ஓர் ஆசனத் தில் உட்காரச்செய்துத் தானும் என்சமீபத்தில் உட்கார்ந்த வுடன் ஜீவரேகை யென்னும் அவள் தோழி சில பலகாரங் களையும், பழங்களையும் கொண்டுவந்து எங்கள் முன்னர் வைத்தனள். நாங்களிருவரும் சாப்பிட்டானவுடன் குண பூஷணி ஓர் வீணையையெடுத்து சுதிமீட்டி நான் ஆனந்த பாஷ்பம்பெருகி பரவசமாகும்படி வாசித்து, அதற்கிசைந்த

ஓர் பாட்டையும் பாடினுள். அந்தப் பாட்டின் தாத்பரியமென்னவெனில், ஒருவர் ஒருவிசை காதல்கொண்ட ஸ்திரீயைக் கனவிலும் மறவாமல் அவனது ஆயுள்கால முழுவதும் அவள்மீது ஆசைகொண்டிருக்க வேண்டுமென்பதே. இவ்வாறு அவள் பாடும்போதெல்லாம் அவளுடைய கண்ணால் என்னை மருட்டிக்கொண்டு வந்ததால் நான் அவளது மையலில் சொக்கி ஒன்றுந் தோன்றுமல் திகைத்து அவள் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து தெண்டனிட்டேன்.

உடனே அவள் என்னை அவளுடைய இரு கரங்களாலும் தூக்கி எடுத்து அவள் சமீபத்தில் உட்காரவைத்துத் தானும் என்னைப்போல் உண்மையாய் எனதுமேல் மையல் கொண்டிருப்பதாகவும், என்னைத்தவிர வேறு ஆடவரை அவள் நேசிப்பதில்லை யென்றும் தெரிவித்து எனக்கோர் முத்தந்தந்தனள். அச்சமயத்தில் ஜீவரேகை என்னும் தாதி எங்களிடம் ஓடிவந்து பொழுதுவிடிகிறதருணமா யிருக்கிறதென்று தெரிவித்தவுடன் அவ்வரசிளங் குமரி என்னை நோக்கி, நானினி அவ்விட மிருக்கக்கூடாதென்றும் அப்படியிருந்தால் அரசனது கொடுந்தண்டனையான கொலைக்குப் பாத்திரனுக வேண்டுமென்றும், நாளையதினம் சாயந்திரம் தோட்டத்திற்கு வந்தால் அவளைக் கண்டுகளித்து உல்லாசமாய்க் காலங்கழிக்கலா மென்றும் தெரிவித்தவுடன் ஜீவரேகை என்னை யழைத்துக்கொண்டுபோய் ஓர் திட்டிவாசலைத்திறந்து அரண்மனையின் வெளியில் கொண்டு வந்து விட்டனள்.

பிறகு நான் அவ்விடமிருந்து என் விடுதிக்குச்சென்று பொழுது விடிந்தவுடன் நான் செய்யவேண்டியதொழிலைச் செய்துக்கொண்டிருந்தேன். அன்று பகலெல்லாம் குணபூஷணிக்கும் எனக்கும் ஏற்பட்ட அன்னியோன்னிய ஒற்

றுமையைப்பற்றி நினைத்துநினைத்துப் பூரித்தசிந்தையோடு புளசாங்கிதமுள்ளவனயிருந்து எப்போதுசூரியன்மறைந்து இருள்வரப்போகிறதென்று ஒவ்வொரு நிமிஷத்தையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்துக்கொண்டு வந்தேன்.

ஐயா! சத்தியவிரதமகாராஜனே! நான் இதுவரையில் அனுபவித்தத் துன்பங்களுக்கும் ஆபத்துகளுக்கும் தப்பிப் பிழைத்திருந்தும், இன்னும் நான் துன்பக்கடலில் மூழ்க வேண்டியிருப்பதால் அன்று அஸ்தமித்தவுடன் சகல உத்தியோகஸ்தர்களும் அவரவர் விடுதிகளுக்குச் சென்றபின்னர் நான் அரண்மனைத் தோட்டத்திற்குச் சென்றேன். சற்று தூரத்தில் என் வரவுக்காக எதிர்பார்த்திருக்கும் ஜீவரேகையைக் கண்டு அதிக துரிதமாகச் செல்லும்போது ஓர் போர்ச்சேவகன் திடீரென என்மேற் பாய்ந்து என்னைப் பிடித்துக்கொண்டுபோய் இரவெல்லாம் சிறையிலடைத்து வைத்திருந்து பொழுதுவிடிந்தவுடன் என்னை அரசசமுகத்திற் கழைத்துக் கொண்டுபோய் அரசன் முன்னிலையில் நிறுத்தி, "அரசே! இவ்வாலிபன் தங்களுடைய ஆஞ்ஞையை மீறி அஞ்சாத துணிகரத்துடன் அரண்மனைத் தோட்டத்தில் கடந்த இரவு எழுமணிக்குப்போய்க்கொண்டிருந்தான். நான் கண்டுபிடித்துக் கொண்டு வந்தேன்" என்றான். உடனே அரசன் கடுஞ்சினமடைந்து என்னையொன்றும் விசாரியாமலே என்னை கடுங்கொலைக்காளாகத் தீர்ப்புச்செய்தனர். அப்போது முன் என்னை உத்தியோகத்திலமர்த்திய ஆபீசர் அரசனையணுகி, "அரசே! இவன் இப்பட்டணத்திற்கு அன்னியன். இவன் ஒருகாலத்தில் மிகுந்த சம்பத்துடனிருந்து பிறகு கஷ்டதசைக்குள்ளாகி ஜீவனத்திற்கே வழியில்லாமல் ஊரூராய்த் திரிகையில்நான் இவனை இப்பட்டணத்தில் சந்தித்து நமதரண்மனையில் ஓர்

உத்தியோகத்தில் சிலநாட்களுக்கு முன்புதான் அமர்த்தினேன். இரவில் அரண்மனைத் தோட்டத்திற்குள் யாரும் பிரவேசிக்கக் கூடாதென்ற தங்களுடைய கடுமையான உத்திரவு இவனுக்குத் தெரிந்திருக்கமாட்டாது. ஆகையால் இவனது கொலைத்தீர்ப்பை மாற்றி ஜீவரட்சைசெய்ய வேண்டும்” என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டான்.

அரசன் பிடிவாதமுள்ளவனாயிருந்தும், அந்த ஆபீசர் சொன்னதற் கிணங்கி, நான் அந்தக்ஷணமே அப்பட்டணத்தி னெல்லைக்குள் தலைகாட்டாமல் ஓடிப்போகவேண்டுமென்றும், எப்போதாகிலும் நான் அப் பட்டணத்திற் காணப்பட்டால் தயை தாட்சண்ணியமின்றி கண்டிப்பாய் கொலை செய்யப்படுவேனென்றும் உத்தரவு செய்தவுடன் போர்ச்சேவகன் என்னை அங்கு ஒருநிமிஷமும்தங்கவொட்டாமல் அழைத்துக்கொண்டுபோய் அப்பட்டணத்தின்எல்லையில் விட்டுச் சென்றான். நான் என் பிராணபாயத்தினின்று தப்பிவந்ததற்காகச் சந்தோஷமடைந்தும் குணபூஷணியின் நேசவிசுவாசத்தை இழந்ததற்காக மெத்தவும் ஆராத்துயரத்தை யடைந்து ஒன்றுந் தோன்றாமல் பித்தனைப்போல் என் மனம்போன போக்காக அன்றுமத்தியானம் வரையிலும் வழிநடந்து சற்றிளைப்பாறுவதற்காக அங்கோர் மரத்தினிழலில் உட்கார்ந்தேன்.

அப்போது வழிப்போக்கனாகிய ஓர் யாசகன் என்னிடம் வந்து ஏதோ சில கவிகளைப்பாடினான். நான் அவனுக்குக் கொடுக்க என் கையில் ஒரு காசும் இராமையால் அவனுக்கு யாதொரு பதிலும் சொல்லாமல் மௌனமாயிருந்தேன். ஆனதால் அவன் என்னைப்பார்த்து, சகோதரா! தர்மஞ்செய்வதற்கு உன்னிடத்தில் யாதொரு பொருளும் இல்லைபோல் தோன்றுகின்றது. சத்விஷயமான காரியத்

தில் செலவு செய்வது உனக்கு யாதொரு குறைவும் உண்டாகாதே யென்றான். அதற்கு நான், "நீ சொல்லுவதெல்லாம் வாஸ்தவமே. என் கையில் ஒரு காசுமில்லை. நான் இருப்பதற்கோர் இடமுங்கிடையாது" என்றதற்கு அவன் "ஆ! நீ என்ன அவ்வளவு நிர்ப்பாக்கியஸ்திதியிலேயா யிருக்கின்றாய். அப்படியானால் உனது கஷ்டத்தினின்றும் நான் காப்பாற்றுகின்றேன்; நீ இனி உன் வறுமையைப்பற்றி யஞ்சவேண்டாம்" என்றான்.

சற்று நேரத்திற்கு முன் யாசகத்துக்கு வந்த இவன் என்னுடைய கஷ்டங்களையும், வறுமையையும் எவ்வாறு நீக்கக்கூடுமென்று நான் யோசித்துக் கொண்டிருக்கையில் பின்னும் அவன் என்னை நோக்கி, மித்திரா ! நான் பிச்சை யெடுப்பவனாகக் காணப்பட்டாலும் என் வேஷத்தினால் ஜனங்களை வஞ்சித்து முற்றுந்துறந்த முழு ஞானியென அவர்கள் நினைத்துக்கொள்ளும் வண்ணம் தந்திரோபாய வார்த்தைகளை யவர்களுக் குபதேசித்துப் பொருள் பறிப்பதில் எனக்கு மிகவும் சாமர்த்தியமுண்டு. கஷ்டமில்லாமல் ஜீவிப்பதற்கு இதைவிடச் சுலபமான வழி வேறொன்றுங் கிடையாது. உனக்கிஷ்டமானால் நீயும் என்னுடன் வந்தால் சுகமடையலாம். நானிப்போது சாமளகிரி என்னும் பட்டணத்தில் வசிக்கும் எனதுசினேகிதரிடத்திற்குப் போகிறேன். நீயும் எங்களுடன் சேர்ந்து எங்களுடைய யாசகத்தொழிலை யனுசரிக்கப் பிரியமிருந்தால்இப்போதே என்னுடன் வரலாமென்றான். நான் சற்றுநேரம் இவன் சொன்னதைப்பற்றி யோசித்து,

"பல்லெலாந் தெரியக்காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல வோட்டி மானமென் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ இழிவிழி வெந்த ஞான்றும்"

என்றபடி, எல்லாத் தொழில்களிலும் யாசகத் தொழில் மிகவும் இழிவானதன்றோ? என்றாலும் நான் இப்போ திருக்கும் நிலைமையில் வேறுவிதமாய் ஜீவனம் செய்துக் கொள்ள வழி யேதும் புலப்படாமையால் அவனுடன் போகச் சம்மதித்தேன்.

அப்போதவன் என்னைச் சாமளகிரியென்னும் பட்டணத்திற்கு அழைத்துக்கொண்டுபோவதாய் வாக்களித்த பின் நாங்களிருவரும் பிரயாணப்பட்டு வழிகளிற் றென் படும் பட்டணங்களிலும் கிராமங்களிலும் தானமாயளிக்கப் பட்ட உணவுகளைப் புசித்துக்கொண்டும், பொருள்களைச் சேகரித்துக்கொண்டுப்போய் சாமளகிரியை யடைந்து அங் கோர் வீட்டிற் குடியிருந்த மற்றிரண்டு யாசகர்களையும் கண்டோம். அவர்கள் எங்களுக் கெதிராய் ஓடிவந்து அனந்தமுறை எங்களைத் தழுவிக்கொண்டு நானும் அவர்க ளுடன் ஒருவனாகச் சேர்ந்ததைக் கேட்டு மிகவும் சந்தோ ஷப்பட்டார்கள். பிறகு நானும் எனது நண்பனும்வேறோர் விடுதியிற் றங்கினோம்.

நான் அப்போது பாலியனாகவே யிருந்தபடியால் இவர்கள் செய்யுந் தொழிலில் அதிசீக்கிரத்தில் நான் தேர்ச்சியடைந்து 'பன்றியுடன் கூடிய கன்றும் மலந்தின் னும்' என்னும் வாசகத்தின்படி ஜனங்களை வஞ்சித்துப் பொருள்பறிக்கும் மார்க்கமனைத்தும் கற்றுக்கொண்டு சுக மாக ஜீவித்துவந்தேன். ஆனால் எனக்குக் காதல் மூட்டின கண்ணாட்டியாகிய மங்களகிரியின் அரச குமாரத்தியை மறந்துவிட்டேனாகிலும் எப்போதாகிலும் அவள் ஞாப கம் எனக்குண்டாகும் சமயங்களிலெல்லாம் அவளது பிரி வாற்றாமையைப்பற்றிச் சிந்திக்காமற் போனதேயில்லை.

இவ்விதம் ஒருவருடமாக நானும் எனது நண்பனும் சாமளகிரிப் பட்டணத்தில் யாசகம் செய்து ஜீவித்துக் கொண்டு வருகையில் அவ்வூர் அரசனது மாளிகையில் தசரா கொண்டாட்டத்தினிமித்தம் விஜயதசமியன்று யாசகர்களுக்கு விசேஷப் பொருள் கொடுப்பதாகக் கேள்வியுற்று நானும் எனது நண்பனும் அங்குச்சென்றிருந்தோம். அவ்விடத்தில் திரளான ஜனக்கூட்டமிருந்தபடியால் நான் ஒருபக்கத்திலும் எனது நண்பன் ஒருபக்கத்திலும் நின்று கொண்டிருந்தோம். அப்போது யாரோ ஒருவன் என் பின்னால் வந்து என் முதுகில் தட்டவே நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கையில் அவன் மங்களகிரியின் அரசகுமாரத்தியாகிய குணபூஷணியின் அரண்மனைக் காவற்காரர்களில் ஒருவனாகிய **மந்தகமனன்** என்று கண்டுகொண்டேன். அவன் என்னை நோக்கி, "ஐயா! இப்படியும் நீர் பிச்சையெடுத்து ஜீவிப்பது உமக் கடுக்குமா ?

"பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சை பலசொல்லி யிடித்துண்கை—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியாது
உயிர்விடுகை சால வுறும்"

என்றபடி, பிச்சை யெடுப்பது எவ்வளவு கேவலமான விருத்தியென்பதை நீர் உணரவில்லையா?" என்றான். நான் அவனைப் பார்த்து, "நீ மங்களகிரியைவிட்டு இங்குவந்த காரணம் என்ன? அரச குமாரத்தியாகிய குணபூஷணி க்ஷேமந்தானா? தயை செய்து உன் விருத்தாந்தங்களைச் சொல்லவேண்டும்" என்று வினவினேன். அதற்கவன் "ஐயா! நான் உம்முடைய கேள்விகளுக்குப் பதிலளிக்க இதுசமயமன்று; நாளைக்காலையில் இவ்விடம் நீர் வருவீராகில் உமக்கு ஆச்சரியத்தை யுண்டுபண்ணக்கூடிய அதி

விந்தையான அந்தரங்க சமாசாரங்களையெல்லாம் ஆதியோடந்தமாக உமக்குத் தெரியப்படுத்துவேன்" என்றான்.

அப்படியே நான் நாளைச்சாலையில் அங்கு தனித்து வருவதாக வாக்களித்து, மறுநாள் குறித்த இடத்தில் போயிருந்தேன். அவனும் அதேசமயத்தில் அங்குவந்து "நாம் இவ்விடத்தைவிட்டப்புறம்போய் வேறே எங்கே யாகிலும் தனித்தவிடத்தில் நமது சம்பாஷணையைத்துவக் கலாம் வாரும்" என்றான். நாங்களிருவரும் அவ்விடம் விட்டகன்றுப் பல வீதிகளைக் கடந்து, கடைசியாய் மகா அழகும் விசாலமுமான ஓர் பங்களாவினிடம்போய், அவணைத் திறக்க நாங்களிருவரும் உள்ளே பிரவேசித்தோம். அதில் மகா நேர்த்தியான சோபாக்களும், மேஜைகளும் போடப்பட்டுமிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது அப்போது மந்தகமனன் என்னைப்பார்த்து "இந்தவீட்டை உமக்கென்றே நேற்று குடிக்கூலிக்கு ஏற்பாடு செய்தேன். நீர் சற்றுநேரம் இங்கிருப்பீராகில் நான் கடைக்குப்போய் சில சாமான்கள் வாங்கி வருகிறேனென்றுசொல்லிஉடனே போய்விட்டான். அவன் எனக்காக இவ்வித சௌகரியங்கள் செய்வதற்குக் காரணம் இன்னதெனவறிய பலபலவிதமாய் யோசனைசெய்தும் என் புத்திக்கு ஒன்றும் புலப்படாமையால் அதிக கலக்கத்திற்குள்ளாகி யிருந்தேன்.

சற்றுநேரத்திற்கெல்லாம் மந்தகமனன் இரண்டு கூலியாட்களுடன் என்னிடம் வந்து சேர்ந்தான். அக்கூலியாட்கள் பலவித விலையுயர்ந்த உடுப்புகளையும், தின்பண்ட முதலிய அநேகசாமான்களையும் சுமந்துக்கொண்டுவந்தார்கள். அப்போது மந்தகமனன் என்னை நோக்கி, ஐயா! நான் உம்மைத் தனியாக இங்கு விட்டுச்சென்று இவ்வளவு நேரம் கழித்து வந்ததற்காக என்னை மன்னிக்க வேண்டு

கின்றேன். தாங்கள் இப்பிச்சைக்கார உடைகளைக்களைந்து இதோ நான் வாங்கிவந்திருக்கும் இவ்வுடைகளைத் தரித்துக்கொள்ளுங்கள் என்றான். நான் அவ்வுடைகளை யுடுத்திக்கொண்டு, ஏன் எனக்குச் சகல வசதிகளும் செய்ய வேண்டுமென்றும், யாருடைய உத்தரவினால் அவன் இப்படிச் செய்கிறானென்றும் அவனைக் கேட்டேன். அதற்கவன், ஐயா! இது விஷயமாக இப்போது நான் உமக்கொன்றும் தெரிவிக்கலாகாதென்னும் கண்டிப்பான உத்தரவு செய்யப்பட்டிராவிடில் உமக்கு அதைத் தெரிவிக்க யாதொரு ஆட்சேபனையுமிராது. ஆனதால் இதைப்பற்றி என்னை மன்னிப்பதுடன் சற்றுப் பொறுமையுடன் இன்றிரவுவரையி லிருப்பீராயின் உங்களுக்குச் சகல சங்கதிகளும் தெரியவரும் என்றான்.

மந்தகமனன் சொன்னதைக்கேட்ட நான் அன்றுபகலெல்லாம் ஆழ்ந்த ஆலோசனையில் மூழ்கி யிருந்தேன். தீபம்வைத்த சற்று நேரத்திற்கெல்லாம் யாரோ கதவைத் தட்டும் சப்தத்தைக்கேட்டு மந்தகமனன் ஓடிப்போய்க் கதவைத்திறந்து ஓரழகிய பெண்ணை என்னிடமழைத்து வந்தான். அவள் மங்களபுரியின் அரசகுமாரத்தியாகிய குணபூஷணியின் தோழி ஜீவரேகையா யிருந்தபடியால் நான் அதிக ஆச்சரியமும் பிரமையுமடைந்து அவள் தன் நாட்டையும் அரசச் செல்வியையும்விட்டு இங்குவந்தக்காரணம் யாதென விசாரித்தேன். அதற்கவள், ஐயா! நீர் குணபூஷணியின் நிமித்தம் மரணதண்டனைக் குள்ளாகிப் பிறகு மங்களபுரியைவிட்டுத் துரத்தப்பட்டதை யறிந்த அரசிளங்குமரியடைந்த மனோவேதனையும், மாறாச்சஞ்சலமும் இவ்வளவவ்வளவென்று நான் உமக்கு வாய்விட்டுரைக்கத்தக்கவளல்ல. உன்னுடைய பிரிவாற்றாமையால் அவள்

நாளுக்குநாள் அதிக விசனமடைந்து "இனி நான் எனக்கு ஆசையூட்டின நேசக்கண்ணாளனைக்கண்டு சந்திக்காமலும் அவனோடு சுகித்து வாழாமலு மிருப்பேனாகில் சீக்கிரத்தில் மரணத்தை எதிர்பார்க்க நேரிடுவது நிச்சயம். எனக்கிருக்கும் ராஜ செல்வங்களை யெல்லாம் அவன்பொருட்டு துவேஷித்து அற்பமாயெண்ணி வெறுத்துவிட்டு அவனைத்தேடிச் செல்லத் தீர்மானித்துக்கொண்டேன். இச்சூழ்ச்சியை என் தந்தையாகிய அரசன் அறிவாராகில் என்னை மரணதண்டனைக்குள்ளாக்குவார். ஆகையால் யாருக்கும் தெரியாமல் அரண்மனையை விட்டுச் செல்லவேண்டும்" என்றனள்.

இவ்வசனங்களைக் கேட்ட நானும், இராஜகுமாரத்தியின் அந்தரங்கவேலைக்காரனாகிய மந்தகமனனும் குணபூஷணியைப் பிரிய மனமில்லாதவர்களாய் அவளுடன் போகத் தீர்மானித்துக் கொண்டு, வழி செலவுக்காகக் கொஞ்சம் பொருளுடன் ஒருநாள் நடுநிசியில் மூவரும் அரண்மனையை விட்டுப் புறப்பட்டு அநேக நாடுநகரங்களையும் அதைச் சேர்ந்த சத்திரஞ் சாவடிகளையும் உமக்காகத் தேடிக் கொண்டு வரும்வழியில் இப்பட்டணத்திற்குச் சுமார் ஒரு காத தூரத்தில் சில கள்ளர்கள் எங்களை வழிமறித்து எங்களிடமிருந்தபொருள்களை யபகரித்துக்கொண்டு போய்விட்டார்கள். நாங்கள் மூவரும் இப்பட்டணத்தை யடைந்து கள்ளர்கள்செய்த கொடுமையைப் பற்றியும், பரிபோன பொருளைக் கண்டுபிடித்துக் கொடுக்கும்படிக்கும் அரசனிடம் முறையிட்டோம். அரசனோ குணபூஷணியைப் பார்த்தவுடன் அதிகமோகங்கொண்டு அவளது சௌந்தரியத்தில் சொக்கிக் காதல்மீறி அவளை எந்தவூரென்றான். அதற்கவள் கமலநாட்டிலிருந்து வந்ததாகத்தெரிவித்ததும்

அரசன் பின்னும் அவளைச் சில கேள்விகள் கேட்க அவள் அதற்கேற்ற ஜவாபு சொல்லிக்கொண்டே வந்தாள்.

பிறகு அரசன் அவளுடன் நேசம்பாராட்ட விரும்பினமையால் அவளிடத்திலிருந்த பொருள்களைக் கொள்ளையடித்தக் கள்ளர்களைக் கண்டுபிடித்து அப்பொருள்களைத் திரும்ப அடையும் வரையில் அவள் அவ்வரசனது அந்தப்புரத்தி லிருக்கவேண்டு மென்றும் உத்தரவு செய்தான். நானும், மந்தகமனனும் அவளுடனிருந்து அவளுக்குப் பணிவிடை செய்துக்கொண்டு வருகின்றோம். மகா வீர சூர பாராக்கிரமம்பொருந்திய அவ்வரசன்குணபூஷணியின் மேல் வைத்திருக்கும் காதலுக்கு அவளிணங்காமல் மிகவும் துயரப்பட்டவளாய் உம்மைச் சதாகாலமும், நினைத்துக் கொண்டே யிருக்கின்றாள். நேற்றைய தினம் உம்மைக் கண்டதாக மந்தகமனன் அறிவித்தவுடன், அவள் ஆனந்த பரவசமடைந்து, சகல சாமான்களும் நிறைந்த ஓர் பங்களாவை உமக்காககுடிக்கூலிக்கு அமர்த்தி உமக்குயாதோர் குறைவுமின்றி சம்ரட்சணை செய்துவரும்படி யவனுக்குக் கட்டளையிட்டிருக்கின்றனள். இப்போது நான் எல்லாசங்கதிகளையும் உமக்குத் தெரியப்படுத்தி நீரும், குணபூஷணியும் இன்று சந்திப்பதற்கு ஆயத்தப்படாததற்காகவே அவளால் இங்கனுப்பப்பட்டுவந்தேன். நாளையதினம்இராத்திரிக்கு நாங்களிருவரும் எவ்விதத்திலாகிலும் இவ்விடத்திற்கவசியம் வருவோம்" என்று சொல்லி மந்தகமனனையும் தன்னுடனழைத்துக்கொண்டு போய்விட்டாள்.

நான் அன்றிரவுமுழுதும் குணபூஷணியின் நினவே மனதிலூன்றினமையால் அவளையே சிந்தித்துக்கொண்டு காமாந்தகாரத்தால் கண்களை மூடாமலிருந்து மறுநாள் பகலும் அவ்விதமாகவேயிருந்து இரவை எதிர்பார்த்துக்

கொண்டிருந்தேன். அன்றிரவு சுமார் 10-மணிக்கு கதவு
தட்டப்படுகிற சப்தத்தைக் கேட்டு எனக்காக நியமிக்கப்
பட்டிருந்த வேலைக்காரனொருவன் ஓடி கதவைத்திறந்தான்.
உடனே நான் ஆவலுடன்பார்க்க ஆசித்திருந்த என்நேசக்
கண்ணாட்டியாகிய குணபூஷணி என்னிடம்வரக்கண்டேன்.
அவளைக் கண்டவுடன் நான் ஆனந்தபரவசனாகி என்னை
நான் மறந்து ஒன்றுந் தோன்றாமல் அடியற்ற மரம்போல
பூமியின்மேல் சாய்ந்துவிட்டேன். உடனே அவள் என்
னைத் தன் இருகரங்களாலும் தூக்கி எடுத்துத் தனதருகில்
உட்காரவைத்து என்னை நோக்கி, "ஐயா! நாமிருவரும்
காதல்மீறிக் கலங்கி இனம்பிரிந்த அன்றிற்போல விசன
மடைந்து, இப்போது நாம் ஒருவரையொருவர் கண்டு சந்
தித்தது நாம் முன்செய்த பூஜாபலனேயன்றி வேறல்ல.
ஆனாலும் நாமிருவரும் யாதொரு தடையுமின்றிக் கூடி
சாஸ்வதமான சுகமனுபவிப்பதற்கு இன்னுஞ் சில தடைக
ளிருக்கின்றமையால், அவ்விடையூறு நீங்குந்தனிலும் நீர்
மட்டற்ற மனமகிழ்ச்சியுடன் இம்மாளிகையில் தானே
இருக்கவேண்டியது. நமக்கு நற்காலம்வந்து நாம் தாரா
மாய் வார்த்தையாடிக் கூடிக்குலாவும் சமயம் வருந்தனி
லும் நாம் நாள்தோறும் ஒருவருக்கொருவர் இரகசியமாகக்
கண்டு சந்தித்துக்கொள்ளலாம். எனக்கு நேரிட்ட கஷ்
டங்கள் யாவையும் ஜீவரேகை உமக்குத் தெரிவித்திருப்
பாள். நீரும் என்னிமித்தமாகப் பல துயரங்களை யனுப
வித்தீர்" என்று சொல்லி சரச சல்லாபமாக என்னுடன்
பேசி விளையாடிக்கொண்டிருந்தனள்.

அச்சமயத்தில் ஜீவரேகையும், மந்தகமனனும் திடீ
ரென்று எங்களிடம் வந்து பொழுதுவிடிகிற நேரமாயிற்
றென்று எச்சரித்தார்கள். உடனே குணபூஷணி நாளைய

தினம் இராத்திரிக்கு அங்குவருவாத என்னிடம்சொல்லி, அவ்விடத்தைவிட்டுச் சென்றனள்.

நான் இவ்வளவு சந்தோஷத்தையும், செல்வத்தையும் அடைந்தவனு யிருந்தபோதிலும் என்னுடன் தோழமைப் பூண்டிருந்த கூட்டாளியாகிய யாசகனை நான் மறக்கவில்லை. என்னைக் காணுமையால் அவன் விசனப்படுவானென்று நான் நினைத்து மறுநாளுதயத்தில் நான் அவனை வீதிகளெங் குந் தேடிப்பார்க்கப் புறப்பட்டேன். அப்போது அவன் ஓர் வீட்டிலிருந்து வெளிவரும்போது கண்டுபிடித்து, ஒரு வருக்கொருவர் க்ஷேமலாபத்தைப்பற்றி விசாரிக்கையில் அவன் என்னைப்பார்த்து, "நண்பா ! நீ இரண்டுநாளாகக் காணப்படாமையால் உனக்கென்ன ஆபத்துச் சம்பவித் ததோவென ஏங்கியிருந்தேன். ஆனல் நீ முற்றிலும் மாறு பட்டிருக்கிற காரணம் யாது? இவ் வுடைகளெல்லாம் உனக்கு எங்கு கிடைத்தன? உன்னைப் பார்த்தால் சகல சுகங்களையும் குறைவின்றி யனுபவிக்கிறவனைப் போல் தோணுகின்றதே. உனக்கித்தன்மை எப்படி யுண்டாயிற் றென்பதையறிய நான்மிகவும் ஆசைப்பட்டிருக்கின்றேன்" என்றான். அதற்கு நான் அவனைப்பார்த்து, என் பிரிய முள்ள நண்பா! நான் உண்மையாகவே நல்ல அந்தஸ்தும் அதிர்ஷ்டமுமுள்ளவனுகவே யிருக்கின்றேன். நானடைந் திருக்கும் பாக்கியத்தை நீ வந்து உன் கண்ணுரப் பார்க்க வேண்டுமென்பதே யென்கருத்து. தவிர, நீ இப்போது வசிக்கும் சிறிய வீட்டைவிட்டு என்னிடத்திற்குவந்து என் னுடன் கூடவே யிருக்கவேண்டுமென்று சொல்லி நான் அவனை எனது வீட்டிற் கழைத்துக்கொண்டுபோய் என் வீட்டிலுள்ள விலையுயர்ந்த சாமான்கள் யாவையும் அவனுக் குக் காண்பித்தேன், அப்போதவன் அவைகளைக் கண்டு

பிரமித்து அடிக்கடி பெருமூச்செறிந்து, ஆ! கடவுளே! நீர் இவனுக்குமாத்திரம் அவன் என்றும் எதிர்பாராத இவ்வளவு திரண்ட ஐஸ்வரியத்தை யளித்ததென்ன? எனக்கும் இவ்வித சம்பத்தை யளித்திருக்கக்கூடாதா? என்று அடிக்கடி ஏங்கிக்கொண்டே யிருந்தான். அப்பொழுது நான் அவனை நோக்கி, நண்பா! இதென்ன விபரீதம்? அடுத்தவனுடைய வாழ்வுகளுக்காக நீ சீறிப் பொறாமை கொள்வது உனக்கு அடுக்குமா? "அழுக்காறு, அவா வெகுளி, இன்னாச்சொல் நான்கு மிழுக்காவியன்ற தறம்" என்றபடி நீ முற்றும் தர்மம் தவறி பொறாமையை மேற்கொண்டு சஞ்சலப்படுகின்றனையே என்றேன்.

இதைச் செவியுற்ற எனது நண்பன், "சிநேகிதா! நீ தப்பபிப்பிராயங் கொண்டனை. நான் ஒருபோதும் அயலாரைப் பார்த்து பொறாமைப்படுபவ னல்லவென்று உனக்கே தெரியும். உனக்குக் கிடைத்த இந்த நல்லதிர்ஷ்டத்திற்காக நான் மெத்தவும் சந்தோஷப்பட்டு, இன்னும் எனது சம்பத்துகள் விருத்தியாகவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கின்றேன்" என்று என்னைத் தழுவிக்கொண்டு மெத்தவும் உபசாரமாகப் பேசினன்.

ஐயா! சத்தியவிரதமகாராஜனே! இவ்விதம் புகழ்ந்து பேசிய எனது நண்பன், மகா தந்திரவாதியென்றும், இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லாச் சண்டாளர்களைப் பார்க்கிலும் மகா கொடிய சண்டாளப்பாவியென்றும், பரம துஷ்டனென்றும், விசுவாச காதகனென்றும் அவனை நினைக்காமல், சம்பன்னனென்றே நம்பி, அவனை நானே வலிய என் வீட்டிற் கழைத்துக்கொண்டு வந்தபடியால் அவனாலெனக்குப் பெருத்த தொந்திரவு நேரிட்டது மல்லாமல் என் பிராணனுக்கு முழுமோசம் வரவும் ஏதுவாயிற்று.

இவ்விதம் என்னைப் பரிந்துபேசிய எனது நண்பனைச் சாப்பிடும்படி யுபசரித்து, எனது வேலைக்காரனால் பரிமாறப்பட்ட 'அனேகவித பதார்த்தங்களுடனும், பலகாரங்களுடனும் கூடிய அன்னத்தை இருவரும் உண்டு களித்திருக்கையில் அவன் என்னை நோக்கி, "நண்பா! உனக்கு அகஸ்மாத்தாக இவ்வதிர்ஷ்டம் எப்படி யுண்டாயிற்றென்பதை யெனக்குச் சொல். உனக்குள் மறைத்துவைத்திருக்கும் இரகசியத்தை வாய்விட்டென்னுடன் உரைக்கப் பயப்படாதே. நான் அந்த இரகசியத்தை யாருடனும் சொல்லேன். நான் எப்போதும் இரகசியத்தைக் காப்பாற்றத் தக்கவனாதலால் உனக்கதனால் யாதொரு தீங்கும் வருமென்று நீகிஞ்சிற்றும்சந்தேகிக்கவேண்டாம். நான் எனது மற்றத் தோழர்களைவிட உன்னை யதிகமாய் நேசித்து உன் மீதில் அதிக பற்றுதல் வைத்திருப்பதால் உன்னுடைய இரகசியத்தை வெளியிடுவேனாகில் அதனால் உனக்கு நேரிடும் பொல்லாங்கை நான் சகிப்பேனோ? ஆனதால் உனது இரகசியத்தி லொன்றையும் மறைக்காமல் முழுதும் எனக்குத் தெரிவித்தால், அதில் ஏதாகிலும் பொல்லாங்கிருக்குமாகில் அதற்குத்தக்க நல்லோசனையை நான் தெரிவிப்பேன். நான் உனக்கு உற்ற சினேகிதனானபடியால் இவ்வளவு சடுதியில் உனக்கேற்பட்ட இவ்வதிர்ஷ்டத்தின் இரகசியத்தை எனக்குத் தெரிவிக்கவேண்டும்" என்றான்.

அவன் இவ்விதம் சொல்லிய வார்த்தைகளினாலும், அவன் எனக்குற்ற சினேகிதனாய்க் காணப்பட்டபடியினாலும் அவன் கேட்டுக்கொள்வதை மறுக்க மனம் வராமல் நான் அவனை நோக்கி, மித்திரா! நான் உன்னிடத்தில் தெரிவிக்கும் விஷயங்களில் யாதொரு கெடுதியும் சம்பவிக்கா வண்ணம் உன் மனதிலேயே வைத்திருப்பா

யென்று நம்புகிறேன். இனேகத் துரோகம் செய்யாமல் உள்ளதை யுள்ளபடி யுனக்குத் தெரிவிக்கின்றேன். அதாவது, முதலில் நீ என்னைக் கண்டபோது நான் அதிக சஞ்சலத்தில் மூழ்கியிருந்தேனென்பது உனக்குத் தெரிந்த விஷயமே. நான் மங்களகிரியின் அரசகுமாரத்தியாகிய குணபூஷணி என்னும் அழகிய பருவப் பெண்ணின்மேல் மையலாகி அவள் கோரியவண்ணம் நான் அரண்மனைத் தோட்டத்தில் அவளுக்காகக் காத்துக்கொண்டிருக்கையில் காவலாளியால் பிடிக்கப்பட்டு அரசனிடம் கொண்டு போகப்பட்டதும் அவன் என்னை முதலில் மரணாக்கினைச் செய்து பிறகு அத்தீர்ப்பை மாற்றி உடனே அவ்வூரை விட்டு என்னைத் துரத்திவிட்டான். நான் இனி பார்க்கப் போவதில்லை என்றெண்ணி யிருந்த அவ்வழகு சுந்தரியைத் திரும்பவும் நான் இப்பட்டணத்திற்கண்டேன். அவளாரென்றால், இந்நகரையாளும் அரசனது ஆசைக் கண்ணாட்டியே யொழிய வேறல்ல" என்றேன். நான் உண்மையை யுரைத்தவுடன் அச்சண்டாளன் என்னைநோக்கி, "மித்திரா! நீ தெரிவித்தபடி இந்த மங்களகிரிப் பட்டணத்தரசன் அவள்மீதி லதிக ஆசைகொண்டிருப்பதால் அவள் அனைவராலும் புகழக்கூடிய அதிரூப சௌந்தரவதியாக வல்லவோ இருக்கவேண்டும்" என்றான்.

அதற்கு நான் அந்தப் பிச்சைக்காரனுடனே அவளுடைய அழகைப்பற்றி எவ்வளவு வர்ணிக்கக்கூடுமோ அவ்வளவும் எடுத்துரைத்துப் பின்னும் அவனை நோக்கி, "நண்பா! நான் சொன்னது உண்மையென்பதை நீயே கண்ணாரக்கண்டுத் தெளியலாம். இன்று அஸ்தமித்தவுடன் அவளே இங்குவருவாள். அப்போது நீயே அவளது பேரழகைக் காணலாம்" என்று சொன்னவுடன் அவன்

தன்னை யறியாத ஆனந்தசாகரத்தில் ஆழ்ந்து தத்தளித்துக் கொண்டு என்னை நோக்கி, "நேசா! நீ இப்போதெனக்குச் சொன்ன வாக்கை நிறைவேற்றுவையாகில், இதைவிட நீ எனக்குச் செய்யத்தகும் பேருபகாரம் இப்பூமியின் கண்ணுளதோ வென்று என்னை அதிகமாகப் புகழ்ந்துக் கொண்டாடினன். இப்படி நானும் எனது நண்பனும் பேசிக்கொண்டிருக்கையில் அஸ்தமித்த சற்று நேரத்திற் கெல்லாம் வீட்டின் கதவுதட்டப்படுகிற சப்தம் என் காதுகளிஸ் விழுந்தது. உடனே நான் எனது நண்பனைச் சற்று நேரம் மறைவாக இருக்கும்படி திட்டஞ் செய்து நான் குணபூஷணியை உள்ளே யழைத்து வந்து இருவரும் சோபாவின்மேல் உட்கார்ந்தவுடன் நானவளை நோக்கி, என் பிரிய காதலீ! நான் இப்பட்டணத்திற்குத் துணைபற்றிவந்த யாசகனொருவன் உளன்; அவன் இப்போது இவ்வீட்டில் வந்திருக்கின்றான். அவனை இவ்விடத்திலேயே வசிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கின்றேன். அவன் எனக்குற்றநேசனுகையால் அவனும் நம்முடனிருக்கும்படி நீ உத்தரவளிக்க வேண்டுமென்றேன்.

அதற்கவள் என்மேல் மிகவும் கோபமடைந்து "ஆலோசியாமல் ஓர் அன்னியனை இப்படியும் வீட்டில் கொண்டுவந்து வைக்கலாமா? நான் ஒருவர்கண்ணுக்கும் புலப்படாமலிருநது நமது எண்ணத்தை நிறைவேற்ற வேண்டுமென்றிருக்க நீர் அதற்கு இடையூறுக இருக்கின்றீர்" என்றுள்: நான் அவளை நோக்கி, மாதே! அவனோ மகாவிவேகி; மிகவும் பேதமையுள்ளவன்; என்னிடத்தில் அந்தியந்தப் பிரீதியுள்ளவன். ஆகையால் என் அபிப்பிராயத்திற் கிணங்கி உத்தரவு செய்வையேயானுல் உனக்கு பாதாகிலும் கெடுதிவந்தால் நான் ஐஅதற்கு உத்தரவா

யாவேன் என்றேன். அதற்கவள் அப்படியானல் உன் அபிப்பிராயத்தைக் கெடுப்பது எனக்குத் தகுதியல்ல; இதனல் நாம் அதிக துயரத்திற்குள்ளாக நேரிடுமென்று நான் நினைக்கிறேன். ஏனெனில், ஸ்திரீகளுடைய சினேகிதமும், சிறுவருடைய கூட்டுறவும், மூடருடைய நட்பும் மோசத்துக்கிடமென்று மூத்தோர் சொல்ல நான் பலமுறை கேட்டிருக்கின்றேன். நீர் அவன் விஷயத்தில் அதிக நம்பிக்கைக் கொண்டிருப்பதால் உமதிஷ்டத்தின் படியே செய்யலாமென்றாள். நான் உடனே எனது நண்பனுகிய துஷ்டனை யழைத்து வந்து எங்களுடன் உட்கார வைத்துக்கொண்டு, மூவருமாக எங்களுக்குப் பரிமாறப் பட்ட உணவையருந்தியான பிறகு, சந்தோஷமாகப்பல பேச்சுகளைப் பேசிக்கொண்டிருந்தோம்.

இப்படி இருக்கையில், 'பிச்சைக்குவந்தவன் பெண்டுக் கழைத்தான்' என்னும்பழமொழியின்படி குணபூஷணியின் சவுந்தரியத்தைப் பார்க்கப்பார்க்க அவனுக்குக்காதல்மீறி, அரசகுமாரத்தி யென்பதைச் சற்றும் கவனியாமல் தன் இருகரங்களாலும் அவளைத் தழுவிக்கொண்டான். அவன் துடுக்காய் செய்த இச்செயலை இராஜபுத்திரி சகியாதவளாய் அவன் கைகளைப்பறித்து, அவன்மேல் அதிககோப மடைந்து, "அடா மதியிழந்த மடையா! நீ என்னகாரியஞ் செய்யத்துணிந்தாய்? உன் துடுக்குத் தனத்திற்காகத் தகுந்த சிட்சை இப்போதே செய்வேன். ஆனல் உன் நண்பனைப் பார்த்து உன்னை மன்னித்தேன்" என்று சொல்லி, அதிவிரைவாக வீட்டைவிட்டு வெளிச்சென்றனள். அவள் அதிக கோபத்துடன் போவதைப்பார்த்த நான் அவளைச் சமாதானப்படுத்தவெண்ணி அவளுக்குப் பின்னல் ஓடி, அன்னியன் தெரியாமற் செய்த பிழையைப்

பொறுத்துக்கொள்ளும்படி வேண்டினேன். அதற்கவள் என்னை நோக்கி, ஓர் பிச்சைக்காரனைக் கொண்டு என்னை இவ்வித அவமானப்படுத்துவது உமக்குநியாயமோ? நான் முதலிலேயே அவனுடைய கூட்டுறவாகாதென்று தடுத்தும் நீர் கேளாமற் போனதால் இவ்விபரீதத்திற்குள்ளானேன். அவனிடத்தில் உமக்கதிகப்பிரீதி யிருப்பதால் அவன் உமது வீட்டிலிருக்கும் வரையில் நான் உம்மிடம் வரமாட்டேன் என்றுசொல்லிப் போய்விட்டாள்.

இராஜகுமாரத்திச் சொன்னவுடன் நான் எனது நண்பனிடம் வந்து, "மித்திரா! நீ என்னகாரியஞ் செய்தனை? இவ்வூர் அரசனது நேசக்கண்ணாட்டியாகிய அவளுக்கு இப்படியும் மனவருத்தம் வரும்படிச் செய்யலாமா? சற்றுகிலும் முன்பின் யோசனையின்றி நீசெய்த துடுக்கான செய்கையால் அவள் உன்விஷயத்தில் கடுங்கோபங் கொண்டதும் தவிரக் கடைசியில் உன்னை நான் இங்கு சேர்த்ததற்காக என்மீதிலும் கோபமடைந்து இனி இவ்விடத்திற்கு வரமாட்டேன் என்று சொல்லியல்லவோ போய்விட்டனள்" என்றேன். அதற்கவன் என்னைநோக்கி, 'நீ என் இவ்விஷயத்தில் உன் மனதைப் புண்ணாக்கிக் கொள்ளுகின்றாய்? அவள் உண்மையாகவே என்மேல் கோபமடைந்தாளென்று நீ எண்ணவேண்டாம். ஸ்திரீகளின் விஷயத்தில் உனக்கு அனுபோகம் போதாது மாதர்களின் மனதையறிவது மகாதேவனாலுமாகாது. நீ அதிக பாலியனாகையால் அவளது உள்மருமத்தை யறியாமல் கலங்குகின்றாய். எனக்குஸ்திரீகளுடைய பழக்கவழக்கங்களில் அதிக அனுபோகமுண்டு. அவள் மேலுக்குக் கோபங் கொண்டவளைப்போல் சென்றாளே யொழிய வேறல்ல" என்றான். இவன் மூரட்டுத்தனமாய் இவ்விதம்

ளருகிறனென்றெண்ணி அவளைச் சயனித்துக் கொள்ளும்படிச் சொல்லி நானும் என்னறையில் சயனித்துக் கொண்டு அன்றிரவை மிகுந்த மனோவேதனையுடன் கழித்தேன்.

பிறகு அடுத்த இரண்டு மூன்றுநாள் வரையிலும் குணபூஷணி என்னிடம் வராமையால் நான் மிகவும் வியாகூலப்பட்டுக்கொண்டிருப்பதை யறிந்த எனது நண்பன் இன்னும் என்னை ஆபத்துக்குள்ளாகும்படிச் செய்வதற்காக என்னை நோக்கி, மித்திரா! அறையதினம் குணபூஷணியைக் கண்டவுடன் என் அறிவழிந்து சிநேகத் துரோகஞ் செய்து, மதியில்லாமல் மன்னன் மகளை மனவேதனைக் குள்ளாகச் செய்தபடியால் நான் இந்நகரத்தை விட்டுக் கண்ணுக்கெட்டாத தூரத்திற்போய் காலங்கழிக்க உத்தேசித்திருக்கிறேன் என்று வஞ்சனையாக மொழிந்ததை நான் மெய்யென்று நம்பி, அப்போது அங்குவந்த மந்தகமனனிடம் அவனுடைய அபிப்பிராயத்தை குணபூஷணிக்குத் தெரிவிக்கும்படிச் சொல்லி யனுப்பினேன். சற்றுநேரத்திற்கெல்லாம் மந்தகமனன் இராஜகுமாரத்தியிடமிருந்து ஓர் கடிதத்தைக் கொண்டுவந்தான். அதை நான் பிரித்துப் பார்க்கையில், என் நண்பன் செய்த தப்பிதத்தை அவள் மன்னித்துவிட்டதாகவும், ஆனால் நாளையதினமே அவன் இந்த சாமளகிரிப்பட்டணத்தை விட்டுப் போய்விடவேண்டுமென்றும் அதில் கண்டிப்பாய் எழுதியிருந்தது. எனது நேசக்காதலி எனக் கெழுதிய இக்கடிதத்தை எனது நண்பனுக்குக் காண்பித்தேன். அவனும் குணபூஷணியின் கட்டளையின்படி நாளையதினமே இந்நகரத்தைவிட்டுப்போக ஓர் ஆட்சேபனையுமில்லை யென்

அம், மதியின்றி செய்தகாரியத்தால் அந்த உத்தமியின் முகத்தில் விழிப்பதைப் பார்க்கினும்,

"கொம்புள தற்கைந்துக் குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங்கண்ணிற் றெறியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி"

என்றபடி தீங்கிழைத்த நானே அம்மங்கையின் கண்ணுக் கெட்டாத தூரத்தில் நீங்கிவிடுவதே உத்தமம் என்றான். அவனை நீங்கியிருப்பது எனக்குச் சம்மதமில்லை. அப்படி அவன் போகாவிட்டாலும் நான் குணபூஷணியை இழக்க வேண்டி வருமேயென்று நினைத்து அவனை நோக்கி "சிநேகிதா! நீ என்னை விட்டுப்பிரிந்துபோனால் மறுபடியும் உன் முகத்தை எப்போது பார்க்கப்போகிறேன். ஆகையால் இன்றையதினம் என்னுடனிருந்து உண்டு களித்து நாளையதினம் உன்னிஷ்டப்படியே நீ போகலாம்" என்று சொல்லி, எனது வேலைக்காரனைக் கொண்டு பெரியதோர் விருந்து தயார் செய்து, எனது நண்பனும் நானும் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் மந்தகமனன் அங்குவந்து, "ஐயா! இன்றையதினம் அரசமாளிகையில் குங்குமப்பூ முதலிய விலையுயர்ந்த வஸ்துக்கள் சேர்த்து அரசனுக் கென்று மிகவும் ருசிவாய் செய்யப்பட்ட சேமியாபாயசத்தை அரசன் தனது நேசக்காதலியாகிய குணபூஷணிக்கு அனுப்ப, அதையவள் தங்களுக் கனுப்பினாளென்று சொல்லித் தான் வெள்ளிப்பாத்திரத்தில் கொண்டுவந்த அந்தப் பாயசத்தை என்முன் வைத்தான். நாங்களிருவரும் அதை மிகுந்த ஆவலுடன் புசித்து ஆனந்தமடைந்தோம். அப்போது மோசக்காரனாகிய எனது நண்பன் எனக்குண்டாயிருக்கும் செல்வத்தைப் பார்க்க மனந் தாளாதவனாய் பொறாமை மேற்கொண்டு என்னை நோக்கி, "வாலிபனே!

நீ மிகவும் பாக்கியவந்தன். உனது அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்" என்று அனேகமுறை சொல்லிக்கொண்டே யிருந்தான். பிறகு நாங்களிருவரும் சயனித்துக்கொண்டு அன்றிரவைப் போக்கினேம்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் என் சினேகிதன் என்னைப்பார்த்து, நான் உன்னைவிட்டுப் பிரியுங்காலம்வந்ததென்றான். அச்சமயத்தில் எனது சொந்த செலவுக்காக குணபூஷணியிட மிருந்து எனக்கு மந்தகமனன் கொண்டு வந்த நாணயங்களடங்கிய பையை நான் எடுத்து என் நண்பன் கையில் கொடுத்தேன். அவன் அதைப் பெற்றுக் கொண்டு எனக்கு வந்தனை வழிபாடுகள் செய்து என் வீட்டைவிட்டுப்போய்விட்டான். அவன் என்னைவிட்டுப் பிரிந்து போனதற்காக மிகவும் வருந்தி, சோபாவின்மேல் சாய்ந்தபடியே நித்திரைப் போய்விட்டேன்.

இவ்விதமாய் நான் அசந்து நித்திரைச் செய்கையில் வீட்டிற்குள் ஓர் பேரரவங்கேட்டு விழித்துக் கொண்டு பார்க்கையில் அப்பட்டணத் தரசனது போர்ச்சேவகர்களிற் சிலர் என்னைச் சூழ்ந்துக்கொண்டு, அரசன் என்னை யழைத்துவரச் சொன்னதால் தங்களுடன் தட்சணம் புறப்பட்டு வரவேண்டுமென்று சொல்லி என்னை யழைத்துக் கொண்டு போகையில் நான் அவர்களைப் பார்த்து, ஐயன்மீர்! நான் யாதுகுற்றம் செய்தேன்? எதற்காக என்னை அரசன் அழைத்துவரச் சொன்னார்? என்றேன். அதற்கவர்கள், "பாலியா! நாங்கள் ஒரு காரணத்தையு மறியோம் உன்னை அரசசபைக்குக் கொண்டுபோய்விடும்படிக்கு மாத்திரம் நாங்கள் உத்தரவு பெற்று வந்திருக்கின்றோம். நீ குற்றமற்றவனு யிருப்பாயாகில் நீ யொன்றுக்கும் பயப்படத்தேவையில்லை. ஏனெனில் அரசன் மகாநீதிவான்.

குற்றமற்றவர்களை அக்கிரமமாய் ஒருபோதும் தண்டிக்க மாட்டார். ஆனால் குற்றஞ்செய்தவர்களைக் கொஞ்சமும் பச்சாதாபமில்லாமல் கடுந்தண்டனை செய்வார்!' என்றார் கள்.

நான் எனக்குள் நினைத்ததாவது, குணபூஷணிக்கும் எனக்குமுள்ள சிநேகத்தை, தான் நண்பனென்று உற வாடிக்கொண்டிருந்த பரமதுஷ்டனாகிய அந்த யாசகன் அரசனுக்கு அறிவித்திருக்கவேண்டும். வேறு தப்பிதம் யான் ஒன்றுஞ்செய்ததில்லையே என்று பலவாறாய் எண் ணிக்கொண்டு அரசசபையை யணுகியபோது, அங்கே நான் சிநேகனென்று நம்பியிருந்த அக்கொடிய சண்டாள னாகிய பிச்சைக்காரன் அரசனுக்கு சமீபத்தில் நின்றுக் கொண்டிருந்தான். நான் நினைத்தபடி அடுத்துக் கெடுக்க முயன்ற இப்படுபாவியினால்தான் எனக்குத் தீம்பு சம்ப வித்ததென்று கலங்கி ஒன்றுந்தோன்றாமல் அரசனெதிரில் நின்றேன்.

அப்போது அரசன் கடுங்கோபக்குறியுடன் என் னைப்பார்த்து, "அடா துரோகி! நான் ஆசைவைத்திருக் கும் குணபூஷணியுடன் நீ இரகசியமாய் சுகமனுபவித்துக் கொண்டு வருகிறாயல்லவா? உன்னைப்போன்ற துணிகர முள்ள சண்டாளனை நான் இவ்வுலகிற் கண்டதில்லை நீ செய்த இந்த இராஜத்துரோகத்திற்காக என்ன பதில் சொல்லுகிறாய்?' என்றார் அதற்கு நான் அவரைப்பார்த்து, "தராதிபனே! உம்முடைய ஆஞ்ஞைக்கு நான் உட்பட் டிருந்தாலும் குணபூஷணிக்குமாத்திரம் யாதொரு தீங்கும் செய்யாதிருக்கும்படித் தங்களை வேண்டிக்கொள்ளுகின் றேன். இனி பார்க்கப்போவதில்லையென்று நினைத்திருந்த அவளுடைய பிரதமநேசனாகிய என்னை அவள் முற்றும்

மறந்தே யிருந்தாள். ஆனால் இப்பட்டணத்தில் நானிருப்பதையறிந்து முன் அவளுக்கிருந்த சிநேகபந்தத்தால் தங்களுடைய காவலைக்கடந்து என்னிடம்வந்தாள். நான் இப்பட்டணத்திற்கு வருவதற்குமுன் உமது அந்தப்புரத்தில் அவள் உத்தமியாகவே யிருந்தனள். பழைய நண்பனாகிய என்னை அவள் கண்டுகளித்த குற்றமேயொழிய வேறு யாதுஞ் செய்தவளேயல்ல. ஆனால் உம்முடன் அவள் கூடிக்குலாவும் சந்தோஷத்தைக்கொடுக்க ஏற்பட்டவன் நானே யாதலால் தங்களுடைய தண்டனைக்கு நானொருவனே யுட்படவேண்டியிருக்கிறது. இதில் அவள் எவ்வளவும் குற்றவாளியல்ல என்று சொல்லிக்கொண்டிருக்கையில் குணபூஷணியும், ஜீவரேகையும், மந்தகமனனும் அங்கு அழைத்துவரப்பட்டார்கள்.

அப்போது குணபூஷணி, நான் அரசனிடம் சொல்லியவைகளைக் கேட்டுக்கொண்டுவந்தவளாகையால் அரசனுடைய பாதத்தில் சாஷ்டாங்கமாகவிழுந்து, 'பிரபுவே! உமக்குத் துரோகஞ்செய்தவள் நானேயாதலால் என்னைத் தங்களுடைய ஆக்கினைக்குட்படுத்தி, உமது விஷயத்தில் யாதும் சம்பந்தமில்லாத இப்டாலியனை விடுவிக்க வேண்டும்' என்றாள். இதைக்கேட்ட அரசனுக்கு ஆத்திரம் பொங்கி கோபமதிகரித்து சற்றும் பயமில்லாமல் அஞ்சாத் துணிகரத்துடன் ஒருவரை மாற்றியொருவர் குற்றத்தை என் முன்னிலையில் ஒப்புக்கொள்ளுகின்றனராகையால் இவர்கள் நால்வரையும் தூக்கிட்டுக்கொல்லும்படித் தனது மந்திரிக்குக் கட்டளையிட்டான். அச்சமயத்தில் நான் திடீரென்று அரசனது பாதத்தில் விழுந்து, சக்கரேஸ்வரா! அரசச் செல்வியாகிய ஒரு ஸ்திரீயை நீர் இவ்விதம் கடுங்கொலைபுரியலாமா? இராஜஸ்திரீயை வதைப்பது உலகத்திலடுக்குமா? என்றேன்.

இதைக்கேட்ட சாமளகிரியரசன் மிகுந்த ஆச்சரி
யத்தை யடைந்து, குணபூஷணியைநோக்கி, "மாதே! நீ
உண்மையாய் அரசச் செல்விதானே? அப்படியானால் நீ
எந்த அரசனுடையகுமாரத்தி" என்றார். அப்போது
குணபூஷணி மிகுந்த கோபத்துடன் தன் காதலனாகிய
என்னைப்பார்த்து, "முன்பின் யோசனை இல்லாதபடி நீர்
என்ன காரியஞ் செய்தீர்? நான் என்னுடைய ஆவியை
இழப்பதாயிருந்தாலும் என்னுடைய இரகசியத்தை ஒருவ
ருடனேயும் உரைக்கலாகாதென்று இதுகாறும் மறைத்து
வைத்திருக்க நீர் ஏன் அதை வெளிப்படுத்தினீர். என்னை
நிந்தனைக்குள்ளாகும்படி எனது ஆந்தரீகத்தை பகிரங்கத்
திற்குக் கொண்டுவந்தீரே" என்று சொல்லி வேந்தனைப்
பார்த்து "எனதிறைவனே! நான் உமது நண்பராகிய மங்
களகிரியரசன் குமாரத்தி" என்று அவளது சரித்திர முழு
மையும் ஆதியோடந்தமாக எடுத்தோதினள்.

இவையனைத்தும் சாங்கோபாங்கமாய்க்கேட்ட அர
சன் குணபூஷணியைப்பார்த்து, அம்மா! நீ கொலைக்குள்
ளாகும்படி நான் செய்த கொடிய தண்டனையை இப்
போதேமாற்றிவிட்டேன். நான் எப்போதும் நியாயப்படி
தீர்ப்புசெய்பவனாகையால் உனது குற்றத்தை மன்னித்
தேன். இனி நீஉனது பூர்வகாதலனாகிய இவ்வாலிபனுடன்
உனதிஷ்டம்போல் கூடிச் சுகிக்கலாம். இவ்வாலிபனும்
உனது நிமித்தம் மரணாக்கினையிலிருந்து விடுதலையாகி உன்
னோடு சுகித்து சுகமனுபவித்து பகிரங்கமாய் வாழலாம்.
உங்களுக்குப் பணிவிடை செய்வதற்காக இதோ இந்த
ஜீவரேகையையும், மந்தகமனனையும் விடுதலைச் செய்
தேன். நீங்கள் சுகமாக உங்களிஷ்டத்தின்படி எங்கே
யாகிலும் போகலாம். ஆனால் உங்களுக்கு இவ்வித

கஷ்டத்தை யுண்டாக்கிய இதோ இருக்கும் இப்பிச்சைக் காரனுக்குத் தகுந்த தண்டனை விதிப்பேனென்று அவனைப் பார்த்து, "அடா கபடநெஞ்சம் படைத்த சண்டாளா! நீ மகா இழிவான சிந்தையையும் பொறாமையையும் உடைய வன். நீ உனது நண்பனுக்குச் சம்பவித்த அதிர்ஷ்டத்திற் காக பொறாமைகொண்டு அவர்களுடைய உயிரைவாங்க என்னை ஏவினமையால் நான் அவர்களுக்குச்செய்யவிருந்த தண்டனையை உனக்கு விதிக்கிறேன்" என்று சொல்லி கொலையாளிகளை யழைத்து இப்பிச்சைக்காரனைக் கொண்டு போய் தூக்கிலிட்டுக் கொல்லுங்க ளென்று உத்தரவு செய் தான். நான் அவன் விஷயத்தில் எவ்வளவு பரிந்துபேசி யும் அரசன் அவன் விஷயத்தில் சற்றும் இரக்கம் பாராட் டாமல் தன் தீர்ப்பைக் காயப்படுத்தினன்.

பிறகு நாங்கள் நால்வரும் அரசனுடைய நன்றியறி தலுக்காக அவருக்கு வந்தனஞ்செய்து விடைபெற்றுக் கொண்டு அரண்மனையைவிட்டு முன் நான் குடியிருந்த வீட்டினிடம் வந்தோம். ஆனல் அவ்வீட்டை இடித்துத் தரைமட்டமாக்கி அதிலிருக்கும் சாமான்களைக் கொள்ளை யடிக்கும்படி அரசன் முன்னமேயே போர்ச்சேவகர் களுக்கு உத்தரவுசெய்திருந்தமையால் அவ்வீடு அவ்விதமே செய்யப்பட்டிருப்பதைப் பார்த்து, அவ்வீட்டில்சேகரித்து வைத்திருந்த விலையேறப் பெற்ற சாமான்களுக்காக வியா கூலப்பட்டுக் கடைசியில் நாங்கள் தங்குவதற்கு வேறே இடமின்மையால் அப்பட்டணதிலுள்ள சத்திரத்திலாகி லும் தங்கலாமென்று புறப்பட்டோம்.

அச்சமயத்தில் அரசசமஸ்தானத்தைச் சேர்ந்த உத்தி யோகஸ்தனொருவன் எங்களுக்கெதிர்ப்பட்டு என்னைப் பார்த்து, ஐயா! நீங்கள் வசிப்பதற்கு உங்களுக்கோர்

வீட்டை ஏற்பாடு செய்தமர்த்தும்படி அரசன் எனக்குக் கட்டளையிட்டிருக்கின்றமையால் மிகவும் அழகிய ஓர் வீட்டை உங்களுக்கென்று ஏற்பாடு செய்திருக்கிறேனென்று எங்களை யழைத்துக்கொண்டுபோய் ஓர் வீட்டைக் காண்பித்தனன். முன் நான் வசித்துவந்த வீட்டைப் பார்க்கிலும் இவ்வீடு மகா நேர்த்தியாயும் சகல வசதிகளுக்கு ஏற்றதாயுமிருந்தபடியால் அதில் நாங்கள் வசிக்கத் தீர்மானித்துக்கொண்டோம். மறுநாள் அரசனுடைய முதல் மந்திரி எங்களிடம் வந்து எங்களுக்கு வேண்டிய சில விலையுயர்ந்த உடுப்புகளையும் செலவுக்கு வேண்டிய கொஞ்சம் திரவியமும் அரசனளித்ததாகச் சொல்லி என்னிடந்தந்து விடைபெற்றுச் சென்றான். செலவுக்கு வேண்டிய பொருளும் தகுந்த உடைகளுமெங்களுக்கிருந்தபடியால் இனி இப்பட்டணத்தி லிருந்தாவ தென்னவென்று நினைத்து எனது சொந்தப்பட்டணத்திற்குப் போகத் தீர்மானித்துக்கொண்டு அப்பட்டணத்திற்குப் பிரயாணப்பட்டுப் போகிற சில வியாபாரிகளுடன் புறப்பட்டுப்போய் சில நாட்களில் எனது பட்டணத்தையடைந்து என் வீட்டைச் சேர்ந்தோம்.

பிறகு அப்பட்டணத்திலுள்ள என் பழைய சிநேகிதர்களிற் சிலரைப் போய்ப்பார்த்ததற்கு அவர்கள் என்னைக்கண்டு ஆச்சரியப்பட்டு, "அப்பா! நீ இறந்துவிட்டாயென்று உன்னுடன் பங்கு வியாபாரஞ்செய்த கூட்டாளிகள் இப்பட்டணமுழுதும் சொல்லிக்கொண்டு திரிந்தார்களே. நீஜீவவந்தனாயிருக்கின்றாயே" என்றார்கள். நான் என் கூட்டாளிகள் செய்த அக்கிரமத்தை அவர்களுக்குச்சொல்லியவுடன் அவர்களதிக ஆச்சரியப்பட்டு அவ்வூர் நியாயாதிபதியிடம் இவ்வழக்கைக் கொண்டுபோகும்படி திட்

டஞ்செய்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தஞ் செய்தனர். எனது பகையாளிகளாகிய அச்சண்டாளர்க ளிருவரும் ஊரிலிருப்பதை யறிந்த நான் உடனே நியா யாதிபதியிடஞ்சென்று என் வழக்கை விசிதமாயெடுத் துரைத்தேன். அவர் என் தந்தையை நன்ருயறிந்தவ ராதலாய் என் விஷயத்தில் மிகவும் இரக்கங்கொண்டு சேவகர்களைக்கொண்டு அவ்விருவரையும் பிடித்துவரச் செய்து, எனக்குச் சேரவேண்டிய பொருள் பாகத்தை யவர்களிடமிருந்து வசூல் செய்துக்கொடுத்ததுமன்றி அவ் விருவரையும் தனித்தனி இரண்டு வருடம் கடுங்காவலி லிருக்கும்படித் தண்டனை விதித்தார்.

பிறகு நான் சிலகாலம் வரையிலும் யாதொருகுறைவு மில்லாமல் என் காதலியாகிய குணபூஷணியுடன் களித் திருந்தேன். ஆனல் வாழ்வுஞ் சிலகாலம் தாழ்வும் சில காலம் என்றபடி மனிதன் எப்போதும் பாக்கியவந்தனு யிருப்பானு? மனிதன் வாழ்வு ஓர் நிலையா ? நான் தகுந்த செல்வத்துடன் சுகித்திருக்கையில் ஒரு நாள் நான் என் சிநேகிதர்க ளிடஞ்சென்று நெடுநேரம் வரையிலும் வேடிக்கையாய் வார்த்தையாடிக்கொண்டிருந்து பிறகு என் வீட்டிற்குவந்து பார்க்கையில் ஜீவரேகையும் மந்தக கமனனும் கொல்லப்பட்டு அவர்களுடைய தலைகளும் முண்டங்களும் இரத்தப்பிரவாகத்தில் தோய்ந்திருந்தன. நான் இதைக்கண்டு திகிலடைந்து வயிற்றிலும் வாயிலும் மடித்துக்கொண்டு எனது ஆசைநாயகியை அவ்வீடெங்குந் தேடியுங்காணுமையால் அடியற்ற மரம்போல் பூமியில் விழுந்து புரண்டு கோவென்றலறிக் கூச்சலிட்டழுதேன். அப்போது அண்டை யயலிலுள்ளார் ஓடிவந்து, பாலியா ! நீ ஏன் இப்படிக்கலங்குகின்ருய்? நீ உயிர்தப்பிப் பிழைத்த

தற்காக நீ சந்தோஷப்படவேண்டியது. நீயும் வெளியிற் போயிராமல் இவ்வீட்டில் சற்றுநேரத்திற்குமுன் இருந்திருப்பாயாகில் இதோ வெட்டுண்டு கிடக்கும் இருவருடன் நீயும் மடிந்திருப்பாய். காணுமற்போனதாக நீ எங்கும் அவ்வழகு சுந்தரி மங்களகிரியின் அரசகுமாரத்தி யென்றும், அவளை இதோ கொலையுண்டு கிடக்கும் இருவரும் இரகசியமாக அழைத்துக்கொண்டு வந்துவிட்டதாகவும், அவள் தந்தையாகிய அரசன் அவளைக்கண்டுபிடித்து அவர்களிருவரையும் கொலைசெய்து தன்குமாரத்தியை அழைத்துவரும்படி சில போர்ச் சேகவர்களுக்கு உத்தரவு செய்ய அவர்கள் தேசதேசங்க ளெல்லாந்தேடி யலைந்து இவ்வீட்டிலவளைக் கண்டுபிடித்து அவளை அக்கிரமமாய் அழைத்துவந்த வேலைக்கார ரிருவரையும் கொலைசெய்து அரசகுமாரத்தியைப் பிடித்த பிடிவிடாமற் கொண்டுபோய்விட்டார்கள் என்றார்கள். இதைக்கேட்டவுடன் எனக்கு ஏக்கமும் பிரமையுமதிகமாகி அவ்விரு சவங்களையும் அடக்கஞ்செய்து இனி அப்போர்ச் சேவகர்கள் என்னையுங்கண்டு பிடித்துக் கொலைசெய்துவிடுவார்களென்று பயந்து, இனி ஸ்திரீகளின் கூட்டுறவும் சம்சாரத்தொல்லையும் கூடாதென்று வைராக்கியங்கொண்டு, யாதொருபற்று மின்றி என் வாழ்நாளைக்களுக்கவெண்ணி உடனே காவியணிந்து, சந்நியாசியாகி, வீட்டைவிட்டுப் புறப்பட்டுக்காட்டையடைந்தேன்.

"ஐயா! சத்தியவிரதமகாராஜனே! நான் அக்காட்டில் கந்தமூலாதிகளையருந்தி, பகவானிடத்தி லன்புபாராட்டிக் கொண்டிருக்கையில் முதிர்ந்த வயதும், உதிர்ந்தநரையும் உடைய ஓர் துறவியை யங்குக் கண்டு அவரிடத்தில் நட்பு கொண்டு அவருக்குத் தொண்டுசெய்துக் கொண்டிருந்

தேன். அம்மகாத்மா மட்டில்லா மந்திரோபதேசங்கள் தெரிந்தவராகையால் அவைகளில் முக்கியமானதொன்றை எனக்குபதேசிக்கக் கிருபைகூர்ந்து, தான் இறந்துபோவதற்குச் சற்று முன்னதாக என்னை சமீபத்திலழைத்து, அப்பா சிறுவனே! நீ என்னுடைய ஆச்சிரமத்தில் நெடுநாளாக எனக்குப்பணிவிடை செய்துக் கொண்டிருந்தமையால் உனக்கோர் இரகசியத்தை வெளியிட உத்தேசித்திருக்கிறேன். அதுமிகவும் அருமையானதால் அதை நீயாருக்கும் வெளியிடலாகாது. செத்தப்பிரேதத்திற்கு உயிர்தருதலாகிய கூடுவிட்டுக் கூடுபாய்த லென்னும் மகா மந்திரம் ஒன்றுளது என்று சொல்லி அதை எனக்குபதேசித்தார். நான் அதைக் கற்றுக்கொண்டு பரீட்சித்தறிந்த சற்று நேரத்திற்கெல்லாம் அம்மகாத்மா பிராண வியோக மானார்" என்றான்.

சத்தியவிரதன் அச்சந்நியாசியைப்பார்த்து, சுவாமி! அவ்வுபதேசத்தை அடியேனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று பலதரம் மன்றாடிக்கேட்க, இரண்டொருவார்த்தையிலடக்கக் கூடிய அம்மகாமந்திரத்தைச் சன்யாசி அரசனுக்கு உபதேசித்தான் சத்தியவிரதன் அவ்வுபதேசத்தைக் கற்றுக்கொண்டவுடன் அதைப்பரீட்சித்தறிய வேண்டுமென்று ஆத்திரங்கொண்டு அவனுக்கெதிரில் செத்துக் கிடந்த ஓர் மானுடலில் புகுந்து பார்க்கவேண்டுமென்று அம்மந்திரத்தைச் செபித்தவுடன் இறந்துபோன மான் குதித்து எழுந்து விளையாடவும் அவனது தேகம் பூமியில் பிரேதமாய் விழுந்து கிடப்பதையுங் கண்டு பேரானந்தமடைந்து அச்சன்னியாசியின் பாதத்தை வணங்கவேண்டுமென்று அவன்முன் துள்ளித்துள்ளி விளையாடிக்கொண்டிருந்தான். ஐயோ! அரசன் எவ்வளவு இன்ப மடைந்தானோ அவ்வளவும்,

"தானே புரிவினையாற் சாருமிரு பயனுந்
தானே யனுபவித்தற் றப்பாது—தானூறு
கோடிகற்பஞ் சென்றாலுங் கோதையே செய்தவினை
நாடிநிற்கு மென்றார் நயந்து"

என்றபடி, அதிசீக்கிரத்தில் துன்பப்பெருக்காய் முடிந்து தொலையாத துக்க சாகரத்தில் மூழ்க ஏதுவாயிற்று. எப்படி யெனில் செத்தப்பிரேதம்போல் பிராணனற்றுக் கிடந்த அரசனது உடலில் அச்சந்நியாசி புகுந்து அரசனாகி, வில்நாணேற்றி மானைக்கொல்ல அதை நெடுந்தூரம் தொடர்ந்துச் சென்றான். ஆனால் அது அவன் கண்ணுக்கெட்டாதூரம் ஓடி மறைந்தது.

இவ்விதமாய் சத்தியவிரதன் கிரகசாரவசத்தனாய் மானுருவுடன் காடுமலை வனாந்தரங்களில்மேய்ந்துகொண்டு தனது மானிட உடலை இழந்ததனால் ஆறாமனவேதனைப் பட்டுக்கொண்டிருக்க, அக்கபட சந்நியாசி அரசனதுரூபத்துடன் வயிரபுரத்தையடைந்து சிம்மாசனாதிபதியாகி, குணவதியுடன் அநேக வைபோகமாய்க் கூடிக்குலாவி இன்பமனுபவித்துக்கொண்டிருந்தான். இப்படியிருந்தும் என்றைக்காகிலும் மானுருவுடனிருக்கும் சத்தியவிரதன் பழையரூபத்தை யடைந்து தன் மோசத்தை வெளிப்படுத்தக்கூடுமென்று நினைத்து, காட்டிலிருக்கும் மான்களெல்லாவற்றையும் கொன்றுவிடவேண்டுமென்று மந்திரிகளுக்குக் கட்டளையிட அவர்களும் வில்லியர் வேடர்களையெல்லாம் பெருங் கூட்டமாகச் சேர்த்துக்கொண்டு காட்டிலுள்ள மான்களையெல்லாம் மடக்கிக் கொல்ல வாரம்பித்தார்கள். நற்காலத்தின் பயனால் மானுருவுடனிருந்த சத்தியவிரதன் ஓர் மரத்தடியில் செத்துக்கிடந்த கிளியினுடலிற் புகுந்து உயிர்ப்பெற்றுப் பறந்து இராஜமகிஷியாகிய குணவதி இருக்

கும் அந்தப்புரத்திலுள்ள ஓர் மரத்தின்மேலுட்கார்ந்து தன்னைத் துரோகஞ்செய்த அச்சந்நியாசியின் கொடுந் தொழிலை நினைந்துருகிப் பாடிக்கொண்டிருந்தது.

மனமுருகப்பாடும் அக்கிளியின் இங்கிதவோசையை குணவதிகேட்டு ஆனந்தமடைந்து, பட்சிகளைப் பிடிப்போரைக்கொண்டு அக்கிளியைப் பிடிக்கச்செய்து அதைத் தன் கையில் வைத்துக்கொண்டு, “ஆ! என்னுசைக்கோராபரணமாகிய கிளியே! உன் இன்பமாகிய பாடல்களால் என்புலன்களெல்லாம் சொக்கிப்போனதால் நீ கொஞ்சி விளையாடும் அபரஞ்சிப் பூச்செண்டாகவும், கொய்து விளையாடும் முல்லை மல்லிகையாகவும் இருக்கிறுயென்று சொல்லி, அதன்மேல் மிதமற்ற அன்புகொண்டு அதற்கோர் முத்தமளித்தனள். அரசனுகிய அக்கிளியும் அவளது கோவைச் கனியையொத்த இதழுக்கு நேராய்த் தனது மூக்கை நீட்டிற்று. அப்போ தவள் குறுநகை கொண்டு நாம் சொல்வதிந்தப் பட்சிக்குத் தெரிகிறதே, இதென்ன வாச்சரியமென்று என்னைப் பார்த்து, பார்வைக்கு ஒருபிடி சிறகையுடைய பயித்தியக்கார பட்சியே! நான் அரசியென்றும் எண்ணுமல் என்னிதழில் முத்தமிடலாமாவென்று அதற்கு மற்றோர் முத்தங்கொடுத்து பொற்கம்பிகளால் செய்யப்பட்டிருந்த ஓர்கூட்டிலதைவிட்டனள்

குணவதி இக்கிளியினிடத்தில் நாளுக்குநாள் அதிக அன்புவைத்து, சதாகாலமும் அத்துடன் கொஞ்சி விளையாடிக்கொண்டிருப்பாள். அக்கபடசன்னியாசி குணவதியுடன் கொஞ்சிக்குலாவி மருவும்போதெல்லாம் அரசனுகிய அக்கிளி மனந்தாளாமல் அவனுடைய அக்கிரமச்செயலுக்காக மனவேதனைப்பட்டுக்கொண்டிருக்கும். இப்படியிருக்கையில் விமோசனகாலம் சமீபித்துவிட்டபடியால் ஓர்நாள்

அந்தப்புறத்திலிருக்கும் பெண் நாயொன்று இறந்துபோய் விட்டபடியால் கிளியாயிருந்த அரசன் கிளியுடலைவிட்டு நாயுடலிற் புகுந்துக்கொண்டு இனி நடக்கும் அதிசயங் களைப் பார்க்கவேண்டுமென்றிருந்தான்.

குணவதி வழக்கம்போல் தன்னறைக்கு வருந்தரு ணங்களிலெல்லாம் முந்தி கிளியிருக்கு மிடத்திற்குவந்து அதனது இன்பப்பாடல்களைக் கேட்டு வருவதைப்போல் அன்றையதினமும் அங்கு வந்தபோது பட்சி உயிர் நீங்கி செத்துக்கிடப்பதைக் கண்டு சித்தங்கலங்கி பெருங்கூச்ச லுடன் அழவாரம்பித்தாள் தாதிகள் எவ்விதத்தில் சாந் தப்படுத்த முயன்றும் கேளாமல் அப்பட்சியைப் பார்த்து "ஆ! என்னுசைக்கோர் ஆபரணமாயிருந்த சிறியபட்சியே! என்னைக் கொள்ளைக்கொண்ட சிறியகிளியே! நான் உனது இன்பமாகிய பாடல்களை இனி எப்போது கேட்கப்போகி றேன்" என்று பிரலாபித் தழுதுக்கொண்டிருந்தனள். அரச கோலத்துடனிருக்கும் சந்நியாசி, இவ்விதம் துயரப் பட்டுக்கொண்டிருக்கும் குணவதியைக்கண்டு, 'பெண்ணே! நீர் ஓர் அற்ப பட்சிக்காக இவ்விதங் கலங்கி வாடலாமா? இதென்ன பேதமை? இதைப்போன்ற கிளிகள் உலகத்தி லில்லையா? நான் உனக்கு இப்போதே நன்றாய்ப் பாடக் கூடிய கிளிகளை வரவழைத்துத் தருகிறேன்' என்று எவ் வளவு சொல்லியும் கேளாமல், குணவதி அதிக துக்கத் துடன் தன் கணவனாகிய அரசனென்று நினைத்திருக்கும் அந்த சந்நியாசியைப் பார்த்து, 'நீர் என் துக்கத்தை அதி கரிக்கச் செய்கிறீரே யல்லாமல் வேறொன்றுமில்லை. இப் பட்சிக்கீடாக நீர் எத்தனைப் பட்சிகளைத் தருவித்தாலும் அதனால் என் விசனம் மாறாது. நான் இனி உயிர் வைத் துக்கொண்டிருக்கமாட்டேன்' என்று ஒரே பிடிவாதமாய் நிலத்திலுருண்டு புரண்டழ ஆரம்பித்தாள்.

பெட்டைநாயாக மாறுரூபத்துடனிருக்கும் அரசன் இங்கு இனி என்ன சம்பவிக்குமோ பார்க்கலாமென்று ஓர் மூலையிற் படுத்துக்கொண்டு கண்ணிமைக்காமற் பார்த்துக்கொண்டிருந்தான். அரசியும் மனோவேதனையை எவ்விதத்திலும் மாற்றமுடியாதென்று சந்நியாசி யுணர்ந்து, அங்கிருந்த தாதிகளனைவரையும் வெளியில் போகும்படி ஆக்யாபித்து, குணவதியை நோக்கி, 'பெண்ணே! நீ ஏன் இப்படிக் கலங்கி உன் சரீரத்தை வாட்டுகின்றாய்? நான் அப்பட்சியை உயிர்வரச் செய்கிறேன். வழக்கம்போல் நீ அதனுடன் கொஞ்சிக் குலாவலாம்' என்றான். இதைக் கேட்ட குணவதி அவனைப்பார்த்து, நீர் இப்படிச் சொல்வதால் என் துயரம் நீங்குமென்று நினைக்க வேண்டாம். இறந்த பட்சி மறுபடியும் உயிர்பெற்றெழுந்திருக்குமென்பதை யார்தான் நம்புவார்கள். அப்படி உயிர்பெறச்செய்வதற்கு நீர் பரமயோகியாகவல்லவோ இருக்கவேண்டும். இவ்வித பயனற்ற வார்த்தைகளை நான் ஒருபோதும் நம்பமாட்டேன். இப்பட்சியுடன் நானும் இறந்துபோவது உண்மை. இனி நான் பிழைக்கப்போவதில்லை" என்று கூக்குரலிட்டழுதாள். உடனே அக்கபடன் குணவதியின் கண்ணீரைத் துடைத்து, 'பெண்ணே! இதோ நீ இப்போது களித்துப் பரமசந்தோஷத்தை யடையும்படி இப்பட்சிக்கு உயிர்வரச் செய்கிறேனென்று ஓர் கட்டிலின்மேல் படுத்துக்கொண்டு மந்திர உச்சாடனம் செய்து தன் உடலைவிட்டு பட்சியினுடலிற் பாய்ந்தான். உடனே அப்பட்சித் தன் சிறகுகளை உதறிக்கொண்டு எழுந்து வழக்கம்போல் பாடவாரம்பித்ததைக் கண்ட குணவதி, ஆனந்த சாகரத்திலாழ்ந்தவளாய் அப்பட்சியினருகிற்சென்று அதைப் பார்த்து சந்தோஷங் கொண்டனள்.

பெண் நாய் உருவத்துடன் மூலையிற் படுத்துக்கொண்டிருந்த சத்தியவிரதன் உடனே நாயின் உடலை விட்டுப் பிரிந்து கட்டிலின்மேல் சந்நியாசி விட்டுப்போன அரசசரீரத்திற் புகுந்துக்கொண்டு தட்சணம் எழுந்து கிளியினிடம் வந்து அதைப் பிடித்து நிலத்தின்மேல் ஒரே அறையாக மோதிக் கொன்றான். இதைக்கண்ட குணவதி திகைத்து, பிராணநாதா! இதென்ன கொடுமை? இறந்துபோன பட்சிக்கு உயிர்வரச்செய்து மறுபடியும் அதை ஏன் வதைத்துக் கொல்ல வேண்டும்? அது உமக்குச்செய்த பொல்லாங்கென்ன? என்று மறுபடியும் பூமியில் விழுந்து அழவாரம்பித்தாள். சத்தியவிரதன், மோசக்காரனாகிய சந்நியாசியின் கூட்டுறவால் மதியிழந்து, பதியிழந்து விலங்கினமாகிக் கடைசியில் பட்சிரூபத்தையுமடைந்து முடிவில் தெய்வ எத்தனத்தால் பழையபடி அரச சரீரத்தை யடைந்ததாகத் தனது சரித்திரத்தை யாவும் குணவதிக்கெடுத்தோதினான். இதைக் குணவதி கேட்டு,

“அன்னமனை யாய்குயிலுக் கானவழ கின்னிசையே
கன்னன்மொழி யார்க்கழகு கற்பாமே—மன்னுகலை
கற்றோர்க் கழகு கருணையே யாசைமயக்
கற்றோர்க் கழகுபொறை யாம்.”

என்றபடி, கற்பெனப்படுவது மாதர்க் கணிகலமானதால் அச்சந்நியாசியின் கபடமாகிய அரசசரீரத்தைக்கண்டு தெரியாமல் கற்பை யிழக்கும் இக்குற்றத்திற்குள்ளாக்கி யிருந்ததுபற்றி அவள் மனங் குழைந்து நொந்துவாடி முகம் வேறுபட்டு, கண்கள் பஞ்சடைந்து சத்தியவிரதனைப்பார்க்க நாணி தலையிறங்கிக்கொண்டிருந்தனள். சத்தியவிரதன் அவளுக்குத் தேறுதலுண்டாகும்படி அவள் தெரியாமற் செய்த பிழைக்குத் தவறொன்றுமில்லையென்று எவ்வளவு

சொல்லியும் அவள் நெஞ்சம்பதைத்து, ஊன் உறக்கத்தை வெறுத்தமையால் தேகம் மெலிந்துச் சில நாட்களுக்குப் பின் மரணமடைந்தாள்.

ஆகையால் அம்மா! தயாபரசுந்தரி! குணவதியைப் போல் விருதாவில் உன் சரீரத்தை ஏன் வாட்டி வாதைக்குள்ளாகச் செய்கின்றாய்?

"காந்த னில்லாத கனங்குழலாள் பொற்பவமாஞ்
சாந்த குணமில்லார் தவமவமாம்—ஏந்திழையே
அன்னையில் லாப்பிள்ளை யிருப்ப தவமவமே
துண்ணெறியில்லா ரூண் சுவை."

என்றபடி புருஷனில்லாத உன் யௌவனம் என்னபிரயோஜனத்தைத்தரும். உன்னுடைய கேள்விகளுக்குப் பதிலளித்த அச்சுந்தர புருடனையே நீ கணவனாக அங்கீகரித்துக்கொண்டு அவனுடன் இன்பமனுபவித்துச் சுகித்திருக்க வேண்டுமென்பதே என் கருத்தென்றனள்.

அதற்கு ராஜபுத்ரி, "ஆம், நாம் இவன் விஷயத்தில் பக்ஷம் பாராட்டவேண்டுமென்பதே என் எண்ணம். என் அந்தஸ்திற்கும் கல்வித்திறத்திற்கும் கணவன் ஒருவன் இவ்வுலகத்தில் பிறந்திருக்கவேண்டும். அவன் இவனாகவே இருக்கவேண்டுமென்றும் நினைத்தேன். மேலும் அவன் என்னுடைய கேள்விகளுக்குத் தகுதியான விடையளிக்க வேண்டுமென்பதே என் முக்கிய விருப்பம். அப்படியே கடவுளும் கிருபைசெய்தார். அவன் என் வினாக்களுக்கு விடையளித்து வரும்போதே என்னுடைய கர்வமடங்கி வெட்கமதிகரித்தது. அவ்வெட்கத்தினாலேயே நான் இன்னும் அவனைப் பழிக்கிறேன்" என்றனள். அந்தப் பாங்கிப்பெண் இவளிடத்தில்வெறுப்படைந்தவளாய் "அம்மா! உன்னால் அந்த இராஜகுமாரன் வெட்கத்துக்குள்ளாகி மடி

வதைவிட நீயே உன் வெட்கத்தாலும் துக்கத்தாலும் நாணி உன்னை அவனுக் காதீனமாக்கி அவனுக்கு மனைவி யாகும்பாத்தியதையை உண்டாக்காதிருப்பதேன்?" என்று சொன்னதும் இராஜபுத்திரிமிகவும் மனக்கலக்கங்கொண்டு ஊண் உறக்கமின்றிக்கிடந்தாள். சித்திராங்கதனே பண்டிதர்கள் தனக்குச் சொன்ன தீர்ப்பை யோசித்து நாளைய தினம் தான் காதல்கொண்ட நாயகியைத் தனக்கு மனையாளாக்கிக்கொள்ளலாமேயென்று சந்தோஷப்பெருக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

சித்திராங்கதன் அன்றிரவு தன்னுடைய படுக்கையறையில் சென்றவுடனே அங்கு மிகவும் அழகிய பாலிய மங்கையொருத்தி மிகவும் அலங்காரமான சிவப்பு பீதாம்பரப் பட்டாடையை யுடுத்திக்கொண்டு உட்கார்ந்திருந்தனள். அவளுடைய அழகிய கூந்தலோ வாரி முடிக்கப்பட்டு புட்பங்களால் சூட்டப்பட்டிருந்தது. அவளுடைய முகத்தினழகையும், தேக காந்தியையும் உற்றுநோக்குமளவில் ஓர் இராஜபுத்திரியை யொத்திருந்தனள். சித்திராங்கதன் அவ்வழகிய கன்னிகை இரவில் தன்னந்தனியே தன்னறையில் உட்கார்ந்திருக்கக்கண்டு அதிசயித்துப் பிரமித்தான். அவன் இதற்குமுன் தாயாபரசுந்தரியைப் பாராதவனு யிருப்பானுனல் உண்மையாய் இவளது அழகைப் பற்றி மெச்சிக்கொண்டு அவளையே தனது மனைவியாக்கிக் கொள்ளுவான். ஆனல் அந்த அழகிய தயாபரசுந்தரியைக் கண்ட இராஜபுத்திரனுடைய மனமானது மற்றோர் அழகியின்மீதிலும் நாட்டங்கொள்ளாமற் செய்தது. அந்தப் பெண் சித்திராங்கதனைக் கண்டமாத்திரத்தில் தானிருந்த சோபாவைவிட்டெழுந்து, அவனுக்கு மரியாதைசெய்து மிக்கத் தாழ்மையுடன், "இராஜபுத்திரா ! அரசனுடைய

அந்தப்புறத்தி லிருந்தொரு பெண் தனித்து இவ்விரவில் உமது படுக்கையறையில் நீர் காண்கிறபோது உமக்கதிக ஆச்சரியத்தை விளைவிக்கு மென்பதற்கோ ரையமில்லை. நான் எவ்வளவு கஷ்டத்துடன் பகக்கடுமையான காவலைக் கடந்து வந்திருக்கவேண்டுமென்று நீரே யுகித்தல்வேண்டும். இதனால் நான் எப்பேர்ப்பட்ட சேதியை உமக்குக் கொண்டுவந்திருக்க வேண்டுமென்று உணரக் கடவீர். அரண்மனையைச் சுற்றிக் காவல் செய்துக்கொண்டிருக்கும் யுத்த வீரர்களைக் கடந்து என் சாதுர்ய உபாயத்தால் இவ்வளவு சங்கடத்துடன் உம்மிடம் வந்தேன். உமக்காக நான் ஏன் இவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டேன் என்பதை நீர் சீக்கிரத்தில் உணர்வீர்" என்றனள்.

அரசனுடைய கொடிய காவலைக்கடந்து இவ்வளவு துணிவுடன் இந்த நல்லிருளில் ஓர் ஸ்திரீ தன்னிடம் வந்தபடியால் ஏதோ ஓர் முக்கிய சமாசாரத்தை யவள்கொண்டு வந்திருக்க வேண்டுமென்று சித்திராங்கதன் யோசித்துத் தன்னெதிரில் நின்றுகொண்டிருந்த அந்தஸ்திரீயைசோபாவின்மீ தமரும்படிச்செய்து தானும் மற்றோர் சோபாவிலமர்ந்து, அவள் அங்குவந்த காரணத்தை வினவினன். அந்த பாலியஸ்திரீ, இராஜகுமாரனைப் பார்த்து, "ஐயா! நான் சுந்தேரசன் என்னும் ஓர் அரசனுக்கு ஏகபுத்திரி, அவர் இந்த புத்திசேனமகாராஜனுக்கு பகுதிகட்டிக்கொண்டிருந்து பிறகு தனக் கேற்பட்ட யுத்தப் பயிற்சியினால் துணிந்து பகுதிசெலுத்துவதை நிறுத்திவிட்டனர். புத்திசேனன், என் தகப்பன்மேல் கோபித்து சிலபடைகளையும் மிக சாமர்த்தியம் பொருந்திய ஓர் தளகர்த்தனையும் யுத்தத்திற்கனுப்பினர். என் தந்தை தம்மிடத்திலிருந்த ராணுவங்களை சேர்த்துக்கொண்டு அப்படைத்தலைவனோடு யுத்

தம்பண்ணியும் வெற்றிக் கொள்ளாமல் அபஜெயப்பட்டு பின்முதுகுகாட்டி ஓடத்தலைப்பட்டனர். உத்தமபுரியின் படைத்தலைவன் என் பிதாவையும் அவர் சேனைகளையும் பின்தொடர்ந்து சென்று அவர்களனைவரையும் கொன்றுவிட்டான். ஆனால் அவர் சாகச் சற்றுநேரத்திற்குமுன்னே தம்மிடத்தில் நின்றிருந்த ஓர் படைத்தலைவனுடனே தங்களுடைய மனைவி மக்களை பகையாளிகளின்கைகளில் அகப்பட்டு அவர்களுக் கடிமையாகப் போகாதபடி அவர்களையுமிங்கழைத்துவந்து ஆற்றில் எறிந்துவிட உத்திரவு செய்தவண்ணமே அப்பாதகனும் அவ்விதமாகவே என்னையும், என் தாயையும், என்னிரண்டு இளைய சகோதரிகளையும் ஆற்றிற் றள்ளிவிட்டான். அப்போது உத்தமபுரியின் படைத்தலைவனொருவன் எங்களைக்கண்டு மனதிறங்கி சிலஆட்களைவிட்டு எங்களை ஜலத்தினின்றெடுத்துக் கரைசேர்ப்பித்தனன். ஆனால் நானொருத்தித் தவிர மற்றவர்களெல்லாம் உயிர் நீங்கின பிரேதங்களாயினர். எனக்கிருந்த கொஞ்சம் பிராணனும் போகவொட்டாமல் படைத்தலைவன் பிரயாசை யெடுத்துக்கொண்டமையால் நான் முற்றிலும் சௌக்கியமடைந்தேன். அப்படைத்தலைவன் என்னை இந்த உத்தமபுரியின் அரசனுக்கு வெகுமதியளித்தான். அவரும் என்னைப் பிரீதியுடன் அங்கீகரித்துக்கொண்டு என்னைவிட இரண்டு அல்லது மூன்று வயதுக்குக் குறைவாயிருந்த தன் குமாரத்தியுடன் விளையாட வைத்துக்கொண்டனர். நான் அதுமுதல் இராஜபுத்திரியின் பிரியத்திற்கேற்றபடியெல்லாம் நடந்துக்கொண்டு வந்தேன். இராஜபுத்திரியும் என்மீதிலதிகப் பிரீதி செலுத்திவந்தாள். காலவியற்கையால் காலத்துக்கேற்ற கோலமென்று அடிமைத்தொழில் செய்ய நேரிட்டதேயல்லாமல் வேறல்ல. இதைப்

பற்றி நீர் என்மீதில் பச்சாதாபப்பட்டு என்னை நேசிக்க விரும்பி என்சரித்திரத்தை உமக்குத்தெரியப்படுத்தவேண்டிய தவசியமானதால் தெரிவித்தேன். இதற்காகவே உம்மிடம் இவ்விரவில் வரத்துணிந்தேன்; வேறு காரணமொன்றுமில்லை; ஆனால் நான் இத்தொந்திரவை உமக்குக் கொடுத்ததற்காக என்மீதி லாயாசப்படாமல் என்னை மன்னிக்க வேண்டிக்கொள்ளுகின்றேன். இப்போது நான் உமக்குச் சொல்லப்போகும் சமாசாரமோ மிகவும் முக்கியமானது. நான் ஓர் அடிமையாயிராமல் உயர்ந்த அந்தஸ்துள்ள அரசகுலத்திலேயே பிறந்தவளென்று என்மீதில் நம்பிக்கைவைக்கக் கருதி என் பிறப்பு முதலியவற்றை முன்னதாக உமக்குத் தெரிவித்தேன். இப்போது இராஜகுமாரத்தியான தயாபரசுந்தரியைக் குறித்துச் சொல்லப்போகும் உண்மையான சமாசாரம் ஒன்றுண்டு. அதைச் செவிகொடுத்துக் கேட்கப் பிரார்த்திக்கின்றேன். "இராஜபுத்திரியான தயாபரசுந்தரி சற்றுகிலும் இரக்கமின்றி உன்னை எவ்விதத்திலாகிலும் சதிசெய்துக் கொன்றுவிட வேண்டுமென்கிற நோக்கத்தைப் பூரணமாகக்கொண்டிருக்கின்றாள்" என்றாள்.

சித்திராங்கதன் இதைக் கேட்டவுடனே தன்னுடைய ஸ்மரணையிழந்து பூமியில் விழுந்தனன். அப்பொழுதந்த அடிமைப்பெண் தான்சொன்ன வார்த்தையால் அரசகுமாரன் மெத்தவும் பயந்தானென்று குறிப்பாய்க் கண்டு அதிசயித்து, "ஐயா! நான் இப்போது தெரிவித்த அந்த இராஜபுத்திரியின் கொடுமையாகிய எண்ணமீதென்பதைக் கேட்டவுடன் உமக்கு ஒன்றும் தோன்றவில்லையென் றறிகின்றேன். ஆனால் என் வார்த்தையை உறுதியாகக் கொண்டு நம்புவீரோ என்னுஞ் சந்தேகங் கொண்டிருக்

கின்றேன்" என்றனள். சித்திராங்கதன் "ஆ! கடவுளே! நான் இப்போது இத்தாதிப்பெண்ணால் கேள்விப்பட்ட வார்த்தைகள் என்ன! இவ்வித கொலைப்பாதக நினைப்பை அவ்விராஜபுத்திரி கொண்டிருப்பாளோ? இது அவளுடைய மனதில் எவ்விதம் குடிகொண்டிருக்கிறதோ" என்று புலம்பினன்.

அதற்கந்த தாதிப்பெண், "ஐயா! இன்று காலையில் அரசசமஸ்தானத்தில் பிரபுக்கள்முன் அவள் உம்முடன் தர்க்கம் செய்கையில் நான் அங்கிருந்து நடந்த சங்கதிகளையெல்லாம் கவனித்துக்கொண்டே வந்தேன். அவள் உம்மைக் கேட்ட கேள்விகளுக்கு நீர் சரியான விடையளித்து வந்ததுமன்றி அவள் அறியாத கேள்வியொன்றை நீர் கேட்டு, அதன் விடையை வினவியதற்கு அவள் அக்கேள்வியின் பயனை உடனே பகரமுடியாமல் விழித்துவெட்கத்தாலும், துக்கத்தாலும் வருந்தி உமதுமீது கடுங்கோபங்கொண்டு தன்னரண்மனை வந்து சேர்ந்தனள். மிகவும் கோபாவேசங்கொண்டவளாய் உமது கேள்வியைநினைத்து நினைத்து அதன் விடை அவளுக்குத் தோன்றாமையால் மிகவும் தவித்துக்கொண் டிருக்கிறாள். அக்கேள்வியின் அர்த்தம் அவளுக்குப் புலப்படாத மனவருத்தத்தினால் உம்மை எவ்விதத்திலும் கொல்லவேண்டுமென்கிற சதியோசனைக்கொண்டிருக்கின்றாள். நான் உமது புத்திசாதுர்யத்தையும், கல்வியின் திறத்தையும் மெத்தவும் புகழ்ந்தெடுத்துக் கூறினேன். அவள் என்னை கடுகடுத்த முகத்தோடு எடுத்தெறிந்து பேசுகிறாள், அழகும் அவலட்சணமும் அவளுக்குச் சமமே. நான் உம்மை மேலும் மேலும் புகழ்ந்து பேசும்போது உம்மைச் சீறிச் சினந்து அவ்வினாக்கு விடைபகரத் திறம் போதாமையால் உம்மைக் கடுங்

கொலை புரிவதே காரியசித்தியென்றும் பிடிவாதத்தில் நிலைத்திருக்கின்றான். இதனால் அவனுக்கு வரும் தீங்கு ஏதென்றும், உம்மைக் கொன்றபின் அவனுக்கு நேரிடும் மோசங்களெவைகளென்றும் விவரமாய் நான் தெரிவித்தும் அவனதைச் சட்டைசெய்யாமல் தான் கொண்ட எண்ணத்தை முற்றும் சாதிக்காமல் விடுவதில்லையென்று கடுஞ் சபதம் செய்துக்கொண்டிருக்கிறான். நீர் இவ்விடமிருந்து நாளை கொலுச்சாவடிக்குப் போவதற்குள் வழியில் பாராக் கொடுத்துக்கொண்டிருக்கும் வீரர்களைக்கொண்டே உமது பிராணனைப் போக்கிவிட அவர்களுக்கு உத்திரவு செய்திருக்கின்றனன். அவர்களும் அவ்வித சதியோசனையுடன் உமது பிராணனுக்கு உலைவைத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று கூறினள்.

இவையனைத்தையுங் கேட்ட சித்திராங்கதன் மனந் தடுமாறி, "ஆ! தயாபரசுந்தரி! மகா நிர்ப்பாக்கியனான பக்திசாகரனுடைய குமாரன் உன்மீதில் கொண்ட மிதமிஞ்சின காதலுக்கு நீ செய்யும் பிரதியுபகாரம் இதுதானோ? சித்திராங்கதன் உன் கண்களுக் கவ்வளவு பயங்கரத்தை உண்டாக்குபவனாய்க் காணப்பட்டேனோ? நீ அவனைக் கொலைசெய்ய நினைத்தாயோ? ஆ! கடவுளே! இதென்ன கொடுமை? நான் என் ஜீவியத்தில் கேளாததும், பாராததுமான விந்தையிதுவல்லவோ? நானெப்போதாகிலும் இவ்வித துன்பத்திற்குள்ளாவேனோ? சிலகாலம் நான் வறுமையையும் கஷ்டத்தையு மனுபவித்தாலும் சிலகாலமாகிலும் ஒருவரும் என்மீதில் பொறாமைப்படாத செல்வத்தை யனுபவிக்க கொடுத்துவையாத பாவியாய்ப் போனேனே" என்று புலம்பிக்கொண்டிருந்தான்.

அவ்வழகிய தாதி அவனை நோக்கி, "ஐயா! கடவுள் உம்மைம் தரித்திரத்தின் மூலமாய் கொடிய சோதனைக்குட் படுத்தி பல அவஸ்தைகளைப்பட்டுத் தரிக்கச்செய்தபோதி லும் அச்சோதனைக்குள்ளாழ்ந்து முற்றிலும் கெட்டுப்போக உம்மை கைசோர விடுகிறவரேயல்ல. ஆனால் உமக்கு கஷ்டகாலம் நேறிடும்போது முன் ஜாக்கிரதையாய் அதில் நின்று தப்பித்துக்கொள்வதற்கு ஏற்றகாரியத்தைத் தெரிந் துக்கொள்ளச் செய்வார். ஆகையால் கடவுள் உமது உயிர் தப்பிப் பிழைக்கும் பிரயத்தினத்தைத் தேடிக்கொள்ள வென்றே என்னை இங்கனுப்பினர்போலும். உமக்கு வந் திருக்கும் அபாயகரத்தினின்று ரட்சித்தற்பொருட்டு எனக் குள்ளிருந்த நினைப்பைக்கொடாவிட்டால் உமக்குத் தப்பா மல் பிராணுபாயம் நேரிடும். இவ்வரண்மனையில் காவற்கார ராகிய போர்ச்சேவகர்கள் என் கைவசமிருப்பதால் நீர் சற்றும் பயமில்லாமல் என்னைக்கொண்டே இவ்வித ஆபத்தி னின்றும் எளிதில் தப்பியோடிப்போக விடமுண்டு. நான் உமக்கு சகாயப்படாவிடில் காவலர்கள் உம்மைக் கண்ட துண்டம் செய்வதுமன்றி நீர் ஓடிப்போவதற்கு நானே சாரணமா யிருந்தேனென்று அரசனறிவானாகில் என்னை யுங் கடுங்கொலைக் குள்ளாக்கிக் கொள்வேன். ஆதலால் ஈனப்படிச் சாவதைவிட உம்முடன் நானும் வந்துவிடத் தீர்மானித்துக்கொண்டிருக்கின்றேன். என்னடிமைத்தனத் தோடு இனி இருக்கப் பிரியமில்லாமலும் இவ்வரண்மனை யில் இனி வாசம்பண்ண மனமில்லாமலும் இருப்பதால் என்னை விடுத்துக்காப்பாற்ற உம்மைப் பிராத்திக்கின் றேன். நாம் தப்பித்துக்கொண்டோடிப் போவதற்கு முன்னதாகவே இரண்டு குதிரைகளை அரண்மனைக்கு வெளி யில் ஆஜர்படுத்தி வைத்திருக்கிறேன். நாமிருவரும் அக்

குதிரைகளின்மேல் ஏறிக்கொண்டு சந்தணபுரியென்னும் நகரம்போய்ச் சேருவோமாகில், அந்நகரத்தையாளும் என் பந்துவாகிய பலதேவன்என்னும் அரசனிடம் அடைக்கலம் புகுவோமாகில் நமது பிராணனுக்குச் சற்றும் பயமில்லை. மகா கொடியளாகிய தயாபரசுந்தரியின் சிறையினின்றும் என்னை விடுதலைசெய்து ரட்சித்ததைப்பற்றி உம்மிடத்திலதிகப் பிரீதிகொள்வார், நீ இங்கு மரணத்தையும் நான் துக்கத்தையும் அனுபவிப்பதைவிட அங்கே என்றும் சுகித்து நமதிஷ்ட காமியங்களை யனுபவித்துக் கொண்டு இணைபிரியாம லானந்தமா யிருக்கலாம். நான் அடிமையாயிருந்த காலங்களில் அனுபவிக்கக்கூடாத சுகானுபவங்களையெல்லாம் அங்கு அனுபவிக்க ஓர் தடையுமிராது, உம்மை விவாகம் செய்துக்கொள்வதற்குப் பதிலாய் உமது உயிரை வாங்கவேண்டுமென்றிருக்கும் அச்சண்டாளியின் முகத்தில் இனி நீர் விழிக்காமல் உமது நல்ல அதிர்ஷ்டவசத்தால் உமது மனம்போல் நடக்கக்கருதி வந்திருக்கும் என்னை மனைவியாயேற்றுக்கொண்டு சுகமனுபவிக்கவேண்டும். ஆதலால் நாம் இனியோர் விநாடியும் காலதாமதம் பண்ணாமல் பிரயாணப்படவேண்டும். நம்மை வழியில் கண்டுபிடித்து மறுபடியும் இங்குக் கொண்டுவராமலிருக்க பொழுதுவிடிகிறதற்கு நேரமிருப்பதால் இப்பொழுதே புறப்பட்டு நெடுந்தூரம் செல்லலாம்" என்றனள்.

இந்திராங்கதன் அவளைப்பார்த்து, "ஓ அழகியமாதே! என்னை அபாயத்தினின்று ரட்சிக்க இவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டதற்காக உன்னை மிகவும் கொண்டாடுகின்றேன். உன்னுடைய அடிமைத்தனத்தினின்று உன்னை விடுவித்து சந்தனபுரியரசனாகிய பாலதேவனிடம் உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கவும் பிரியப்படுகின்றேன். ஆனால்

என்னை இவ்வளவு கண்ணியமாய் நடத்திவந்த புத்திசேன னுடைய அரண்மனையை விட்டுச் சொல்லாமல் ஓடிப் போவது எனக்கு நன்றாகக் காணப்படவில்லை. நான் உன் னுடைய வார்த்தையை நம்பி ஓடிப்போவதை அரசனை புத்திசேனன் கேள்விப்பட்டால் என்னைக்குறித்து என்ன நினைப்பான். மோசக்காரனென்று கருதானோ? நான் உன்னை வஞ்சித்துக் கொண்டுபோக எண்ணியே வெளிவேஷங் காட்டினேனென்று நினைப்பதுமன்றி அவருடைய புத்திரி யோசித்திருக்கும் ரத்தப்பழியான செய்கைக்கஞ்சி அவன் செய்த உபகாரங்கள் யாவையுமறந்து ஓடிப்போனே னென்றல்லோ நினைப்பான். தவிர தயாபரசுந்தரி என்மீதில் எவ்வளவுகொடிய பகையை வைத்திருந்தபோதிலும் நான் அவள்மீது வைத்திருக்கும் காதலானது என்னை யோடிப் போகவொட்டாமல் தடுக்கின்றது. அவள் என்னைப் பகைத் திருந்தாலும் நானும் அவ்விதமே யவளை நினைக்காமல் அவளை யதிகமாய்ப்புகழ்ந்து என்னையவளுக் காதீனமா யளிக்கின்றேன். அவள் என் பிராணனை வாங்க தீரங் கொண்டிருப்பதால் நானும் அவ்வாறே அவள் கையாலுயி ரிழக்க தைரியங்கொண்டிருக்கின்றேன்'' என்று கூறினான்.

அதற்கந்த தாதிப்பெண் இராஜபுத்திரனைப் பார்த்து, "ஐயா! என்னைப்போன்ற ஓர் அனாதை இராஜபுத்திரியை சிறையினின்று மீட்டு ரட்சிப்பதினால் உமக்குண்டாகும் பெரும்புண்ணியத்தைக் காட்டிக்கொள்ள எண்ணாமல் உம் மைக் கொலைக்குள்ளாக்கிக் கொள்ளுவதையே புகழ்ந்து சிலாகித்துக்கொண்டீரோ? இதென்ன பைத்தியம்? இராஜ புத்திரியாகிய தயாபரசுந்தரி என்னைவிட அழகிலும் அந் தஸ்திலும் அதிகமாயிருந்தாலும் எனக்கோ அவளைவிட சிறந்த குணமுண்டு. இன்று காலையில் நீர் பண்டிதர்கள்முன்

தயாபரசுந்தரியின் கேள்விகளுக்கு விடைபகர எங்கு தவ றிப்போகிறீரோ வென்றுக் கலங்கிப் பயந்திருந்தேன். ஆனால் நீர் அவளுடைய கேள்விகளுக்கு விடைபகர்ந்த வுடனே எனக்குண்டான சந்தோஷம் அளவிடத்தக்க தன்று. ஆகிலும் இப்போது அவள் உம்மைக்கொல்ல நினைத் திருக்கும் சதியோசனையோ என்னை வருத்துகின்றது. ஆ! இராஜபுத்திரா! நீர் இப்போது எவ்வித அபாயத்திற்குள் ளிருக்கிறீர் என்பதை முந்தி யோசிக்கும்படி உம்மை பிரார்த்திக்கின்றேன். என் வார்த்தையை நம்புங்கள். இந் நிமிஷமே நாமிருவரும் இந்த அரண்மனையைவிட்டகலு வோம்" என்று பரிதபித்தனள்.

சித்திராங்கதன் அம்மாதைப்பார்த்து "பெண்ணே! எனக்கு நீ தெரிவித்தவண்ணம் இவ்வித இடர்கள் சம்பவிக் கிறதாயிருந்தாலும் நான் ஓடிப்போக மனங்கொள்ளேன். உன்னைக் காப்பாற்றவேண்டியவன் நல்ல அதிர்ஷ்டவானாய் இருக்கவேண்டுமென நீ விரும்புவதுபோல் அவனுக்கும் பிராப்தபலனிருந்தாலல்லவோ சுகிர்தமடைவான். நானோ உன்னால் சீர்படக் கடவுளுக்குச் சித்தமில்லைபோல் காணப் படுகின்றது. என் பிராப்தமோ சதியோசனைக்கொண்ட தயாபரசுந்தரியை அவளுடைய பொறுமைக்குப் பதிலாய் நான் உயிர்விடுவதே என் சம்மதம். நானவளைவிட்டுப் பிரிந்துபோய் உயிர் வைத்திருப்பதைவிட அவள் கையால் நான் மடிந்துபோவதே மகா உத்தமம்" என்று கூறினான். அதற்கந்தத் தாதிப்பெண், "அப்படியானால் நீர் மதியற்ற மன்னனாய் உமது இரத்தம் இவ்விடத்திலேயே சிந்தும்படி உமதிருப்பிடத்தை விட்டகலாதிரும். இதைப்பற்றி இனி நான் உம்மைக் கட்டாயப்படுத்துவதில்லை" என்று சொல் லிக்கொண்டே அவ்விடத்தைவிட்டுச் சென்றாள்.

தாதிப்பெண் அவ்விடம்விட்டு நீங்கினதும் சித்திராங்கதன் மிகுந்த கலக்கத்தால் நித்திரையின்றி இவ்விதம் யோசிக்கலானன்:—தாதி தன்னுடன் சொல்லிய யாவும் நம்பத்தக்கதா? இவ்வித கோடூரச் செய்கை வேறெந்த இராஜாங்கத்திலாகிலும் எத்தருணத்திலாவது நடந்ததுண்டா? ஆ கடவுளே! அவ்வழகிய தாதியே அக்கொடிய தயாபரசுந்தரியின் கொடுமைக்குவிலகி வெளிப்போக எண்ணங்கொண்டனளே. நற்குணசாலியான அரசனுக்கு துர்க்குணம் வாய்ந்த மகள் ஏன் பிறந்தாள்? ஈசா! கொலைத் தொழில் புரியும் கொடூர நினைப்புள்ள அம்மாதுக்குமிகுந்த வழகைப் பொழிந்தருளவேண்டியதேன்? இது தேவரீரது பரஞானத்தில் படிந்த நியாயமோ? என்றிவ்விதம் நினைத்துக்கொண்டு அவ்விரவைக் கழித்தனன்.

அருணோதயமானவுடன் மத்தளம், பேரிகை முழங்கவும் மணியடிபடுகிற சப்தங்கள் ஆரவாரிக்கவும்கேட்டுபண்டிதர்கள் இன்று கொலுமுகத்தில் சபைகூடும் சின்னங்களிதுவென உணர்ந்தான். சிறிதுநேரத்திற்கெல்லாம் இராஜவீரர்கள் அறுவர் தன்னை கொலுமண்டபத்திற்கழைத்துச்செல்ல வந்திருக்கிருர்களெனவறிந்து இராஜவஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு அவர்கள் பின் சென்றனன். போர்ச் சேவகர்கள் அணிவகுத்துப் பாராக்கொடுக்கும் காவலை அவன் கடக்கும்போது தன்னை சதிமோசமாய் கொலைசெய்ய எத்தனித்திருக்கும் காவற்காரர்கள் இவர்கள்தானே? அவர்கள் எங்கே தன்தலையைத் துணித்தெறியப்போகிருர்களோ என்னும் கலக்கத்தினுல் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போயினன். இப்படியே எல்லா அரண்களையுங்கடந்து, பிரபுக்கள் கூடியிருக்குமிடத்திற்கு வந்தனன். இந்த இடத்தில்தான் அந்தக் கொடிய

பாதகி என் இரத்தத்தைச் சிந்தும்படிக் கொடுத்திருக்கும் உத்திரவானது நிறைவேறப்படப்போகிறதென்று நினைத்து நாலாபக்கங்களிலும் பார்த்துக்கொண்டிருந்ததுமன்றி அங் கவனுக் கெதிர்ப்பட்ட ஒவ்வொருவரையும் இவர்கள்தான் தன்சிரசை வெட்டவரும் கொலையாளிகளென்று எண்ணி கலங்கிக்கொண்டிருந்தான். ஒவ்வோர் நிமிஷமும் அவன் இவ்வாறு எண்ணி பயந்திருந்தான். கடைசியாய் பண்டி தர்கள் கூடியிருக்கும் அரசசபைக்கு வந்தான். தயாபர சுந்தரி, அவள் தகப்பன் கண்களுக்கெதிரில் தன்னைக்கொலை செய்து, அக் கொலைபாதகத்துக்கோர் சாட்சிக்காரியாய் ஏற்பட சித்தங்கொண்டிருக்கிறளோ? அரசனும் அவள் செய்யும் சதியோசனைக் கொத்துநடக்க சம்மதப்பட்டிருப் பாரோ? என்று சித்திராங்கதன் எண்ணுததெல்லாம் எண் ணிக்கொண்டிருந்தான். சபாமண்டபத்தின் திரைகள்நீக்கப் படவே புத்திசேனனும், தயாபரசுந்திரியும் வந்து சிம்மா தனங்களிலமர்ந்தார்கள். உடனே பிரதமபண்டிதர் இராஜ புத்திரனைப் பார்த்து, "இராஜபுத்திரா! தயாபரசுந்தரி உன்கேள்விக்கு விடை பகர்வாளேயாகில் அவளைப்பற்றிய பாத்தியதை யாவும் விட்டுவிடுவேனென்று நேற்று நீ தெரி வித்த வார்த்தைகள் உனக்கிப்போது கவனமிருக்கின் றதா?" என்று வினவ, "ஆம் நேற்று நான் தெரிவித்த வார்த்தைகளெல்லாம் வாஸ்தவமே. அக்கேள்விக்குத்தக்க விடையளிக்குங்கால் நான் அரசனுக்கு மருமகனுகப் போ கும் எல்லா சுதந்தரத்தையும்ஒழித்துப்போடுவேன்" என்று இராஜ புத்திரன் கூறினன். அப்போது அப்பண்டிதர் இராஜபுத்திரியைப் பார்த்து, "உன்னைக்கேட்ட கேள்விக்கு விடை யின்னதென்று இப்போது நீ சொல்லாமற்போவை யாகில் நேற்று எங்கள் முன் சொன்ன பிரமாணத்தின்படி

நடக்கவேண்டுமென்பதைக் கியாபகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்தார்.

அரசனும் தன்குமாரத்தி விடையளிப்பது கூடாத காரியமென்றுணர்ந்து மகளைப்பார்த்து, "அம்மா! இந்த இராஜபுத்திரன் வினவிய கேள்விக்கு விடைபகர உன்னால் முடியாமையால் இன்று தவணை கொடுக்கப்பட்டது. இன்னும் ஒருவருஷம் தவணை கொடுத்தாலும் நீ விடையளிப்பது பிரயாசையே. ஆதலால் இனி நீ வீணை சிந்தனைக் கிடங்கொடாமல் இராஜபுத்திரனை இப்போதே கணவனாக அங்கீகரித்தல் நலமாயிருக்கின்றது" என்று சொல்ல தயாபரசுந்தரி தன் பிதாவை நோக்கி, "தந்தையே! நான் இந்த இராஜபுத்திரனுடைய கேள்விக்கு விடைபகரமாட்டேனென்று உமக்கெப்படித்தெரியும். அக்கேள்வியின் விடை கடினமானதல்ல. நேற்று நான் அபஜயப்பட்டமையால் எனக்குண்டான வெட்கத்தால் உடனே உத்தரம்பகராமல் இன்றையதினம் விடையளிப்பதாய் தெரிவித்தேனேயன்றி வேறல்ல. என்னைப்பற்றி மிக அற்பமாகவெண்ணியிருக்கும் இத்துலிகர இராஜபுத்திரனை இதோ ஒருநொடிக்குள் பிரமிக்கச் செய்கின்றேன். ஆனால் அக்கேள்வியை அவர் இன்னொருமுறை கேட்கட்டுமென்றனள். சித்திராங்கதன் அம்மாதைப் பார்த்து, "பெண்ணே! சர்வ கஷ்டங்களையும் ஆயிரக்கணக்கா யனுபவித்து சாண் அங்கத்தின் நிமித்தம் யாசக ஜீவனம் செய்து இத்தருணத்தில் மனமகிழ்ச்சியையும் சந்தஷ்டியையும் அடைந்திருக்கும் இராஜபுத்திரனுடைய நாமதேயம் என்ன?" என்றான். உடனே தயாபரசுந்தரி, "அவன் பெயர் சித்திராங்கதன்; அவன் பக்திசாகரன் என்னுமரசன் புத்திரன்" என்று கூறினள். தன் பெயரைச் சொன்னவுடனே சித்திராங்கதன் முகம்

வெளுத்து தன் பஞ்சடைந்து பூமியில் விழுந்து மூர்ச்சை யடைந்தான். அச்சபையிலுள்ளார் அனைவரும் மகா திகை லடைந்தார்கள்.

பிறகு அரசன் முதல் யாவரும் சித்திராங்கதனை மூர்ச்சை தெளியும்படிச் செய்தனர். இராஜ புத்திரன் மூர்ச்சை தெளிந்தெழுந்து மிகவும் நீரத்துடன் இராஜபுத் திரியைப் பார்த்து, “மாதே! என்னுடைய வினாவுக்கு நீ தக்க விடையளித்ததாக எண்ணுதே. நீ சொல்லிய அந்த பத்திசாகரனுடைய குமாரன் சித்திராங்கதன் இத்தருணத் தில் அப்படிப்பட்ட சந்தோஷத்துடனிராமல் துக்கமும் வெட்கமும் மேலிட்டு கண்கள் பஞ்சடைய சஞ்சலத்தால் நிறைந்திருக்கின்றனே” என்றான் அதற்கவள் “நீச சொன்னது வாஸ்தவமாயினும் நீர் நேற்றையதினம் இக் கேள்வியைக் கேட்டபோது உம்முடைய நிலைமை எப்படி யிருந்ததென்று நீரேயுணர்ந்துக்கொள்ளவேண்டும். இதைப் பற்றி என்மீதில் தோஷம் சுமத்தாமல்உம்மால் மொழியப் பட்டும்போக்கானதியாயங்களுக்கெல்லாம் உமக்குமெனக் கும் சம்பந்தமில்லாமல் போனதை இச்சபையாருக்கு அறிக்கையிட்டு உன் பதிக்கே திரும்பிப்போகும்படிச்செய் வேன். ஆனால் என் தந்தை உம்மிடத்தில் பட்சம்பாராட்டி வந்தமையாலும் என்னிடம் இதற்குமுன்வந்து வாதாடின அரசபுத்திரர்களைப் பார்க்க நீர் மிகவும் அறிவிற் சிறந்த சாமர்த்திய பாண்டியத்தையடைந்து,கல்விகேள்விகளால் சிறந்திருப்பதால் நான் உம்மை இன்றுமுதல் என் கணவ னய் அங்கீகரித்துக்கொள்ள பூரணசம்மதங் கொண்டிருக் கின்றேன்” என்று கூறினள்

சபையிலிருந்தோ ரெல்லாம் இம் மங்களவார்த்தை யைக்கேட்டவுடன் மிக்கக் களிப்படைந்தனர். அரசனும்

தன் புத்திரியை வெகுவாய்ப்புகழ்ந்து, "என்னருமைப்புதல்வியே! நான் நெடுநாளாகக்கொண்டிருந்த என்விசனத்தை இன்று அடியோடே யொழித்தாய்; இக்காரியத்தைவிட லோகத்தில் என்னை மகிழ்விக்கும் வேறு காரியமும் உண்டோ? உன்னைப்பற்றி ஏற்பட்டிருந்த கெட்ட எண்ணத்தை முற்றிலுமொழித்து நீ எப்படியாகிலும் சரியான வழிக்கு வருவாய் என்ற நோக்கம் யாரும் சொப்பனத்திலும் நினையாமலிருக்க இவ்வித அகஸ்மாத்தான தோற்றமும் எண்ணமும் உனக்குண்டான விஷயத்தில் என்மனம் பூரித்து பெரு மகிழ்ச்சியையடைந்தேன். உனக்கு ஆடவர்மீதிலிருந்த வெறுப்பு இன்றேடொழிந்ததுமன்றி நான் பட்சம் பாராட்டிய பாலியராஜனையே உனக்கு கணவனாக நீ ஒப்புக்காண்டது மிகவும் சிலாக்கியமானது. தவிர முன்பின் அறியாத அன்னிய ராஜபுத்திரனுடைய பெயரை அவ்வளவு எளிதில் நீ கண்டுணர்ந்து கூறியதே எனக்கு ஆச்சரியத்தை யுண்டாக்குகின்றது. அதை நீ எவ்வாறு தெரிந்துக்கொண்டாய்?" என்றனன்.

தயாபரசுந்தரி தந்தையை நோக்கி, "பிதாவே! நான் இந்த இராஜபுத்திரனுடைய பெயரை என் தாதியால் தற்செயலா யுணர்ந்தேன். அதாவது, எனது தாதிகளிலொருத்தி கடந்த இரவில் இராஜபுத்திரரிடஞ் சென்று அவர் வாயைக்கோண்டே தந்திரோபாயமாய் அவர் நாமதேயமின்னதென்று அறிந்துக்கொண்டே என்னிடம் தெரிவித்தனள். நான் அவளைக்கொண்டே இத்தருணத்தில் வெற்றியடைந்தேன். இதற்காக இராஜ புத்திரன் என் மீதில் கோபங்கொள்ளாம லிருக்கவேண்டிய தவசியமே. ஏனெனில் நானப்பெயரைக் கிரகித்து வெளியிட்டும்

அவருக்கோர் பொல்லாங்குசெய்ய நினைத்துக்கொள்ளவில்லையே" என்றனள்.

அப்போது சித்திராங்கதன், தயாபரசுந்தரியைநோக்கி "ஆ என் நாயகியே! என்மீதில் நீ இவ்விதமாய் கருணைகூர்ந்து உனக்கு என்னைப்பற்றி நல்லெண்ணமுண்டாகவும் செய்வித்தது நான் செய்த பாக்கியந்தானே? நான் முதலில் உன்விஷயத்தில் எவ்வளவு வருத்தப்பட்டுக்கொண்டிருந்தேனே அவ்வளவுசந்தோஷத்தைஉன்னால்இப்போது அடைந்தேன். நான் உன் அகிர்த்திய செயல்களுக்காக நிந்தை செய்தது மிகவும் தப்பிதம். நான் உன்னை தூராய்ப் பேசின வார்த்தைகளை நம்பி மதியிழந்து என்னுயிரைச் சதியோசனை செய்து வாங்கிவிடப்போகிருயோவென் றனுமானித்து உன் நன்மையை எவ்வளவும் கருதாக பாதகனுயினேன்" என்றனன்.

உடனே புத்திசேன மகாராஜன் பண்டிதர்களைக் கொண்டு சித்திராங்கதனுக்கும், தாயாபரசுந்தரிக்கும்விவாகச் சடங்குகள் யாவும் குறைவற நிறைவேற்றி, சித்திராங்கதனுக்கும் தன் அரசாட்சியையும் தந்தான்.

சம்பூர்ணம்.

நவீன கதா புத்தகங்கள்.

விவேகாநந்தபோதம்.

இது வைதிக வேதியர் என்னும் மறுநாமங் கொண்ட ஓர் அற்புத இன்பரசக்கதை. இதில் குருநாத சுவாமிகளின் யாத்திரையில் நேரிடும் சம்பவங்களெல்லாம் படிக்கப் பரமானந்தத்தை விளைவிக்கும். அணு 10.

தனபதி.

அறிவைப்புகட்டி நன்னெறியில் யாவரையும் தூண்டச்செய்யும் இன்றியமையாத ஓர் சிறந்த நாவல். சந்தர்ப்பானுசாரமான மேற்கோள்களுடன் வியப்பைத்தரும் பல அரிய விஷயங்களடங்கியிருக்கின்றது. விலைஅணு 8.

சிவசாமி (**2**-பாகமும்)

இவ்விரு புத்தகங்களிலும், சிவசாமி என்பவனுடைய நாட்டு வாழ்க்கையையும், நகர வாழ்க்கையையும் பற்றி மிகவும் விநோதமாய் எழுதப்பட்டிருக்கிறது. விலை அணு 8.

பதிவிரதாசிரோமணி.

இது ஓர் சிறந்த நீதிக்கதை. இக்கதா நாயகியின் கடல் யாத்திரையில் நேரிடும் துன்பங்கள் படிப்போர் மனதைப் பதைக்கும்படிச் செய்யும். அணு 12.

மதனமநோகரி.

இஃது ஓர் இனிய செந்தமிழ் நாவல். இக்கதாநாயகியின் சரித்திரத்தால் படிப்போரின் மனக்கவலையும் கஷ்டமும் பற்றறத் தொலையும். விலை அணு 6.

விவேகாநந்தன்.

இக்கதாநாயகன் ஆரண்யவாசியாகி திருடர்களிடம் சிக்கிப் பிறகு கப்பலிலேறி கடலில் விழுந்து தவித்துக் கடைசியில் தன் தாய் தந்தையரிடம் சேர்வது மிகவும் சோகரசமுள்ளது. இதன் விலை அணு 6.

சுந்தராம்பாள்.

இது ஓர் சோகரசமான நூதன நாவல். இதில் குறித்திருக்கும் சம்பவங்கள் கல்நெஞ்சையும் கரையச்செய்யும் ஆற்றலுடையது. அதிக விந்தையும், வியப்பையும் தரக்கூடிய நாவல்களில் இது முதன்மையானது. இதன் விலை அணு 6.

பொன்மலைப் புதுமை.

இது ஓர் துப்பறியும் நாவல். இதில் அந்தரங்க கள்ளநோட்டுச்சாலையின் காட்சியும், இரகசிய அறைகளின் அமைப்பும், காவற்சாலைகளின் சூட்சிகளும், துப்பறியும் உத்தியோகஸ்தர்களின் திறமைகளும் ஆச்சரியத்தை விளைவிக்கும். அணு 12.

இருகொலை இரகசியம்.

இது ஓர் ஆச்சர்யமான நவீன துப்பறியும் நாவல். இதில் வெளியிட்டிருக்கும் துப்பறியும் சூழ்ச்சி வேறெந்த நாவல்களிலும் காணப்படாத விசேடமாகும். இதில் விவரித்திருக்கும் இரண்டு கொலைகளின் இரகசியங்கள் மிகவும் ஆச்சரியத்தைத் தரும். விலை ரூபா 1 4 0

நவீன கதா புத்தகங்கள்.

பூபாலன் புவனசுந்தரி.

இக்கதாநாயகி ஆழியில் விழுந்தும், இக்கதாநாயகன் வேறு நாடடைந்தும் ஒருவரையொருவர் மறுபடியும் சந்தித்த வரையில் மகா ஆச்சரியத்தை விளைவிக்கும். விலை அணா 6.

வசீகரன்.

ஆச்சர்யத்தையும் ஆனந்தத்தையும் உண்டாக்கும் நவீன நாவல்களில் இதுவுமொன்று. இதில் முற்றும் வியப்புக்கிடமானதும், மனந் திடுக்கிடக்கூடியதுமான விஷயங்கள் செறிந்துகிடக்கின்றன. விலை அணா 12.

ஆநந்தரங்கன்.

இது மிகவும் வியப்பைத்தரும் ஓர் சிறந்த துப்பறியும் நாவல். இதில் முதலிலிருந்து கடைசிவரையிலுள்ள ஆச்சர்ய சம்பவங்கள் யாவரையும் திடுக்கிடச் செய்யும். விலை அணா 10.

மோகனவல்லி.

இது ஓர் அற்புதக்கதை. உலகத்தில் சுகதுக்கங்கள் ஊழ்வினைப் பயனின்படி நடக்குமென்னும் திருஷ்டாந்தத்தை இதில் விவரித்திருக்கின்றது. அணா 5.

வாயாடி வம்பன்.

ஓயாத சிறிப்பைத் தரும் ஓர் இனிய நவீன விகடக்கதை.
விலை அணா 4.

தடிராமன்.

இது ஓர் வேடிக்கையும் விநோதமுமான அகடவிகட ஆனந்தக்கதை. விலை அணா 5.

இல்லறமாலிகா.

இதில் சகலரும் அநுஷ்டித்துவரும் பண்டிகை, நோன்பு, விரதம் முதலியவைகளின் சவிஸ்தாரத்தை விளக்கியிருப்பதால் ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டிய ஓர் சிறந்த பொதுநூல். விலை அணா 4.

ஸ்ரீராம பராக்கிரமம்.

இது ஓர் சிறந்த பக்தி நூல். பாலர், பாலிகைகள் முதல் சகலரும் எளிதில் வாசிக்கத்தகுந்த செந்தமிழ் நடையில் இராமாயணம் முழுசரித்திரமும் விளக்கியிருக்கின்றது. விலை அணா 6.

இந்து தேகாப்பியாச சாதனம்

இது தேகதத்துவ அவயவங்களின் அத்தியாவசியத்தை தெரிவித்து சரீரத்தை பலமாகவும், சௌக்கியமாகவும் போஷிப்பதற்கான அப்பியாச முறைகளை படங்களுடன் விவரித்திருக்கின்றது. விலை அணா 8.

டெய்லரிங் அண்டு கட்டிங்.

கோட்டு முதலிய உடுப்புகளை வெட்டுவதற்கான பிளான்களும் கணக்குகளும் இதில் காட்டியிருக்கின்றது. விலை ரூபா 1.

எமது விலாசம்:— எஸ். துரைசாமி முதலியார்
19, ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெருவு,
சூளை போஸ்டு, மதராஸ்.